உ

சிவமயம்

பெரிய

தேவார திருவாசக

முதலான

# தோத்திரத்திரட்டு

வைதீக லௌகிக சமயிகளின் உபயோகத்துக்காக

டர்பன்

திருவாளர்

வெ. முத்துகிருஷ்ண பிள்ளையவர்களால்

ஆரம்பிக்கப்பட்டு

ADIGAL

தமிழாசிரியர்

திருவாளர் பா. அப்பாய் நாயுடு அவர்களின்

பேருதவியால் முடிக்கப்பட்டு

திரு. மு. கண்ணபிரான் பிள்ளை, பி. ஏ.

திரு. சு. பெருமாள் ரெட்டி

திரு சு. மாயாண்டி ரெட்டி

இவர்களின்

மேர்க்கண்டாயில் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1941

41943

மேர்க்கண்டாய்ல் அச்சியந்திர சாலையில்
அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

........................

*Printed and Published by the Proprietors*
*of*
*MERCANTILE PRINTING WORKS,*

P.O. Box 2339.
Phone 2-5685.

46c Queen Street,
Durban, Natal, S.A.

சிவமயம்.

# பதிப்புரை

ஒருகொம்பிரண்டுசெவிமூன்றுமதநால்வாய்
பெருசெங்கையைந்துடையபுத்தேள் - வருகங்கை
யாறுதரித்தோன்மைந்தனைமுகத்தோனைநினைக்
தேழுபிறப்புந்தீரவெட்டு.

இந்நிலவுலகில் மானிடர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் நால்வகை புருஷார்த்தங்களில் நல்வழிப்பட்டுய்யவும், ஈற்றில் முத்தியடையும் மார்க்கங்களையும் எளிதினுணருமாறு புகட்டும் தமிழ் வேதமாம் தேவார திருவாசகங்களை இயற்றிய சமய குரவர் நால்வர்களால் அருளிச் செய்யப்பட்ட அருமை பெறும் பாடல்கள் முற்றிலும் இப்போது வழக்கத்திலில்லை. தேவாரங்கள், சம்பந்தர், அப்பர், சுந்தரர், ஆகிய மூவர்களால் பாடப்பட்டு, சிதம்பரத்தில் திருக்கோயிலினோர் அறையில் வைத்துப் பூட்டப்பட்டு அநேக வருடங்களாகத் திறக்கப்படாமலே இருந்தன.

வெகு காலத்துக்குப்பின், திருவாரூரின் அரசனான அநபாய சோழன், திருநாரையூர் பொல்லாப் பிள்ளையாரின் சிஷ்யனான நம்பியாண்டார் நம்பி என்ற அந்தணச் சிறுவன் மூலியமாய், பூட்டப்பட்டிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டு, தேவாரப் பாசுரங்கள் எழுதப்பட்டிருந்த திருவேடுகளையெடுத்துப் பார்க்கையில், அவற்றில் அநேக ஏடுகள் செல்லரிக்கப்பட்டு, சில ஏடுகள் மாத்திரம் பார்வைக்குப் புலப்பட்டன.

தேவாரப் பாசுரங்கள் சம்பந்தரால் 16,000 பாடல்களும் திருநாவுக்கரசரால் 49.000 பாடல்களும், சுந்தரரால் 37,000 பாடல்களும் பாடப்பட்டனவென்று காணப்பட்டன. இப் பாடல்களில் செல்லரிக்கப்படாமல் தப்பி அகப்பட்டவை, சம் பந்தருடையது 385ம், திருநாவுக்காசருடையது 315ம், சுந் தாருடையது 100ம் மாத்திரமே காணப்பட்டன. அவைகளை அநபாய சோழன், நம்பியாண்டார் நம்பி மூலியமாய் ஒருங்கு திரட்டிச் செப்பேட்டில் எழுதி உலகத்தோருக்குப் பரவச் செய்தார்.

இத்தேவாரத் தொகுதிகளைச் சிவாலய முனிவரென்பவர் தினமானம் ஒருமுறை படித்துப் பாராயணஞ்செய்ய எத் தனித்தார். இம்முயற்சி கை கூடாமற் போயினமையால், அவர், சிதம்பரத்தில் ஆலயத்துட் சென்று நடராஜ பெரு மானைத் துதித்தார். அங்கே, "சிவாலய முனிவனே! நீ, அகத்திய முனிவரிடம் போவாயாக, உன் கருத்து நிறை வேறும்" என்றோர் அசரீரி உண்டாயிற்று.

அவ்வசரீரி வாக்கின்படியே முனிவர், அகத்தியரையணுகி தன் எண்ணத்தையறிவிக்க அகத்தியர், தேவார திருவாசகப் பாடல்களில் முக்கியமானவற்றை மாத்திரம் திரட்டி தின மானம் படித்துப் பாராயணஞ்செய்தால் தேவார திருவாசகத் தின் முழுபாடல்களையும் பாராயணஞ் செய்ததற் கொப்பாகும்" என்றருளினர். இத்தொகுதிக்கு அகத்தியர் தேவாரத்திரட்டு என்று பெயருண்டாயிற்று.

பின்னர் வித்துவான்கள் பலர், தேவார திருவாசகப் பாடல்களைத் தனித்தனியாகவும், நால்வர் பாடல்களில் சில வற்றை மாத்திரம் பொறுக்கி ஒரு புத்தகமாகச் செய்தும் வெளியிட்டு உலகில் பரவச் செய்தனர்.

மேற்சொன்னவற்றில் இரண்டாந் திருமுறையை அனுசரித்து, பிறையாற்றிலிருந்து தென்னாபிரிக்காவுக்கு வந்த வரும், சைவமதத்தில் வேளாளர் மரபில் தோன்றியவரும் திரு முத்துத்தாண்டவராய பிள்ளை மாணுக்கரும் சிலவாண்டுகளுக்குமுன் தர்பனில சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தை ஸ்தாபித்து "விவேகபாநு" என்ற வாராந்திரத் தமிழ் பத்திரிகையை நடத்தி வந்தவருமான திருவாளர் சோ. விருத்தாசலம் பிள்ளை அவர்கள், தமிழ் பிரமாதிஷு, ஆங்கிலம் 1914ஷு தென்னாபிரிக்கா தமிழ் மக்கள் உபயோகத்துக்காக பன்னிரண்டு திருமுறைகளினின்றும் முக்கியமான பாடல்கள் சிலவற்றைத் திரட்டி அச்சிட்டு "அற்புதத் தேவாரத் திரட்டு" என்னும் பெயரால் புத்தகங்கள் வெளியிட்டார். அநேகமாய் அப்புத்தகங்களே தென்னாபிரிக்காவில் பாடசாலைகளிலும் குருபூஜைகள் நடக்குமிடங்களிலும் உபயோகமாயிருந்தன.

திருவாளர் பிள்ளை அவர்கள் தாய் நாட்டுக்கேகி அங்கே சிவபதவியடைந்துவிட்டமையாலும், அவர் அச்சிட்டப் புத்தகங்கள் யாவும் இவ்வூரில் செலவாகிவிட்டமையாலும், அம்மாதிரியான புத்தகங்கள் அகப்படுவது அரிதாகினமையாலும், பாடசாலைகளில் தமிழ் வேத போதனைகளைச் செய்ய உபாத்தியாயர்கள் சிரமப்படுவதையுணர்ந்த, தமிழபிமானிகள் பலர் கேட்டு கொண்டதற்கிணங்கிய எனது தகப்பனார் திருவாளர். வே. முத்துகிருஷ்ண பிள்ளை அவர்களும், அவர் கூட்டாளிகளான திரு கு. பெருமாள்ரெட்டியார், திரு. கு. மாயாண்டி ரெட்டியார் ஆகியவர்கள் சேர்ந்து அவர்களது மேர்க்கண்டாயில் அச்சுக்கூடத்தில் அச்சிட ஆரம்பித்தனர். இவ்வேலைகள் ஆரம்பமான சொற்ப நாட்களுக்குள் அவர்களுக்குத் துணையாய் உதவிப் புரிந்துவந்த திரு. மாணிக்கம் செட்டியார் அவர்கள் திடும்பிரவேசமாய் 1937 வருடத்தில் காலவியோகமாயினர். அதன்பின் 1938 வருடத்தில் வே. முத்துகிருஷ்ண பிள்ளை அவர்களும் அசௌக்கியமுற்றிருந்து 1939 வருடத்தில் பரமபதமடைந்தார். அதன்பின் இப்புத்தகவேலைகள் நின்ற நிலையிலிருந்தது.

முடிவு பெறுமலிருந்த இத்தேவாரத்திரட்டை, எனது ஆசிரியரும் இந்நாட்டில் தமிழ்க் கல்வி அபிவிர்த்திக்கு பெரிதும் உழைத்து வருபவருமான திருவாளர் பா. அப்பாய் நாயுடு அவர்களை யணுகி இதை முடிவுச்செய்யும்படி கேட்டுக் கொண்டதற்கு அவர், இத்திரட்டு முக்கியமாக வேண்டப்படுவதை புணர்ந்து என் வேண்டுகோளுக்கிணங்கி தனது முக்கிய நேரத்தையும் அலுவல்களையும் பொருட்படுத்தாமல் இவ்வறிய வேலையைப் பூர்த்திச்செய்த அப்பெரியாருக்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலுரியதாகும். எனது கூட்டாளிகளான திரு சு. பெருமாள் ரெட்டியாரும், திரு. சு. மாயாண்டி ரெட்டியாரும் மற்றும் நண்பர்களும் செய்த பேருதவிகள் என்றும் மறத்தற்பாலதன்று.

இது பல நண்பர்கள் துரிதப்படுத்தினமையால் இப்புத்தகத்தை மிகவும் அவசரமாக முடிக்க நேர்ந்தது. ஆகையால், இதில் குற்றங்களேதேனும் கண்ணுறும் நண்பர்கள் எங்களுக்குத் தெரிவித்தால் அதை நன்றியறிதலுடன் ஏற்று அடுத்த பதிப்பில் திருத்திக்கொள்ள முற்படுவோம்.

அடியார்க்கடிமை,
மு. கண்ணபிரான் பிள்ளை, பி.எ.
மானேஜர்.

மெர்க்கண்டாய்ல் அச்சியந்திர சாலை,
டர்பன், தென் ஆப்பிரிக்கா.
19உ ஜுலாய்மீ 1941ஞ.

# நான்முகவுரை.

மாட்சிமை பொருந்திய வைதீகலௌகீக விஞ்ஞானி களுக்கும், சிவனருள் வேதமாம் சைவாகம நெறிகளை அனுஷ்டிப்போருக்கும், ஈண்டு பிரயோசனமாகும் பொருட்டு, திரு வாளர்களான வே. முத்துகிருஷ்ண பிள்ளை, திரு மாணிக்கம் செட்டியார் ஆகியவர்களால் ஆரம்பித்து விடப்பட்டிருந்த இத்தேவார திருவாசக தோத்திரத்திரட்டை, மேர்க்கண்டாயல் அச்சுக்கூடத்தாருக்குத் துணையாக நின்று இதை முடிவு படுத்தினேம். இப்புத்தகத்தை யச்சிடும் வேலைகள் வெகுதுரிதமாக நடத்த நேர்ந்தமையால் இதில் பிழைகளிராதெனமறுக்கவெம்மாலியலாது. பிழைகளைக் கண்ணுறும் கல்விமான்கள் அன்பு கூர்ந்து அச்சுக்கூடத்தாருக்கு அறிவிப்பரேல் அடுத்த பதிப்பிற்கு ஆதரவாயிருக்கும்.

இத்திரட்டில் சமயகுரவர் நால்வருடைய சரித்திரங்களைப் பாடசாலைகளின் உபயோகத்திற்கேதுவாக தெளிவான நடையில் மாணவர்கள் எளிதிலுணருந்தன்மையில் எழுதியுள்ளோம். திருமுறைகளைப் பாராயணம் பண்ணவும், குருபூஜைகள் நடத்தவும், சமயாசாரியரின் சரித்திர நடைக்கு ஒத்தபடி, திருப்பதிகங்களை சரியான முறையில் வரிசைக் கிரமமாக அமைத்திருக்கிறோம்.

திருப்பதிகங்களைப் பாடத்தொடங்கும்போதும், முடிக்கும்போதும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லவேண்டியது திருமுறைகளின் விதியாகும். எனினும், இப்புத்தகத்திலே சிலவிடங்களில் இடமின்மையால் "திருச்சிற்றம்பலம்" விடப்பட்டிருக்கிறது. அதை, வாசகர்கள், பதிகங்கள் பாடும்போது சேர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தமிழ் வேதானுசாரிகளான வைதீக சமயிகள் நற்பயனுறுமாறு இதனை வெளியிட்டமையான் யாவரும் இத்தேவார திருவாசக தோத்திரத் திரட்டை அனுஷ்டித்து எம்பெருமான் திருவருளால் சகலபாக்கியங்களும், அரோகத்திடகாத்திரமும் சிந்திதமனோரத சித்திகளும் பெற்று இனிது வாழுமாறு பிரார்த்திக்கிறேன்.

அடியார்க்கடிமை,

**பா. அப்பாய் நாயுடு.**

# பொருளடக்கம்.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| பதிப்புரை ... ... ... ... ... | iii |
| நான்முகவுரை... ... ... ... ... | vii |
| துதிகள் ... ... ... ... ... | 1 |
| சமயகுரவர் வயது ... ... ... ... | 5 |
| திருஞானசம்பந்தர் சரித்திரவரலாறு... ... | 7 |
| ,, தேவாரம் ... ... | 12 |
| திருநாவுக்கரசர் சரித்திரவரலாறு ... ... | 41 |
| ,, தேவாரம் ... ... ... | 56 |
| சுந்திரமூர்த்தி சுவாமிகள் சரித்திரவரலாறு ... | 95 |
| ,, ,, தேவாரம் ... ... | 120 |
| மாணிக்கவாசகர் சரித்திரவரலாறு ... ... | 155 |
| ,, திருவாசகம் ... ... | 178 |
| நாமாவளி ... ... ... ... ... | 214 |
| மன்னிப்புவேண்டல் ... ... ... ... | 216 |
| திருவிசைப்பா ... ... ... ... | 217 |
| திருமந்திரம் ... ... ... ... ... | 219 |
| திருமுறைகள் ஓதும் விதி ... ... ... | 220 |
| தாயுமானசுவாமிகள் வணக்கம் ... ... | 223 |
| சமயகுரவர் திருநட்சத்திரம் ... ... | 224 |
| ஆழ்வார்கள் திருவாய் மொழிகள் ... ... | 225 |

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தேவார திருவாசக

# தோத்திரத் திரட்டு

---

## நடராஜர் துதி

உலகெலா முணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## கணபதி துதி

சத்தியாய்ச் சிவ மாகித் தனிப்பர
முத்தியான முதலைத் துதி செய
சுத்தியாகிய சொற் பொரு ணல்குவ
சித்தியானை தன் செய்ய பொற்பாதமே.

## கலைமகள் துதி

நான்முக னுவின் மேவி நான்மறை வடிவா யின்னந்
தானரும் பொருள்க டேரத் தடக்கையின் முறையுந் தாங்கித்
தேனலர் கமலப் போதிற் செழித்துவீற் றிருக்கு மம்மை
கான்மலர் போற்றி நாளுங் கருத்துற வணக்கஞ் செய்வாம்.

## அகத்தியர் துதி

விதிதிகழ் வேதா கமவுணர் வாயே வினைதீரக்
கதமுக மாமோ கமுமுக மாயா கருவேயோ
மதகரி பேழ்வாய் வலிமுக மாமா மரைவாழும்
பொதிமலை மீதே புரிமுனி தானே புகழ்வாயே.

## தக்ஷிணாமூர்த்தி துதி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்கமுதற்
கற்ற கேள்வி
வல்லார்க ளொல்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப் பாலா
யெல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி
யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத்
தொடக்கை வெல்வாம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள் துதி

குவிகை யேறிய மணிமுடிப் பாண்டியன் கூன்போய்க்
கவிகை யேறுசிங் காதனத் தேறிடக் கழுவி
லவிகை யேறுற வமணர்க ளேறவெண் டாளச்
சிவிகை யேறிய கவுணியன்றாள் சென்னியிற் சேர்ப்பாம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள் துதி

கதிருலா வியசபை தொறுங்கா லொன்று தூக்கி
யதிர வீசிநின் றாடிய தாண்டவத் தவர்க்கே
மதுர மாதிருத் தாண்டகச் செந்தமிழ் வகுத்த
சதுர னாவினுக் கரையன்றன் சரணமே சரணம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி

சேனைமேற் கொண்டுசோரனூர் தாசிமுன் செல்ல
வானைமேற் கொண்ட தேவர்கள் வணங்கிடக் கயிலைக்
கானைமேற் கொண்டு சென்றவ னமுதமாங் கவிதைச்
சோனைமேற் கொண்ட சுந்தர முகில்பதந் தொழுவாம்.

## மாணிக்கவாசக சுவாமிகள் துதி

எம்பிரான் வெள்ளை யிபநடத்திற் திரண்முதலோ
ரம்பிரா னைனத்திரி புரத்தகிலத் தேர்நடத்தும்
நம்பிரா னரிப்பரி நடத்திடத் தமிழ்நடத்தும்
தம்பிரான் றிருவாத வூரான் சரண்சரணம்.

## அறுபத்துமூவர் துதி

குழிதரும் பவப்பவத்தைக் குருலிங்க சங்கமத்தின்
மொழிதிட பத்தியாகு முதியரா வாயினீங்கிச்
சுழிபெறுங் கங்கைவேணிச் சோதிவாழ் கயிலைமேவி
வழிபடு மொன்பதிற்றே மூன்பரை வணங்கி வாழ்வாம்.

## ஔவைப்பிராட்டியார் துதி

செவ்வையுறும் புவியதனின் மனுச்செனன மெடுத்தவர்கள்
திரிபி னீங்கி
ஒவ்வியநல் லறிவினொடு பயின்றுரைசெய் நன்னெறியி
லொழுகி யீசன்
செவ்வியநற் பதமடைய வெனக்கனிந்து நூற்கள் பல
தெரித்துக் காக்கும்
அவ்வையெனுந் திருத்தாயி னடிக்கமல முடிக்கணிந்தெம்
மல்லல்தீர்வாம்.

## திருவள்ளுவநாயனார் துதி

இருக்குமுத லொருநான்கு மறைப்பொருளை லாந்திரட்டி
யெடுத்துப் பூவாழ்
உருக்கிளர்சிய் மனுக்களுக்கென் றருள்சுரந்தின் னுரைமுழுது
முறவ் மைத்தே
திருக்குறளென் றொருநூலைத் தேவர்முனி வரரெவருஞ்
செவியி லார
மருக்குலவு வாய்திறந்து வழங்குதிரு வள்ளுவரை
வழுத்தல் செய்வாம்.

## பட்டணத்துச்சுவாமிகள் துதி

பொன்னாட்டுத் தேவர்களும் புகழ்மறைமெய்ஞ்ஞானிகளும்
போற்றிப் பாடும்
என்னாட்டுக் கோரிறையா யிலங்குஞ்சிவ மோருருவா
யிப்பா ருற்று
தென்னாட்டுத் திலகமெனுந் திருவெண்கா டதில்வந்த
திகழ்மெய்த் தூய
அன்னாட்டுப் பிள்ளைதிருப் பட்டணத்தா ரடிமலரை
அஞ்சலி செய்வாம்.

## தாயுமானசுவாமிகள் துதி

தத்துவம்வே றென்னைவே றாக்கியரு டந்ததிலே
யுற்றுணர்வும் வேண்டாவென் றோரிரண்டு மூன்றினையும்
நித்தியமென் றேகாட்டி நில்லாம னில்லெனவே
தத்துவத்தோ டத்துவிதந் தருந்தாயு மானவனே.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

## சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் துதி

பராபரங் கோதகலு மநாமயம் போதநிலை
பகாநலம் வாதமறு சுகோதயம் பாதிதமி
னிராமயங் காரகம திலாதசஞ் சீவிதந
னிராசை கொண்டாருடைய நிகேதநஞ் சூதடுறல்
வராதவின் பாரவினை முனாளில் வந்தேயருளி
மகாபலஞ் சேரவருள் விராவு செம்பாதநம
விராமலிந் தார்மனதி னிராத சந்தோடநம
விராமலிங் காயநம விராமலிங் காயநம.

## விவேகாநந்தசுவாமிகள் துதி

வங்காள தேயத்தின் வந்து தோன்றி
வட்காராய் நின்றாரும் வணங்கி வெட்கக்
கங்காளந் தோண்மேலே காதலித்த கண்ணுதலை
யெங்குமாய்க் கண்டே யெம்மை
யிங்காளு மெய்ஞ்ஞான வேந்தன் றன்னை
யெங்கெங்கு முலவிவரு மேகமாய
மங்காத செழுஞ்சுடரை விவேகாநந்த
மன்னவனை முன்னவனை வழுத்தல் செய்வாம்.

## தயாநந்த சரஸ்வதி சுவாமிகள் துதி

கார்பெருகு கூர்ஜ்ஜரத்தின் றிலக மாகுங்
கவின்பெருகு மச்சூக்க நதிசார்மோர்வி
சீர்பெருகு சிவபத்தர் புகழுஞ் சாமத்
திருவேதந் தினம்பாடும் அம்பா சங்கர்
ஏர்பெருகு தவப்பயனா யுலகம் போற்ற
எளியோரு மறைப்பொருளி னுண்மை காண
வார்பெருகு சத்யார்த்த ப்ரகாச நல்கும்
வள்ளலாம் தயாநந்தன் றாளே சார்வாம்.

திருச்சிற்றம்பலம்.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

# நல்வழி.

நேரிசை வெண்பா.

---

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியும்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

—ஔவையார்.

## சமயகுரவர்
## திருநட்சத்திரம்,

---

சித்திரைச் சதய மப்பர் சிறந்தவை காசி மூல
மத்தரைப் பணிசம் பந்த ரானிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத வூரர் முடியகல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தரர் கைலை சேர்ந்தார்.

பாடி சம்பந்தர் வைகாசி மூலம் பயிலும்மப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத வூரர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

## சமயகுரவர் நால்வர் வயது,

---

அப்பருக் கெண்பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டினிற் றெய்வீக—மிப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞானசம்பந்தர்க்
கந்தம் பதினா றறி.

உ

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகளின்

# புராண சாரம்.

---

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னழுதுமையாள் கருதியூட்டு
மேழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
யிலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்தரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித்தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் னேற்றி
யாற்றிலிடு மேடெதிர்போ யணைய வேற்றி
யோரமண ரொழியாமே கழுவி லேற்றி
யோதுதிருப் பதிகத்தா லோடமேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையிலேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
யீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தானை யெய்தி னாரே.

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் சரித்திர வரலாறு.

---

சோழமண்டலத்திலே, பிரமபுரம் முதலிய பன்னிரண்டு திருநாமங்களையுடைய சீர்காழி என்னும் திவ்விய ஸ்தலத்தில், கௌணியர் குலத்தில், சிவபாதவிருதயர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் புத்திரப்பேற்றை வேண்டி அரிய மகாதவஞ்செய்தார். அத்தபோபலம் பெரியநாயகி சமேத திருத்தோணியப்பருடைய திருக்கருணையினலே அவர் மனைவி பகவதியாருடைய திருவயிற்றிலே கருப்பம் உண்டாகி திருவாதிரை நக்ஷத்திரத்தில் நமது சுவாமிகள் அவதரித்தார். அவரது மூன்றும் ஆண்டிலே ஓர்நாள் தந்தையார் ஸ்நானத்திற்குப்போகப் பிள்ளையாரும் அழுதுகொண்டு பின்செல்ல, அவர் திருக்கோவிலில் இருக்கிற தீர்த்தக்கரையில் பிள்ளையாரை வைத்துவிட்டு, தான் தீர்த்தத்தில் இறங்கி விதிப்படி ஸ்நானம் செய்தார். அப்போது பிள்ளையார் திருத்தோணியப்பரின் மண்டபச் சிகரத்தைப்பார்த்து "அம்மே அப்பா" என்றுஅழ, தோணியப்பர் பார்வதியாரோடு இடபாரூடராய் பிள்ளையாரண்டை வந்தார். பார்வதியார் பிள்ளையாரின் கண்ணைத்துடைத்து தமது திருமுலைப்பாலை பொற்கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தையும் குழைத்து கையில்கொடுத்து ஊட்ட, சிவபிரான் அழுகை தீர்த்து அநுக்கிரகஞ் செய்தார். சிவன் சத்தி இருவராலும் ஆளப்பட்டமையால் "ஆளுடைய பிள்ளையார்" என்றும், சிவஞானத்தோடு சம்பந்தஞ் செய்தலினல் "திருஞான சம்பந்த மூர்த்தி" என்னும் திருநாமங்களும் உடையராயினர்.

சிவபாதவிருதயர் தமது நியமங்களை முடித்துக்கொண்டு கரையில்வந்து தமது குழந்தையை நோக்கி "நீ யார்தந்த பாலை உண்டாய்?" என்று கோபிக்க பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் சொரிய தனது வலதுகைச் சுட்டுவிரலினல் சுட்டி, ஆகாயத்திலே உமாதேவியாரோடு இடபரூடராய் தோன்றுகிற சிவபெருமானைக்காட்டி, அவருடைய திருச்செவியில் கேட்கும்படி, அவர் திருச்செவிகளைச் சிறப்பித்து "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடத்தொடங்கினர்.

இதுகண்ட யாவரும் வியப்படைந்தனர். பெற்றோரும் மற்றோரும் இவர் தெய்வீகப்பிறவி யென்று மகிழ்ந்தனர்.

பின்னர் கீழ்க்குறித்தவாறு பல ஸ்தலங்களுக்குப்போய் ஆங்காங்கும் பல அற்புதங்கள் செய்தார், அவைகளாவன :— சீர்காழிக்குச் சமீபமாயுள்ள திருக்கோலக்கா என்ற ஊரிலுள்ள சிவாலயம்சென்றுசிவ பெருமானைத் துதித்துப்பாடுகையில் பொற்றாளம் பெற்றார். திருஅரத்துறையில், சிவபெருமான் முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னங்கள் கொடுத்தருளினார். பிள்ளையார் திருப்பலாச்சிராமத்துக்குப் போயிருக்குங்காலையில் அவ்வூர் அரசனை கொல்லிமழவனுடைய புத்திரிக்கு ஏற்பட்டிருந்த முயலகன் என்ற குமரகண்டவலியைத் திருப்பாடல்களால் பாடி விலகச்செய்தார். திருக்கொடிமாடச் செங்குன்றூரில் களிர் சுரத்தால் பீடிக்கப் பட்டிருந்த அவ்வூர் ஜனங்களுக்கு அக்கொடியவியாதியை திருப்பாடல்கள் பாடி தீர்த்தருளினார். திருப்பட்டீச்சுரத்தில் சிவபிரான் முத்துப்பந்தல் அருளப்பெற்றார். ஓர்சமயம் தன் தகப்பனார் யாகம்செய்யவேண்டுமென்றும் அதற்காகத் தனக்கு பொருள்வேண்டுமென்றும் கேட்டதற்கு திருவாவடுதுறையில் சிவாலயம்போய் சிவபெருமானைத் துதித்துப் பதிகம்பாட சிவபெருமான் திருவருளால் பொற்கிழி ஒன்று பெற்று அதைத் தகப்பனாரிடம் கொடுத்து சந்தோஷிப்பித்தார். வழிப்போக்கனாகவந்து திருமருகல் சத்திரத்தில் படுத்திருந்த ஓர் வணிகன், பாம்புகடித்து இறக்க, நமது சுவாமிகள் அவ்வூர் ஆலயம் சென்று திருப்பதிகம்பாடி அவனை மறுபடியும் உயிரோடு எழுப்பியருளினார். பஞ்சத்தால் திருவீழிமிழலை என்ற ஊரில் குடிகள் துன்பப் பட்டுக்கொண்டிருக்கையில், அங்கு போயிருந்த நமது சுவாமிகள் ஜனங்களின் துயரத்தைக் கண்டு சகியாது திருப்பதிகம்பாடி சிவபெருமானிடம் திரவியம் பெற்று பஞ்சத்தை விலக்கி ஜனங்களை ஆதரித்தார். திருமறைக்காடு என்றழைக்கப்படும் வேதாரண்யம் என்ற ஸ்தலத்தில் வெகுகாலமாக சாத்தப்பட்டே இருந்த கோபுரவாயிற் கதவுகள் திறக்கும்படி பாட அவ்வண்ணமே கதவுகள் தானாகவே திறக்கப்பட்டன. மதுரையில்கூன் பாண்டியன் அரசாக்ஷியில் சமணகுருக்கள் பலசூழ்ச்சிசெய்து அரசரையும் குடிகள் அநேகரையும் சைவசமயத்திலிருந்து நீங்கச்செய்து சமணமதத்தைச் தழுவச்செய்தனர். அரசன் மனைவியான மங்கையர்க்கரசியும், மந்திரியார் குலச்சிறையாரும், சம்பந்தசுவாமிகளை மதுரைக்கு வரவழைத்து, மதுரையில் சமணமதம் ஓங்கியும், சைவசமயம் குன்றிவருவதையும்சொல்லி, அதை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப் பிரார்த்தித்தனர். சுவாமிகள் அதற்குச் சம்மதித்து அவ்வூரில் ஓர் மடத்தில் தன் குழாங்களுடன் தங்கியிருந்தார்கள். இதைய

றிந்த சமணகுருக்கள் மடத்தில் தீயைவைத்து சுவாமிகளைக் கொல்ல வழிசெய்தனர். மடம் எரிவதுகண்ட நமது சுவாமிகள், இவ்வூர் அரசனையே பற்றுக என்றுபதிகம்பாட பாண்டியனுக்கு வெப்பம் அதிகரித்து கொடிய சுரநோய் கண்டு அவர் அவஸ்தைப்பட்டார். சமணர்கள் தங்களாலான ஔஷதம், யந்திரம் முதலியவற்றால் பலவித சிகிச்சை செய்தும் பயன்படவில்லை. மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் ஆளுடைய பிள்ளையாரைக்கொண்டு அரசனுடைய நோயைத்தீர்த்தனர். திருநீற்றுப்பதிகம்பாட அதன்மகிமையினால் வெப்புநோய் தீர்ந்ததோடு ஏற்கனவேயுள்ள கூனும் நிமிர்ந்தது. சமணர்கள் இவ்விஷயத்தில் தங்களுடைய தோல்வியை எண்ணி மனஞ்சலித்தனர். பின்னும் பொறுமைகொண்டு, நெருப்பிலும், நீரிலும் தங்கள் மந்திரத்தைச் செய்து சுவாமிகளை தோற்கடிக்க எண்ணங்கொண்டு, இருதிறத்தவரின் மந்திரங்களைத் தனித்தனி ஏடுகளில் இருவரும் எழுதி, தனித்தனியாய் எரிகிற நெருப்பில் போட்டால் யாருடைய ஏடுகள் எரியாமலிருக்கிறதோ அவர்களே ஜெயித்தவர்களென்று சொல்லஇருதிறத்தவரும் ஒப்புக்கொண்டனர். சமணர்கள் எழுதியிட்ட ஏடு எரிந்து சாம்பலாயிற்று. நமது சுவாமிகள் எழுதியிட்ட ஏடு நெருப்பில் எரியாது எழுதிய எழுத்துகளும் அழியாது இருந்தன. அரசன் இதைக்கண்டு சமணரை இகழ்ந்து நமது சுவாமிகளைப் புகழ்ந்தனன். மற்றும் யாவரும் அவ்வாறே செய்தனர். மறுபடியும் எப்படியாவது நமது சுவாமிகளை தோற்கடிக்க எண்ணங்கொண்ட சமணர்கள், முன்போல் இருதிறத்தவரும் அவரவர் மந்திரத்தைத் தனித்தனி ஏட்டில் எழுதி அவ்வேட்டை ஓடுகிற ஆற்றுத்தண்ணீரில் எறிந்துவிட, யாருடைய ஏடு தண்ணீரை எதிர்த்துவருகிறதோ அன்னவரே ஜெயித்தவர் ஆவர் என்று சொல்லி, நமது சுவாமிகளை வாதுக்கழைக்க அப்படியே இருவரும் செய்தனர். இச்செய்கையிலும் சமணர்கள் தோற்றார்கள். இவ்வதிசயங்களைக்கண்ட அரசரும் குடிகளும் சைவமதத்தில் நம்பிக்கைகொண்டு சமணமதத்தை இகழ்ந்துவிட்டனர். சமணரில் அநேகரும் தாமாக சைவமதத்தில் சேர்ந்தனர். பிடிவாதமாய் வாதுபேசுகிற சமணர்கள் சிலர் தாமாக கழுமரத்தில் ஏறிமாண்டனர்.

பிறகு நமது சுவாமிகள் திருக்கொள்ளம்பூதூர் என்ற ஊருக்குச் செல்லும்போது அவ்வூருக்கருகிலுள்ள ஆறு வெள்ளமாயிருக்க ஆற்றைத்தாண்ட ஓடக்காரன் இன்றி, ஓடம்மாத்திரம் துறையில் கட்டியிருக்கப்பார்த்து, ஓடத்தில் நமது சுவாமிகளும் அடியார் கூட்டத்துடன் ஏறிக்கொண்டு திருப்பதிகம் பாட ஓடம் தானாகநகர்ந்து அக்கரையில் கொண்டுபோய்விட்டது.

சமயகுரவர்களில் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகளைப்பார்க்க, நமது சம்பந்த சுவாமிகள் திருப்பூந்துருத்திக்குவரும்போது; நமதுசுவாமிகள் ஏறிவந்த முத்துப்பல்லக்கை அவருக்குத் தெரியாமல் திருநாவுக்கரசு சுவாமிகளும் தானும் பல்லக்கு சுமப்பவரோடு சேர்ந்து சுமந்து வந்தார். நமது சுவாமிகள் இதைத்தெரிந்து சிவிகையினின்று இறங்கி அப்பரைத்தழுவ, இருவரும் சந்தோஷித்தனர்.

திருவோத்தூர் என்றவூரில் வந்தகாலையில், சிவனடியார் ஒருவர் நமது சுவாமிகளிடம் வந்து தான் தோப்பில் சிரமப்பட்டு வளர்த்த பனைமரங்கள் யாவும் ஆண்பனைகளாயிருப்பதால் காய்க்கிறதில்லையென்றும், ஆதலால் பயன் அடையாமற் போகிறேனென்றும் சொல்லிவருந்தினர். உடனே சுவாமிகள் அவர் விசனத்துக்கு இரங்கி திருப்பதிகம்பாட எல்லா மரங்களும் பெண்பனைகளாகி குலைகளோடும் காணப்பட்டன. அங்கு சிலநாள் தங்கியிருந்து, கடைசியாய் திருவாலங் காட்டிற்குச் சமீபமாகவந்தார்.

இத்தலம் காரைக்காலம்மையார் தனது சிரசினால்நடந்த தலமாதலால் இத்தலத்தில் தனதுபாதம் படப்படாதென்று அஞ்சி, சமீபமாயுள்ள ஓர் ஊரிலேதங்கி அன்றிரவு அவ்வூரிலேயே படுத்திருந்தார். திருவாலங்காட்டில் வீற்றிருக்கும் சிவபெருமான் அன்றிரவில் நமது சுவாமிகளுடைய சொப்பனத்தில் தோன்றி "நம்மை பாடுதற்கு மறந்தனையோ" என்று அருளினர். உடனே சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளைத் துதித்து "துஞ்ச வருவாரும் தொழுவிப்பாரும்" என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினர். மறுநாள் உதயத்தில் திருக்கூட்டத்தார் தனதிடம் வந்து காணும்பொழுது நேற்றிரவு தான் கண்ட கனவின் மகிமையைச் சொல்ல எல்லோரும் ஆனந்தமடைந்தனர்.

பின்பு பாசூர், வெண்பாக்கம், காரிக்காரை, முதலிய பல புண்ணிய ஸ்தலங்களை வணங்கி திருக்காளத்தி மலைக்குச்சென்றார். இது கண்ணப்பநாயனர் சிவபெருமானைப் பூஜித்து முத்தியடைந்த திவ்யக்ஷேத்திரமாதலால் கண்ணப்பநாயனருடைய திருத்தொண்டைச் சிறப்பித்துப்பாடி மலைமேலிருந்த காளத்தியப்பரைத் தரிசனம்செய்து அங்குசில நாள் தங்கினர். அவ்வூரில் இருந்தபடியே உத்தரகைலாசம், திருக்கேதாரம், கோகர்ணம், திருப்பதிப்பதிகம், இந்திரநீலப்பதிகம் முதலிய பலஸ்தலங்களை வணங்கி திருப்பதிகம் பாடியருளினர். பின்பு திருவொற்றியூர்வந்து சுவாமிதரிசனம் செய்துகொண்டிருந்தார்.

அந்நாளில் திருமயிலையில் சிவநேசச்செட்டியார் என்ற பக்திமான் ஒருவருக்கு பூம்பாவை என்றபெண் ஏகபுத்திரி

யாகப்பிறந்து வளர்ந்துவரும் நாளையில், ஓர் விஷப்பாம்பு பூம்பாவையைத் தீண்ட அப்பெண் இறந்தனள். சவத்தைக் கிரமப்படி மயானத்தில் தகனம்செய்தபின் அதன் அஸ்தியை சாம்பலுடன்சேர்த்து, ஓர் குடத்தில் பத்திரமாய் வைத்திருந்தார். ஓர் சமயம் நமது சுவாமிகள் அவ்வூருக்குப் போனபோது செட்டியார் தன்மகளின் அஸ்தியுள்ளகுடத்தைக் கொண்டுவந்துவைத்து, தான் இந்தப்பெண்ணை உங்களுக்கு விவாகம் செய்துவைக்கவேண்டுமென்ற எண்ணத்துடனிருந்ததாகவும் அது இறந்துபோனதாகவும் சொல்லி கண்ணீர்விட்டுப் புலம்பினர். சுவாமிகள் அவருடைய விசனத்தைமாற்ற திருவுளங்கொண்டு சிவபெருமானைத் துதித்துப் பாட, அஸ்திகள் பெண்ணுருக்கொண்டு எதிரில் வந்தது. அப்பெண்ணை விவாகம் செய்துகொள்ளும்படி நமது சுவாமிகளிடம்சொல்ல அவர் அச்சொல்லை மறுத்து அவ்வூர் விட்டுப்புறப்பட்டு பல ஸ்தலங்களைத் தரிசித்து பதிகங்கள் பாடி கடைசியாக சிதம்பரம் வந்து அங்கு சிலநாள் தங்கியிருந்தார்.

இச்செய்தி சீர்காழியிலுள்ள சிவபாதவிருதயர் கேள்விப்பட்டு, அவர் தன் சுற்றத்தார்களுடன் சிதம்பரம் வந்து நமது சுவாமிகளைச் சீர்காழிக்கு அழைத்துப்போயினர். அங்கு முருகநாயனர், திருநீலநக்கநாயனர் முதலிய சிவதொண்டர்கள் நமது சுவாமிகளைச் சேவித்துக் கொண்டிருந்தனர்.

நமது சுவாமிகளுக்கு விவாகம்செய்ய பெற்றோரும் மற்றோரும் அவாக்கொண்டு சுவாமிகளிடம் விஷயத்தைச் சொல்ல பெரியோர்சொல்லைத் தட்டப்படாதென்று விவாகத்துக்கு சம்மதித்தார். திருநல்லூரில் பெண்வீட்டில் விவாகம்நடந்தது. மணக்கோலத்துடன் தம்பதிகளும் மற்றோரும் அங்குள்ள பெருமணம் என்ற ஆலயத்தில் சுவாமிதரிசனம் செய்யப்போனபோது நமது சுவாமிகள் இறைவனைத் துதித்து தான் இல்லறத்தில் கலந்துவிட்டதால் தன்னுடைய எண்ணம் இல்லற மாய்கையில் அகப்பட்டுவிட்டதே இனி பரமனுடைய திருவடியில் எப்போதுசேர்வேனோ என்று மனதில் பரமசிவனைத் தியானித்து "கல்லூர் பெருமணம்" என்று திருப்பதிகம் பாடினர். அப்போது ஓர் பெரிய ஜோதி தோன்றி அதனுள்போவதற்கு ஓர் வாயிலும்தோன்ற "நீயும் உன் மனைவியும் இங்குள்ள யாவரும் இந்தஜோதியில்புகுந்து நம்மையடைவீராக" என்ற அசரீரியும் உண்டானது. சிவபக்தியுள்ள அங்கிருந்தவர்கள் அநேகர் உடனே ஜோதியுள்புகுந்து சாயுச்சியபதவி யடைந்தனர். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் தன் மனைவியாரைக் கைபிடித்து ஜோதியுள்புகுந்து ஜோதியோடு கலந்துவிட்டனர்.

உ

சிவமயம்.

## திருஞானசம்பந்த சுவாமிகளின்

# தேவாரப் பதிகங்கள்.

திருப்பிரமபுரம்—பண்—நட்டபாடை.

தோடுடைய செவியன் விடை யேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடிபூசி யென்னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

முற்ற லாமையிள நாகமோடேன முளைக்கொம் பவை பூண்டு
வற்ற லோடுகல னப்பலிதேர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையாற்றொழுதேத்தப்
பெற்ற மூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவ னன்றே.

நீர்பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி
ஏர் பரந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
ஊர்பரந்த வுலகின் முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்த பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

விண் மகிழ்ந்த மதிலெய் ததுமன்றி விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்து பலிதேரியவந்தென துள்ளங் கவர்கள்வன்
மண்மகிழ்ந்த வரவம்மலர்க் கொன்றை மலிந்தவரை மார்பிற்
பெண்மகிழ்ந்த பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே.

ஒருமைபெண்மையுடையன் சடையன்விடையூரும் மிவனென்ன
அருமை யாகவுரை செய்ய வமர்ந்தென துள்ளங் கவர்கள்வன்
கருமை பெற்றகடல்கொள்ள மிதந்ததோர் காலம் மிதுவென்னப்
பெருமை பெற்ற பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

மறை கலந்தவொலி பாடலோடாட லராகி மழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங்கவர்கள்வன்
கறை கலந்தகடி யார்பொழி னீடுயர் சோலைக் கதிர்சிந்தப்
பிறைகலந்த பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

சடைமுயங்கு புனலன் னனலன்னெரி வீசிச் சதிர்வெய்த
உடை முயங்குமர வோடுழிதந்தென துள்ளங் கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானல் பொன்னஞ் சிறகன்னம்
பெடைமுயங்கு பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

வியரிலங்கு வரையுந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயரிலங்கை யரையன்வலி செற்றெனை துள்ளங் கவர்கள்வன்
துயரிலங்கு முலகிற் பலவூழிக டோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுரமேவிய பெம்மா னிவனன்றே.

தாணுதல் செய்திறை காணியமாலொடு தண்டாமரையானும்
நீணுதல் செய்தொழியந் நிமிர்ந்தானெனை துள்ளங் கவர்கள்வன்
வாணுதல் செய்ம்மகளீர் முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல் செய் பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற நெறிநில்லா
ஒத்தசொல்ல வுலகம்பலி தேர்ந்தெனை துள்ளங் கவர்கள்வன்
மத்தயானை மறுகவ்வுரி போர்த்ததோர் மாயம்மிதுவென்னப்
பித்தர் போலும் பிரமாபுர மேவிய பெம்மானிவனன்றே.

அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞான சம்பந்தன் னுரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோலக்கா

பண்—தக்கராகம்.

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவமென்கொலோ

பெண்டான்பாக மாகப் பிறைச்சென்னிக்
கொண்டான் கோலக் காவுகோயிலாக்
கண்டான்பாதங் கையாற் கூப்பவே
உண்டானஞ்சை உலகமுய்யவே.

நலங்கொள் காழி ஞானசம்பந்தன்
குலங்கொள் கோலக் காவுளானையே
வலங்கொள் பாடல் வல்லவாய்மையார்
உலங்கொள் வினைபோயோங்கிவாழ்வரே.

திருச்சிற்றம்பலம்.

— பொற்றாளம் பெற்றது —

# திருக்கழுமலம்.

திருத்தாளச்சதி —பண்—வியாழக்குறிஞ்சி.

பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்றவும்பரப்
பாலேசேர் வாயேனோர்காண் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாணு ணீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணாற்
றாமேகாணு வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தால் எண்டிக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார் பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே.

பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்த வெண்பொடிப்
பீடார் நீடார் மாடாரும் பிறைநுதலரிவையொடு
முச்சத்தால் நச்சிப்போ ரூடர்ந்தடர்ந்த வெங்கணே
றூராவூரா நீள்வீதிப் பயில்வொடு மொலிசெயிசை
வச்சத்தா னச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசுவல வவனதிடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார் காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே.

பத்திப்போர் வித்திட்டே பரந்த வைம்புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறு வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவனுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்க லந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமலவளநகரே.

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு செண்பகக்
கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விரகன் மொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
டேழே யேழேநாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதன் மடவரலே.

திருச்சிற்றம்பலம்.

# திருநனிபள்ளி

பண்—பிடந்தைக்காந்தாரம்.

காரைகள் கூகைமுல்லை களவாகையீகை
படர்தொடரி கள்ளிகவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடமர்ந்த
சிவன்மேய சோலைநகர்தான்
தேரைகளாரைசாய மிதிகொள்ளவாளை
குதிகொள்ள வள்ளைதுவள
நாரைகளாரல் வார வயன்மேதி வைகு
நனிபள்ளிபோலு நமர்காள்.

சடையிடை புக்கொடுங்கி யுட்டங்குவெள்ளம்
வளர்திங்கள் கண்ணியயலே
யிடையிடை வைத்ததொக்கு மலர்தொத்துமாலை
யிறைவன் னிடங்கொள் பதிதான்
மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து
மணநாறு நீல மலருந்
நடையுடை யன்னம்வைகு புனலம் படப்பை
நனிபள்ளி போலுநமர்காள்.

தகைமலி தண்டுசூல மனலுமிழு நாகங்
கொடுகொட்டி வீணைமுரல
வகைமலி வன்னிகொன்றை மதமத்தம் வைத்த
பெருமானுகந்த நகர்தான்
புகைமலி கந்தமாலை புனைவார்கள் பூசல்
பணிவார்கள் பாடல்பெருகி
நகைமலி முத்திலங்கு மணல்சூழ் கிடக்கை
நனிபள்ளி போலுநமர்காள்.

கடல்வரை யோதமல்கு கழிகானல் பானல்
கமழ்காழி யென்று கருதப்
படுபொருளாறு நாலு முளதாக வைத்த
பதியான ஞானமுனிவன்
இடுமறை யொன்றவத்தர் பியன்மேலிருந்தி
னிசையாலுரைத்த பனுவல்
நடுவிருளாடுமெந்தை நனிபள்ளியுள்க
வினைகெடுத லாணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

பாலைநிலம் நெய்தல் நிலமாகும்படி அருளியது.

## கோயில்-பண்-குறிஞ்சி.

கற்றுங்கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
முற்று வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்று நின்றாரைப் பற்றுபாவமே.

பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே.

ஞாலத்துயர்காழி ஞானசம்பந்தன்
சீலத்தார்கொள்கைச் சிற்றம்பலமேய
சூலப்படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தாற்பாட வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநெல்வாயில் திரு அரத்துறை,

பண்—பியந்தைக் காந்தாரம்.

எந்தையீசனெம்பெருமான் ஏறமர்கடவுளென்றேத்தி
சிந்தைசெய்பவர்க்கல்லால் சென்றுகைகூடுவதன்றாற்
கந்தமாமலருந்திக்கடம்பு னனிவாமல்கு கரைமேல்
அந்தண்சோலை நெல்வாயி லரத்துறையடிகடம்மருளே.

வெருகுரிஞ்சு வெங்காட்டி லாடியவிமல னென்றுள்கி
யுருகிநைபவர்க்கல்லா லொன்றுங்கைகூடுவ தன்றான்
முருகுரிஞ்சு பூஞ்சோலை மொய்ம்மலர் சுமந்திழிசிவாவந்
தருகுரிஞ்சு நெல்வாயி லரத்துறையடிக டம்மருளே.

கறையினுர் பொழில்சூழ்ந்த காழியுண்ஞானசம்பந்தன்
அறையும் பூம்புனல்பரந்த வரத்துறையடிகடம்மருளை
முறைமையாற் சொன்னபாடன் மொழியுமாந்தர்
தம்வினைபோய்ப்
பறையுமை யுறவில்லை பாட்டிவைபத்தும் வல்லார்க்கே.

திருச்சிற்றம்பலம்.

முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்றது.

# பஞ்சாக்கரத்திருப்பதிகம்.

பண்—காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகநைந்து நினைமினாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்தவந்தகூற்
றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே,

மந்திரநான்மறை யாகிவானவர்
சிந்தையுணின்றவர் தம்மையாள்வன
செந்தழலோம்பிய செம்மைவேதியர்க்
கந்தியுண்மந்திர மஞ்செழுத்துமே.

ஊனிலுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவிளக்கினை யேற்றிநன்புலத்
தேனைவழிதிறந் தேத்துவார்க்கிடர்
ஆனகெடுப்பன வஞ்செழுத்துமே.

நல்லவர் தீயரெனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்திகாட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டுபோமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செழுத்துமே.

கொங்கலர் வன்மதன் வாளியைந்தகத்
தங்குள பூதமுமஞ்ச வைம்பொழில்
தங்கரவின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையிலை விரவஞ்செழுத்துமே.

தும்மலிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மைநரகம் விளைந்த போழ்தினும்
இம்மைவினை யடர்த்தெய்தும்போழ்தினும்
அம்மையினுந்துணை யஞ்செழுத்துமே.

வீடுபிறப்பை யறுத்துமெச்சினர்
பீடுகெடுப்பன பின்னை நாடொறும்
மாடுகொடுப்பன மன்னுமாநடம்
ஆடியுகப்பன வஞ்செழுத்துமே.

வண்டமரோதி மடந்தைபேணின
பண்டை யிராவணன் பாடியுய்ந்தன
தொண்டர்கள்கொண்டு துதிக்கப்பெ[illegible]
கண்டமளிப்பன வஞ்செழுத்துமே.

கார்வண னான்முகன் காணுதற்கொணாச்
சீர்வணச்சேவடி செவ்விநாடொறும்
பேர்வணம்பேசி பிதற்றும் பித்தர்கட்
கார்வணமாவன வஞ்செழுத்துமே.

புத்தர்சமண் கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத்தவர்க டெளிந்துதேறின
வித்தக நீறணிவார் வினைப்பகைக்
கத்திரமாவன வஞ்செழுத்துமே.

நற்றமிழ்ஞானசம் பந்தனான்மறை
கற்றவன் காழியர் மன்னனுன்னிய
அற்றமின் மாலையீ ரைந்துமஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்பராவரே.

திருச்சிற்றம்பலம்,

உபநயன காலத்தில் அருளியது.

## திருக்கழுமலம்.

திரு இயமகம்.

உற்றுமைசேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழிகாய்வது காமனையே
அற்றமறைப்பதுமுன்பணியே
அமரர்கள் செய்வதுமுன்பணியே
பெற்றுமுகந்தது கந்தனையே
பிரமபுரத்தை யுகந்தனையே.

பருமதின் மதுரை மன்னவை யெதிரே
பதிகமதெழுதிலை யவையெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே
வசையொடு மலர்கெட வருகரனே
கருதலி லிசைமுர றருமருளே
கழுமலமமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கன்மொழியே
வல்லவர் தம்மிடர் திடமொழியே.

திருச்சிற்றம்பலம்.

## சீகாழி.

திருஏகபாதம் —பண் — வியாழக்குறிஞ்சி.

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்.

விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை.

திருச்சிற்றம்பலம்.

# திருநெய்த்தானம்.

பண்—நட்டபாடை.

மையாடிய கண்டன் மலைமகள் பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத் தவளோடும்
நெய்யாடிய பெருமானிட நெய்த்தான மெனீரே.

பறையும்பழி பாவம்படு துயரம்பல தீரும்
பிறையும் புனலரவும்படு சடையெம் பெருமானூர்
அறையும்புனல் வருகாவிரி யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில் நெய்த்தான மெனீரே.

பேயா யினபாடப்பெரு நடமாடிய பெருமான்
வேயா யினதோளிக் கொருபாகம் மிகவுடையான்
தாயாகிய வுலகங்களை நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிட நெய்த்தான மெனீரே.

சுடுநீரணி யண்ணல்சுடர் சூலம் மனலேந்தி
நடுநள்ளிரு ணடமாடிய நம்பன்னுறை யிடமாம்
கடுவாளிள வரவாடுமிழ் கடனஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர் நெய்த்தான மெனீரே.

நுகராரமொ டேலம்மணி செம்பொன் னுரையுந்திப்
பகராவரு புனல்காவிரி பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதன்கரை நிகழ்வாய நெய்த்தான
நகரானடி யேத்தந்நமை நடலை யடையாவே.

விடையார்கொடியுடையவ்வண்ணல் வீந்தார்வெளையெலும்பும்
உடையார் நறுமாலைச் சடையுடையா ரவர்மேய
புடையேபுனல் பாயும்வயல் பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவ ரென்றும் அமருலகம் மடையாரே.

நிழலார்வயல் கமழ்சோலைக ணிறைகின்ற நெய்த்தானத்
தழலானவ னனலங்கையி லேந்தி யழகாய
கழலானடி நாளுங்கழ லாதேவிட வின்றித்
தொழலாலவர் நாளுந்துய ரின்றித் தொழுவாரே.

அறையார்கட லிலங்கைக்கிறை யணிசேர் கயிலாயம்
இறையாரமுனெடுத்தானிரு பதுதோளுற வூன்றி
நிறையார்புன னெய்த்தான னன்னிகழ் சேவடிபரவக்
கறையார்கதிர் வாளீந்தவர் கழலேத்துதல் கதியே.

கோலம்முடி நெடுமாலொடு கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி திகழ்வாய நெய்த்தானம்
காலம்பெற மலர்நீரவை தூவித்தொழுதேத்தும்
ஞாலம்புக ழடியாருட லுறுநோய் நலியாவே.

மத்தம்மலி சித்தத்திறை மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி பொருளாநினை யேன்மின்
நித்தம்பயி னிமலன்னுறை நெய்த்தானமதேத்தும்
சித்தம்முடை யடியாருடல் செறுநோயடையாவே.

தலமல்கிய புனற்காழியுட் டமிழ்ஞான சம்பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும் மிகவல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர்சிவ கதியே.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாச்சிலாச்சிராமம்.

பண் — தக்கராகம்.

துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சி
லாச்சிராமத் துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே.

அகமலியன்பொடு தொண்டர்வணங்கப்
பாச்சிராமத் துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொலா மிவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ்ஞான சம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகிலாவினை தானே.

திருச்சிற்றம்பலம்.

கொல்லி மழவன் புத்திரிக்கு முயலகன் தீர்ந்தது.

## திருநீலகண்டம்.

பண் — வியாழக்குறிஞ்சி.

அவ்வினைக்கிவ்வினையா மென்று சொல்லுமஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பது முந்தமக்கூனமன்றே
கைவினை செய்தம்பிரான் கழல்போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறு திருநீலகண்டம்.

பிறந்தபிறவியிற்பே ணியஞ்செல்வன் கழலடைவான்
இறந்தபிறவியுண்டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர்கோனொடுங்கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

பனி, நளிர்சுரம் போக்கியது.

---

## திருப்பட்டீச்சரம்.

திருவிராகம்—பண்—சாதாரி.

பாடன் மறைசூடன் மதிபல்வளையோர்
 பாகமதின் மூன்றோர் கணையாற்
கூடவெரியூட்டி யெழில்காட்டிநிழல்
 கூடுபொழில் சூழ்பழசையுண்
மாடமழபாடியுறை பட்டீசர
 மேயகடிகட்டரவினார்
வேடநிலைகொண்டவரை வீடுநெறிகாட்டி
 வினைவீடுமவரே.

மந்தமலிசோலை மழபாடிநகர்நீடு
 பழையாறை யதனிற்
பந்தமுயர்வீடுநல பட்டீசரமேய
 படர்புன் சடையனை
யந்தண்மறையோரினிது வாள்புகலி
 ஞானசம்பந்தனணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது
 செப்பவல தொண்டர்வினை நிற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்.

முத்துப்பந்தர் அருளியது.

## திருவாவடுதுறை நாலடிமேல் வைப்பு,

பண்—காந்தாரபஞ்சமம்.

இடரினுந் தளரினுமெனதுறு நோய்
தொடரினுமுனகழற்றொழுதெழுவேன்
கடறனிலமுதொடு கலந்தநஞ்சை
மிடறினிலடக்கிய வேதியனே
இதுவோவெமையாளுமாறீவதொன்றெமக்கில்லையே
லதுவோவுனதின்னருளாவடுதுறையானே.

அலைபுனலாவடு துறையமர்ந்த
இலைநுனைவேற்படை யெம்மிறையை
நலமிகுஞானசம்பந்தன்சொன்ன
விலையுடையருந்தமிழ்மாலைவல்லார்
வினையாயினநீங்கிப்போய் விண்ணவர்வியனுலகம்
நிலையாகமுன்னேறுவர் நிலமிசைநிலையிலரே.

திருச்சிற்றம்பலம்.

உலவாக்கிழி பெற்றது.

---

## திருத்தருமபுரம்.

யாழ்மூரி.

மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரைபொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் குமலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயி றருமபு ரம்பதியே.

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொருஉ புன றிரூஉ வமர் புகலியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம்பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியா
ரின்னெடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமு
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே.

திருச்சிற்றம்பலம்.

## திருநள்ளாறு.

பண் — பழந்தக்கராகம்.

போகமார்த்த பூண்முலையா டன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.

தோடுடைய காதுடையன் றோலுடையன் றொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே.

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந்தனல்ல
பண்புநள்ளா றேத்தும்பாடல் பத்துமிவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலுறைவாரே.

திருச்சிற்றம்பலம்.

இதெழுதிய திருவேடு தீயிலிட்டு வேகாதது.

---

## திருமருகல்விடந்தீர்த்த திருப்பதிகம்.

பண் — இந்தளம்.

சடையாயெனுமால் சரணீயெனுமால்
விடையாயெனுமால் வெருவாவிழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுண் மெலிவே.

சிந்தாயெனுமால் சிவனே யெனுமால்
முந்தாயெனுமால் முதல்வா வெனுமால்
கொந்தார்குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ விவளேசறவே.

வயஞானம் வல்லார் மருகற் பெருமான்
உயர்ஞான முணர்ந் தடியுள்குதலால்
இயன்ஞான சம்பந் தனபாடல் வல்லார்
வியன் ஞாலமெல்லாம் விளங்கும் புகழே.

திருச்சிற்றம்பலம்.

விடந்தீர்த்தது.

# திருவீழிமிழலை—திருவிருக்குக்குறள்.

பண் — குறிஞ்சி.

வாசிதீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீ ரேசலில்லையே.

இறைவராயினீர் மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமைநல்குமே.

நீறுபூசினீ ரேறதேறினீர்
கூறுமிழலையீர் பேறுமருளுமே.

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கைமுடியினீர் சங்கை தவிர்மினே.

காழிமாநகர் வாழிசம்பந்தன்
வீழிமிழலைமேற் றாழுமொழிகளே.

திருச்சிற்றம்பலம்

படிக்காசு சுவாமியருளியபோது வட்டந்தீர ஓதியது.

---

# திருமறைக்காடு.

பண்—இந்தளம்.

சதுரம்மறை தான்றுதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறைமைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்கவெனக்குன்
கதவந்திரு காப்புக்கொளுங் கருத்தாலே.

வானோர்மறை மாதவத்தோர் வழிபட்ட
தேனார்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனோர்தொழு தேத்தவிருந் தநீ யென்கொல்
கானார்கடு வேடுவனான கருத்தே.

காழிந்நகரான்கலை ஞானசம்பந்தன்
வாழிம்மறைக் காடனை வாய்ந்தறிவித்த
ஏழின்னிசை மாலையீரைந்திவை வல்லார்
வாழியுலகோர்தொழ வானடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

# திருமறைக்காடு,

திருவிராகம்—பண்—நட்டபாடை.

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினமலி யரவது கொடுதிவி
தலமலி சுராசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ வவருடல் குலைதர வதுநுகர் பவனெழில்
லைமலி மதில்புடை தழுவிய மறைவன மமர்தரு பரமனே.

நலமிகு திருவிதழி யின்மலர் நகுதலையொடுகன கியின்முகை
பலசுர நதிபடவரவொடு மதிபொதி சடைமுடி யினன்மிகு
தலநிலவிய மனிதர்களொடு தவமுயறரு முனிவர்கடம
மலமறு வகைமன நினைதரு மறைவன மமர்தருபரமனே.

வசையறு மலர்மகணில வியமறைவன மமர்பரமனைநினை
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள் புகழ்வழி வளர்தரு
மிசையமர் கழுமலநகரிறை தமிழ் விரகன துரை யியல்வல
விசைமலி தமிழொரு பதும்வலவ லருலகினி லெழில்பெறுவரே

---

# கோளறுபதிகம்.

பண்—பியந்தைக்காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்,

வேயுறுதோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணைதடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம்பிரண்டுமுடனே
ஆசறுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார்பிலங்க
வெருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடிவந்தென்
னுளமேபுகுந்த வதனால்
ஒன்பதொடொன்றோடேழு பதினெட்டோடாறு
முடனாய நாள்களவைதாம்
அன்பொடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்கு மிகவே.

உருவளர்பவளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றைதிங்க முடிமேலணிந்தென்
னுளமேபுகுந்தவதனாற்
றிருமகள்கலையதூர் திசெயமாதுபூமி
திசைதெய்வ மானபலவு
மருநதிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

மதிநுதன்மங்கையோடு வடபாலிருந்து
மறையோதுமெங்கள்பரமன்
நதியொடுகொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமேபுகுந்தவதனாற்
கொதியுறுகாலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய்களானபலவும்
அதிகுணநல்லநல்ல வவைநல்லநல்ல
அடியாரவர்க்குமிகவே.

நஞ்சணிகண்டனெந்தை மடவாடனோடும்
விடையேறு மெங்கள்பரமன்
றுஞ்சிருள்வன்னிகொன்றை முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையானபூதமவையும்
மஞ்சிடுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

வாள்வரியதளதாடை வரிகோவணத்தர்
மடவாடனோடுமுடனாய்
நாண்மலர்வன்னிகொன்றை நதிசூடிவந்தெ
னுளமேபுகுந்தவதனாற்
கோளரியுழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாகமோடுகரடி
ஆளரிநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

செப்பிளமுலைநன்மங்கை யொருபாகமாக
விடையேறுசெல்வனடைவார்
ஒப்பிளமதியுமப்பு முடிமேலணிந்தென்
உளமேபுகுந்தவதனால்
வெப்பொடுகுளிருமவாத மிகையானபித்தும்
வினையானவந்துநலியா
அப்படிநல்லநல்ல வவைநல்லநல்ல
யடியாரவர்க்குமிகவே.

வேள்படவிழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாடனோடுமுடனாய்
வாண்மதிவன்னிகொன்றை மலர்சூடிவந்தென்
உளமேபுகுந்தவதனால்
ஏழ்கடல்சூழிலங்கை யரையன்றனோடும்
இடருனவந்துநலியா
ஆழ்கடனல்லநல்ல வவைநல்லநல்ல
யடியாரவர்க்குமிகவே.

பலபலவேடமாகும் பரனாரிபாகன்
பசுவேறுமெங்கள்பரமன்
சலமகளோடெருக்கு முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனன்
மலர்மிசையோனுமாலு மறையோடுதேவர்
வருகாலமானபலவும்
அலைகடன்மேருநல்வ வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

கொத்தலர்குழலியோடும் விசயற்குநல்கு
குணமாயவேடவிகிர்தன்
மத்தமுமதியுநாக முடிமேலணிந்தெ
னுளமேபுகுந்தவதனாற்
புத்தரொடமணைவாதி லழிவிக்குமண்ண
றிருநீறுசெம்மைதிடமே
யத்தகுநல்லநல்ல வவைநல்லநல்ல
வடியாரவர்க்குமிகவே.

தேனமர்பொழில்கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம்பொனெங்குநிகழ
நான்முகனுதியாய பிரமாபுரத்து
மறைஞானஞானமுனிவன்
ஞானுறுகோளுநாளு மடியாரைவந்து
நலியதவண்ணமுரைசெய்
ஆனசொன்மாலையோது மடியார்கள்வானி
லரசாள்வராணைநமதே.

திருச்சிற்றம்பலம்.

அப்பருக்கு உரைத்தது.

இக்கோளறுபதிகத்தை நாடோறும் நியமமாக அன்புடன் ஓதிக்கொண்டு வந்தால், கிரகபீடை, நோய், இராசபயம், சோரபயம், சத்துருபயம், மிருகபயம், பூதபிசாசபயம் முதலியனவெல்லாம் நீங்கும். யாத்திரையில் இதனை ஓதினுல், சகலவிக்கினங்களும் நீங்கிப் பயன்களெல்லாம் சித்திக்கும்.

---

## திருவாலவாய் - பண் - புறநீர்மை.

மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக்கைம்மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகநால்
வேதமும்பொருள்களுமருளி
யங்கையற்கண்ணி தன்னொடுமமர்ந்த
வாலவாயாவதுமிதுவே.

பன்னலம்புணரும் பாண்டிமாதேவி
குலச்சிறையெனுமிவர்பணியு
மன்னலம்பெறுசீ ராலவாயீசன்
றிருவடியாங்கவைபோற்றிக்
கன்னலம்பெரிய காழியுள்ஞான
சம்பந்தன்செந்தமிழிவைகொண்
டின்னலம்பாட வல்லவரிமையோ
ரேத்தவீற்றிருப்பவரினிதே.

திருச்சிற்றம்பலம்.

# திருவாலவாய்—திருநீற்றுப்பதிகம்.

பண்—காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவதுநீறு வானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறு துதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறு சமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன் றிருவாலவாயான்றிருநீறே.

வேதத்திலுள்ளதுநீறு வெந்துயர்தீர்ப்பதுநீறு
போதந்தருவதுநீறு புன்மைதவிர்ப்பதுநீறு
ஓதத்தகுவதுநீறு உண்மையிலுள்ளதுநீறு
சீதப்புனல்வயல்சூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே.

முத்திதருவதுநீறு முனிவரணிவதுநீறு
சத்தியமாவதுநீறு தக்கோர்புகழ்வதுநீறு
பத்திதருவதுநீறு பரவவினியதுநீறு
சித்திதருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே.

காணவினியதுநீறு கவினைத்தருவதுநீறு
பேணியணிபவர்க்கெல்லாம் பெருமைகொடுப்பதுநீறு
மாணந்தகைவதுநீறு மதியைத்தருவதுநீறு
சேணந்தருவதுநீறு திருவாலவாயான்றிருநீறே.

பூசவினியதுநீறு புண்ணியமாவதுநீறு
பேசவினியதுநீறு பெருந்தவத்தோர்களுக்கெல்லாம்
ஆசைகொடுப்பதுநீறு அந்தமதாவதுநீறு
தேசம்புகழ்வதுநீறு திருவாலவாயான்றிருநீறே.

அருத்தமதாவதுநீறு அவலமறுப்பதுநீறு
வருத்தந்தணிப்பதுநீறு வானமளிப்பதுநீறு
பொருத்தமதாவதுநீறு புண்ணியர்பூசும்வெண்ணீறு
திருத்தகுமாளிகைசூழ்ந்த திருவாலவாயான்றிருநீறே.

எயிலதுவட்டதுநீறு இருமைக்குமுள்ளதுநீறு
பயிலப்படுவதுநீறு பாக்கியமாவதுநீறு
துயிலைத்தடுப்பதுநீறு சுத்தமதாவதுநீறு
அயிலைப்பொலிதருசூலத் தாலவாயான்றிருநீறே.

இராவணன்மேலதுநீறு எண்ணத்தகுவதுநீறு
பராவணமாவதுநீறு பாவமறுப்பதுநீறு
தராவணமாவதுநீறு தத்துவமாவதுநீறு
அராவணங்குந்திருமேனி யாலவாயான்றிருநீறே.

மாலொடயனறியாத வண்ணமுமுள்ளதுநீறு
மேலுறைதேவர்கடங்கண் மெய்யதுவெண்பொடிநீறு
வேலவுடம்பிடர்தீர்க்கு மின்பந்தருவதுநீறு
ஆலமதுண்டமிடற்றெம் மாலவாயான்றிருநீறே.

குண்டிகைக்கையர்களோடு சாக்கியர்கூட்டமுங்கூட
கண்டிகைப்பிப்பதுநீறு கருதவினியதுநீறு
வெண்டிசைப்பட்டபொருளா ரேத்துந்தகையதுநீறு
வண்டத்தவர்பணிந்தேத்து மாலவாயான்றிருநீறே.

ஆற்றலடல்விடையேறு மாலவாயான்றிருநீற்றைப்
போற்றிப்புகலிநிலாவு பூசுரன்ஞானசம்பந்தன்
தேற்றித்தென்னனுடலுற்ற தீப்பிணியாயினதீரச்
சாற்றியபாடல்கள்பத்தும் வல்லவர்நல்லவர்தாமே.

திருச்சிற்றம்பலம்.

இத்திருநீற்றுப்பதிகத்தினாலே நாடோறும் நியமமாக அன்போடு விபூதி அபிமந்திரித்துத் தரித்துக்கொண்டுவந்தால், சுரமுதலிய நோய்களும், பேய்பூதங்களால் விளையும் பல துன்பங்களும், கவலைகளும், பாவங்களும் நீங்கும்.

## திருநள்ளாறு.

திருவிராகம்—பண்—சாதாரி.

தளிரிளவளரொளிதன தெழிறருதிகழ்மலைமகள்
குளிரிளவளரொளிவன முலையிணையவைகுலவலி
னளிரிளவளரொளிமருவுநள்ளாறர்தன்னாமமே
மிளிரிளவளரெரியிடி லிவைபழுதிலைமெய்ம்மையே

அத்திரநயனிதொன்மலை மகள்பயனுறுமதிசயச்
சித்திரமணியணிதிகழ்முலை யிணையொடுசெறிதலிற்
புத்தரொடமணர்பொய்பெயரு நள்ளாறர்தன்னாமமே
மெய்த்திரளெரியினிலிடிலிவை பழுதிலைமெய்ம்மையே.

சிற்றிடையரிவைதன்வன முலையிணையொடுசெறிதரு
நற்றிறமுறுகழுமலநகர் ஞானசம்பந்தன்
கொற்றவனெதிரிடையெரி யினிலிடவிவைகூறிய
சொற்றெரியொருபதுமறி பவர்துயரிலர்தூயரே.

திருச்சிற்றம்பலம்.

இது சமணர் வாதின்பொருட்டுத் தீயிலிடுவதற்கு "போகமார்த்த பூண்முலையாள்" என்னும் பதிகம் உதயமாக இது தீயில் பழுதுபடாது என்னும் துணிவுகொண்டு அருளிச் செய்தபதிகம்.

---

## திருப்பாசுரம்.

பண்—கௌசிகம்

வாழ்கவந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாமரனாமமே
சூழ்கவையகமுந்துயர் தீர்கவே.

அரியகாட்சியராய்த் தமதங்கைசே
ரெரியரேறுகந் தேறுவர்கண்டமுங்
கரியர்காடுறை வாழ்க்கையராயினும்
பெரியராரறிவாரவர் பெற்றியே.

வெந்தசாம்பல் விரையெனப்பூசியே
தந்தையாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியாவெழுவார் வினைதீர்ப்பரா
லெந்தையாரவரெவ் வகையார்கொலோ.

வேதமுதல்வன் முதலாகவிளங்கிவைய
மேதப்படாமையுலகத் தவரேத்தல்செய்யப்
பூதமுதல்வன்முதலே முதலாப்பொலிந்த
சூதன்னொலிமாலையென்றேகலிக்கோவைசொல்லே.

நல்லார்கள்சேர்புகலி ஞானசம்பந்தனல்ல
வெல்லார்களும்பரவு மீசனையேத்தும்பாடல்
பல்லார்களும்மதிக்கப் பாசுரஞ்சொன்னபத்தும்
வல்லார்கள்வானோ ருலகாளவும்வல்லரன்றே.

திருச்சிற்றம்பலம்.

வைகையில் இட்டருளவும், அத்திருவேடு நதியிலே எதிர்த்து ஜலத்தைக் கிழித்துக்கொண்டு சென்றது.

# திருவாலவாய் திருவிராகம்.

பண்—கௌசிகம்.

வீடலாலவாயிலாய் விழுமியார்கணின்கழல்
பாடலாலவாயிலாய் பரவநின்றபண்பனே
காடலாலவாயிலாய் கபாலிநீள்கடிம்மதில்
கூடலாலவாயிலாய் குலாயதென்னகொள்கையே.

பட்டிசைந்தவல்குலாள் பாவையாளோர்பாகமா
யொட்டிசைந்ததன்றியும் முச்சியாளொருத்தியாக்
கொட்டிசைந்தவாடலாய் கூடலாலவாயிலாய்
எட்டிசைந்தமூர்த்தியா யிருந்தவாறிதென்னையே.

குற்றநீகுணங்கணீ கூடலாலவாயிலாய்
சுற்றநீபிரானுநீ தொடர்ந்திலங்குசோதிநீ
கற்றநூற்கருத்துநீ யருத்தமின்பமென்றிவை
முற்றுநீபுகழ்ந்து முன்னுரைப்பதென்முகம்மனே.

ஆதியந்தமாயினா யாலவாயிலண்ணலே
சோதியந்தமாயினாய் சோதியுள்ளொர்சோதியாய்
ஓதம்வந்தவாய்மையாற் கிளர்தருக்கினார்க்கலால்
ஓதிவந்தவாய்மையா லுணர்ந்துரைக்கலாகுமே.

கறையிலங்குகண்டனே கருத்திலாக்கருங்கடற்
றுறையிலங்கைமன்னனைத் தோளடரவூன்றினாய்
மறையிலங்குபாடலாய் மதுரையாலவாயிலாய்
நிறையிலங்குநெஞ்சினா னினைப்பதேதநியமமே,

பொன்றயங்கிலங்கொளிந் நலங்குளிர்ந்தபுன்சடை
பின்றயங்கவாடுவாய் பிஞ்ஞகாபிறப்பிலீ
கொன்றையம்முடியினாய் கூடலாலவாயிலாய்
நின்றயங்கியாடலே நினைப்பதென்னியமமே.

போயநீர்வளங்கொளும் பொருபுனற்புகலியான்
பாயகேள்விஞானசம்பந்தனல்லபண்பினால்
ஆயசொல்லின்மாலைகொண் டாலவாயிலண்ணலைத்
தீயதீரவெண்ணுவார்கள் சிந்தையாயதேவரே.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கொள்ளம்பூதூர் ஈரடிமேல்வைப்பு.

பண்—காந்தாரபஞ்சமம்.

கொட்டமேகம ழுங்கொள்ளம்பூதூர்
நட்டமாடிய நம்பனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே.

கோட்டகக்கழ னிக்கொள்ளம்பூதூர்
நாட்டகத்துறை நம்பனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே.

குலையினார்தெங்கு சூழ்கொள்ளம்பூதூர்
விலையிலாட்கொண்ட விகிர்தனையுள்கச்
செல்லவுந்துக சிந்தையார்தொழ
நல்குமாறரு ணம்பனே.

கொன்றைசேர்சடை யான்கொள்ளம்பூதூர்
நன்றுகாழியுண் ஞானசம்பந்தன்
இன்றுசொன்மாலைகொண் டேத்தவல்லார்போ
யென்றும்வானவரோடிருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

பெரும் வெள்ளத்தில் ஓடக்காரனில்லாமல் ஓடம் அக்கரைசேரப்பெற்றது.

## திருஅண்ணாமலை - பண் - தக்கேசி.

பூவார்மலர்கொண்டடியார்தொழுவார் புகழ்வார்வானோர்கள்
மூவார்புரங்களெறித்தவன்று மூவர்க்கருள்செய்தார்
தூமாமழைநின்றதிரவெருவித் தொறுவின்னிரையோடு
மாமாம்பிணைவந்தணையுஞ்சார லண்ணாமலையாரே.

வந்தித்திருக்குமடியார்தங்கள் வருமேல்வினையோடு
பந்தித்திருந்தபாவந்தீர்க்கும் பரமனுறைகோயில்
முந்தியெழுந்தமுழவினோசை முதுகல்வரைகள்மே
லந்திப்பிறைவந்தணையுஞ்சாரல் அண்ணாமலையாரே

அல்லாடரவமியங்குஞ்சார லண்ணாமலையாரை
நல்லார்பரவப்படுவான்காழி ஞானசம்பந்தன்
சொல்லால்மலிந்தபாடலான பத்துமிவைகற்று
வல்லாரெல்லாம்வானோர்வணங்க மன்னிவாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்

# திருவோத்தூர்.

பண்—பழந்தக்கராகம்.

பூத்தேர்ந்தாயன கொண்டுநின்பொன்னடி
யேத்தாதாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர்மேய வொளிமழுவாளங்கைக்
கூத்தீரும்ம குணங்களே.

இடையீர்போகா விளமுலையாளையோர்
புடையீரேபுள்ளி மானுரி
யுடையீரேயும்மை யேத்துதுமோத்தூர்ச்
சடையீரேயுமதாளே.

குரும்பையாண்பனை யீன்குலையோத்தூர்
அரும்புகொன்றை யடிகளைப்
பெரும்புகலியுண் ஞானசம்பந்தன்சொல்
விரும்புவார் வினைவீடே.

திருச்சிற்றம்பலம்.

ஆண்பனை பெண்பனையாக்கியது.

---

# திருப்பழையனூர் - திருஆலங்காடு.

பண்—தக்கராகம்.

துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும் வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாருமுனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும்வகைகேட்
டஞ்சும்பழையனூர் ஆலங்காட்டெம்மடிகளே.

கேடும்பிறவியுமாக்கினாருங்கேடிலா
வீடுமாநெறிவிளம்பினா ரெம்விகிர்தனார்
காடுஞ்சுடலையுங் கைக்கொண்டல்லிற் கணப்பேயோ
டாடும்பழையனூர் ஆலங்காட்டெம்மடிகளே.

சாந்தங்கமழ்மறுகிற் சண்பைஞானசம்பந்த
னாந்தண்பழையனூர் ஆலங்காட்டெம்மடிகளை
வேந்தனருளாலே விரித்தபாடலிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந் தீர்த்தமாகச்சேர்வாரே.

திருச்சிற்றம்பலம்.

# திருமயிலாப்பூர் - பூம்பாவைத்திருப்பதிகம்.

பண் — சீகாமரம்.

மட்டிட்டபுன்னையங் கானன்மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்டபண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல்காணாதே போதியோபூம்பாவாய்.

மைப்பூசுமொண்கண் மடநல்லார்மாமயிலைக்
கைப்பூசுநீற்றான் கபாலீச்சரமமர்ந்தான்
நெய்ப்பூசுமொண்புழுக்க னேரிழையார்கொண்டாடுந்
தைப்பூசங்காணாதே போதியோபூம்பாவாய்.

கானமர்சோலைக் கபாலீச்சரமமர்ந்தான்
றேனமர்பூம்பாவைப் பாட்டாகச்செந்தமிழான்
ஞானசம்பந்தனலம் புகழ்ந்தபத்தும்வல்லார்
வானசம்பத்தவரோடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.

எலும்பைப் பெண்ணாக்கியது.

# நமச்சிவாயத்திருப்பதிகம்.

பண் — கௌசிகம்.

காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி
யோதுவார்தமை நன்னெறிக்குய்ப்பதும்
வேதநான்கினு மெய்ப்பொருளாவது
நாதநாமநமச்சிவாயவே.

நம்புவார்நமர் நாமநவிற்றினால்
வம்புநாண்மலர் வார்மதுவொப்பது
செம்பொனார்தில தம்முலகுக்கெலா
நம்பனாமநமச்சிவாயவே.

நெக்குளார்வமிகப் பெருகிநினைந்
தக்குமாலைகுடங்கையி லெண்ணுவார்
தக்கவானவராத் தகுவிப்பது
நக்கனாமநமச்சிவாயவே.

இயமன்றூதரு மஞ்சுவரின்சொலா
னயம்வந்தோதவல்லார் தமைநண்ணினு
ணியமந்தானினை வார்க்கினியானெற்றி
நயனனுமநமச்சிவாயவே.

கொல்வாரேனுங் குணம்பலநன்மைகள்
இல்லாரேனுமியம்புவ ராயிடில்
எல்லாத்தீங்கையு நீங்குவரென்பரால்
நல்லார்நாம நமச்சிவாயவே.

மந்தரம்மன்ன பாவங்கண்மேவிய
பந்தனையவர் தாமும்பகர்வரேல்
சிந்தும்வல்வினை செல்வமுமல்குமால்
நந்திநாமநமச்சிவாயவே.

நரகமேழ்புக நாடினராயினும்
உரைசெய்வாயின ராயினுருத்திரர்
விரவியேபுகுவித்திடு மென்பரால்
வரதனுமநமச்சிவாயவே.

இலங்கைமன்ன னெடுத்தவடுக்கன்மேல்
தலங்கொள்கால்விரல் சங்கரனூன்றலும்
மலங்கிவாய்மொழி செய்தவனுய்வகை
நலங்கொளுமநமச்சிவாயவே.

போதன்போதன கண்ணனுமண்ணறன்
பாதந்தான்முடி நேடியபண்பரா
யாதுங்காண்பரி தாகியலர்ந்தவர்
ஓதுநாமநமச்சிவாயவே.

கஞ்சிமண்டையர் கையிலுண்கையர்கள்
வெஞ்சொன்மிண்டர் விரவிலரென்பரால்
விஞ்சையண்டர்கள் வேண்டவமுதுசெய்
நஞ்சுண்கண்ட னமச்சிவாயவே.

நந்திநாம நமச்சிவாயவெனும்
சந்தையாற்றமிழ் ஞானசம்பந்தன்சொல்
சிந்தையான்மகிழ்ந் தேத்தவல்லாரெல்லாம்
பந்தபாசமறுக்க வல்லார்களே.

திருச்சிற்றம்பலம்.

# திருநல்லூர்ப்பெருமணம்.

பண்—அந்தாளிகுறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

கல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாய்த்தில
செல்லூர்ப்பெருமணஞ் சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமண மேயநம்பானே.

தருமணலோதஞ்சேர் தண்கடனித்திலம்
பருமணலாக்கொண்டு பாவைநல்லார்கள்
வருமணங்கூட்டி மணஞ்செயுநல்லூர்ப்
பெருமணத்தான்பெண்ணோர் பாகங்கொண்டானே.

அன்புறுசிந்தைய ராகியடியவர்
நன்புறுநல்லூர்ப் பெருமணமேவிநின்
றின்புறுமெந்தை யிணையடியேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டுசெய்வாரே.

வல்லியந்தோலுடை யார்ப்பதுபோர்ப்பது
கொல்லியல்வேழத் துரிவிரிகோவண
நல்லியலார்தொழு நல்லூர்ப்பெருமணம்
புல்கியவாழ்க்கையெம் புண்ணியனார்க்கே.

ஏறுகந்தீரிடு காட்டெரியாடிவெண்
ணீறுகந்தீர்நிரை யார்விரிதேன்கொன்றை
நாறுகந்தீர்திரு நல்லூர்ப்பெருமணம்
வேறுகந்தீருமை கூறுகந்தீரே.

சிட்டப்பட்டார்க்கெளி யான்செங்கண்வேட்டுவப்
பட்டங்கட்டுஞ்சென்னி யான்பதியாவது
நட்டக்கொட்டாட்டறா நல்லூர்ப்பெருமணத்
திட்டப்பட்டாலொத் தீராலெம்பிரானீரே.

மேகத்தகண்டனெண் டோளன்வெண்ணீற்றுமை
பாகத்தன்பாய்புலித் தோலொடுபந்தித்த
நாகத்தனல்லூர்ப் பெருமணத்தானல்ல
போகத்தன்யோகத்தை யேபுரிந்தானே.

தக்கிருந்தீரன்று தாளாலரக்கனை
உக்கிருந்தொல்க வுயர்வரைக்கீழிட்டு
நக்கிருந்தீரின்று நல்லூர்ப்பெருமணம்
புக்கிருந்தீரெமைப் போர்க்கருளீரே.

எலுந்தண்டாமரை யானுமியல்புடை
மாலுந்தம்மாண்பறி கின்றிலர்மாமறை
நாலுந்தம்பாட்டென்பர் நல்லூர்ப்பெருமணம்
போலுந்தங்கோயில் புரிசடையார்க்கே.

ஆதரமணொடு சாக்கியர்தாஞ்சொல்லும்
பேதமைகேட்டுப் பிணக்குறுவீர்வம்மின்
நாதனைநல்லூர்ப் பெருமணமேவிய
வேதனதாடொழ வீடெளிதாமே.

நறும்பொழிற்காழியுண் ஞானசம்பந்தன்
பெறும்பதநல்லூர்ப் பெருமணத்தானை
உறும்பொருளாற்சொன்ன வொண்டமிழ்வல்லார்க்
கறும்பழிபாவ மவலமிலரே.

திருச்சிற்றம்பலம்.

சிவாக்கினியில் ஜக்கியமடைகையில் அருளியது.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

# புராண சாரம்.

---

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மை
பொருவில்கொருக் கையரதிபர் புகழனார்பால்
மாற்றருமன் பிணிற்றிலக வதியா மாது
வந்துதிக்க பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
துணைவரரு டரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
பாழியொழித் தானதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமக் கையருளா னீறு சாத்தி
வண்டமிழா னோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
அந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
பூம்புகலூ ரரன்பாதம் பொருந்தி னாரே.

சிவமயம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் சரித்திர வரலாறு.

நம் பரதகண்டத்திலுள்ள தமிழ்தேசத்தில் திருமுனைப்பாடி என்ற ஓர் நாட்டில் திருவாமூர் என்று ஓர் ஊர் உளது. அவ்வூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனார் என்பவர் தோன்றியிருந்தார். இயற்கையிலேயே செல்வந்தராயும் தர்மசிந்தனை யுள்ளவராகவும் ஜீவித்து வந்தார். இவர் மாதினியார் என்ற உத்தமியை மணந்து இல்லறம் நடத்திவந்தார். இவர் தன் புருஷன் குணத்துக்கேற்ப தானும் தர்மசிந்தையுடையவராக இருந்தார்.

புகழனார்க்கும் மாதினியார்க்கும் முதலில் திலகவதியார் என்ற புதல்வியார் பிறந்தார். சில ஆண்டு கழிந்தபின்னர் மருணீக்கியார் என்ற புதல்வர் தோன்றினார். புகழனார் மருணீக்கியாருக்கு சிறுபிராயத்திலே பல கலைகளையும் பயிற்றுவித்தார். மருணீக்கியாரும் கலைகளில் வல்லவராகி வளர்ந்துவந்தார். திலகவதியாருக்குப் பன்னிரண்டு பிராயமாயிற்று.

அந்நாளில் கலிப்பகையார் என்ற ஓர் வேளாளர் இருந்தார். இவர் சிவபக்தர். சேனாதிபதி உத்தியோகம்செய்து வாழ்ந்துவந்தார். கலிப்பகையார், திலகவதியாரை மணம் செய்ய விரும்பி புகழனாரிடம் பல பெரியோர்களை அனுப்பி தனது கருத்தைத் தெரிவிக்கச்சொன்னார். அவர்களும் புகழனாரிடம்சென்று கலிப்பகையாருடைய கருத்தைத் தெரிவித்தனர். புகழனார் கலிப்பகையாருடைய குலம், குணம் முதலியவற்றைத்தெரிந்து அவருக்குப் பெண்கொடுப்பதாக இசைந்தனர். அந்த நல்ல சமாச்சாரத்தைப் பெரியோர்கள் கலிப்பகையாருக்குத் தெரிவிக்க, அவரும் சந்தோஷமாயிருந்தார்,

திருமணம் பேசியபின், அதற்கு வேண்டியன நிகழ்வதற்குமுன், வடபாகத்தில் வேற்றரசர் போருக்கு ஏற்பட்டனர். அப்போர்முனைக்குக் கலிப்பகையார் அனுப்பப்பட்டார். கலிப்பகையார் போர்முனையில் இருந்துவருகிற சமயத்தில் புகழனார் திருவாமூரில் சிவபதமடைந்தார். புகழனார் இறந்தபின் அவர் மனைவி மாதினியாரும் புருஷனைப்

பிரிந்து இருக்க மனம்கொள்ளாது தானும் உயிர்துறந்தனர் திலகவதியாரும் மருணீக்கியாரும் பெற்றோர்களின் பிரிவா ற்றாமையினால் துயருற்று, அவர்களுக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடனைச் செய்துமுடித்தனர்.

திருவாமூரில் திலகவதியாரும் மருணீக்கியாரும் தங்கள் பெற்றோருக்குப்பின், குடும்பத்தைப் பார்த்துவந்திருக்கும் போது, போர்முனையில் கலிப்பகையார் விண்ணுலகெய் தினார். இச்செய்தி திலகவதியாருக்கும் மருணீக்கியாருக் கும் எட்டியது. உடனே திலகவதியார் "என் பெற்றோர்கள் என்னை கலிப்பகையாருக்கு மணம்பேசி முடிவு செய்தனர். என்னுயிர் அவருடையதாயிற்று; ஆதலால் என் உயிரை அவர் உயிரோடு சேர்ப்பேன்," என்று உறுதிப்படுத்தினார். இச்சமயத்தில் மருணீக்கியார் திலகவதியாரை வணங்கி "நம்முடைய பெற்றோர்கள் சிவபதமடைந்தபின் உம்மை யே அவர்களாக நினைத்துக்கொண்டிருக்கிறேன்; என்னைத் தனிமையில் விடுத்துச்செல்லத் துணிவீராயின், முதலில் என்உயிரை விடுகிறேன்" என்று புலம்பினார். திலகவதி யார் தம்பியாரின் புலம்பலுக்கிரங்கி "தம்பியார் உலகில் வாழ்தல்வேண்டும்" என்று எண்ணி தனது மனதைமாற்றி இல்லத்திலேயே இருந்து சிவத்தொண்டு புரிவாராயினார். மருணீக்கியாரும் தன் தமக்கையாகிய திலகவதியாருடன் இருந்துவந்தார்.

மருணீக்கியார் பல கலைகளிலும் போதியதேர்ச்சி பெற் றவராதலால் இவ்வுலகம் மாயை யென்றும், நிலையாமை யென்றும் உணர்ந்து, அறநெறியில் ஈடுபட்டார். அவர் சத்திரங்கள் கட்டுவித்தார்; தண்ணீர்ப்பந்தல் அமைத்தார்; குளங்கள் வெட்டினார்; சோலைகள் உண்டுபண்ணினார்; பலர்க்கும் விருந்து செய்தார்; கவிஞர்களுக்குப் பரிசளித் தார். பின்னர் துறவுபூண்டு சமய ஆராய்ச்சியில் பிர வேசித்தார்.

பூர்வஜென்மத்தின் தவக்குறைவினால் மருணீக்கியா ருக்கு சைவசமயத்திலிருந்த பற்று ஒழிந்து சமணசமயத்தில் பற்றுக்கொண்டு, பாடலிபுரம்போய், அங்குள்ள சமண பள்ளியிற்சேர்ந்தார், சமணக்கலைகள் பலவற்றையுங்கற்று அவற்றில் தேர்ச்சிபெற்றார். இவருடைய தேர்ச்சியைக் கண்ட சமணர்கள் இவருக்கு தருமசேனர் என்ற பெயரும் சூட்டி இவரைக்குருவாகவும் கொண்டனர். தருமசேனர் அங்கேயே இருந்து புத்தர்களை ஓர்சமயம் வாதில்வென்று சமணசமயத்தைப் போற்றிவளர்த்தார்.

திலகவதியார் தம்பியார் சமணமதத்தில் சேர்ந்தது தெரிந்து மனம் நொந்தனர். தன்னுடைய வாழ்நாளை

வீணுக்காது திருவதிகை என்ற திருப்பதிக்குப்போய் திருக் கோவிலில் சிவத்தொண்டு செய்துவந்தார். அவருக்குத் தன் தம்பியாருடைய நினைவு தோன்றிற்று. திலகவதியார் திருவதிகை வீரட்டானேஸ்வரரைத் தொழுது "பெருமானே, சமணப்படுகுழியில் வீழ்ந்துகிடக்கும் என் தம்பியாரை அதினின்றும் எடுத்தாளல் வேண்டும்" என்று பலமுறை தோத்தரித்து வருவார். சிவபெருமான் ஓர் நாள் திலகவதியார் கனவில் தோன்றி "உன் மனக்கவலையை மாற்றுக; உன் தம்பி முன்ஜன்மத்தில் நம்மை அடைவதற்குத் தவம்பண்ணினவன். அவனுக்கு சூலைநோய் உண்டுசெய்து அவனை ஆண்டருள்வோம்" என்று அருளி மறைந்தார்.

பாடலிபுரத்திலிருந்த தருமசேனருக்கு திருவருள் கிருபையால் சூலைநோய் புகுந்து. குடலை முறுக்குகிறது. தருமசேனர் சூலைநோயினல் வருந்துகிருர். வருந்தி வருந்தி அவர் பாழி அறையில் மயங்கி மயங்கி விழுந்தார். இதைக் கண்ட சமணர்கள் பலர் ஒன்றுசேர்ந்து "இச்சூலைநோய் மிகக்கொடியதாயிருக்கிறது. இது நஞ்சுபோல் கவர்கிறது. இதற்கென்ன செய்வது" என்று துயருற்றனர். பின்னர் சமணர்கள் "பார்ப்போம்" என்றுசொல்லி தங்கள் குண்டிகையிலிருந்த நீரை மந்திரித்துக் குடிப்பித்தனர். மயிற்பீலியினல் தடவி மந்திரித்தனர். என்னசெய்தும் சூலைநோய் தணிந்தபாடில்லை. கடைசியில் இந்நோயைத் தீர்க்க நம்மால் முடியாது என்று சொல்லி கைவிட்டார்கள்.

தருமசேனருக்கு, கடவுள் திருவருள் கூட்டுதலும் நற்காலமும் ஒத்துக்கொண்டது. அவருக்குத் திலகவதியாருடைய ஞாபகம் வந்தது. தமது நிலைமையை திலகவதியாருக்குப்போய் தெரிவிக்கும்படி தனது சமையற்காரன் ஒருவனை அவ்வம்மையாரிடம் அனுப்பினுர்.

சமையற்காரன் திருவதிகை வந்து திலகவதியம்மையாரை நந்தவனத்தில் கண்டு வணங்கி "உமது இளையவரின் ஏவலால் நான் இங்குவந்தேன்" என்ருன். அம்மையார் "என்ன என் தம்பியார்க்கு ஏதாகிலும்தீங்கு நேர்ந்ததோ!" என்று கேட்டார். சமையற்காரன் "ஆம் அவர் சூலைநோயினல் துன்பப்படுகிருர், என்னசெய்தும் தீரவில்லை. உம்மிடம்சொல்லி உய்யும்வழிகேட்டு வரும்படி என்னை அனுப்பினுர்" என்று சொன்னுன். அம்மையார் "நான் சமணர் பள்ளிக்கு வரமாட்டேன். இதைத் தம்பியாரிடம்சொல் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதைக்கேட்ட சமையற்காரன் தருமசேனரிடம்போய் அம்மையார் சொன்னதைச் சொன்னுன்.

தருமசேனர் "அந்தோ என்செய்வேன்" என்று மனம் சோர்ந்தார். அந்நிலையில் சிவபெருமான் திருவருள் கூடலாயிற்று. "இக்கொடுநோய் நான் இங்குள்ளவரை என்னைவிட்டு நீங்காது. நான் என் தமக்கையாரிடம் அடைவேன்" என்று உறுதிகொண்டார். அப்பொழுது சிறிது ஆறுதல் உண்டானது. உடனே தருமசேனர் சமணர் பள்ளியைவிட்டு நீங்கி திருவதிகைக்கு வந்து திலகவதியார் திருமடம்சேர்ந்து "அடியேன் சூலைநோயால் வருந்துகிறேன். பொறுக்க முடியவில்லை. உய்யும்வழி உணர்த்தி அருள்க" என்று திருவடியில் வீழ்ந்தார்.

அம்மையார் தான் கனவுகண்டதும், தம்பியாருக்குச் சூலைநோய் உண்டானதும் சிவபெருமான் திருவருள் என்று நினைத்து கடவுளைத்தொழுதார். தம்பியாரை "எழுந்திரு" என்று சொன்னார். தருமசேனர் என்ற மருணீக்கியார் எழுந்து தமக்கையாரை வணங்கினார். திலகவதியார் "இது சிவபெருமான் திருவருளாகும். அவருக்குத் தொண்டுசெய்க" என்று கட்டளையிட்டார். அவருக்குப் பஞ்சாக்ஷரத்தை ஓதி திருநீற்றைக் கொடுத்தார். மருணீக்கியார் பஞ்சாக்ஷரத்தைக் காதாரக்கேட்டு அதை தன்வாயினால் ஓதிக்கொண்டு திருநீறணிந்தார்.

பொழுது விடிந்ததும் திலகவதியார் வழக்கம்போல் திருவலகும், திருமெழுக்கும், திருத்தோண்டியும் எடுத்துக் கொண்டு ஆலயத்துக்குச் சென்றார். தனது தம்பியாகிய மருணீக்கியாரையும் கூட அழைத்துச்சென்றார். மருணீக்கியார் ஆலயம் வந்ததும், சிவபெருமானைத் தொழுதார். அவ்வமயம் மருணீக்கியாருக்கு சிவபெருமானுக்குத் தமிழ்ப் பாமாலை சாத்தவேண்டுமென்ற மெய்உணர்வு தோன்றியது. தோன்றவே "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்று ஆரம்பித்து பதிகம்பாடத் தொடங்கினார். பதிகம்பாடி முடிந்ததும் சூலைநோயும் ஒழிந்தது. மருணீக்கியார் தன்னை மறந்து சிவத்தில் ஈடுபட்டு அன்புருவாய் நிற்கிறார். விழுந்து விழுந்து புரண்டு புரண்டு எழுகிறார். "இச்சூலைநோயால் அல்லவா இப்பெருவாழ்வுக்கு நான் இலக்கானேன். இதற்கு என்ன கைம்மாறுசெய்வேன்" என்றார். அப்போது "மொழிக்குமொழி இனிப்பான பாடல்களைப் பாடினாய். அதனால் 'நாவுக்கரசு' எனப்பெயர் உனக்கு உலகத்தில் வழங்குக" என்று அசரீரி உண்டாயிற்று. அங்கிருந்தவர்களெல்லாம் ஆச்சரியத்துடன் அதிசயித்தனர்.

திருநாவுக்கரசர் சைவமதத்தில் சேர்ந்துவிட்டதை பாடலிபுரத்திலிருக்கின்ற சமணர்கள் கேள்விப்பட்டு, எல்லோரும்கூடி யோசித்து, பல்லவராஜனிடம்சென்று, நம்மிடமி

ருந்த தருமசேனர் தன் தமக்கையார் சைவமதத்திலிருப்ப தால் தானும் சைவசமயத்தில் சேர்ந்து கொண்டு நம்முடைய கடவுளை நிந்தனைசெய்துவருகிறார் என்றுரைத்தனர்.

இதைக்கேட்ட பல்லவராஜன் தருமசேனரை உடனே கையோடு அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தான். அரசன் ஆக்ஞைப்படி மந்திரிமார் தருமசேனரிடம் வந்து அழைத் தனர். அப்போது சுவாமிகள் "நாமார்க்குங் குடி யல்லோம்" என்ற திருத்தாண்டகம் பாடி அரசன் ஆக்ஞை யைமறுத்தனர். பிறகு மந்திரிமார் தருமசேனரிடம் நயந்த உரைகளைச்சொல்லி அரசனிடம் அழைத்துப்போயினர்.

அரசன் தருமசேனரைப் பார்த்ததும் கோபங்கொண்டு பக்கத்திலிருந்த சமணர்களைநோக்கி "தருமசேனரை என் செய்வது" என்று வினவ, இவனை நீற்றறையில் விட்டு மடியச்செய்க என்று சமணர்கள் கூறினார்கள். அவ்வாறே தருமசேனர் நீற்றறையில் பூட்டப்பட்டார். அப்போது சுவாமிகள் "மாசில் வீணையும் மாலைமதியமும்" என்ற பதிகம் பாடிக்கொண்டு நீற்றறையினுட் புகுந்தார்.

சமணர்கள் சந்தோஷித்தனர். ஒருவாரமாயினதும் நீற்றறையைத் திறந்துபார்த்தார்கள். திருநாவுக்கரசர் யா தொருஊனமுமின்றி யிருத்தலைப்பார்த்து, சமணர் திடுக் கிட்டு, இவன்முன் நம்முடைய மதத்தில் இருந்தகாலையில் கற்றிருந்த மந்திரசக்தியால் பிழைத்துக்கொண்டான் என்று அரசனிடம் சொல்லி, பிறகு நஞ்சைக்கொடுத்து மாள வைப்பதே தகுதியென்று அரசனிடம் சொன்னார்கள். அரசனும் அதற்கிசைந்து திருநாவுக்கரசருக்கு நஞ்சைக் கொடுக்கக் கட்டளையிட்டான். அக்கட்டளைப்படியே நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்ணக்கொடுத்தனர். நாவரசர் "நாதனடியார்க்கு நஞ்சுமமுதமாம்," என்று அந்த நஞ்சு கலந்தசோற்றை யுண்டார். நஞ்சும் அமுதமாயிற்று. நாவ ரசர் மடிந்தபாடில்லை.

தருமசேனர் சாகாதிருப்பாராயின் எங்களுக்கும் உமது அரசாக்ஷிக்கும் தீங்குநேரிடுமென்று அரசனிடம் சொல்லி, உம்முடைய யானையைவிட்டு தருமசேனனைக் கொல்லச் செய்வதே தக்கது என்றனர் சமணர். அவ்வரசனும் அவ் வாறே தனது யானையை ஏவி தருமசேனரைக் கொல்லத் தூண்டினான். நாயனார் சிவபிரானை நினைத்து "சுண்ண வெண் சந்தனச்சாந்தும்" என்று திருப்பதிகம் பாடினார். யானை நாயனாரை வலஞ்செய்து வணங்கிற்று. யானைமே லிருந்தபாகன் யானையை அங்குசத்தினால் வதைத்து தரும சேனரைக் கொல்லத்தூண்டினான். யானை, பாகனைக்கொன்

றும் பக்கத்திலிருந்த சமணர்களையும் கிழித்து இன்னும் இருக்கும் சமணர்களைக் கொல்லவும் தேடியது.

மீதியிருந்த சமணர்கள் அரசனிடம் வந்து "இவன் நம்மிடமிருந்து கற்ற மந்திரோபாயத்தால் எல்லாவிதத்திலும் தப்பித்துக்கொண்டான். ஆகையால் கல்லோடு இவனைச் சேர்த்துக்கட்டி கடலில் தள்ளிவிடுவதே சரி" என்றனர். அரசனும் இரக்கமின்றி அவ்வாறேசெய்ய ஆக்ஞாபித்தான். கொலைத் தொழிலாளர்கள் சுவாமிகளைக் கல்லோடுகட்டி கடலில் தள்ளிவிட்டுத் திரும்பிவந்தனர். அப்போது கடலில் இருந்தபடியே "சொற்றுணை வேதியன் சோதிவானவன்" என்ற பதிகம் பாடினர். கல்லானது தெப்பமாயிற்று. கயிறு அறுந்தது. திருவருட்கிருபையால் வருணன் சுவாமிகளைத்தாங்கி திருப்பாதிரிப்புலியூர் கடற்கரை ஓரத்தில் கொண்டுபோய் சேர்த்தான். கரையிலிருந்து பின் கோவிலுக்குப்போய் "ஈன்றாளுமா யெனக்கெந்தையுமாய்" என்ற திருப்பதிகம் பாடினர். அவ்வூரிலேயே சிலநாள் இருந்தார்.

பின்னர் அங்கிருந்து திருவதிகைக்கு வந்தார். அங்குளோர் நாயனரை வெகுவிமரிசையாய் வரவேற்றனர். அங்கு சிலநாள் தங்கி "வெற்றி விரவு கூவிள" என்ற திருத்தாண்டகம் பாடினர். கோவிலிலும் உழவாரத்திருப்பணியும் செய்துவந்தார்.

பல்லவராஜனுக்கு நற்காலமும் ஒத்துக்கொண்டது. அவனுடைய புத்தியும் மாறிற்று. சமணமதப்பற்றும் ஒழிந்தது. திருப்பாதிரிப்புலியூரில் சுவாமிகள் வந்துசேர்ந்து, பின் திருவதிகையில் வந்து தங்கியிருப்பதையும், அவர் மகிமையையும் கேள்விப்பட்டான். சைவமதமே மெய்யானமதமென்று உறுதிகொண்டு, பாடலிபுரத்திலிருந்த சமணப்பள்ளிகளை இடித்து அக்கற்களை திருவதிகயையில் கொண்டுவந்து குணதரவீச்சரம் என்ற சிவாலயத்தைக் கட்டினன்.

நமது சுவாமிகள் அங்கிருந்து பலஸ்தலங்களுக்குப் போய்ப் பின்னர் திருப்பெண்ணடகம் வந்து, அங்குள்ள திருத்தூங்கானைமடம் என்ற ஆலயத்துக்குப்போய் "ஈசனே எனது இவ்வுடல் சமணமதத்திற் சென்று பாழ்பட்டது, இவ்வுடலோடு உயிர்வாழேன். சிவசின்னங்களாகிய சூலத்தையும், இடபத்தையும் என்மேற் பொறித்தருளவேண்டும்." என்றுவேண்டி "பொன்னர் திருவடிக் கொன்றுண்டு" என்ற திருப்பதிகம் பாடினர்.

சிவபெருமானது திருவருளால் ஓர் சிவபூதம் ஒருவரும்

அறியாவண்ணம் தோன்றி சுவாமிகள் கோரியவண்ணமே இருகுறிகளையும் பொறித்தது. சுவாமிகள் இதுகண்டு சந்தோஷித்து அங்கேயே சிலநாள் தங்கியிருந்தார். பின்னர் பலதலங்களையும் தரிசித்துப் பதிகங்கள் பலபாடி சிதம்பரம் வந்துசேர்ந்தார். நடாராஜப்பெருமானைத் தரிசித்து "பத்தனாய்ப்பாடமாடேன்" என்ற திருநேரிசையும், "அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்" என்ற திருக்குறுந்தொகையும் பாடியருளினார்.

பிறகு திருக்கழிப்பாலைக்குப்போய் சுவாமிதரிசனம் செய்து "வனப்பவள வாய்திறந்து" என்ற பதிகம்பாடி பின் மறுபடியும் சிதம்பரம் போனார். "பனைக்கை மும்மதவேழ் முறித்தவன்" என்ற குறுந்தொகையும் "அரியானை அந்தணர்தம் சிந்தையானை" என்ற திருத்தாண்டகமும், "செஞ்சடைக் கற்றைமுற்ற" என்ற திருநேரிசையும் பாடி அங்கேயேதங்கி உழவாரத்திருப்பணியும் செய்து வந்தார்.

பிறகு சீர்காழிக்குப்போய் திருஞானசம்பந்த சுவாமிகளைக்கண்டார். சம்பந்தர் நாவரசரை "அப்பரே" என்றழைக்க நாவரரும் அடியேன் என்றனர். அங்கு சுவாமிகள் "பார்கொண்டு மூடி" என்று திருப்பதிகம் பாடினார்.

அங்கிருந்து பலதலங்களையும் கண்டு தரிசித்து திருவாவடுதுறைவந்து "நம்பனை நால்வேதங் கரைகண்டானை" என்ற திருத்தாண்டகமும் பலபதிகங்களும் பாடி, பின்பு திருச்சத்திமுற்றத்தை யடைந்து "கோவாய் முடுகியடு" என்ற பதிகம் பாடிமுடிக்க, சிவபெருமான் "நல்லூருக்கு வா" என்று அருளினர். திருவாக்குப்படியே நாயனாரும் நல்லூருக்குப்போக சிவபெருமான் "நீ எண்ணியவாறே செய்கிறோம்" என்று தனது திருவடிகளை நாயனார் சிரசில் சூட்டினார். நாயனார் பேரானந்தங்கொண்டு "நினைந்துருகு மடியாரை" என்ற திருந்தாண்டகம் பாடினார்.

பின்பு திங்களூருக்குச் சென்றார். இவ்வூரில் அப்பூதியடிகள் என்ற பிரபு ஒருவர் இருந்தார். திருநாவுக்கரசரை நேரில் பார்த்ததில்லை. ஆயினும் இவருடைய தெய்வீகத் தன்மையைக் கேள்விப்பட்டு, தன் குமாரர்களுக்கு, "திருநாவுக்கரசு" என்ற திருநாமமேசூட்டி அழைத்துவந்தார். தனது அன்னசத்திரம், கிணறு, குளம், தண்ணீர்ப்பந்தல், திருநந்தவனம் முதலியவற்றிற்கெல்லாம் "திருநாவுக்கரசு" என்ற திருநாமமே முதலில் அமைத்து வழங்கலானார். நாயனார் இவற்றையெல்லாம் கண்டுகளிப்புற்று அப்பூதியடிகளின் இல்லம்போனார்.

நமது சுவாமிகளின் வரவைக்கண்ட அப்பூதியடிகள் தன் மனையாளுடன் எதிர்கொண்டு அழைத்து சகலமரியாதைகளை யும் குறைவறச்செய்து சுவாமிகளைத் திருவமுதுண்ணப் பிரார்த்தித்தனர். நாயனாரும் உடன்பட்டார். அப்பூதியடி கள் தன்குமாரன் ஒருவனையழைத்து கொல்லையில்போய் சாப் பாட்டுக்கு வாழையிலை அறுத்துவா என்று ஆக்ஞாபித்தார். மகன் இலையறுக்கும்போது அவனை ஓர் விஷப்பாம்பு தீண் டிற்று. அம்மகனும் அதைப் பொருட்படுத்தாது இலையுடன் வந்து தன் தாயிடம் இலையைக்கொடுத்து தன்னை நாகம் தீண் டியதாகச்சொல்லி, சோர்ந்து தரையில் விழுந்து இறந்தான். தாயார் இச்சங்கதியைத் தன் நாயகனிடம் தெரிவித்தாள். இருவரும் பெரியவர் சாப்பாட்டுக்குக் கெடுதல்வருமே என் றஞ்சி, சவத்தை மறைத்துவிட்டு சுவாமிகளை அமுதுசெய்ய வேண்டினர். சுவாமிகள் இச்சம்பவத்தை திருவருள் கிருபை யால் தெரிந்துகொண்டார். சவத்தை அவ்வூர் சிவாலயத் தின்முன் கொண்டுவரச்சொல்ல அவ்வாறே கொணர்ந்தனர். சுவாமிகள் " ஒன்றுகொலாமவர் " என்ற பதிகம் பத்து அடிக ள்பாடியவுடன் சவமாய்க்கிடந்தவன் உயிர்பெற்றெழுந்தான். பின்பு சுவாமிகள் திருப்பழனம்போய் அங்கு சுவாமியை வணங்கி " சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் " என்ற பதிகம்பாடி, பின்னர் திருவாரூர் போய்ச்சேர்ந்தார். அங்கு " குலம்பலம்பாவருகுண்டர் " என்ற திருவிருத்தமும், " கற்ற வர்களுண்ணும் கனியே போற்றி," " காண்டலே கருத்தாய்," " மெய்யெலாம் வெண்ணீறு," " பாடிளம் பூதத்தினும் " என்று பலபதிகங்கள் பாடியருளினர். அங்கிருந்து சுவாமிகள் திருப்புகலூர் சென்றார், இங்கே சம்பந்தசுவாமிகள் முருக நாயனருடைய திருமடத்தில் தங்கியிருந்தார். சம்பந்தரும், நாவரசரும் ஒருவரையொருவர் வணங்கினர்கள். சுவாமிகள் திருவாரூர் சிறப்பைப்பற்றி " முத்துவிதான மணிபோல் " என்று பதிகம்பாடினர். சம்பந்தர் பிரிந்து திருவாரூர்போய் விட்டார். நமது சுவாமிகள் அவ்விடம்விட்டு பலதலங்களையும் தரிசித்து மறுபடியும் திருப்புகலூர் வந்துசேர்ந்தார். சம்பந்த ரும் திருப்புகலூர் வந்துவிட்டார். அச்சமயம திருநீலநக்க நாயனரும், சிறுத்தொண்டநாயனரும், அங்கு வந்து எல்லோ ரும் முருகநாயனர் மடத்தில் தங்கியிருந்தனர்.

திருநாவுக்கரசரும், சம்பந்தரும் அங்கிருந்து நீங்கி பல தலங்களையும் வணங்கி திருவீழிமிழலை வந்து அங்கே அப்பர்

சுவாமிகள் "போராரேன யீருரிவைப் போரவையானே" என்ற திருத்தாண்டகம் பாடியருளினர். அக்காலே அவ்வூரில் மழையின்மையால் பஞ்சம் உண்டாகி குடிகள் மிடியடைந்ததைப் பார்த்து இருவரும் துயருற்றனர். சிவபிரான் இருவர் கனவிலும் தோன்றி "காலநிலைபேதத்தால் மழையில்லை. நீங்கள் வருந்தன்மின். குடிஜனங்களின்பொருட்டு படிக்காசு வழங்குவோம்," என்றுசொல்லி மறைந்தனர். திருவருள் கூறியபடி ஆலயத்தின் கீழ்வாயிலிலும் மேல்வாயிலிலும் பொற்காசு வைக்கப்பட்டிருந்தது. இவற்றைவிற்று அவ்வூர் குடிகளுக்கு உணவு அளித்தனர். சம்பந்தர் காசுக்கு வட்டம்கொடுத்து மாற்றும்படியாகவும், அப்பர் காசுக்கு வட்டமின்றி மாற்றப்படுவதுமாயிருந்தது. காரணம் சம்பந்தர் மனம் வாக்கினால் மாத்திரம் கடவுளை துதிசெய்துவந்தார். அப்பர்சுவாமிகளோ மனம்வாக்கினால் துதிசெய்வது மாத்திரமன்றி உழவாரத் திருப்பணியும் செய்துவந்ததால் இப்படி நேர்ந்தது. சிலநாள்கழித்து மழை பொழிய பஞ்சம் நீங்கியது.

பின்னர் இருவரும் வேதாரண்யத்துக்குச் சென்றனர். அங்கே அவ்வூர் ஆலயத்தின்சந்நிதி கோபுரவாயிற் கதவு திறக்கப்படாமலே அடைபட்டிருந்தது. ஆதிகாலந்தொட்டு ஒருவராலும் திறக்கப்படாமல் மூடப்பட்டிருந்தது. அவ்வூரார்கள் கோவிலுக்குப் போவதானல் வேறுபக்கத்தில் வழியுண்டுபண்ணி அதன்வழியாய்ப் போக்குவரவு வைத்திருந்தனர். இதை நாயன்மார் இருவரும் கேள்விப்பட்டனர். திருஞானசம்பந்தர் அப்பமூர்த்தியைப் பார்த்து "நாம் சந்நதி திருவாயில் வழியாய் ஆலயம்போய் சுவாமியைத் தரிசிக்கவேண்டும், ஆகையால் இந்கதவு திறக்கும்படிபாடும்," என்றனர். அப்போது அப்பர் சுவாமிகள் "பண்ணினேர்மொழி யாளுமை பங்கரோ" என்று பதிகம்பாட கதவு தானகவே திறக்கப்பட்டது. நாயன்மார் இருவரும் அவ்வழியாகவே கோவிலுக்குள்போய் தரிசனை செய்தார்கள். அப்பர்சுவாமிகள் சம்பந்தரைப் பார்த்து "இக்கதவு மூடப்படவும் திறக்கப்படவும் இருக்கவேண்டும் மூடும்படி பதிகம் பாடுக" என்றார். சம்பந்தரும் அதற்கிசைந்து பதிகம்பாட கதவு மூடப்பட்டது. அன்றுமுதல் அக்கதவு மூடவும் திறக்கவுமாக வழக்கத்திலிருந்து வருகிறது. அவ்வூர் திருமடத்தில் அன்றிரவு படுத்துறங்கினார்கள். அப்பர் சுவாமிகள் கதவுதிறக்கப் பதிகம்பாடும்போது அவர் கடைசி பாட்டுப்பாட ஆரம்பிக்கும்வரையில் திறவாமலிருந்தது கண்டு

"இரக்கமொன்றிலீர்" என்னும் திருக்கடைக்காப்பைப் பாடியவுடன்தான் கதவு திறக்கப்பட்டது. சம்பந்தசுவாமிகள் கதவு சாத்தப்படவேண்டுவதற்காக பாடும்போது முதல் பாட்டிலேயே கதவு மூடப்பட்டது. இதைப்பற்றி அப்பர் சுவாமிகள் தான் கடைசிபாட்டு முடியுமட்டும் கதவு திறக்கப் படாமலிருந்து பாட்டுமுடிந்ததும் கதவு திறக்கப்பட்டதும் சம்பந்தர்பாடினதில் முதல்பாட்டிலேயே கதவு அடைக்கப்பட்டதையும் நினைத்து மனதில் சற்றுகிலேசமடைந்து வேதாரண்யேஸ்வரரை மனதில்நினைத்து கண்ணை மூடிக்கொண்டிருந்தார். பரமசிவன் மனித உருவமாக அவருக்கெதிரில் தோன்றி "நாம் வாய்மூரில் இருப்போம் அங்கு நீ தொடர்ந்து வா" என்று அருளிச்செய்தார். அப்பமூர்த்தியும் உடனே எழுந்து திருப்பதிகம் பாடிக்கொண்டே வேதாரண்யத்தை விட்டு புறப்பட்டார். சுவாமியும் அவருக்கு முன்னேயே போய்க்கொண்டிருந்தார். அப்பர் சுவாமிகள் போகும்பொழுது "எங்கேயென்னை இருந்திடம்தேடி" என்ற திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டேபோனார். பரமசிவன் மனிதரூபமாக முன்னும், அப்பமூர்த்தி பின்னுமாக நடக்கின்றனர். ஆனால் அப்பமூர்த்தி எவ்வளவு வேகமாய் நடந்தாலும் சுவாமியின் அருகே போகக்கூடாமல் இருந்தார். சுவாமி சமீபத்திலே காட்சி கொடுப்பவர்போல் ஒருகோவிலை எதிரேகாண்பித்து அதனுள்ளே புகுந்துபோக அப்பமூர்த்தியும் அங்கே விரைந்து போனார். திருஞானசம்பந்தரும் அப்பமூர்த்தி திருவாய்மூருக்கு போய்விட்டாரென்று தெரிந்து உடனே திருவாய்மூருக்கு வந்துசேர்ந்தார். கோவிலுக்குள் நுழைந்த பரமசிவன் மறைந்துவிட்டார். அப்பர்மூர்த்தி சுவாமி மறைந்தமையைக் குறித்து துக்கித்து, வேதாரண்யத்தில் கதவுதிறக்க அடியேன் பதிகம் பாடும்போது கடைசிபாட்டுவரைக்கும் திறவாமல், கடைசிபாட்டு முடிந்தபின் கதவுதிறந்ததே! அவ்வளவு கொடுமையுள்ள அடியேனுக்கு மறைக்கலாம். ஒரே பாட்டிலேயே கதவுமூட பதிகம்பாடிய சம்பந்தரும் வந்திருக்கிறாரே அவருக்கு எப்படி ஒளிக்கலாம் என்றார். உடனே எம்பெருமான் சம்பந்தருக்கு காட்சி கொடுத்தருளினார். சம்பந்தரும் தரிசித்துப் பதிகம்பாடி, அப்பர்சுவாமிகளுக்கும் சொல்லி தரிசனம் செய்யச்சொல்ல அப்பரும் தரிசனம்செய்து "பாடவடியார் பரவக்கண்டேன்" என்ற திருத்தாண்டகமும் பாடியருளினார். பின் இருநாயன்மார்களும் வேதாரண்யம் வந்து சிலநாளிருந்

தனர். இச்சமயம் மதுரையிலிருந்து சம்பந்தசுவாமிகளை அழைத்துவரும்படி பாண்டியன் மனைவியார் மங்கையர்க்கரசியும் மந்திரியார் குலச்சிறையாரும் ஆளனுப்பினார்கள். ஏனெனில் மதுரையில் சமணர்கள் கூடி சைவமதத்தை தொலைத்துவிட வழிசெய்தனர். அதை தடுப்பதற்கென்று வரவழைத்தார்கள். சம்பந்தரும் மதுரைக்குப்போகச் சம்மதித்து புறப்பட்டார். அப்பர் சம்பந்தரைப்பார்த்து சமணர்களுடைய கொடுமையை கிளத்து, சம்பந்தரை போகவேண்டாமென்று தடுத்தார். சம்பந்தர் ஒரேபிடிவாதமாய் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டார். திருநாவுக்கரசு சுவாமிகளும் அங்கிருந்து சில ஸ்தலங்களின் வழியாய் திருவாவடுதுறைக்கு வந்து அங்கு சுவாமியை வணங்கி "மாயிருஞாலமெல்லாமலரடி" என்ற நேரிசைப்பதிகம் பாடியருளினார்.

பின்பு பழையாறை என்றதலத்துக்குப்போனார். அங்கே வடதளி என்ற ஓர் ஆலயம் உண்டு. அவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானை அவ்வூர் சமணர்கள் மறைத்துவைத்திருந்தனர். இதைக் கேள்விப்பட்டவுடன் மனம் வருந்தி அன்றிரவுகூட அமுதுசெய்யாது சுவாமியை தியானித்து "எம்பெருமானே தேவரீருடைய திருவுருவத்தை மறைத்துவைத்திருக்கிற சமணர்களுடைய செய்கையை கண்டித்தருளும்" என்று விசனத்தில் மூழ்கியிருந்தார். சிவபெருமான் அவ்வூர் அரசனுடைய சொப்பனத்தில்தோன்றி "நாம் சமணர்களால் மறைக்கப்பட்டிருக்கிறோம். நம்மடியான் நாவரசு என்போன் நம்மை வெளிப்படக்கண்டு கும்பிடவேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருக்கிறான். நீ சமணர்களை விரட்டி நம்மையாவரும் தரிசிக்க பிரதிஷ்டை செய்யவேண்டும்" என்றருளிச்செய்து, தாம் ஆலயத்தில் இருக்கும் இடத்துக்கும் அடையாளங்காட்டி பின்பு மறைந்தருளினார். மன்னன் விழித்து ஆச்சர்யமடைந்து, உடனே கோவிலுக்குப்போய் சமணர் செய்துவைத்திருந்த மறைப்பைநீக்கி, சிவலிங்கத்துக்கு வேறு விமானமும் செய்துவைத்தான். அப்பர்சுவாமிகள் கடவுளை வணங்கி "தலையெலாம்பறிக்குஞ் சமண்கையருள்" என்ற திருப்பதிகம்பாடி அங்கிருந்தார். சூழ்ச்சிசெய்து மறைத்துவைத்திருந்த சமணர்களை தண்டித்தான்.

பின்பு அவ்வூரை நீங்கி பலக்ஷேத்திரங்களை தரிசித்து திருப்பைஞ்ஞீலியை நோக்கிப்போனார். வழியில் நாயனாருக்குப் பசியும், தாகமும் உண்டானது. ஆயினும் மனம்சலியாது

நடந்துக்கொண்டே யிருந்தார். பரமசிவன் நாயனார் வரும் வழியில் ஓர் குடிநீர்குளம், பூஞ்சோலை இவற்றை உண்டாக்கி தான் ஓர் பிராமண வடிவங்கொண்டு பொதிசோறு வைத்துக் கொண்டிருந்தார். பிராமணவேடம்பூண்ட சிவனார் அப்ப மூர்த்தியைப்பார்த்து "ஐயா நீர் இளைப்பாயிருக்கிறீர் என்னிடம் பொதிசோறு உளது, உண்டு இளைப்பாறி இங்கு சற்றுத் தங்கிப்போம்" என்று பொதிசோற்றைக் கொடுத்தார். அப்ப மூர்த்தி வாங்கிஉண்டு இளைப்பாறினார். அந்தணர் வாகீசரை "எங்கே போகிறீர்" என்று கேட்க, வாகீசர் "பைஞ்ஞீலிக்குப்போகிறேன்" என்றுசொல்ல நானும் அங்கேபோகிறேன் என்று அந்தணர் சொல்ல திருப்பைஞ்ஞீலிக்குச் சமீபித்ததும அந்தணர் மறைந்தனர். அப்பமூர்த்தி வந்த அந்தணர் சிவ பெருமானென்றெண்ணி ஆலயத்துக்குட்சென்று பதிகங்கள் பாடி துதித்து பின் திருஅண்ணாமலைக்குப் போனார். அங்கு கடவுளை வணங்கி "ஓதிமாமலர்கள் தூவி" என்ற திருநேரிசைப் பதிகம் பாடியருளினார். அங்கிருந்து வருவழியிலுள்ள பல சிவஸ்தலங்களை தரிசித்து காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார். அவ்வூர் ஆலயத்துள்போய் ஏகாம்பரநாதரைத் துதித்து "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை" என்ற திருப்பதிகமும், "கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்தகோன் காண்" என்ற திருத்தாண்டகமும், "உரித்தவன் காணாரக்களிற்றை" என்னும் திருத்தாண்டகமும் பாடியருளினார்.

பின்னர் அங்கிருந்துநீங்கி, திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலை முதலிய பல தலங்களுக்குச்சென்று கடவுளை வணங்கி பதிகங்கள்பாடி கடைசியாய்த் திருவொற்றியூர்வந்து ஆலயத்துட்சென்று "வண்டோங்கு செங்கமல கழுநீர்" என்ற திருத்தாண்டகம்பாடி அங்கேயே சிலநாள் தங்கினார். அந்நாளில் "செற்றுக்களிற்றுரி" என்ற திருவிருத்தம், "ஒற்றியூரு மொளிமதி" என்ற திருக்குறுந்தொகையும், "வெள்ளத்தைச் சடையில்" என்ற திருநேரிசையும், "ஓம்பினேன் கூட்டை வாளா" என்ற திருநேரிசையும் பாடியருளினார். சமீபமாயுள்ள திருப்பாசூர் என்னும் தலத்தையடைந்து "முந்திமூவெயிலெய்த முதல்வனார்" என்ற திருக்குறுந்தொகையும், "விண்ணாகி நிலனாகி விசும்புமாகி" என்ற திருத்தாண்டகத்தையும் பாடியருளினார். அத்தலத்திலிருந்து திருவாலங்காட்டிற்குச்சென்று கடவுளை வணங்கி "ஒன்றாயுலகனைத்துமானார்" என்ற திருத்தாண்டகம் பாடித்துதித்தார்.

பின்பு திருக்காரிக்கரை என்ற தலத்துக்குப்போய் அங்கிருந்து திருக்காளத்தி மலையையடைந்து "விற்றூணொன்றில்லா நகல்கூர்ந்தான்" என்ற திருத்தாண்டகம் பாடினார். அங்கிருந்து ஸ்ரீசைலமென்ற திருப்பருப்பதம் என்னும் தலத்துக்குவந்து "கன்றினார் புரங்கள் மூன்றும்" என்ற திருநேரிசையைப் பாடியருளினார். பின்னர் காசியையடைந்து கைலாயதெரிசனம் செய்யவேண்டுமெனறு எண்ணங்கொண்டார். அந்நாளில் கைலாசத்தைப்பாக்க அதிக அவாக்கொண்டு இரவும்பகலும் நடந்தார். அதனால் கால்களும் தேய்ந்தன. மனமோசலிக்கவில்லை. கைகளின் ஆதரவினால் நடந்தார், கையுந்தேய்ந்தது. மலையடிவாரத்தில் கற்றரைமேல் மார்பால் நகர்ந்தார். தேகம் மிகவும் மெலிந்து நகர்ந்துபோகமுடியாது வழியில் விழுந்தார். தேகசக்தியாவும் குறைந்தது. ஆனால் மனோசக்திமாத்திரம் கைலாயத்தைப் பார்க்கவேண்டுமென்ற நாட்டத்திலேயே இருந்தது.

எம்பெருமான் நமது சுவாமிகளின் பக்திக்கு வியந்து திருவுளமிரங்கினார். இன்னும் இவரை பாடவைக்கவேண்டுமென்று நினைத்து ஓர் முனிவரைப்போல் வேடங்கொண்டு வாகீசர் எதிரில்வந்து "இவ்வளவு சங்கடமான தேகநிலைமையோடு இக்காட்டிற்கு ஏன்வந்தீர்,' எனக் கேட்டார். அங்கு முனிவரைக்கண்டதும் ஒருவாறு மனம்தேறி "முனிவரே உத்தரகைலயத்தில் கடவுள் உமாதேவியாரோடு வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கண்டு வணங்கவந்தேன்" என்றார்.

அதற்கு முனிவர் "தேவர்களும், முனிவர்களும் அடையப்படுவதற்கு அரிதாகிய கைலாயக்காட்சியை மனிதராகிய உனக்கு எப்படி கிடைக்கும்? அது உனக்குக் கிடைப்பது அரிது! நீ திரும்பிப்போவதே நலம்" என்றார். அப்பர்சுவாமிகள் "இவ்வுடல் அழியும் தன்மையது. கைலாயக்காட்சி பார்த்தாலன்றி யான்திரும்பேன்" என்றார். இவருடைய பக்திவைராக்கியத்தைப் பார்த்து கடவுள் மறைந்தருளி ஆகாயத்தில் அசரீரியாக "நாவுக்கரசனே எழுந்திரு" என்று சப்தம் உண்டாகச்செய்தார். அப்பர் தனது தேகப்பிணியாவும் நீங்கி நல்ல தேகத்துடன் எழுந்து, 'என் ஐயனே! அடியேனுக்குக் கைலாயக்காட்சியைத் தந்தருள்க" என்றார். பரமசிவன் "நாவுக்கரசே! இந்தப்பொய்கையில் மூழ்கு. நமது கைலைக் கோலத்தைக் திருவையாற்றில் காண்பாய்!" என்று மறைந்தார். அப்படியே அப்பரும் மூழ்கினார். திருவையாற்றின் ஆலயத்திரு

க்குளத்தில் கரைசேர்ந்தார். அப்பருக்குப் பார்த்த சராசரங்கள் சத்திசிவமாகத் தோன்றியது. ஆலயத்தில் பிரவேசித்தார், கைலையாகவே திருக்கோவில் விளங்கிற்று. சிவபெருமானுடைய திருக்கருணையை வியந்து "மாதர்ப் பிறைக்கண்ணியானை" என்ற திருப்பதிகத்தை அருளினார். "ஆரார் திரிபுரங்கணீறுநோக்கும்," "ஓசையொலியெலாமானாய் நீயே" என்ற இரு திருத்தாண்டகத்தையும் இன்னும் பலபதிகங்கள் பாடி கடவுளைத் துதிசெய்துகொண்டு அங்கேசிலநாள் தங்கி ஆலயத் திருத்தொண்டும் செய்துவந்தார்.

பின்னர் அங்கிருந்து திருநெய்த்தானம், திருமழபாடி என்ற தலங்களை தரிசித்து, திருப்பூந்துருத்தியில் வந்து சிலநாள் தங்கினார். அங்கு ஆலயத்தில் கடவுளை வணங்கி "எனக்கென்றுமினியானை" என்ற திருத்தாண்டகம், "கொடிகொள்செல்வவிழா" என்ற திருக்குறுந்தொகை, "மாலினைமாலுறநின்றான்" என்ற திருவிருத்தம், இன்னும் பல்வகைத் திருத்தாண்டகங்களையும் பாடியருளினார். "தலையே நீ வணங்காய்" என்ற திரு அங்கமாலையைப் பாடினார். அவ்வூரில் ஓர் சிவமடம் கட்டுவித்தார். இத்தருணத்தில் மதுரையிலிருந்து திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு அப்பரைக்காணலாமென்று அங்கேவந்தார். சம்பந்தர் வருவதை முன்னடியே வாகீசர் அறிந்து, சம்பந்தருக்குத் தெரியாமலே சம்பந்தருடைய அடியார்கூட்டத்தில் நுழைந்து அவர் ஏறிவந்த பல்லக்கைத் தூக்குபவர்களோடு சேர்ந்துதானும் அப்பல்லக்கைத் தன் தோள்மேல் சுமந்துவந்தார். சம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு வந்ததும் அப்பர் எங்குற்றாரென்று வினவ அப்பரும் தங்கள் சிவிகையைத் தாங்கிவரும் பெரும்பேறு பெற்று இங்குற்றேன்" என்றார். இருவரும் ஒருவரையொருவர் தழுவி வணங்கினார்கள். சம்பந்தர் தன்னுடன் வந்த பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியும், குலச்சிறையாராகிய மந்திரியாரும் வந்திருந்தார்கள். சம்பந்தர் இவர்களுடைய பெருமையையும், மதுரையில் சமணரை வாதில் வென்றதையும், பாண்டியன் கூண்நிமிர்ந்ததையும் சமணமதத்தை நிர்த்தூளிசெய்து சைவமதத்தை நிலைநிறுத்தியதையும் அப்பரிடம் சொன்னார். சம்பந்தர் தொண்டை நாட்டுக்குப்புறப்பட வாகீசரும் மதுரைக்குப்புறப்பட்டுவந்து "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" என்ற திருத்தாண்டகமும், "வேதியாவேதகீதா" என்ற திருநேரிசையும் பாடியருளினார்.

பின்பு மதுரையை நீங்கி திருப்பூவனம் வந்து ஆலயத்துள்சென்று வணங்கி "வடிவேறு திரிசூலம் தோன்றும்தோன்றும்" என்ற திருத்தாண்டகம் பாடியருளியபின் இராமேச்சுரம் என்ற தலத்துக்கு வந்தார். அங்கு சுவாமி தரிசனம் செய்து "பாசமுங் கழிக்ககில்லா" என்ற திருநேரிசையைப் பாடி கடவுளை வணங்கினர்.

பின்பு திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய தலங்களை தரிசித்து கடைசியாய் திருப்புகலூரை யடைந்தார். அங்கேயேதங்கி சுவாமி தரிசனம் செய்து திருத்தொணடும் செய்துவந்தார். அங்கிருக்குங்கால் பலதிருத்தாண்டகங்கள், க்ஷேத்திரக்கோவை, திருநேரிசை, பாவநாசப்பதிகம், சர்க்கரைத்திருவிருத்தம் முதலிய திருப்பதிகங்களைப் பாடியருளினர். கடவுள் அப்பருடைய பக்திவைராக்கியத்தின் பெருமையைப் பலரறியும்பொருட்டு, அவர் திருத்தொண்டு புரியுங்கால், அவர் உழவாரம் நுழைந்த விடங்களில் ஜோதியுள்ள நவரத்தினங்கள் கிடைக்கும்படி அருள்செய்தார். அப்பர்சுவாமிகள் அவற்றை அலட்சியமாக, மற்றைக் கற்களோடு சேர்த்து அப்புறத்தே எறிந்துவிடுவார். அரம்பையர்களை அப்பருக்கெதிரில் நின்று பாடவும், ஆடவும்செய்து அவரை மாயவலையில் சிக்குப்படுத்தவும்செய்து பார்த்தார். திருநாவுக்கரசர் இதை அசட்டை செய்து தம்முடைய திருத்தொண்டிலேயே கவலைசெலுத்தியிருந்தார். நான் திருவாரூர்க் கடவுளுக்கு ஆட்பட்டேனென்று "பொய்மாயப் பெருங்கடலுள்" என்ற திருத்தாண்டகம் பாடியருளினர். அரம்பையர்கள் நாணமுற்றுப் போய்விட்டனர்.

திருநாவுக்கரசருக்கு திருவருட்கூட்டுதல் ஏற்படுங்காலம் வந்தது. "புகலூர்ப் பெருமானே! என்னைச் சேவடிக்கீழ்ச் சேர்த்திடுக" என்று பூர்வஞானத்தினல் திருவிருத்தங்கள் பாடினர். பின்னும் "எண்ணுகே னென்சொல்லி எண்ணுகேனே" யென்று ஆரம்பித்து "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்மேவிய புண்ணியனே" என்று முடித்து திருத்தாண்டகம் பாடிக்கொண்டே சித்திரை மாதத்தில சதய நக்ஷத்திரத்திலே சிவனுடைய திருவடியிலே சேர்ந்தார்.

உ

சிவமயம்.

திருநாவுக்கரசு சுவாமிகளின்

# தேவாரப் பதிகங்கள்.

---

## திருஅதிகை வீரட்டானம்.

பண்—கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

கூற்றாயினவா றுவிலக்ககிலீர்
கொடுமைபலசெய் தனநானறியேன்
எற்றாயடிக்கே யிரவும்பகலும்
பிரியாதுவணங் குவனெப்பொழுதும்
தோற்றாதென்வயிற் றினகம்படியே
குடரோடுதொடக் கிமுடக்கியிட
ஆற்றேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

நெஞ்சம்முமக்கே யிடமாகவைத்தே
னினையாதொருபோ துமிருந்தறியேன்
வஞ்சம்மிதுவொப்பது கண்டறியேன்
வயிற்றோடுதொடக்கி முடக்கியிட
நஞ்சாகிவந்தென் னைநலிவதனை
நணுகாமற்றுரந் துகரந் துமிடீர்
அஞ்சேலுமென்னீ ரதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

பணிந்தாரனபா வங்கள்பாற்றவல்லீர்
படுவெண்டலையிற் பலிகொண்டுழல்வீர்
துணிந்தேயுமக்காட் செய்துவாழலுற்றூர்
சுடுகின்றதுசூ லைதவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர் சுற்றும்வெண்டலைகொண்
டணிந்தீரடிகே ளதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

முன்னம்மடியே னறியாமையினூன்
முனிந்தென்னை நலிந்துமுடக்கியிடப்
பின்னையடியே னுமக்காளும்பட்டேன்
சுடுகின்றதுசூ லைதவிர்த்தருளீர்
தன்னையடைந்தார் வினைதீர்ப்பதன்றே
தலையாயவர்தங் கடனாவதுதான்
அன்னநடையா ரதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

காத்தாள்பவர்கா வலிகழ்ந்தமையாற்
கரைநின்றவர்கண் டுகொளென்றுசொலி
நீத்தாயகயம் புகநூக்கியிட
நிலைக்கொள்ளும்வழித் துறையொன்றறியேன்
வார்த்தையிதுவொப் பதுகேட்டறியேன்
வயிற்றோடுதொட க்கிமுடக்கியிட
ஆர்த்தார்புனலா ரதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

சலம்பூவொடுதூ பமறந்தறியேன்
றமிழோடிசைபா டன்மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னை மறந்தறியே னுன்
னாமமென்னாவின் மறந்தறியேன்
உலந்தார்தலையிற் பலிகொண்டுழல்வா
யுடலுள்ளுறுசூ லைதவிர்த்தருளாய்
அலந்தேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

உயர்ந்தேன்மனைவாழ்க் கையுமொண்பொருளு
மொருவர்தலைகா வலிலாமையினால்
வயந்தேயுமக்காட் செய்துவாழலுற்றால்
வலிக்கின்றதுசூ லைதவிர்த்தருளீர்
பயந்தேயென்வயிற் றினகம்படியே
பறித்துப்புரட்டி யறுத்தீர்த்திடநான்
அயர்ந்தேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

வலித்தேன்மனைவாழ்க் கைமகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனமொன்று மிலாமையினார்
சலித்தாலொருவர் துணையாருமில்லைச்
சங்கவெண்குழைக்கா துடையெம்பெருமான்
கலித்தேயென்வயிற் றினகம்படியே
கலக்கிமலக்கிட் டுக்கவர்ந்துதின்ன
அலுத்தேனடியே னதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

பொன்போலமிளிர் வதொர்மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும்பிறையீர்
துன்பேகவலை பிணியென்றிவற்றை
நணுகாமற்றுரந் துகரந்துமிடீர்
என்போலிகளும் மையினித்தெளியா
ரடியார்படுவ திதுவேயாகில்
அன்பேயமையும் மதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

போர்த்தாயங்கோ ரானையினீருரிதோல்
புறங்காடரங்கா நடமாடவல்லாய்
ஆர்த்தானரக்கன் றனைமால்வரைக்கீ
ழடர்த்திட்டருள்செய் தவதுகருதாய்
வேர்த்தும்புரண்டும் விழுந்தும்மெழுந்தா லென்
வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார்புனல்சூ ழதிகைக்கெடில
வீரட்டானத் துறையம்மானே.

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகம் சூலைநோய்தீர ஓதியது.

# மறுமாற்றத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

நாமார்க்குங் குடியல்லோ நமனையஞ்சோ
நரகத்தி லிடர்ப்படோ நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோ
மின்பமே யெந்நாளுந் துன்பமில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்ம்மலர்சே வடியிணையே குறுகினோமே.

நாவார நம்பனையே பாடப் பெற்றோ
நாணற்றார் நள்ளாமே விள்ளப்பெற்றோம்
ஆவாவென் றெமையாள்வா னமரர் நாத
னயனொடுமாற் கறிவரிய வனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான் றென்றிசைக்கோன் றனேவந்து
கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங்
குணமாகக் கொள்ளோமெண் குணத்துள்ளோமே.

திருச்சிற்றம்பலம்.

அரசன் ஏவலாளர்க்கு உரைத்தருளியது.

---

# தனித் திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மாசில்வீணையு மாலைமதியமும்
வீசுதென் றலும் வீங்கிளவேனிலு
மூசுவண் டறை பொய்கையும் போன்றதே
யீசனெந்தை யிணையடிநீழலே.

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறிவிச்சையும்
நமச்சிவாயவே நாநவின்றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறிகாட்டுமே.

ஆளாகாராளானாரை யடைந்துய்யார்
மீளாவாட்செய்து மெய்ம்மை புணிற்கிலார்

தோளாதசுரையோ தொழும்பர்செவி
வாளாமாய்ந்து மண்ணாகிக்கழிவரே.

நடலைவாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலைசேர்வது சொற்பிரமாணமே
கடலினஞ்சமு துண்டவர்கைவிட்டால்
உடலினார்கிடந் தூர்முனிபண்டமே.

பூக்கைக்கொண்டரன் பொன்னடிபோற்றிலார்
நாக்கைக்கொண்டர னாமநவிற்றிலார்
ஆக்கைக்கேயிரை தேடியலமந்து
காக்கைக்கேயிரை யாகிக்கழிவரே.

குறிகளுமடை யாளமுங்கோயிலும்
நெறிகளுமவர் நின்றதோர்நேர்மையும்
அறியவாயிரமாரண மோதிலும்
பொறியிலீர்மன மென்கொல்புகாததே.

வாழ்த்தவாயு நினைக்கமடநெஞ்சும்
தாழ்த்தச்சென்னியுந் தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர் தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையே னெடுங்காலமே.

எழுதுபாவை நல்லார்திறம்விட்டுநான்
தொழுதுபோகநின் றேனையுஞ் சூழ்ந்துகொண்
டுழுதசால்வழியே யுழுவான்பொருட்
டிழுதைநெஞ்சமி தென்படுகின்றதே.

நெக்குநெக்கு நினைப்பவர்நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார்சடைப்புண்ணியன்
பொக்கமிக்கவர் பூவுநீருங்கொண்டு
நக்குநிற்பரவர் தமைநாணியே.

விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போல்
மறையநின்றுளன் மாமணிச்சோதியான்
உறவுகோனட் டுணர்வுகயிற்றினால்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்குமே.

திருச்சிற்றம்பலம்.

நீற்றறையினுள்ளே எழுந்தருளியிருந்தபொழுது பாடியது.

## திருக்கெடில வடவீரட்டானம்.

பண்—காந்தாரம்.

சுண்ணவெண் சந்தனச்சாந்தும்
சுடர்த்திங்கட் சூளாமணியும்
வண்ணவுரிவையுடையும்
வளரும்பவளநிறமும்
அண்ணலரண்முரணேறு
மகலம்வளாயவரவும்
திண்ணன்கெடிலப்புனலு
முடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை.

நரம்பெழுகைகள்பிடித்து
நங்கைநடுங்கமலையை
உரங்களெல்லாங் கொண்டெடுத்தா
னென்பதுமொன்றுமலற
வரங்கள்கொடுத்தருள்செய்வான்
வளர்பொழில் வீரட்டஞ்சூழ்ந்து
நிரம்புகெடிலப்புனலு
முடையாரொருவர் தமர்நாம்
அஞ்சுவதியாதொன்றுமில்லை யஞ்சவருவதுமில்லை.

திருச்சிற்றம்பலம்.

இப்பதிகம் சமணர்களேவியயானை அஞ்சம்படியோதி அருளியது.

---

## நமச்சிவாயத்திருப்பதிகம்,

பண்—காந்தாரபஞ்சமம்.

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை
ஆவினுக்கருங்கல மரனஞ்சாடுதல்
கோவினுக்கருங்கலங் கோட்டமில்லது
நாவினுக்கருங்கல நமச்சிவாயவே.

விண்ணுறவடுக்கிய விறகின்வெவ்வழல்
உண்ணியபுகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற் பயின்றபாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சிவாயவே.

இடுக்கண்பட்டிருக்கினு மிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம்
மடுக்கற்கீழ்க்கிடக்கினு மருளினாமுற்ற
நடுக்கத்தைக்கெடுப்பது நமச்சிவாயவே.

வெந்தநீற்றருங்கலம் விரதிகட்கெலாம்
அந்தணர்க்கருங்கல மருமறையாறங்கம்
திங்களுக்கருங்கலந் திகழுநீண்முடி
நங்களுக்கருங்கல நமச்சிவாயவே.

சலமிலன்சங்கரன் சார்ந்தவர்க்கல்லால்
னலமிலனாடொறு நல்குவானலன்
குலமிலராகினுங் குலத்திற்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே.

வீடினாருலகினில் விழுமியதொண்டர்கள்
கூடினாரந்நெறி கூடச்சென்றலும்
ஓடினேனோடிச் சென்றுருவங்கண்டலும்
நாடினேனாடிற்று நமச்சிவாயவே.

இல்லகவிளக்கது விருள்கெடுப்பது
சொல்லகவிளக்கது சோதியுள்ளது
பல்லகவிளக்கது பலருங்காண்பது
நல்லகவிளக்கது நமச்சிவாயவே.

முன்னெறியாகிய முதல்வன்முக்கணன்
தன்னெறியேசர ணாதறிண்ணமே
அந்நெறியேசென்றங் கடைந்தவர்க்கெலாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே.

மாப்பிணைதழுவிய மாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக் கிடுக்கணில்லையே.

திருச்சிற்றம்பலம்.

கற்றூணிற்கட்டி கடலில் வீழ்த்தியபோது ஓதியருளியது,

# திருப்பாதிருப்புலியூர் - திருவிருத்தம்.

ஈன்றாளுமாயெனக்கெந்தையுமா யுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
வேன்றானிமையவர்க்கன்பன் றிருப்பாதிருப்புலியூர்த்
தோன்றாத்துணையாயிருந்தனன் றன்னடியோங்களுக்கே.

பற்றாய்நினைந்திடபோதுநெஞ்சே யிந்தப்பாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன்மூடினுங் கண்டேன்புகல்நமக்கு
உற்றானுமையவட்கன்பன் றிருப்பாதிருப்புலியூர்
முற்றாமுளைமதிக்கண்ணியினான் றனமொய்கழலே.

திருந்தாவமணர்தந்தீ நெறிப்பட்டுத்திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கேசரணம் புகுந்தேன்வரையெடுத்த
பொருந்தாவரக்கனுட னெரித்தாய்பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல் வந்தேன்றுகொள்ளே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவதிகைவீரட்டானம்,

ஏழைத்திருத்தாண்டகம்.

வெறிவிரவுகூவிளநற் றொங்கலானை
வீரட்டத்தானை வெள்ளேற்றினானைப்
பொறியரவினானைப் புள்ளூர்தியானைப்
பொன்னிறத்தினானைப் புகழ்தக்கானை
யறிதற்கரியசீ ரம்மான்றன்னை
யதியரையமங்கை யமர்ந்தான்றன்னை
யெறிகெடிலத்தானை யிறைவன்றன்னை
யேழையேனான்பண்டிகந்தவாறே.

முலைமறைக்கப்பட்டு நீராடப்பெண்கள்
முறைமுறையானந் தெய்வமென்றுதீண்டித்
தலைபறிக்குந் தன்மையர்களாகிநின்று
தவமென்றவஞ்செய்து தக்கதோரார்
மலைமறிக்கச்சென்ற விலங்கைக்கோனை
மதனழியச் செற்றசேவடியினானை
யிலைமறித்தகொன்றையந் தாரான்றன்னை
யேழையேனான் பண்டிகழ்ந்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

## திருத்தூங்கானைமாடம் - திருவிருத்தம்.

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
விண்ணப்பம்போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற்கிச்சையுண்டே
லிருங்கூற்றகல
மின்னாருமூவிலைச் சூலமென்மேற்
பொறிமேவுகொண்டல்
துன்னார்கடந்தையுட்டூங்
கானைமாடச் சுடர்க்கொழுந்தே.

கடவுந் திகிரிகடவாதொழியக்
கயிலையுற்றான்
படவுந் திருவிரலொன்றுவைத்தாய்
பனிமால்வரைபோல்
இடபம்பொறித்தென்னை
யேன்றுகொள்ளாயிருஞ்சோலைதிங்கள்
தடவுங்கடந்தையுட்டூங்கானை
மாடத்தெந்தத்துவனே.

---

## கோயிற்றிருநேரிசை.

பண் — கொல்லி.

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
எத்தினாற்பத்திசெய்கே னென்னைநீயிகழவேண்டாம்
முத்தனேமுதல்வாதில்லை யம்பலத்தாடுகின்ற
வத்தாவுன்னாடல்காண்பா னடியனேன்வந்தவாறே.

கண்டவாதிரிந்துநாளுங் கருத்தினானின்றன்பாதங்
கொண்டிருந்தாடிப்பாடிக் கூடுவேன்குறிப்பினாலே
வண்டுபண்பாடுஞ்சோலை மல்குசிற்றம்பலத்தே
யெண்டிசையோருமேத்த விறைவநீயாடுமாறே.

மண்ணுண்டமாலவனும் மலர்மிசைமன்னினானும்
விண்ணுண்டதிருவுருவம் விரும்பினார்காணமாட்டார்
திண்ணுண்டதிருவேமிக்க தில்லைச்சிற்றம்பலத்தே
பண்ணுண்டபாடலோடும் பரமநீயாடுமாறே.

திருச்சிற்றம்பலம்.

## கோயில் - திருக்குறுந்தொகை.

அன்னம்பாலிக்குந் தில்லைச்சிற்றம்பலம்
பொன்னம்பாலிக்கு மேலுமிப்பூமிசை
யென்னம்பாலிக்கு மாறுகண்டின்புற
இன்னம்பாலிக்குமோ விப்பிறவியே.

அல்லலென்செயு மருவினையென்செயுந்
தொல்லைவல்வினைத் தொந்தந்தானென்செயுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலவனார்க்
கெல்லையில்லதோரடிமை பூண்டேனுக்கே.

மதுரவாய்மொழி மங்கையோர்பங்கினன்
சதுரன்சிற்றம்பல வன்றிருமலை
அதிரவார்த்தெடுத் தான்முடிபத்திற
மிதிகொள்சேவடி சென்றடைந் துய்ம்மினே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கழிப்பாலை.

பண் — காந்தாரம்.

வனபவளவாய்திறந்து வானவர்க்குந்
தானவனே யென்கின்றாளாற்
சினபவளத்திண்டோண்மேற்
சேர்ந்திலங்குவெண்ணீற்ற னென்கின்றாளா
லனபவளமேகலையோடப்பாலைக்
கப்பாலா னென்கின்றாளாற்
கனபவளஞ்சிந்துங்கழிப்பாலைச்
சேர்வானைக்கண்டாள்கொல்லோ.

அடர்ப்பரியவிராவணனையருவரைக்
கீழடர்த்தவனே யென்கின்றாளாற்
சுடர்ப்பெரியதிருமேனிச் சுண்ணவெண்
ணீற்றவனே யென்கின்றாளான்
மடற்பெரிய வாலின்கீழறநால்வர்க்
கன்றுரைத்தா னென்கின்றாளாற்
கடற்கருவிசூழ்ந்தகழிப்பாலைச்
சேர்வானைக் கண்டாள்கொல்லோ.

திருச்சிற்றம்பலம்.

## கோயில் - திருக்குறுந்தொகை.

பனைக்கைமும்மத வேழமுரித்தவ
னினைப்பவர்மனங் கோயிலாக்கொண்டவ
னனைத்தும்வேடமா மம்பலக்கூத்தனைத்
தினைத்தனைப்பொழு தும்மறந்துய்வனோ.

தீர்த்தனைச்சிவனைச் சிவலோகனை
மூர்த்தியைமுதலாய வொருவனைப்
பார்த்தனுக்கருள் செய்தசிற்றம்பலக்
கூத்தனைக்கொடியேன் மறந்துய்வனோ.

முழுதும்வானுல கத்துளதேவர்கள்
தொழுதும்போற்றியுந் தூயசெம்பொன்னினா
லெழுதிமேய்ந்தசிற் றம்பலக்கூத்தனை
யிழுதையேன்மறந்தெங்ஙன முய்வனோ.

ஓங்குமால்வரை யேந்தலுற்றான்சிரம்
வீங்கிவிம்முற வூன்றியதாளினான்
றேங்குநீர்வயல் சூழ்தில்லைக்கூத்தனை
பாங்கிலாக்கொண்டனேன் மறந்துய்வனோ

திருச்சிற்றம்பலம்.

## கோயில் - பெரியதிருத்தாண்டகம்.

அரியானையந்தணர்தஞ்சிந்தையானை
யருமறையினகத்தானை யணுவையார்க்குந்
தெரியாததத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத்தேவர்கடங்கோனைமற்றைக்
கரியானைநான்முகனைக் கனலைக்காற்றைக்
கனைகடலைக்குலவரையைக் கலந்துநின்ற
பெரியானைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே

கற்றானைக்கங்கைவார்சடையான்றன்னைக்
காவிரிசூழ்வலஞ்சுழியுங்கருதினானை
யற்றானையலந்தார்க்குமருள்செய்வானை
யாரூரும்புகுவானையறிந்தோமன்றே
மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை
வானவர்களெப்பொழுதும் வணங்கியேத்தும்
பெற்றானைப்பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

முற்றாதபான்மதியஞ் சூடினானை
மூவுலகுந்தானாய முதல்வன்றன்னைச்
செற்றார்கள்புரமூன்றுஞ் செற்றான்றன்னைத்
திகழொளியைமரகதத்தை தேனைப்பாலைக்
குற்றாலத்தமர்ந்துறையுங் குழகன்றன்னைக்
கூத்தாடவல்லானைக் கோனைஞானம்
பெற்றானைப்பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாதநாளெல்லாம் பிறவாநாளே.

காரொளியதிருமேனிச் செங்கண்மாலுங்
கடிக்கமலத்திருந்தயனுங் காணாவண்ணஞ்
சீரொளியதழற்பிழம்பாய் நின்றதொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனைமயக்கந்தீர்க்கு
மேரொளியையிருநிலனும் விசும்பும்விண்ணு
மேழுலகுங்கடந்தண்டத்தப்பால்நின்ற
பேரொளியைப்பெரும்பற்றப்புலியூரானைப்
பேசாதநாளெல்லாம்பிறவாநாளே.

திருச்சிற்றம்பலம்.

# கோயிற்றிருநேரிசை.

செஞ்சடைக்கற்றைமுற்றத்திளநிலாவெறிக்குஞ்சென்னி
நஞ்சடைக்கண்ணைரைக் காணலாநறவநாறு
மஞ்சடைசோலைத்தில்லை மல்குசிற்றம்பலத்தே
துஞ்சடையிருள்கிழியத் துளங்கெரியாடுமாறே,

மதியிலாவரக்கனோடி மாமலையெடுக்கநோக்கி
நெதியன்றோளொறியவூன்றி நீடிரும்பொழில்கள்சூழ்ந்த
மதியந்தோய்தில்லைதன்னுண் மல்குசிற்றம்பலத்தே
யதிசயம்போலநின்று வனலெரியாடுமாறே.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுமலம் - திருவிருத்தம்.

பார்கொண்டுமூடிக்கடல்கொண்ட
ஞான்றுநின்பாதமெல்லாம்
நாலஞ்சுபுள்ளினமேந்தின
வென்பர்நளிர்மதியங்
கால்கொண்டவண்கைச்சடை
விரித்தாடுங்கழுமலவர்க்
காலன்றிமற்றுமுண்டோ
வந்தணுழியகலிடமே.

கரையார்கடல்சூழிலங்கை
யர்கோன்றன்முடிசிதறத்
தொலையாமலரடியூன்றலு
முள்ளம்விதிர்விதிர்த்துத்
தலையாய்க்கிடந்துயர்ந்தான்
றன்கழுமலங்காண்பதற்கே
யலையாப்பரிசிவைநாடொறுநந்
தம்மையாள்வனவே.

திருச்சிற்றம்பலம்.

# திருஆவடுதுறை - திருத்தாண்டகம்.

நற்பனைநால்வேதங்கரைகண்டானை
ஞானப்பெருங்கடலை நன்மைதன்னைக்
கம்பனைக்கல்லா லிருந்தான்றன்னைக்
கற்பகமாயடியார்கட் கருள்செய்வானைச்
செம்பொன்னைப்பவளத்தைத் திரளுமுத்தைத்
திங்களைஞாயிற்றைத் தீயைநீரை
யம்பொன்னை யாவடுதண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே.

ஒருமணியையுலகுக்கோ ருறுதிதன்னை
யுதயத்தினுச்சியை யுருமானைப்
பருமணியைப் பாலோடஞ்சாடினானைப்
பவித்திரனைப்பசுபதியைப் பவளக்குன்றைத்
திருமணியைத்தித்திப்பைத் தேனதாகித்
தீங்கரும்பினின்சுவையைத் திகழுஞ்சோதி
யருமணியையாவடு தண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே.

கரித்தானைத் தண்கட னஞ்சுண்டான்றன்னைத்
தக்கன்றன்பெருவேள்வி தகர்த்தான்றன்னைப்
பிரித்தானைப்பிறைதவழ்செஞ் சடையினானைப்
பெருவலியான் மலையெடுத்தவரக்கன்றன்னை
நெரித்தானைநேரிழையாள் பாகத்தானை
நீசனேனுடலுறுநோயானதீர
வரித்தானையாவடு தண்டுறையுண்மேய
வரனடியேயடிநாயே னடைந்துய்ந்தேனே.

திருச்சிற்றம்பலம்.

## திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம்.

கோவாய்முடுகியடுதிறற்கூற்றங் குமைப்பதன்முன்
பூவாரடிச்சுவடென்மேற் பொறித்துவைபோகவிடின்
மூவாமுழுப்பழிமூடுங்கண்டாய் முழங்குந்தழற்கைத்
தேவாதிருச்சத்திமுற்றத் துறையுஞ்சிவக்கொழுந்தே.

பொறித்தேரரக்கன்பொருப் பெடுப்புற்றவன்பொன்முடிதோள்
இறத்தாளொருவிரலூன்றிட் டலறவிரங்கியொள்வாள்
குறித்தேகொடுத்தாய்கொடியேன்செய்குற்றக்கொடுவினைநோய்
செறுத்தாய்திருச்சத்திமுற்றத் துறையுஞ்சிவக்கொழுந்தே.

---

## திருநல்லூர் - திருத்தாண்டகம்.

நினைந்துருகுமடியாரை நையவைத்தார்
நில்லாமேதீவினைக ணீங்கவைத்தார்
சினந்திருகுகளிற்றுரிவைப் போர்வைவைத்தார்
செழுமதியின்றளிர்வைத்தார் சிறந்துவானோர்
இனந்துருவிமணிமகுடத் தேறத்துற்ற
வினமலர்கள்போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி
நனைந்தனையதிருவடியென் றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார் நல்லவாறே.

குலங்கிளரும்வருதிரைக ளேழும்வைத்தார்
குருமணிசேர்மலைவைத்தார் மலையைக்கையா
லுலங்கிளரவெடுத்தவன்றோண் முடியுநோவ
வொருவிரலாலுறவைத்தா ரிறைவாவென்று
புலம்புதலுமருளொடு போர்வாளும்வைத்தார்
புகழ்வைத்தார் புரிந்தாளாக்கொள்ளவைத்தார்
நலங்கிளருந்திருவடியென் றலைமேல்வைத்தார்
நல்லூரெம்பெருமானார் நல்லவாறே.

திருச்சிற்றம்பலம்.

# விடந்தீர்ந்த திருப்பதிகம்.

பண்—இந்தளம்.

ஒன்றுகொலமவர் சிந்தையுயர்வரை
யொன்றுகொலாமுய ரும்மதிசூடுவ
ரொன்றுகொலாமிடு வெண்டலைகையது
வொன்றுகொலாமவ ரூர்வதுதானே.

இரண்டுகொலாமிமை யோர்தொழுபாத
மிரண்டுகொலாமில ங்குங்குழைபெண்ணா
ணிரண்டுகொலாமுரு வஞ்சிறுமான்மழு
விரண்டுகொலமவ ரெய்தினதாமே.

மூன்றுகொலமவர் கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர் சூலத்தின்மொய்யிலை
மூன்றுகொலாங்கணை கையதுவின்னாண்
மூன்றுகொலாம்புர மெய்தனர்தாமே,

நாலுகொலாமவர் தம்முகமாவன
நாலுகொலாஞ்சன னம்முதற்றோற்றமு
நாலுகொலாமவ ரூர்தியின்பாதங்கள்
நாலுகொலாமறை பாடினதாமே.

அஞ்சுகொலாமவ ராடரவின்பட
மஞ்சுகொலாமவர் வெல்புலனாவன
வஞ்சுகொலாமவர் காயப்பட்டான்கணை
யஞ்சுகொலாமவ ராடினதாமே.

ஆறுகொலாமவ ரங்கம்படைத்தன
வாறுகொலாமவர் தம்மகனார்முக
மாறுகொலாமவர் தார்மிசைவண்டின்கா
லாறுகொலாஞ்சுவை யாக்கினதாமே.

ஏழுகொலாமவ ரூழிபடைத்தன
ஏழுகொலாமவர் கண்டவிருங்கடல்
ஏழுகொலாமவ ராளுமுலகங்கள்
ஏழுகொலாமிசை யாக்கினதாமே.

எட்டுகொலாமவ ரீறில்பெருங்குண
மெட்டுகொலாமவர் சூடுமினமல
ரெட்டுகொலாமலர் தோளிணையாவன
வெட்டுகொலாந்திசை யாக்கினதாமே.

ஒன்பதுபோலவர் வாசல்வகுத்தன
ஒன்பதுபோலவர் மார்பினினூலிழை
ஒன்பதுபோலவர் கோலக்குழற்சடை
யொன்பதுபோலவர் பாரிடந்தானே.

பத்துகொலாமவர் பாம்பின்கண்பாம்பின்பல்
பத்துகொலாமெயி றுந்நெறிந்துக்கன
பத்துகொலாமவர் காயப்பட்டான்றலை
பத்துகொலாமடி யார்செய்கைதானே.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பழனம்.

பண்—பழந்தக்கராகம்.

சொன்மாலைபயில்கின்ற குயிலினங்காள்சொல்லீரே
பன்மாலைவரிவண்டு பண்மிழற்றும்பழனத்தான்
முன்மாலைநகுதிங்கண் முகிழ்விளங்குமுடிச்சென்னிட்
பொன்மாலைமார்பனென் புதுநலமுண்டிகழ்வானே.

புதியையாயினியையாம் பூந்தென்றல்புறங்காடு
பதியாவதிதுவென்று பலர்பாடும்பழனத்தான்
மதியாதார்வேள்விதனை மதித்திட்டமதிக்கங்கை
விதியாளனென்னுயிர்மேல் விளையாடல்விடுத்தானே.

புள்ளிமான்பொறியரவம் புள்ளுயர்த்தான்மணிநாகப்
பள்ளியான்றொழுதேத்த விருக்கின்றபழனத்தா
னுள்குவார்வினைதீர்க்கு மென்றுரைப்பருலகெல்லாங்
கள்ளியேனனிவற்கென் கனவளையுங்கடவேனே.

வஞ்சித்தென்வளைகவர்ந்தான் வாரானேயாயிடினும்
பஞ்சிக்காற்சிறகன்னம் பரந்தார்க்கும்பழனத்தா
னஞ்சிப்போய்க்கலிமெலிய வழவோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூவாய்நின்ற சேவடியாய்கோடியையே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் - திருவிருத்தம்.

குலம்பலம்பாவருகுண்டர் முன்னேநமக்குண்டுகொல்லோ
அலம்பலம்பாவருதண்புன லாரூரவிர்சடையான்
சிலம்பலம்பாவருசேவடியான் றிருமூலட்டானம்
புலம்பலம்பாவருதொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.

மாசினையேறியமேனியர் வன்கண்ணர்மொண்ணரைவிட்
டீசனையேநினைந்தேசறு வேனுக்குமுண்டுகொலோ
தேசனையாரூர்த்திருமூலட்டானனை சிந்தைசெய்து
பூசனைப்பூசுரர்தொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.

குற்றடையவமணர் திறமதுகையகன்றிட்
டுற்றகருமஞ்செய்துய்யபோந் தேனுக்குமுண்டுகொலோ
மற்பொலிதோளானிராவணன் றன்வலிவாட்டுவித்த
பொற்கழலானடித்தொண்டர்க்குத் தொண்டராம்புண்ணியமே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் போற்றித் திருத்தாண்டகம்.

கற்றவர்களுண்ணும் கணியேபோற்றி
கழலடைந்தார்செல்லுங் கதியேபோற்றி
யற்றவர்கட்காரமுதமானாய் போற்றி
யல்லலறுத்தடியேனை யாண்டாய்போற்றி
மற்றொருவரொப்பில்லா மைந்தாபோற்றி
வானவர்கள்போற்றும் மருந்தேபோற்றி
செற்றவர்தம்புரமெரித்த சிவனேபோற்றி
திருமூலத்தானனே போற்றிபோற்றி.

பிரமன்றன்சிரமரிந்த பெரியோய்போற்றி
பெண்ணுருவோடாணுருவாய் நின்றாய்போற்றி
கரநான்குமுக்கண்ணு முடையாய்போற்றி
காதலிப்பார்க்காற்ற வெளியாய்போற்றி
யருமந்ததேவர்க் கரசேபோற்றி
யன்றரக்கனைநான்கு தோளுந்தாளுஞ்
சிரநெரித்தசேவடியாய் போற்றிபோற்றி
திருமூலத்தானனே போற்றிபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

# திருவாரூர் பண் காந்தாரம்.

பாடிளம்பூதத்தினனும் பவளச்செவ்வாய்வண்ணத்தானுங்
கூடிளமென்முலையாளைக் கூடியகோலத்தினனு
மோடிளவெண்பிறையானு மொளிதிகழ்சூலத்தினனு
மாடிளம்பாம்பசைத்தானு மாரூரமர்ந்தவம்மானே.

நரியைக்குதிரைசெய்வானு நரகரைத்தேவுசெய்வானும்
விரதங்கொண்டாடவல்லானும் விச்சின்றிநாறுசெய்வானும்
முரசதிர்ந்தானைமுன்னோட முன்பணிந்தன்பர்களேத்த
வரவரைச்சாத்திநின்றானு மாரூரமர்ந்தவம்மானே.

பையஞ்சுடர்விடுநாகப் பள்ளிகொள்வானுள்ளத்தானுங்
கையஞ்சுநான்குடையானைக் கால்விரலாலடர்த்தானும்
பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப் புகழ்புரிந்தார்க்கருள்செய்யு
மையஞ்சினப்புறத்தானு மாரூரமர்ந்தவம்மானே.

திருச்சிற்றம்பலம்

# திருஆரூர் திருத்தாண்டகம்.

ஒருவனையுலகேத்த நின்றநாளோ
வோருருவே மூவுருவமானநாளோ
கருவனைக்காலனைமுன் காய்ந்தநாளோ
காமனையுங்கண்ணழலால் விழித்தநாளோ
மருவனைமண்ணும்விண்ணும் தெரித்தநாளோ
மான்மறிக்கையேந்தியோர் மாதோர்பாகந்
திருவினள்சேர்வதற்கு முன்னோபின்னோ
திருவாரூர்கோயிலாக் கொண்டநாளே.

ஈசனையுலகேழுமலையுமாகி
யிராவணனையிடர்த்திட் டிருந்தநாளோ
வாசமலர்மகிழ்தென்ற லானநாளோ
மதயானையுரிபோர்த்து மகிழ்ந்தநாளோ
தாதுமலர்சண்டிக்குக் கொடுத்தநாளோ
சகரர்களைமறித்திட்டாட் கொண்டநாளோ
தேசமுமையறிவதற்கு முன்னோபின்னோ
திருவாரூர்கோயிலாக் கொண்டநாளே

திருச்சிற்றம்பலம்.

# திருவாரூர்த் திருவாதிரைத் திருப்பதிகம்.

பண்—குறிஞ்சி.

முத்துவிதான மணிப்பொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப்பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலைவிரதிக
ளத்தனாரூராதிரை நாளாலதுவண்ணம்.

நணியார்சேயார் நல்லார்தீயார்நாடோறும்
பிணிதான்றீருமென்றும் பிறங்கிக்கிடப்பாரும்
மணியேபொன்னே மைந்தாமணாளாவென்பார்கட்
கணியானாரூராதிரை நாளாலதுவண்ணம்.

பாரூர்பவ்வத்தானைப் பத்தர்பணிந்தேத்தச்
சீரூர்பாடலாடலறாத செம்மாப்பார்ந்
தோரூரொழியாதுலகமெங்கு மெடுத்தேத்து
மாரூரன்றனாதிரை நாளாலதுவண்ணம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவீழிமிழலை திருத்தாண்டகம்.

போரானையீருரிவைப் போர்வையானைப்
புலியதளேயுடையாடை போற்றினானைப்
பாரானைமதியானைப் பகலானானைப்
பல்லுயிராய் நெடுவெளியாய் பரந்துநின்ற
நீரானைக்காற்றானைத் தீயானானை
நினையாதார்புரமெரிய நினைந்ததெய்வத்
தேரானைதிருவீழி மிழலையானைச்
சேராதார்தீநெறிக்கே சேர்கின்றாரே.

அறுத்தானையயன்றலைக ளஞ்சிலொன்றை
யஞ்சாதேவரையெடுத்த வரக்கன்றோள்க
ளிறுத்தானையெழுநரம்பி னிசைகேட்டானை
யிந்துவினைத்தேய்த்தானை யிரவிதன்பற்
பறித்தானைப் பகீரதற்காய் வானோர்வேண்டப்
பரந்திழியும்புனற்கங்கை பனிபோலாகச்
செறித்தானை திருவீழிமிழலையானைச்
சேராசார்தீநெறிக்கே சேர்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருமறைக்காடு - திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

பண்ணினேர்மொழி யாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக் காணக்கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள்செய்ம்மினே.

அட்டமூர்த்திய தாகியவப்பரோ
துட்டர்வான்புரஞ் சுட்டசுவண்டரோ
பட்டங்கட்டிய சென்னிப்பரமரோ
சட்டவிக்கதவந் திறப் பிம்மினே.

அரக்கனைவிரலா லடர்த்திட்டநீர்
இரக்கமொன்றிலீ ரெம்பெருமானிரே
சுரக்கும்புன்னைகள் சூழ்மறைக்காடரோ
சரக்கவிக்கதவந் திற பிம்மினே.

மறைக்கதவு திறக்கப்பட்டது.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாய்மூர்த் திருக்குறுந்தொகை.

எங்கேயென்னை யிருந்திடந்தேடிக்கொண்டு
அங்கேவந்தடையாள மருளினார்
தெங்கேதோன்றுந் திருவாய்மூர்ச்செல்வனார்
அங்கேவாவென்று போனாரதென்கொலோ.

மன்னுமாமறை காட்டுமணாளனார்
உன்னியுன்னி யுறங்குகின்றேனுக்குத்
தன்னைவாய்மூர்த் தலைவனுமாசொல்லி
யென்னைவாவென்று போனாரதென்கொலோ.

தீண்டற்கரிய திருவடியொன்றினால்
மீண்டற்கும் மிதித்தாரரக்கனை
வேண்டிக்கொண்டேன் திருவாய்மூர்விளக்கினை
தூண்டிக்கொள்வனென் றலுந்தோன்றுமே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாய்மூர்த் திருத்தாண்டகம்.

பாடவடியார் பரவக்கண்டேன்
பத்தர்கணங்கண்டேன் மொய்த்தபூத
மாடன்முழவமதிரக்கண்டே
னங்கையனல்கண்டேன் கங்கையாளைக்
கோடலரவார் சடையிற்கண்டேன்
கொக்கினிதழ்கண்டேன் கொன்றைகண்டேன்
வாடற்றலையொன்று கையிற்கண்டேன்
வாய்மூரடிகளைநான் கண்டவாறே.

கலங்கவிருவர்க் கழலாய்நீண்ட
காரணமுங்கண்டேன் கருவாய்நின்று
பலங்கடரித்துகந்த பண்புங்கண்டேன்
பாடலொலியெலாங் கூடக்கண்டேன்
இலங்கைத்தலைவன் சிரங்கள்பத்து
மிறுத்தவனுக்கீந்த பெருமைகண்டேன்
வலங்கைத்தலத்துள்ளனலுங் கண்டேன்
வாய்மூரடிகளை நான்கண்டவாறே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாவடுதுறைத் திருநேரிசை.

மாயிருஞாலமெல்லா மலரடி வணங்கும்போலும்
பாயிருங்கங்கையாளைப் படர்சடைவைப்பர்போலுங்
காயிரும்பொழில்கள்சூழ்ந்த கழிமலவூரர்க்கம்பொன்
ஆயிரங்கொடுப்பர்போலு மாவடுதுறையனாரே.

உற்றநோய்தீர்ப்பர்போலு முறுதுணையாவர்போலுஞ்
செற்றவர்புரங்கண்மூன்றுந் தீயெழச்செறுவர்போலுங்
கற்றவர்பரவியேற்றிக் கலந்திலந்தலந்துபாடு
மற்றவர்க்கன்பர்போலு மாவடுதுறையனாரே.

பார்த்தனுக்கருள்வர்போலும் படர்சடைமுடியர்போலும்
ஏத்துவாரிடர்களைவ ரின்பங்கள் கொடுப்பர்போலுங்
கூத்தராய்பாடியாடிக் கொடுவலியரக்கன்றன்னை
யார்த்தவாயலறுவிப்பா ராவடுதுறையனாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பழையாறைவடதளி.

### திருக்குறுந்தொகை.

தலையெலாம்பறிக்குஞ் சமண்கையருள்
நிலையினல்மறைத் தான்மறைக்கொண் ணுமேல்
அலையினார்பொழி லாறைவடதளி
நிலையினனடியே நினைந் துய்ம்மினே.

நீதியைக்கெட நின் றமணேயுணுஞ்
சாதியைச்கெடுமாசெய்த சங்கரன்
ஆதியைப்பழை யாறைவடதளிச்
சோதியைத்தொழுவார் துயர்தீருமே.

வாயிருந்தமிழே படித்தாளுரு
ஆயிரஞ்சமணும் மழிவாக்கினான்
பாயிரும்புன லாறைவடதளி
மேயவன்னென வல்வினைவீடுமே.

செருத்தனைச்செயுஞ் சேணரக்கன்னுடல்
எருத்திறவிரலா லிறையூன்றிய
அருத்தனைப்பழை யாறைவடதளித்
திருத்தனைத்தொழு வார்வினைதேயுமே.

திருச்சிற்றம்பலம்.

சமணர்களால் மறைக்கப்பட்ட கோவில் வெளிப்பட்டது.

---

## திருவண்ணாமலை திருநேரிசை.

ஓதிமாமலர்கடூவி யுமையவள்பங்காமிக்க
சோதியேதுளங்குமெண்டோட் சுடர்மழுப்படையினானே
யாதியேயமரர்கோவே யணியண்ணாமலையுளானே
நீதியாநின்னையல்லால் நினையுமாநினைவிலேனே.

இரக்கமொன்றியாதுமில்லாக் காலனைக்கடிந்தவெம்மா
னுரத்தினல்வரையையூக்க வொருவிரனுதியினாலே
யரக்கனைநெரித்தவண்ணா மலையுளாயமரரேறே
சிரத்தினல்வணங்கியேத்தித் திருவடிமறப்பிலேனே.

திருச்சிற்றம்பலம்.

## திருவகம்பம் - பண் - காந்தாரம்.

கரவாடும்வன்னெஞ்சர்க் கரியானைக்கரவர்பால்
விரவாடும்பெருமானை விடையேறும்வித்தகனை
யரவாடச்சடைதாழ வங்கையினிலனலேந்தி
யிரவாடும்பெருமானை யென்மனத்தேவைத்தேனே.

கைப்போதுமலர்தூவிக் காதலித்துவானோர்கள்
முப்போதுமுடிசாய்த்துத் தொழநின்றமுதல்வனை
யப்போதுமலர்தூவி யைம்புலனுமகத்தடக்கி
யெப்போதுமினியானை யென்மனத்தேவைத்தேனே.

அடுத்தானையுரித்தானை யருச்சுனற்குப்பாசுபதங்
கொடுத்தானைக்குலவரையே சிலையாகக்கூரம்பு
தொடுத்தானைப்புரமெரியச் சுனைமல்குகயிலாய
மெடுத்தானைதடுத்தானை யென்மனத்தேவைத்தேனே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கச்சியேகம்பம் - திருத்தாண்டகம்.

கூற்றுவன்காண்கூற்றுவனைக் குமைத்தகோன்காண்
குவலயன்காண் குவலயத்தினீரானான்காண்
காற்றவன்காண்கனலவன்காண் கலிக்குமின்காண்
கனபவளச்செம்மேனி கலந்தவெள்ளை
நீற்றவன்காணிலாவூருஞ் சென்னியான்கா
ணிறையார்ந்தபுனற்கங்கை நிமிர்சடைமே
லேற்றவன்காணெழிலாரும் பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர்வேண்ட
வாழ்கடலினஞ்சுண்டங் கணிநீர்க்கங்கை
செறுத்தவன்காண் தேவர்க்குத்தேவன்றான்காண்
டிசையனைத்துந்தொழுதேத்த கலைமான்கையிற்
பொறுத்தான்காண் புகலிடத்தைநலியவந்து
பொருகயிலையெடுத்தவன் றன்முடிதோளுலஞ்
சிறுத்தான்காணெழிலாரும் பொழிலார்கச்சி
யேகம்பன்காணவனென்னெண்ணத்தானே.

திருச்சிற்றம்பலம்.

## திருவொற்றியூர்த் திருத்தாண்டகம்.

வண்டோங்குசெங்மலங் கழுநீர்மல்கு
மதமத்தஞ்செஞ்சடைமேல் மதியஞ்சூடித்
திண்டோள்களாயிரமும் வீசிநின்று
திசைசேரநடமாடி சிவலோகனா
ருண்டார்நஞ்சுலகுக்கோ ருறுதிவேண்டி
யொற்றியூர்மேவிய வொளிவண்ணனார்
கண்டேனான்கனவகத்திற் கண்டேற்கென்றன்
கடும்பிணியுஞ்சுடுந்தொழிலுங் கைவிட்டவே.

மருவுற்றமலர்குழலி மடவாளஞ்ச
மலைதுளங்கத்திசைநடுங்கச் செறுத்துநோக்கிச்
செருவுற்றவாளரக்கன் வலிதான்மாளத்
திருவடியின்விரலொன்றா லலறவூன்றி
யுருவொற்றியங்கிருவ ரோடிக்காணா
வோங்கினவவ் வொள்ளழலாரிங்கேவந்து
திருவொற்றியூர் நம்மூரென்றுபோனார்
செறிவனைகளொன்றொன்றாச் சென்றவாறே.

திருச்சிற்றம்பலம்.

## திருவொற்றியூர்த் திருநேரிசை.

வெள்ளத்தைச்சடையுள்வைத்த வேதகீதன்றன்பாத
மெள்ளத்தானடையவேண்டின் மெய்தருஞானத்தீயாற்
கள்ளத்தைக்கழியநின்றார்க் காயத்துக்கலந்துநின்று
உள்ளத்துளொளியுமாகு மொற்றியூருடையகோவே.

காமத்துளழுந்திநின்று கண்டராலொருப்புண்ணாதே
சாமத்துவேதமாகி நின்றதோர்சயம்புதன்னை
யேமத்துமிடையிராவு மேகாந்தமியம்புவார்க்கு
மோமத்துளொளியதாகு மொற்றியூருடையகோவே.

வெறுத்துகப்புலன்களைந்தும் வேண்டிற்றுவேண்டுநெஞ்சே
மறுத்துகவார்வச்செற்றக் குரோதங்களானமாயப்
பொறுத்துகப்புட்பகத்தே ருடையானையடரவூன்றி
யொறுத்துகந்தருள்கள்செய்தா ரொற்றியூருடையகோவே.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாச்சூர்த் திருத்தாண்டகம்.

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ்ஞாலத்தார் விரும்புகின்ற
வண்ணாகியெழுத்தாகி யியல்புமாகி
யேழுலகுந்தொழுதேத்திக் காணநின்ற
கண்ணாகிமணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங்கடியார்கள் பரவநின்ற
பண்ணாகியின்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே.

வேந்தனெடுமுடியுடைய வரக்கர்கோமான்
மெல்லியலாளுமைவெருவ விரைந்திட்டோடிச்
சாந்தமெனநீறணிந்தான் கையிலைவெற்பைத்
தடக்கைகளாலெடுத்திடலுந் தாளாலூன்றி
யேந்துதிரடிண்டோளுந் தலைகள்பத்து
மிறுத்தவன்றனிசைகேட்டு விரக்கங்கொண்டே
பாந்தளணிசடைமுடியெம்பாசூர்மேய
பரஞ்சுடரைக்கண்டடியே னுய்ந்தவாறே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாலங்காட்டுத் திருத்தாண்டகம்.

ஒன்றாயுலகனைத்து மானார்தாமே
யூழிதோறூழி யுயர்ந்தார்தாமே
நின்றாகியெங்கு நிமிர்ந்தார்தாமே
நீர்வளிதீயாகாசமானார்தாமே
கொன்றாடுங்கூற்றை யுதைத்தார்தாமே
கோலப்பழனையுடையார்தாமே
சென்றாடுதீர்த்தங்களானார்தாமே
திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே.

மாலைப்பிறைசென்னி வைத்தார்தாமே
வெண்கயிலைமாமலையை வந்தியாத
நீலக்கடல்சூ ழிலங்கைக்கோனை
நெரியவிரலாலடர்த்தார்தாமே
பாலொத்தமேனி நிறத்தார்தாமே
பழனைப்பதியா ருடையார்தாமே
சீலத்தாரேத்துந் திறத்தார்தாமே
திருவாலங்காடுறையுஞ் செல்வர்தாமே.

திருச்சிற்றம்பலம்

# திருவையாறு - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

ஓசையொலியெலா மானாய்நீயே
யுலகுக்கொருவனாய் நின்றாய்நீயே
வாசமலரெலா மானாய்நீயே
மலையான்மருகனாய் நின்றாய்நீயே
பேசப்பெரிது மினியாய்நீயே
பிரானாயடியென்மேல் வைத்தாய்நீயே
தேசவிளக்கெலா மானாய்நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ.

நோக்கரியதிருமேனி யுடையாய்நீயே
நோவாமேநோக்கருள வல்லாய்நீயே
காப்பரியவைம்புலனுங் காத்தாய்நீயே
காமனையுங்கண்டழலாற் காய்ந்தாய்நீயே
யார்ப்பரியமாநாக மார்த்தாய்நீயே
யடியானென்றடிறயன்மேல் வைத்தாய்நீயே
தீர்ப்பரியவல்வினைநோய் தீர்ப்பாய்நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ.

எல்லாவுலகமுமானாய் நீயே
யேகம்பமேவி யிருந்தாய்நீயே
நல்லாரைநன்மை யறிவாய்நீயே
ஞானச்சுடர்விளக்காய் நின்றாய்நீயே
பொல்லாவினைக ளறுப்பாய்நீயே
புகழ்ச்சேவடியென்மேல் வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந் தருவாய்நீயே
திருவையாறகலாத செம்பொற்சாதீ.

ஆருமறியா விடத்தாய்நீயே
யாகாயந்தேரூர வல்லாய்நீயே
பேரும்பெரிய விலங்கைவேந்தன்
பெரியமுடிபத் திறுத்தாய்நீயே
யூரும்புரமூன்று மட்டாய்நீயே
யொண்டாமரையானு மாலுங்கூடித்
தேருமடியென்மேல் வைத்தாய்நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதீ.

திருச்சிற்றம்பலம்

# திருவையாறு - பண் . காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

மாதர்ப்பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும்பாடிப்
போதொடுநீர்சுமந்தேத்திப் புகுவாரவர்பின்புகுவேன்
யாதுஞ்சுவடுபடாம லையாறடைகின்றபோது
காதன்மடைப்பிடியோடுங் களிறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதனகண்டேன்.

போழிளங்கண்ணியினானைப் பூந்துகிலாளொடும்பாடி
வாழியம்போற்றியென்றேத்தி வட்டமிட்டாடாவருவே
னாழிவலவனின்றேத்து மையாறடைகின்றபோது
கோழிபெடையொடுங்கூடிக் குளிர்ந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதனகண்டேன்.

பிறையிளங்கண்ணியினானைப் பெய்வளையாளொடும்பாடித்
துறையிளம்பன்மலர்தூவித் தோளைக்குளிரத்தொழுவே
னறையிளம்பூங்குயிலாலு மையாறடைகின்றபோது
சிறையிளம்பேடையொடாடிச் சேவல்வருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதனகண்டேன்.

திங்கண்மதிக்கண்ணியானைத் தேமொழியாளொடும்பாடி
யெங்கருணல்குங்கொலெந்தை யெனக்கினியென்னாவருவே
னங்கிளமங்கையராடு மையாறடைகின்றபோது
பைங்கிளிபேடையொடாடிப் பறந்துவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதனகண்டேன்.

வளர்மதிக்கண்ணியினானை வார்குழலாளொடும்பாடிக்
களவுபடாததோர்காலங் காண்பான்கடைக்கணிக்கின்றே
னளவுபடாததோரன்போ டையாறடைகின்றபோது
இளமணநாகுதழுவி யேறுவருவனகண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதனகண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பூந்துருத்தி - திருக்குறுந்தொகை.

கொடிக்கொள்செல்வவிழாக் குணலையரூக்
கடிகொள்பூம்பொழிற் கச்சியேகம்பனூர்
பொடிகள்பூசிய பூந்துருத்திநக
ரடிகள்சேவடிக் கீழ்நாமிருப்பதே.

ஆர்த்ததோலுடை கட்டியோர்வேடனாய்ப்
பார்த்தனோடு படைதொடுமாகிலும்
பூத்தநீள்பொழிற் பூந்துருத்திநகர்த்
தீர்த்தன்சேவடிக்கீழ்நாமிருப்பதே.

துடித்ததோள்வலி வாளரக்கன்றனைப்
மிடித்தகைஞ்ஞெரிந் துற்றனகண்ணெலாம்
பொடிக்கவூன்றிய பூந்துருத்திநகர்ப்
பாடிக்கொள்சேவடிக் கீழ்நாமிருப்பதே.

திருச்சிற்றம்பலம்

---

## திருப்பூந்துருத்தி - திருவிருத்தம்.

மாலினைமாலுறநின்றான் மலைமகடன்னுடைய
பாலனைப்பான்மதிசூடியைப் பண்புணரார்மதின்மேற்
போலனைப்போர்விடையேறியைப் பூந்துருத்திம்மகிழு
மாலனையாதிபுராணனை நானடிபோற்றுவதே.

மறியுடையான்மழுவாளினன் மாமலைமங்கையோர்பாற்
குறியுடையான்குணமென் றறிந்தாரில்லைக்கூறிலவன்
பொறியுடைவாளரவத்தவன் பூந்துருத்தியுறையு
மறிவுடையாதிபுராணனை நானடிபோற்றுவதே.

பைக்கையும்பாந்திவிழிக்கைவும் பாம்புசடையிடையே
வைக்கையும்வானிழிகங்கையு மங்கைநடுக்குறவே
மொய்க்கையரக்கனை யூன்றினன்பூந்துருத்தியுறையும்
மிக்கநல்வேதவிகிர்தனை நானடிபோற்றுவதே.

திருச்சிற்றம்பலம்.

## பல்வகைத் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
யியமானனா யெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
யாகாசமா யட்ட மூர்த்தியாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையா யின்றாகி நாளையாகி
நிமிர்புன்சடை யடிக ணின்றவாறே.

மாலாகி நான்முகனாய் மாபூதமாய்
மருக்கமா யருக்கமாய் மகிழ்வுமாகிப்
பாலாகி யெண்டிசைக்கு மெல்லையாகிப்
பரப்பாகிப் பரலோகந் தானேயாகிப்
பூலோக புவலோக சுவலோகமாய்ப்
பூதங்களாய்ப் புராணன் றானேயாகி
ஏலாதனவெல்லா மேல்விப்பானா
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்றவாறே.

அப்பநீ யம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வநீயே.

சங்கநிதி பதுமநிதியிரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவாரவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகில்

அங்கமெலாங்குறைந்தழுகு தொழுநோயரா
யாவுரித்துத்தின் றுழலும் புலையரேனும்
கங்கைவார்சடைக்கலந்தார்க் கன்பராகி
லவர்கண்டீர்நாம்வணங்கும் கடவுளாரே.

திருவேயென்செல்வமே தேனேவானோர்
செழுஞ்சுடரே செழுஞ்தடநற்சோதிமிக்க
உருவேயென்னுறவே யென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தி னுள்ளேநின்ற
கருவேயென்கற்பகமே கண்ணேகண்ணிற்
கருமணியேமணியாடு பாவாய்காவாய்
அருவாயவல்வினைநோ யடையாவண்ணம்
மாவடுதண்டுறையுறையு மமரரேறே.

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்
குற்றமேபெரிதுடையேன் கோலமாய (லேன்
நலம்பொல்லேனான்பொல்லேன் ஞானியல்லே
னல்லாரோடிசைந்திலே னடுவேநின்ற
விலங்கல்லேவிலங்கல்லா தொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும் பேசவல்லேன்
இலம்போல்லேனிரப்பதே யீயமாட்டே
னென்செய்வான் றோன்றினேனேழையேனே.

ஆட்டுவித்தாலாரொருவ ராடாதாரே
யடக்குவித்தாலாரொருவ ரடங்காதாரே
ஓட்டுவித்தாலாரொருவ ரோடாதாரே
யுருகுவித்தாலாரொருவ ருருகாதாரே
பாட்டுவித்தாலாரொருவர் பாடாதாரே
பணிவித்தாலாரொருவர் பணியாதாரே
காட்டுவித்தாலாரொருவர் காணாதாரே
காண்பாரார்கண்ணுதலாய் காட்டாக்காலே.

திருநாமமஞ்செழுத்துஞ் செப்பாராகிற்
றிவண்ணார்திறமொருகாற் பேசாராகில்
ஒருகாலுந்திருக்கோயில் சூழாராகி
லுன்பதன்முன்மலர்பரித்திட் டுண்ணாராகில்

அருநோய்கள்கெடவெண்ணீ றணியாராகி
அளியற்றார்பிறந்தவா றேதோவென்னில்
பெருநோய்கண்மிகநலியப் பெயர்த்துஞ்செத்துப்
பிறப்பதற்கேதொழிலாகி யிறக்கின்றாரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவங்கமாலை.

பண்—சாதாரி

தலையே நீவணங்காய்—தலை
மாலை தலைக்கணிந்து
தலையாலேபலி தேருந்தலைவனைத்
தலையே நீவணங்காய்.

கண்காள்காண்மின்களோ—கடல்
நஞ்சுண்டகண்டன்றன்னை
எண்டோள்வீசிநின்றாடும் பிரான்றன்னைக்
கண்காள்காண்மின்களோ.

செவிகாள்கேண்மின்களோ—சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன்மேனிப் பிரான்றிறமெப்போதும்
செவிகாள்கேண்மின்களோ.

மூக்கேநீமுரலாய்—முது
காடுறைமுக்கண்ணனை
வாக்கேநோக்கிய மங்கைமணாளனை
மூக்கேநீமுரலாய்.

வாயேவாழ்த்துகண்டாய்—மத
யானையுரிபோர்த்துப்
பேய்வாழ்காட்டகத்தாடும் பிரான்றன்னை
வாயேவாழ்த்துகண்டாய்.

நெஞ்சேநீ நினையாய்—நிமிர்
புன்சடைநின்மலனை
மஞ்சாடும்மலை மங்கைமணாளனை
நெஞ்சேநீநினையாய்.

கைகாள் கூப்பித்தொழீர்—கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப்பாம்பரை யார்த்தபரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர்.

ஆக்கையாற்பயனென்—னரன்
கோயில்வலம்வந்து
பூக்கையாலட்டிப் போற்றியென்னாதவிவ்
ஆக்கையாற்பயனென்.

கால்களாற்பயனென்—கறைக்
கண்டனுறைகோயில்
கோலக்கோபுரக் கோகரணஞ்சூழாக்
கால்களாற்பயனென்.

உற்றாராருளரோ—வுயிர்
கொண்டுபோம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லாநமக்
குற்றாராருளரோ.

இறுமாந்திருப்பன்கொலோ—வீசன்
பல்கணத்தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென்று
இறுமாந்திருப்பன்கொலோ.

தேடிக்கண்டுகொண்டேன்—திரு
மாலொடுநான்முகனும்
தேடித்தேடொணாத் தேவனையென்னுள்ளே
தேடிக்கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்.

## திருப்பாதிரிப்புலியூர்த் - திருவிருத்தம்

ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாயுடன்றோன்றினராய்
மூன்றாயுலகம்படைத்து கந்தான்மனத்துள்ளிருக்க
ஏன்றானிமையவர்கன் பன்றிருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன் றன்னடியோங்களுக்கே.

பற்றாய்நினைந்திடப்போதுநெஞ்சே யிந்தப்பாரைமுற்றுஞ்
சுற்றாயலைகடன் மூடினுங்கண்டேன் புகல்நமக்கு
உற்றானுமையவட்கன் பன்றிருப்பாதிருப்புலியூர்
முற்றாமுளைமதிக்கண்ணியினான்றனமொய்கழலே

விடையான்விரும்பியென்னுள்ளத் திருந்தானினிநமக்கிங்
கடையாவவலமருவினை சாராநமனையஞ்சோம்
புடையார் கமலத்தயன் போல்பவர் பாதிரிப்புலியூ
ருடையானடியாரடியடி யோங்கட்கரியதுண்டே.

மாயமெலாமுற்றவிட்டிரு ணீங்கிமலைமகட்கே
நேயநிலவ விருந்தானவன்றன் றிருவடிக்கே
தேயமெலா நின்றிறைஞ்சுந்திருப்பா திரிப்புலியூர்
மேயநல்லான் மலர்பாதமென் சிந்தையுணின்றனவே.

வைத்தபொருணமக்காமென்று சொல்லிமனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லான்
மொய்த்தகதிர் மதிபோல்வாரவர் பாதிரிப்புலியூர்
அத்தனருள்பெறலாமோ வறிவிலாப் பேதைநெஞ்சே.

கருவாய்க் கிடந்துன்கழலே நினையுங்கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றனாமம் பயின்றேனுனதருளாற்
றிருவாய்ப்பொலியச் சிவாயநமவென்று நீறணிந்தேன்
றருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூரானே.

எண்ணாதமாரிரக்கப் பரவையுணஞ்சை யுண்டாய்
திண்ணாரசுரர்திரிபுரந் தீயெழச்செற்றவனே
பண்ணார்ந் தமைந்தபொருள்கள் பயில்பாதிரிப்புலியூர்க்
கண்ணார்நுதலாய் கழனங்கருத்திலுடையனவே.

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடியென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க்கிரங்கி யிருந்தருள் செய்பாதிருப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்ததீவண்ணனே

மண்பாதலம்புக்குமால் கடன்மூடி மற்றேழுலகும்.
விண்பாறிசைகெட்டிருசுடர் வீழினுமஞ்சனெஞ்சே
திண்பானமக்கொன்றுகண்டோந் திருப்பாதிரிப்புலியூர்க்
கண்பாவுநெற்றிக் கடவுட்சுடரான் கழலிணையே.

திருந்தாவமணர்தந் நெறிபட்டுத் திகைத்துமுத்தி
தருந்தாளிணைக்கே சரணம்புகுந்தேன் வரையெடுத்த
பொருந்தா வரக்கனுடனெரித்தாய் பாதிரிப்புலியூர்
இருந்தாயடியேனினிப்பிறவாமல் வந்தேன்றுகொள்ளே.

## திருவாரூர்த் திருத்தாண்டகம்.

பொய்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற
புண்ணியங்கா டீவினைகா டிருவேநீங்க,
ளிம்மாயப் பெருங்கடலையரித்துத்தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான்யானேல்வானோர்,
தம்மானைத் தலைமகனைத் தண்ணலாரூர்த்
தடங்கடலைத்தொடர்ந் தோரை யடங்கச்செய்யு,
மெம்மான்றனடித் தொடர்வானுழிதாகின்றே
னிடையிலேன் கெடுவீர்காளிடறேன்மின்னே.

சுருக்கமொடு பெருக்கநிலை நித்தல்பற்றித்
துப்பறையென்றனை வீரிவ்வுலகையோடிச்,
செருக்கிமிகை செலுத்தியுஞ் செய்கைவகல்
செய்கின்றீர்க்கமையாதே யானேன்மிக்க
தருக்கிமிகவரை யெடுத்தவரக்கனாகந்
தளரவடி யெடுத்தவன்றன் பாடல்கேட்டு,
இரக்கமெழுந்தருளிய வெம்பெருமான்பாதத்
திடையிலே கெடுவீர்காளிடறேன்மின்னே.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புகலூர் திருத்தாண்டகம்

எண்ணுகேனென் சொல்லியெண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே யெண்ணினல்லால்,
கண்ணிலேன்மற்றோர்களை கண்ணில்லேன்
கழலடியே கைதொழுதுகாணினல்லால்,
ஒண்ணுளே யொன்பதுவாசல்வைத்தா
யொக்கவடைக்கும்போ துணரமாட்டேன்,
புண்ணியனேயுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர்மேவிய புண்ணியனே.

அங்கமே பூண்டாயனலாடினா யாதிரையா
யானிழலாயானே றூர்ந்தாய்,
பங்கமொன்றில்லாத படர்சடையினாய்
பாம்பொடுதிங்கள் பகைதீர்த்தாண்டாய்,
சங்கையொன்றின்றி யேதேவர் வேண்டச்
சமுத்திரத்தினஞ்சுண்டு சாவாமூவாச்,
சிங்கமேயுன்னடிக்கே போதுகின்றேன்
திருப்புகலூர்மேவிய தேவதேவே.

பையரவக்கச் சையாய்பால் வெண்ணீற்றாய்
பளிக்குக்குழையினாய் பண்ணாரின்சொல்,
மைவிரவுகண்ணாளைப் பாகங்கொண்டாய்
மான்மறிக்கை யேந்தினாய் வஞ்சக்கள்வ,
ஐவரையுமென் மேற்றரவறுத்தா
யவர்வேண்டுங் காரிய மிங்காவதில்லைப்,
பொய்யுரையாதுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தெருளாதார் மூவெயிலுந் தீயில்வேவச்
சிலைவளைத்துச் செங்கணையாற் செற்றதேவே,
மருளாதார் தம்மனத்தில் வாட்டந்தீர்ப்பாய்
மருந்தாய்ப் பிணிதீர்ப்பாய் வானோர்க்கென்றும்,
அருளாகி யாதியாய் வேதமாகி
யலர்மேலானீர் மேலானாய்ந் துங்காணாப்,
பொருளாவா யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

நீரேறு செஞ்சடைமே னிலாவெண் டிங்க
ணீங்காமை வைத்து கந்தநீதியானே,
பாரேறு படுதலையிற் பலிகொள்வானே
பண்டணங்கைப் பார்த்தானே பாவநாசா,
காரேறு முகிலனைய கண்டத்தானே
கருங்கைக்களிற் றுரிவைகதறப் போர்த்த,
போரேறே யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

விரிசடையாய் வேதியனே வேதகீதா
விரிபொழில்சூழ் வெண்காட்டாய் மீயச்சூராய்,
திரிபுரங்க ளெரிசெய்த தேவதேவே
திருவாரூர்த் திருமூலத்தானமேயாய்,
மருவினியார் மனத்துளாய் மாகாளத்தாய்
வலஞ்சுழியாய் மாமறைக்காட் டெந்தாயென்றும்.
புரிசடையா யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமேலலரிட்டுத் தேடி நின்று,
நாவார்ந்த மறைபாடி நட்டமாடி
நான்முகனு மிந்திரனு மாலும்போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேற்றாய்க்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்,
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே,

நெய்யாடி நின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே,
மையாடு கண்மடவாள் பாகத்தானே
மான்றோலுடையாய் மகிழ்ந்து நின்றாய்,
கொய்யாடு கூவிளங் கொன்றைமாலை
கொண்டடியே னிட்டுக் கூறிநின்று,
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

துன்னஞ்சேர் கோவணத்தாய் தூயநீற்றாய்
துதைந்திலங்கு வெண்மழுவாள் கையிலேந்தித்
தன்னனையுந் தண்மதியும் பாம்பும்நீருஞ்
சடைமுடிமேல் வைத்துகந்த தன்மையானே,
யன்னநடை மடவாள் பாகத்தானே
யக்காம்ர பூண்டானே யாதியானே
பொன்னங் கழலடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

ஒருவனையுமல்லா துணராதுள்ள
முணர்ச்சித் தடுமாற்றத் துள்ளேநின்ற,
விருவரையு மூவரையு மென்மேலேவி
யில்லாத தரவறுத்தாய்க் கில்லேனேலக்,
கருவரை சூழ்கான விலங்கை வேந்தன்
கடுந்தேர் மீதோடாமைக் காலாற்செற்ற,
பொருவரையா யுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர்மேவிய புண்ணியனே.

திருச்சிற்றம்பலம்.

உ

திருச்சிற்றம்பலம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளின்

# புராண சாரம்.

---

தண்கயிலை யதுநீங்கி நாவலூர் வாழ்
  சைவனார் சடையனார் தனயனாராய்
மண்புகழ வருட்டுறையா ளோலைகாட்டி
  மணம்விலக்க வன்றொண்டா யதிகைசேர்ந்து
நண்பினுட னருள்புரியவாரூர்மேவி
  நலங்கிளரும் பரவைதோ ளயர்ந்துவைகத்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டேத்துந்
  திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத்
  திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாய்ச்செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற்றிட்டுக்
  கடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்துநாத
னொப்பிறனித் தூதுவந்தா றூடுதீறி
  யுறுமுதலை சிறுமதலை யுமிழநல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற்சேர
  வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

உ

சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திர வரலாறு.

---

திருக் கைலாயத்தில் ஆதியில் சிவபிரானுடைய பிரதி விம்பமாக ஓர் உருவம் தோன்றி அது வெகு சுந்தரமாயிருந்ததினால் அதற்கு சுந்தரன் எனப் பேரிட்டழைத்துத் தம்மிடத்திலேயே திருத்தொண்டு செய்ய சிவபிரான் அழைத்துக் கொண்டனர்.

பின்னர் திருப்பாற் கடலில் தேவாசுரங்கள்கூடி அமுதம் கடையுங் காலத்தில் அங்கு தோன்றிய ஆலகால விஷத்தை அங்குள்ள யாவரும் கண்டு பயந்து அதைத் தொடாதிருக்க இச்சுந்தரர் தன் கரங்களால் ஏற்று சிவ பெருமானிடம் கொடுத்தார் அதிலிருந்து ஆலாலசுந்தரர் என்ற திருநாமம் பெற்று கைலையில் சிவபிரானுக்குத் திருத் தொண்டு செய்திருந்தார்.

ஓர் நாள் வழக்கம்போல் ஆலாலசுந்தரர் சிவபெருமானுக்கு மலர் கொய்ய திருநந்த வனத்துக்குப்போனார். அங்கு உமாதேவியாருக்காக பூக்கொய்யசேடியாரான அநிந்திதை கமலினி என்ற இரு பெண்மணிகளும் அவ்விடமே போயினர். அங்கே சுந்தரர் அப்பெண்மணிகளின் மேலும் பெண் மணிகள் சுந்தரர் மேலும் காதல் கொண்டனர். பின்பு ஒருவாறு மனதைத் தேற்றித் தமதிருப்பிடம் வந்து சேர்ந் தனர்.

முக்காலமும் தெரிந்துசொல்லும் சிவபெருமான் ஆலால சுந்தரரைப் பார்த்து "நீ பெண்களின்மீது காதற் கொண் டமையால் தென்னாட்டில் மானுடனாய்ப் பிறந்து அப்பெண் களுடன் இன்பம்நுகர்ந்து வேட்கை தணித்து, மீண்டும் இங்கு வரக்கடவை" என்று கட்டளையிட்டார். ஆலால சுந்தரர், நடுநடுங்கிச் சிவபெருமானை நமஸ்கரித்து, "சிவபெரு மானே! மனிதனாய்ப்பிறந்து மாயவலையிற் சிக்கி மயங்கும் போழ்து அடியேனைத் தடுத்தாட்கொள்ளவேண்டும்' என்று வேண்டினார். சிவபெருமான் அவ்வேண்டுகோளுக்கு இரங்கி யருளினார். பின்னர் அநிந்திதை, கமலினி இருவருக்கும் தென்னாட்டிலே பெண்ணாய்ப் பிறக்கும்படி கட்டளையும் விதிக்கப்பட்டது.

கடவுளரின் திருவருட் கட்டளைப்படி திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே சடையனார் என்ற பிராமணர் இசைஞானியார் என்ற பெண்மணியை மணந்து இல்லறம் நடத்தும் நாளில் அவர்கட்கு ஓர் ஆண்மகன் பிறந்தார். அக் குழந்தையை நம்பியாரூரர் என்ற நாமகரணமிட்டு அன் புடன் வளர்த்தனர்.

இச்சிறு குழந்தை அதிபாலியவயதில் வீதியில் விளை யாடிக்கொண்டிருக்கையில் அந்நாட்டு அரசனை நரசிங்க முனையர், இக்குழந்தையின் அழகையும், புத்தி கூர்மையை யும் பார்த்து, சடையனாரிடம் சென்று குழந்தையைத் தான் வளர்ப்பதாகச் சொல்லிக் கேட்டார். சடையனாரும் சம்மதி த்துக் கொடுத்தார். நரசிங்கமுனையர் நம்பியாரூரரை அரசி ளங்குமரர்போல் அந்தணர் நெறியில் வளர்த்தார். பலகலை களையும் பயிற்றுவித்தார்.

திருமணம் செய்யும் பருவமாயிற்று நம்பியாரூரரின் தந்தை, புத்தூரில் சடங்கவி சிவாச்சாரியாரிடம் தன் மகனு க்கு அவருடைய பெண்ணை விவாகம் செய்விக்க பேசினார் அவரும் சம்மதித்துவிட்டார். அந்தணர் குல்முறைப்படி சகல ஆடம்பரத்துடன் நம்பியாரூரர் கலியாணம் செய்யும் பொருட்டு புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் வீட்டுக்குச் செல்ல, பெண்வீட்டாரும் மாப்பிள்ளையை சகல வைபவங் களுடன் வரவேற்று பந்தலில் மணையில் உட்காரவைத்தார் கள்

அவ்வேளையில் திருக்கைலாயத்தில் ஏற்கனவே சிவ பெருமான் ஆலால சுந்தரருக்கு வாக்களித்தபடி, அவரைத் தடுத்தாட்கொள்ளும் பொருட்டு, ஓர் கிழப் பிராமண ரூபம் தரித்து கையில் தடி ஊன்றிக்கொண்டு பந்தலில் வந்து சேர்ந்தார். சபையோரை உற்றுப்பார்த்தார், 'சபையோரே! என் மொழியைக்கேளும்' என்றார். சபையோரும் நம்பியா ரூரரும் பெரியவருக்கு மரியாதை செய்து 'என்ன சொல் லப் போகிறீர், சொல்லுங்கள்' என்றார்.

அந்தணர் நம்பியாரூரரைப் பார்த்து 'ஏ நம்பீ உனக்கும் எனக்கும் ஓர் வழக்கு உண்டு அதைத் தீர்த்தபின்பே நீ மணம் செய்யவேண்டும்' என்றனர். நாவலர் பெருமான் "என்ன! வழக்கா? அப்படியாயின், அதைத் தீர்த்தே விவா கம் செய்வேன், வழக்கைச் சொல்லும்" என்றார். அந்தணர் "கேளுங்கள் சபையோரே, இந்நம்பியாரூரன் எனக்குப் பரம்பரை அடிமை. இதுதான் யான் சொல்ல வந்தேன்" என்றார்.

அங்கிருந்தவர்கள் "இதென்ன ஆச்சரியம்" என்றனர் சிலர் சிரித்தனர். சிலர் வெகுண்டனர் நம்பியாரூரரும் "இவ்வந்தணர் மொழி நன்றாயிருக்கிறது" என்று ஏளனம் செய்தார். அப்போது அந்தணர் "அடே நம்பீ அந்தக் காலத்தில் உன் பாட்டன் எழுதிக்கொடுத்த அடிமை ஓலை இருக்கிறது. அப்படியிருக்க நீ என்னையா இகழ்ந்து நகையாடுகிறாய்?" என்று கேட்டார்.

நம்பியாரூரர் அந்தணரை நோக்கி "அந்தணருக்கு அந்தணர் அடிமையாதல் உண்டோ! இவ்வார்த்தையை இன்று தான் நீர் சொல்லக் கேட்டேன் நீர் பித்தரோ" என்று பேசினார். அதற்கு அந்தணர் "யான் பித்தனாயினும் ஆகுக, பேயனாயினும் ஆகுக, நீ எது சொல்லினும் சொல்லுக, யான் நாணமுறேன். வீண்பேச்சுப் பேசவேண்டாம். பணி செய்ய வா" என்றார்.

நம்பியாரூரர் அந்தணரைப்பார்த்து "அடிமை ஓலை எங்கே? காட்டும்" என்றார். அந்தணர் "நம்பி! ஓலையைப் பார்க்க நீ அருகனல்ல. அதைச் சபையார் முன்னே காட்டுகிறேன். உண்மை உறுதிப்பட்டபின்னரே நீ எனக்கு அடிமை வேலைசெய்ய அருகனாவாய்" என்றார். நம்பியாரூரருக்கு இதைக் கேட்கவே கோபம் பிறந்தது. உடனே எழுந்தார் அந்தணர் பயந்தவர்போல் ஓடினார். நம்பியும் அவர் பின்னேயே ஓடி. அவரைப் பிடித்தார். ஓலையைப் பிடுங்கினார் "அந்தணர் அந்தணர்க்கு அடிமையாவது என்னமுறை?" என்று சொல்லி ஓலையைக் கிழித்தெறிந்தார். ஐயர் "இது முறையோ! இது தருமமா!" என்று கூக்குரலிட்டார் அருகிலிருந்தவர்கள் விலக்கினார்கள். அவர்கள் ஐயரைப் பார்த்து "ஐயரே! உலகத்தில் இல்லாத வழக்கைக் கொண்டுவந்தீர் நீர் இருப்பது எங்கே?" என்று கேட்டனர். அந்தணர் "நான் இருப்பது திருவெண்ணெய் நல்லூர். இவன் வலிய என் ஓலையைக் கிழித்தான் இதனாலேயே இவன் என் அடிமை என்பது உறுதியாயிற்று" என்றார்.

நம்பியாரூரர் "உமது ஊர் திருவெண்ணெய் நல்லூர் என்கிறீர் அங்கு போய் இவ்வழக்கை பேசலாம்" என்றார். அந்தணரும் "சரி என்னிடம் மூல ஓலையும் இருக்கிறது அதைக்கொண்டு என் கட்சியை உறுதிப்படுத்துவேன்" என்று சொன்னார். எல்லோரும் திருவெண்ணெய் நல்லூருக்குப் போயினர். அங்கே அநேக பிராமணர் கூடியிருந்தனர். அந்தணர் 'ஐயன்மீர் இந்த நம்பியாரூரன் எனக்கடிமை என்று, நான் காட்டிய ஓலையைப்பிடுங்கிக் கிழித்தெறிந்தான்.

என் வழக்கு நியாயமானது" என்றார். சபையார் 'அந்தண ருக்கு அந்தணர் அடிமையாவது வழக்கமில்லையே' உமக்கு ஆரூரன் அடிமை என்று சொல்வதற்கு ஏதேனும் ஆதாரம் இருப்பின் அதைச்சொல்லும் என்று சபையோர் கேட்க, அந்தணர் "முன் கிழித்தெறிந்தது நகல், மூல ஓலை இதோ இருக்கிறது" என்று சொன்னார். சபையோர் 'அதைக் காட்டுக" என்றனர். அந்தணர் "முன்போல் கிழித்து எறிந்து விட்டால் என் செய்வது" என்றார். சபையோர் 'நாங்கள் பார்த்துக் கொள்கிறோம், அஞ்சாது காட்டுக" என்றனர். அந்தணர் ஓலையைச் சபையோரிடம் கொடுத்தார் சபையோர் சொற்படி அவ்வூர் கணக்கன் ஓலையைப் பிரித்து படித் தான் அதில் "திருநாவலூரில் வாழும் ஆதி சைவனாகிய ஆரூரன் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு எழுதிக் கொடுத்தது; யானும் என் மரபினரும் திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு வழித்தொண்டு செய்ய அகமும் புற மும் ஒத்து உடன்படுகிறோம் இங்ஙனம்: ஆரூரன்" என்ற வாசகம் இருந்தது. அதில் சாக்ஷியாக கையெழுத்திட்டவர் களும், தங்கள் கையெழுத்தென்றே ஒத்துக்கொண்டனர்.

நம்பியாரூரரைப்பார்த்து சபையார் "இது உன் பாட்டன் கையெழுத்துதானா பாரும்" என்றனர். அந்தணர் இவனா பார்க்க வல்லவன்! பாட்டனுடைய வேறு கையெழுத்திருந் தால் அதைவரவழைத்து ஒத்துப்பாருங்கள், பின்பு உண்மை ஈதென்று தெரியுங்கள்" என்று கூறினார். சபையோர் அப் படியே செய்து பாட்டனார் கையெழுத்துதான் என்று உறுதி படுத்தி "நம்பியாரூரரே! இவ்வந்தணருக்கு நீர் அடிமையாக வேண்டியதே, என்று முடிவு கூறினர். நம்பியாரூரர், "இது என் தலை எழுத்து. உங்கள் தீர்ப்புக்கு நான் மறுக்கலாகாது என்று ஏக்கத்துடன் சொன்னார். சபையோர் அந்தணரே "நீர் இத்திருவெண்ணெய் நல்லூரில் எங்கே வசிக்கின்றீர்" என்று கேட்டனர். அந்தணர் "வீட்டை காட்டுகிறேன் வாரும்" என்று கூட்டிக்கொண்டு நடந்தார்.

எல்லோரும் அவர் பின்னே நடந்தனர். அவ்வூரிலுள்ள திருவருட்டுறை என்ற ஆலயத்துக்குள் அந்தணர் உள் நுழை ந்து, மறைந்தார். யாவரும் திகைத்தனர். திருநாவலூரனும் திகைத்து "என்னை ஆட்கொண்ட அந்தணர் எங்குற்றார்"? என்று தனியே நின்று கூவினார்.

அப்போது சிவபெருமான் உமாதேவியாருடன் ரிஷப வாகனரூடராய் ஆகாயத்தில் தோன்றி "நாவலூரா! நீ நமக்கு முன்பு தொண்டனாயிருந்தாய், பெண்கள் மேல் காமுற்றாய்; அதனால் நமது ஏவல்படி இங்கே பிறந்

திருக்கின்றாய்; இவ்வுலகமாயை உன்னைப் பிடியாதபடி நாம் தடுத்தாட்கொண்டோம்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இதைக் கேட்ட நம்பியாரூரர் ஆனந்தபரவசமானார். "அடியேனை ஒரு பொருட்டாய் எண்ணி தடுத்தாட்கொண்டீர் உமது கருணையே கருணை" என்று துதித்து நின்றார்.

சிவபெருமான் நாவலூரரைப்பார்த்து 'நீ நம்மோடு வன்மை பேசியதால் உனக்கு வன்தொண்டன் எனப் பெயர் வழங்குவதாக, நமக்குரிய அர்ச்சனை பாட்டேயாம். நீயும் அவ்வர்ச்சனையைச் செய்வாயாக' என்றார் வன்றொண்டர் "யான் சிறியேன்; ஒன்றும் தெரியேன்; உம்முடைய திருவருட்டிறம் இன்னதென்றறியேன், எவ்வாறு பாடுவேன் என்று முறையிட்டார். சிவபிரான் "என்னைப் பித்தன் என்று முன்னே நீ கூறினாய்; என்னைப் பித்தனென்றே தொடங்கி பாடுக" என்று அருள் செய்தார். உடனே வன்றொண்டர் "பித்தா பிறைசூடி" என்ற பதிகம் பாடினார். அதைக்கேட்ட சிவபெருமான் "இனி நமது புகழைப் பாடிக் கொண்டு இருப்பாயாக" என்று கூறி மறைந்தருளினார்.

புத்தூரிலே திருமணம் குலைந்தது சடங்கவி சிவாச்சாரியாருடைய புதல்வியும் வன்தொண்டப் பெருமானுடைய திருவடியிலேயே மனதை வைத்து அவரையே நினைந்து நினைந்து சிலகாலத்துக்குப்பின் சிவபதமடைந்தனர்.

வன்தொண்டர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து தன் ஜனன ஊராகிய திருநாவலூர் வந்தார். அங்கு ஆண்டவனைத் தொழுதார். அங்கிருந்து திருத்துறையூர் சென்று பின் திருவதிகை வந்தார் திருவதிகை திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்தபதி. ஆதலால் அப்பதியைத் தனது பாதங்களால் மிதிக்கப்படாதென்று எண்ணி பக்கத்தேயுள்ள ஓர் சிவமடத்தில் தங்கி, அம்மடத்திலே துயின்றார். திருவதிகைப்பெருமான் ஓர் கிழப்பிராமணர்போல் அங்கு வந்து வன்தொண்டர் தலைமேல் தனது திருப்பாதத்தை வைத்துத் தானும் தூங்குபவர்போல் இருந்தார் வன்தொண்டர் "ஐயரே ஏன் உமது அடிகளை என் தலைமேல் வைத்தீர்" என்று கேட்டார். ஐயர் ' என்னுடைய மூப்பு என்னை திசையறியாமல் செய்து விட்டது" என்றார். வன்தொண்டர் வேறோர் திசையில் தலைவைத்துத் தூங்கினார். அப்போதும் கிழ ஐயர் அவர் தலைமேல் தனது பாதங்களை வைத்துத் தூங்குபவர்போலிருந்தார். வன்தொண்டர் "ஐயரே! நீர் யார்! பலகாலும் என் தலையை மிதிக்கிறீர்!" என்று கேட்டார் வேதியர் "என்னை நீ அறியாயோ" என்று கூறி மறைந்து போனார். "வந்தவர் சிவபிரான் இறுமாப்பால் கெட்டேன்"

என்று வருந்தி "தம்மானை யறியாத சாதியாருளரோ" என்று பதிகம் பாடினார், பின்னர் திருமாணிக்குழி, திருத்தினை இந்நகரம் போனார். பின்பு தில்லைக்கு வந்தார். திருச்சபையைக் கண்டார்.நடராஜப்பெருமானை வணங்கினார். அப்போது "திருவாரூருக்கு வா" என்று அசரீரி உண்டானது. சீர்காழிவழியைவிலகி அதனெல்லையைச் சுற்றிக்கொண்டு போனார். ஏனெனில் சீர்காழி சம்பந்தமூர்த்திகள் ஜனித்த புண்ணியதலம். ஆதலால் அப்பதியை மிதிக்கப்படாதென்று சுற்றிப்போனார். இதுதெரிந்து சீர்காழிப் பெருமான் வழியில் காக்ஷி கொடுத்தார். அப்போது 'கழுமலவள நகர்கண்டு கொண்டேனே' என்ற பதிகம் பாடினார். வழியிலிருந்த பல புண்ணிய தலங்களை வணங்கி திருவாரூர் போய்ச்சேர்ந்தார்.

தியாகேசப் பெருமான் கட்டளைப்படி அவ்வூர் வாசிகள் வன்தொண்டரை எதிர்கொண்டு அழைத்தனர். ஆலயத்துட் சென்று சிவபெருமானைத் தொழுதார். அப்போது "நமது தோழமையை உனக்குத் தந்தோம்; நாம் உன்னைத் தடுத்தாட் கொண்டபோது, நீ பூண்டிருந்த திருமணக் கோலத்தோடு என்றும் இருப்பாயாக; வேட்கை தீர வாழ்வாயாக" என்ற ஓர் அசரீரி வாக்கு உண்டாயிற்று. அங்கிருந்தவர் திருநாவலூரரை "தம்பிரான் தோழர்" என்று திருநாமமிட்டழைத்தனர். கடவுள் கட்டளைப்படி திருமணக் கோலத்துடன் இருந்து சிலநாள் திருவாரூரிலேயே தங்கி கடவுளை வழிபட்டு வந்தார்.

முன்னாளில் கைலையில் சிவபெருமான் கட்டளைப்படி அனிந்திதியார், கமலினியார், என்ற இருவரில் ஒருவரான கமலினியார் திருவாரூரிலே உருத்திர கணிகையர் குலத்திலே பெண்மணியாகப் பிறந்திருக்கிறார். இப்பெண்ணுக்குப் பரவையார் என்ற திருநாமமிட்டு வளர்த்தனர். நாளடைவில் வளர்ந்து பருவமடைந்து மிக ரூபலாவண்ணிய முள்ளவளாய் தினமும் ஆலயம் போய் தியாகேஸரை வணங்குவது வழக்கமாயிருந்தனர்.

ஓர் நாள் பரவையார் வழக்கம்போல் திருக்கோவிலுக்குப் போயிருந்தபோது தம்பிரான் தோழரும் கோவிலுக்குப் போனார். இருவருக்கும் பண்டை விதி ஒத்துக்கொண்டதால் இருவரும் ஒருவரை யொருவர் காதலித்தனர் தம்பிரான் தோழர் அங்கிருந்தவர்களைப் பார்த்து "இவள் யார் என் மனதைக் கவர்ந்தாள்" என்று கேட்க பரவையார் என்று அங்கிருந்தவர் சொல்லினர். தம்பிரான் தோழர் "என்னைத் தடுத்தாட்கொண்ட பெருமானே பரவையாரை எனக்குத் தந்தருள்வார்" என்று மனதிலே நினைத்துக்

கொண்டு தேவாசிரிய மண்டபத்தில் வந்து உட்கார்ந்தார் பரவையாரும் தம்பிரான் தோழரைப் பார்த்தது முதல், அவருடைய நினைப்பாகவே இருந்து வீடுபோய்ச் சேர்ந்து வேட்கையிலேயே மனம் லயித்து தோழியரைப் பார்த்து "நாம் கோவிலுக்குப் போனபோது நமக்கு எதிரே வந்து இருந்தவர் யார்" என்று கேட்க "அவர் நம்பியாரூரர். சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர். சிவனடியார்" என்று சொன்னார்கள். சிவனடியார் என்று கேட்டதும் மேலும் மேலும் காதல் பெருகிற்று.

இருவரின் காதலையும் சிவபெருமான் தெரிந்து 'பரவை நாயகியாரைத் தம்பிரான் தோழருக்குத் திருமணஞ் செய்து வையுங்கள்' என்று திருவாரூரில் உள்ள சிவனடியார்களுக்கு சொப்பனத்தில்தெரிவித்தார். இச்செய்தியை தம்பிரான் தோழருக்கும் பரவையாருக்கும் தெரிவித்து சிவனடியார்கள் திருமணஞ்செய்வித்தனர். இருவரும் இல்லற தர்மத்தில் இருந்து இன்பமாய் வாழ்ந்திருந்தனர்.

ஓர் நாள் தம்பிரான் தோழர் வழக்கம்போல் ஆலயத்துட்சென்று, தேவாசிரிய மண்டபத்துள் புகுந்தார். அங்கிருந்த சிவனடியார்களைக் கண்டு இவர்களுக்கு நான் அடியனாகும்நாள் எந்நாள் என்று நினைத்துக்கொண்டு சிவசந்நிதி முன்செல்ல சிவபெருமான் எதிரில் தோன்றி அடியவர்களுடைய வழித்தொண்டை அவருக்கு உபதேசித்து அடியவர்களின்மேல் பதிகம் பாடுக எனக் கட்டளையிட்டார். தம்பிரான்தோழர் "யான் சிறியேன்; அடியாரின் இயல்பு அறியேன்; என்னென்று பாடுவேன்; திருவருள் வேண்டும்;" என முறையிட்டார். சிவபெருமான் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துக் கொடுத்தருளினார். உடனே நாவலர் பெருமான் தேவாசிரிய மண்டபத்தையநுகி திருக்கூட்டத்தை வணங்கி திருத்தொண்டத்தொகைப்பாடி அருளினார்.

திருவாரூர்க்குச் சமீபத்தில் குண்டையூர் என்ற ஊரில் சிவபக்தரும் செல்வவந்தருமான குண்டையூர்க் கிழவர் என்றொருவர் இருந்தார். அவர் தம்பிரான்தோழருடைய பெருமையைக் கேள்வியுற்று, அவருக்காக திருவமுதாகும்படி செந்நெல்லும், பருப்பும் பரவையாரின் மாளிகைக்கு அனுப்பி வருவது வழக்கம். வருநாளில் மழைவளஞ் சுருங்கிற்று கிழவருக்கு போதிய நெல் கிடைக்கவில்லை. கிழவனார் வருந்தினார். தானும் உணவு உண்ணவில்லை. நெல் கிடைக்கவில்லையென்ற குறையை நினைத்துக் கொண்டே துயின்றார்.

சிவபெருமான் அவர் கனவிலே தோன்றி, "ஆரூரனுக்காக உனக்குப் போதிய நெல் அளித்தோம்" என்று சொல்லி உடனே குபேரனுக்குக் கட்டளையிட்டு குண்டையூரில் எங்கு பார்த்தாலும் நெற் குவியலாயிருக்க ஏற்பாடு செய்தார். குண்டையூர்க் கிழவர் விழித்தெழுந்து எங்கும் நெல் குவியல்கள் மலைமலையாயிருக்கக் கண்டு திருவருளை வியந்தார்; வண்தொண்டரை நினைத்தார், "இதை யாரால் எடுக்க முடியும், வன்தொண்டருக்குத் தெரிவிப்பேன்" என்று திருவாரூருக்குப் புறப்பட்டார். அதே இரவில் சிவபிரான் திருநாவலூரனுக்கு நெல் குவியல் ஏற்படுத்தினதைத் தெரிவித்தார். இதைத் தெரிந்ததும், நம்பியாரூரர் குண்டையூருக்கு வருகையில் வழியில் குண்டையூர்க் கிழவர் நம்பியாரூரரைச் சந்தித்து ஆண்டவன் அருட்செயலையும், நெல்,எடுக்கமுடியாத அவ்வளவு மலையாயிருப்பதையும் தெரிவித்தார். இருவரும் குண்டையூர்ச்சேர்ந்தார்கள். அங்கே அருகில் உள்ள திருக்கோளிலி என்னும் ஊர்போய் ஆலயம் புகுந்து சிவபெருமானை "நீளநினைந்தடியேன்" என்னும் பதிகம் பாடினார்.

அப்போது சிவபெருமான் திருவருளால் ஆகாயத்தில் "இன்று இரவு பூதகணங்கள் நெல்மலையைத் தூக்கி வரும்" என்று அசரீரி கேட்டது. தம்பிரான்தோழர் திருவாரூர் வந்து சேர்ந்து பரவையாரிடம் நிகழ்ந்தனவற்றைச் சொன்னார். விடியுமுன் திருவாரூர் தெரு முழுமையும் நெற் குவியலாய் இருந்தன. விடிந்ததும் பரவையார் வெளியில் வந்து பார்த்து ஆச்சரியமுற்று திருவருளை வியந்தார், பரவையார் "அவரவர் வீட்டு எதிரில் இருக்கும் நெல்லை அவரவர் எடுத்துக் கொள்ளலாம்" என்று பறைசாற்றச் செய்தார் ஜனங்கள் அவ்வாறே சந்தோஷமாய் எடுத்துக்கொண்டனர்.

திருநாட்டியத்தான் குடியில் கோட்புலியார் என்று ஓர் சிவபக்தர் இருந்தார். அவர் திருவாரூர் போய் நம்பியாரூரரை விருந்துக்கழைக்க அவரும் அப்படியே சம்மதித்து வர கோட்புலியார் அவருக்கு உபசரணைச்செய்து தன் குமாரத்திகளான சிங்கடியார், வனப்பகையார் என்ற இருவரையும் அழைத்துவந்து "சுவாமிகளை இவ்விருவரையும் ஆட்கொள்ளும்படி வேண்டினார்".சுவாமிகள் இவ்விருவரும் எனக்கு "புத்திரிகளாவர்" என்று சொல்லி மறுத்து அவ்வூர் ஆலயத்தில் போய் பதிகம் பாடி அன்றுமுதல் தம்மைச் "சிங்கடியப்பன்" என்றும் "வனப்பகையப்பன்" என்றும் தாமே பாடிக் கொள்ளலானார். பின்பு திருவாரூர்க்குப் போயிருக்கையில் பங்குனி உத்திரத் திருநாள் வந்தது.

அதற்காகப் பரவையாருக்குப் பணம் தேவையாயிருந்தது. திருவதிகை போய் சிவசந்நிதியில் திருப்பதிகம்பாடி பொன் வேண்டுமென்று முறையிட்டார். அங்குள்ள திருமடத்துக்குப் போகாமல் கோவிலின் பிரகாரத்திலேயே அங்கிருந்த செங்கற்களை தலையணையாக வைத்துபடுத்துத் தூங்கினார். தொண்டர்களும் கூடவே உறங்கினர். சற்று நேரத்துக்குப் பின் விழித்துப் பார்க்கையில் செங்கற்கள் பொன் கற்களாக மாறியிருந்தன. இது சிவபெருமான் திருவருள் என்று வியந்து ஆலயத்துக்குள் போய் சிவபிரானைத் துதித்து "தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும்" என்ற பதிகம் பாடினார். பொன்னை எடுத்துக்கொண்டு திருப்பனையூர் போனார். அங்கு கோவிலுக்குப்போய் நம்பியாரூரர் "அரங்கில் ஆடவல்லார் அவரே அழகியரே" என்று பதிகம் பாடியபின் திருவாரூர்க்குப் போனார். அங்கிருந்து பல சிவ தலங்கள் சென்று பதிகங்கள் பாடி திருவாலம் பொழில் என்ற ஊர் வந்து சிவதரிசனைச்செய்து அன்றிரவு அங்கேயே தங்கினார். சிவபெருமான் அவர் கனவிலே தோன்றி "மழபாடியை மறந்தாயோ" என்று கேட்டருளினார். உடனே விழித்துக் கொண்டு மழபாடி சென்று "பொன்னார் மேனியனே" என்ற பதிகம் பாடினார். பின்னர் திருவானைக்குப் போனார் "மறைகளாயின நான்கும்" என்ற பதிகம் பாடி பிறகு திருப்பாச்சிரமம் போய் "இவரல்லாதில்லையே பிரானார்" என்று பதிகம் பாடி பொன் பெற்றார். அங்கிருந்து பல திருப்பதிகள் சென்று சிவதரிசனைச்செய்து கொங்கு நாட்டிலுள்ள திருப்பாண்டிக்கொடுமுடி வந்து அங்கே இறைவனை துதித்து "மற்றுப் பற்றெனக் கின்றிநின் திருப் பாதமே மனம் பாவித்தேன்" என்று பதிகம் பாடினார். பின்பு திருப்பேரூர் சென்று அங்கிருந்து பல திருப்பதிகள் போய்ப்பார்த்து சிவதரிசனைச்செய்து, திருக்கூடலையாற்றூருக்குப் போக எண்ணிப் போனார். அவ்வழியைவிட்டு திருமுதுகுன்றம் நோக்கிச் சென்றார்.

போகும் வழியில் சிவபிரான் ஓர் கிழபிராமண வடிவம் பூண்டு வர, அவரை வன்றொண்டர் வணங்கி திருமுதுகுன்றத்துக்குப் போகும் வழியைக் கேட்க பிராமணர் கூடலையாற்றூருக்குப்போகும் வழியிது என்று சொல்லிமறைந்தார் வந்தவர் சிவபிரான் என்று நினைத்து வன்தொண்டர், "அடிகள் இவ்வழிபோந்த அதிசயமறியேன்" என்ற பதிகம் பாடினார். திருக்கூடலையாற்றூருக்குப் போய் சுவாமியை வணங்கி திருமுதுகுன்றம் வந்து பதிகம் பாடி பன்னீராயிரம் பொன் பெற்றார். வன்தொண்டர், இப்பொன்னெல்லாம் திருவாரூரில் உள்ளவர் வியப்புறும் வண்ணம் அங்குபோய்

சேரவேண்டுமென்று சிவபெருமானை வேண்டினார்'' அப்போது "ஆரூரா! இப்பொன்முழுமையும் இம்மணிமுத்தா நதியில் போட்டுவிடு; திருவாரூரில் கமலாலயத்தில் போய் எடுத்துக்கொள்வாயாக'' என்று அசரீரி கேட்டது. இதைக் கேட்ட வன்தொண்டர் மிக மகிழ்ந்து பொன்னில் கொஞ்சம் மச்சம் வெட்டிக்கொண்டு திருவருள் ஆணைப்படி பொன்னை எல்லாம் மணிமுத்தா நதியில் போட்டுவிட்டார்.

பின்னர் தில்லைக்குச்சென்று "மடித்தாடும் அடிமைகள்'' என்ற பதிகம் பாடி, அங்கிருந்து பல திவ்விய க்ஷேத்திரங்கள் போய் கடவுளை வணங்கிக்கொண்டு, மீண்டும் திருவாரூர் வந்து சேர்ந்தார். தன்வீட்டையடைந்து பரவையாரைக்கண்டு 'பரவையே திருமுதுகுன்றத்திலே சிவபெருமான் அருளால் எனக்குப் பன்னீராயிரம் பொன் கிடைத்தது அதை அவர் ஆக்ஞைப்படி அங்கே மணிமுத்தா நதியில் போட்டுவிட்டேன், அப்பொன்னையெல்லாம் இங்கே கமலாலய திருக்குளத்திலே எடுத்துக்கொள்ளலாம்' என்றார். பரவையார் புன்னகைச்செய்து இது என்ன அதிசயம் என்றார். வன்தொண்டர் "பரவையே! நான் திருக்குளத்தில் பொன்னை எடுக்கிறேன் வா'' என்று பரவையாரை அழைத்துச்சென்று குளத்திலே இறங்கி பொன்னைத் தேடினார். அச்சமயம் சிவபெருமான் இவரைப் பாடுவிக்க எண்ணங்கொண்டு பொன்னை மறைத்துவிட்டார். பரவையார், "இது என்ன புதுமை அங்கே மணிமுத்தா நதியில் பொன்னை போட்டுவிட்டு இங்கே திருக்குளத்தில் தேடுவதா? இதுதான் அருள்போலும்'' என்று நகைத்தார். வன்தொண்டர் "பொன்செய்த மேனியனீர்'' என்ற பதிகம் பாடவும் பொன்திரள் அகப்பட்டது. ஆனால் பொன் முன்னதைவிட உரை தாழ்ந்திருந்ததால் வன்தொண்டர் வருந்தி சிவபெருமானைத் துதித்து பதிகம்பாட பொன் உரைக்குச் சரியாயிருந்தது. பொன்னைப் பரவையார் வீட்டுக்குஅனுப்பி விட்டு இருவரும் சிவபெருமானை வணங்கி வீடுபோய்ச் சேர்ந்தனர்.

சிலநாட்கள் சென்றபின் திருவாரூரைவிட்டு வடதிசையிலுள்ள பலஸ்தலங்களுக்கும் போய் கடவுளைத்தொழுது பாடி திருக்காவூருக்குச்சென்றார். செல்லும் வழியில் வன்தொண்டர், பசி தாகத்தால் வருந்துவதையுணர்ந்த சிவபெருமான், ஒரு வேதியராய் நின்று பந்தல் அமைத்து தண்ணீர் பொதிசோறு முதலியன வைத்திருந்தார்.

வன்தொண்டரும் அடியார்களும் அப்பந்தரின்கீழ் அமர்தலும், வேதியர் இவர்களுக்கு தண்ணீரும் பொதி சோறும் கொடுத்து களைப்பாற்றினார். பின்னர் நம்பியாரூரர் பேசிக்கொண்டே வேதியருடன் சற்றுகண்ணயர்ந்தார், அடியார்களும் உறங்கினர். பின் கண்விழித்து பார்க்க வேதியரும் பந்தலும் காணப்படவில்லை; அங்கு வேதியரா யிருந்தவர் சிவபெருமான் எனத்தெரிந்து "இத்தனையா மாற்றை யறிந்திலேன்" என்ற பதிகம் பாடி ஆலயத்துக்குச் சென்று கடவுளை வணங்கினார்.

அங்கிருந்து தொண்டைநாடு, திருக்கழுக்குன்றம், முதலியத் தலங்களை வணங்கிக்கொண்டு திருக்கச்சூரையடைந்தார், அங்கே சமையற்காரர் வராமையால் சாப்பாடு நேரந் தவறி பசியதிகரித்து ஆலக்கோயிலின் புறத்தில் மதிலோரமாய் நின்று கொண்டிருக்கையில், ஒரு வேதியர் வந்து "நீர் பசித்திருக்கிறீர் போலும், இங்கேயே இரும்" என்று சொல்லிப்போய் சற்று நேரத்துக்கெல்லாம்சோறும் கறியும் கொண்டுவந்து கொடுத்தார். வன்தொண்டர் அடியார்களுடன் உணவருந்திக்கொண்டிருக்கையில் வேதியர் மறைந்தனர். அவ்வேதியர் சிவபிரானென அறிந்து "முதுவாயோரி கதற" என்னும் திருப்பதிகம் பாடினார். அங்கிருந்து திருக்காஞ்சி, திருமேற்றளி, திருமாற்பேறு, திருக்காளத்தி, ஸ்ரீபருப்பதம் முதலியஸ்தலங்களை வணங்கி திருவொற்றியூர்வந்து எழுத்தறியும் பெருமானை துதிசெய்து கொண்டிருந்தார்.

அவ்வண் ஞாயிறு என்னும் ஊரில் "ஞாயிறு கிழார்" என ஒருவர் இருந்தார். அவருக்குச் செல்வ புதல்வியாக முன்னே திருக்கைலாயத்தில் சுந்தரரைக் காதலித்த இருவருள் ஒருவரான "அநிந்திதியார்" வந்து பிறந்திருந்தனர்; அவ்வம்மையை ஞாயிறு கிழார் வெகு அருமையோடு "சங்கிலியார்" என்று திருநாமமிட்டு வளர்த்து வந்தனர். இப்பெண் வழக்கமாய் நாள்தோறும் உமையவளை பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர். மணப்பருவம் வந்துற்றதால், பெற்றோர்கள் தக்க மாப்பிள்ளைக்குத் திருமணம் செய்விக்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தது சங்கிலியார் காதுக் கெட்டியதும், சங்கிலியார் மிகவும் ஆயாசமடைந்து "யானொரு சிவனடியார்க்கன்றோ உரியவள்" இவர்கள் என்னை யென்ன செய்வார்களோ! என்று மனம் கலங்கி மயக்கமடைந்து கீழே விழுந்தாள்; பெற்றோர்கள் திகிலடைந்து பனிநீர் தெளித்து ஜலங்கொடுத்து மயக்கந்தெளியச் செய்து "ஏன் அம்மா உனக்கென்ன நேர்ந்தது?" என்று அன்புடன் விசாரித்தனர்.

சங்கிலியார், நீங்கள் பேசிய பேச்சுகள் என் மனதைக் கலக்கிவிட்டது, யான் சிவனடியார் ஒருவருக்கே உரியவள் என்னை வேறிடங்களில் கொடுக்க தாங்கள் யோசிக்கவேண்டாம்; என்றுரைக்க, பெற்றோர் பயந்து நடுக்கமுற்று சங்கிலியார் சொன்னதை வெளியிடாமலிருந்தனர்.

இதிங்ஙனமிருக்க ஞாயிறு கிழாரின் மரபில் சேர்ந்த ஒருவன் சங்கிலியாரை மணஞ்செய்துக்கொள்ள நிச்சயம் செய்து வரும்படி சிலரை அனுப்பினான். அவர்கள் கிழவரிடத்தில் வந்து பெண்ணைக் கேட்டனர். ஞாயிறு கிழாரும் அவர் மனைவியாரும், வந்தவர்களை உபசரித்து இனிமையாகப் பேசி தற்சமயம் பெண்ணைக்கொடுக்கமுடியாதென்று சொல்லி அனுப்பிவிட்டனர்.

வந்தவர்கள் அவர்களூர் போய் சேருமுன் பெண் பேச அனுப்பினவன் இறந்துபோனான். இச்செய்தியைச் சங்கிலியார் பெற்றோர்கள் கேட்டு திகிலடைந்து இனி சங்கிலியாரை வீட்டில் வைத்திருந்தால் யாராவது வந்து கேட்க நேரும், அதனால் அவர்களுக்கு ஏதாவது விபத்துண்டாகும், அப்படி வரும் அபவாதங்களுக்கு நாம் ஆளாகக்கூடாது என்று பல்வாறு சிந்தித்து இனி சங்கிலியார் விருப்பத்தின்படிச் செய்வதே நல்லதென்று விஷயத்தை ஊராருக்கும் உறவினருக்கும் தெரிவித்து, திருவொற்றியூரில் பெரிய கோயிலுக்குச் சமீபத்தில் ஒரு கன்னிமாடம் கட்டிவைத்து அதிலே சங்கிலியாரை விட்டுவைத்தனர். சங்கிலியார் ஆலயத்தின் பூமண்டபத்தில் ஓர் திரை கட்டிக்கொண்டு அதன் மறப்பிலிருந்து நாள்தோறும் சிவபெருமானுக்குப் பூமாலை கட்டுவதும் சிவத்தொண்டு புரிவதுமான வேலைகளைச் செய்துக் கொண்டும் சிவபெருமானுக்குத் தொண்டு புரிந்துக்கொண்டுமிருந்தனர். இங்ஙனம் நிகழ்ந்துவருங்காலத்தில், நம்பியாரூரர் திருவொற்றியூரில் வந்து தங்கி தினந்தோறும் ஆலயத்துட் சென்று சுவாமியை வணங்குவது வழக்கமாயிருந்தார். ஒருநாள் ஆலயத்துக்குள் திருத்தொண்டு செய்யும் அடியார்களைத் தனித்தனியே கண்டு வணங்கிக்கொண்டு செல்லுகையில் பூமண்டபத்திலே சங்கிலியார் பூமாலை கட்டிக்கொண்டிருப்பதைக் கண்டார். ஆரூரரைக் கண்டதும் சங்கிலியார் தன் தோழிகளுடன் மறைவாகப் போய்விட்டனர். இங்கே பூர்வவிதி வந்து சூழ்ந்ததினால் வன்தொண்டர் தன் நிலைமை மறந்து சங்கிலியார்மேல் நாட்டமுற்று, அங்கிருந்தவர்களைப் பார்த்து ஆலயத்தின் பூமண்டபத்தில் பூக்கட்டிக்கொண்டிருந்தப் பெண் யார் என்று விசாரிக்க, அவர்கள் சங்கிலியாரின் வரலாற்றைப்பற்றி விவரமாகச் சொல்லினர்.

சங்கிலியார் கன்னிகா ஸ்திரியென்றும், தனியான கன்னி மாடத்தில் தோழிகளுடன் வசிக்கிறுளென்றும் சிவபிரானுக்குத் தொண்டு புரிகிறுளென்றும் அரிந்தபின் நம்பியாரூரருக்கு அவள்மேல் காதலதிகரிக்கத் தலைப்பட்டது. ஆலயத்துட் சென்று சிவபெருமானைத் துதித்து வணங்கி வெளியே வந்து ஆலய மதிலோரத்தில் உட்கார்ந்து சங்கிலியாரை நினைந்து நினைந்து உருகலானுர். அன்றிரவு சிவபிரான் வன்தொண்டர்முன் தோன்றி "ஆரூரா! கவலையை விடு சங்கிலியாரை யுனக்குக் கொடுக்கிறேம்" என்றருளினுர். வன்தொண்டர் கவலை நீங்கி சந்தோஷமடைந்தார். பின்பு சிவபெருமான் அன்றிரவே சங்கிலியார் கனவிற்றேன்றி "சங்கிலி! நம்பியாரூரன் நம்முடைய தொண்டனுவான் நம்மால் தடுத்தாட்கொள்ளப்பட்டவன் அவன் உன்னை மணஞ்செய்ய விரும்புகிருன் நீயதற்கு உடன்படுவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினுர். சங்கிலியார், "பெருமான் வாக்குக்கு எதிருண்டோ! இல்லை, ஆனுல் திருவருள் முன்னே அடியாள் முறையிட்டுக்கொள்ள ஒன்றிருக்கிறது" என்று வணங்கினுள். அதற்குச் சிவபெருமான், அம்முறையாது சொல்லுக எனலும் சங்கிலியார் நாணத்துடன், "வன்தொண்டர் திருவாரூரில் மகிழ்ச்சியுடன் வாழ்பவரென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றுள் சிவபெருமான் சங்கிலியாரின் நிலையையுணர்ந்து "சங்கிலி! வன்தொண்டன் உன்னை மணந்தபின் எப்போதும் பிரியாதிருக்கும்படி சபதஞ்செய்யச் செய்கிறேன்" என்று கூறிவிட்டு மீண்டும் வன்தொண்டனிடம் வந்து "ஆரூரா! நாம் சங்கிலியாரிடம் சென்று உன் எண்ணத்தைத் தெரிவித்தோம், அதற்கவள் ஓர் நிபந்தனையின் பேரில் இசைய சம்மதிக்கிருள்" அந்நிபந்தனை யாவது என் முன்னிலையில் உன்னை என்றும் பிரிந்து போகேன் என்று இன்றிரவே சபதஞ் செய்து கொடுக்க வேண்டுமாம் என்று சிவபெருமான் சொல்ல வன்தொண்டர் கேட்டு மனதில் ஆயாசமுற்று என் செய்வது, நாம் சங்கிலியாருக்கு அவ்வித சபதஞ் செய்து கொடுத்தால் என்றும் பிரியாமல் அவளுடனேயே இருக்க நேருமே, அப்படியிருந்தால் பலஸ்தலங்களுக்குச்சென்று எம்பெருமானைத் தொழுதுவர சாத்தியமாகாதே என்று கவலை மேலிட்டவராய் பலவாறு சிந்தித்தாரெனினும் முன்வினைப் பயனுய் சங்கிலியாரின்பாலுற்ற காதலை மீட்டுக்கொள்ள சக்தியற்றவராய் மனம் கசிந்து இதற்கோர் உபாயஞ்செய்ய கருதி சிவபெருமானை வணங்கி பெருமானே! நான் சங்கிலியாரோடு தங்கள் சந்நிதியில் சபதஞ்செய்ய வரும்போது தாங்கள் அங்கில்லாமல் திருமகிழின்கீழ் எழுந்தருளல் வேண்டும் என்று

பிரார்த்தித்தார். சிவபெருமான் அதற்குச்சம்மதித்தவராய் மீண்டும் சங்கிலியாரிடஞ்சென்று சங்கிலியே! வன்தொண்டன் உன் கருத்துக்கிசைந்தான் நீங்கள் இருவரும் ஆலயத்துக்குள் வந்து சபதஞ்செய்யுங்கால் இங்கே வேண்டாம் அந்த மகிழின்கீழிருந்து சபதஞ் செய்யென்று கேள் என்றருளி மறைந்துபோயினர்.

அதன்பின் வன்தொண்டர் சங்கிலியாரிடஞ் சென்று பேசவேண்டிய நிபந்தனைகளைச் சங்கிலியாரின் தோழியாரிடத்தில் பேசி முடித்துக்கொண்டு யாவரும் சிவசந்நிதிக்கெதிரில் வந்து நிற்கையில் சங்கிலியார் நாணத்தோடு ஒரு பக்கமாய் நின்றனர். அப்போது சென்ற காலங்களை நன்குணர்ந்த தோழிமார் இத்தகைய சபதங்களை இறைவன்முன் செய்தல் ஆகாது என்றனர். வன்தொண்டர் சிவபெருமானின் திருவிளையாட்டை யறியாதவராய், உங்களிஷ்டமான இடத்தில் செய்யலாமென்றார். அதற்குத் தோழிகள் அதோ அந்த மகிழின்கீழிருந்து சபதஞ் செய்யுங்கள் என்றனர். அதைக்கேட்ட வன்தொண்டர் மருண்டாரெனினும் அச்சமயத்துக்கேற்றவாறு தன்திகிலை வெலிக்குக் காட்டாமல் மகிழமரத்தை மும்முறை வலம்வந்து "நான் சங்கிலியாரை என்றும் பிரியேன்" என்று சபதஞ் செய்தார். அதன்பின் சங்கிலியார் எம்பெருமானாலேயே தடுத்தாட்கொள்ளப்பட்ட சுவாமிகளை அவ்வித சபதத்துக்கு நிற்பந்தித்தமைக்கு மனவருத்தமுற்றவளாய் தன் கன்னிமாடஞ் சேர்ந்தனர். இஃதற்றாக, அன்றிரவு சிவபெருமான் திருவொற்றியூரிலுள்ள தொண்டர்களனைவருக்கும் கனவிற்றோன்றி நம்பியாரூரருக்கும் சங்கிலியாருக்கும் திருமணஞ் செய்விக்கும்படி கட்டளையிட்டார். மறுநாள் யாவரும் அக்கனவைப்பற்றிப் பேசி திருவருளின் ஆக்ஞைப்படி திருமணம் நிறைவேற்றியபின் சங்கிலியாரும் வன்தொண்டரும் இனிது வாழ்ந்திருந்தனர்.

இங்ஙனம் நிகழ்ந்த சிலகாலத்துக்குப்பின் திருவாரூர் வசந்தோற்சவநாள் சமீபிக்கவே வன்தொண்டருக்கு திருவாரூர் ஞாபகம் வந்தது, எத்தனை நாள் என் திருவாரூர் பெரியக் கோயில் இறைவனைப் பிரிந்திருப்பேன் என்ற சிந்தனைகள் தன் மனதில் ஊசலாடிற்று; நினைக்குந்தோறும் திருவாரூர் பெருமானை வணங்கும் ஆவல் அதிகரிக்கத்தலைப்பட்டது. திருவாரூர் ஞாபகம் வாட்டியதால் அதனைச் சகிக்க முடியாமல் திருவாரூருக்குச்செல்ல புறப்பட்டு திருவொற்றியூர் எல்லையைக் கடந்ததும் தன் இரு கண்களும் பார்வையற்றுப்போயின. வன்தொண்டர் மிகவும் வருந்தி, மயங்கி,

இவ்வித வினைகளையும் வருத்தங்களையும் தீர்ப்பவர் சிவ நாதனையன்றி வேறுமுளரோ வெனத் திடங்கொண்டு "அழுக்குமெய்கோடின் திருவடியடைந்தேன்" என்ற திருப் பதிகம் பாடினார். இன்னும் கண் தெரிந்தபாடில்லை. "ஒழுக் கான் தனுக்கொடு மருந்துரையாய்" என்றும், "ஊன்றுக் கோல் எனக்காவதொன்றருளாய்" என்று பாடி துதித்தும் கண் தெரியவில்லை; இது நாம் செய்த சபதம் தவறியதால் நேர்ந்ததென்றுணர்ந்து வியசனமுற்றார். எஃதெவ்வாற்று யினும் திருவாரூர்க்குச்செல்ல வேண்டுமென்ற எண்ணம் வாட்டியதால் சிவபெருமானைத் துதித்துக்கொண்டே தட்டு தடுமாறி நடக்கலானார். அவ்வழிச் செல்வோர் சிலர் வழிக் காட்டிச் செல்ல திருமுல்லை வாயிலுக்கு வந்து சேர்ந்து 'சங்கிலிக்காக என்கண்கொண்டபண்ப' என்று பாடி துதித் தார். கண் தெரிந்தபாடில்லை, அங்கிருந்து சிலர் உதவியைக் கொண்டு திருவெண்பாக்கம் போய்ச் சேர்ந்து "திருக் கோயில் உள்ளீரோ" என்று முறையிடலும் சிவபெருமான் ஊன்றுகோல் ஒன்று கொடுத்து "உளோம் போகீர்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவ்வூன்றுகோலுதவியைக் கொண்டு திருவாலங்காட்டு எல்லைப்புறமாக வந்து அவ்வூர் காரைக்காலம்மையார் தன் தலையாலே வலஞ்செய்த ஸ்தல மாகையால் அதை மிதிக்கலாகாதென்று அவ்வூருக்குள் புகாமல் அங்கே 'பிழையுளன பொறுத்திடு' 'முத்தா முத்தி தரவல்ல' என்று பதிகங்களைப் பாடி துதிச்செய்து அங்கிரு ந்து ஊன்றுக்கோலின் ஆதரவைக்கொண்டு திருவருளைத் தொழுதுக்கொண்டே திருக்காஞ்சியையடைந்து திரு ஏகாம் பர நாதரை வணங்கி "பெருமானே என் கண்ணளித்தரு ளும்" என்று வேண்டலும் இடதுகண் தெரியலாயிற்று. ஏகாம்பர நாதரை ஒரு கண்ணால் தரிசித்து "எம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே" என்று பதிகம் பாடி னார். பின் காஞ்சிபுரத்தைவிட்டு திருஆமாத்தூரையடைந்து சிவனைத் துதித்து திருஅரத்துரைக்கு வந்து "எற்றே ஒரு கண்ணிலன் நின்னையல்லால் நெல்வாயில் அரத்துறை நின் மலனே" என்று பதிகம் பாடியபின் திருவாவடுதுறைக்குச் செல்லுங்கால் தன் தேகத்தில் ஓர்விதச் சொரிநோயுண்டாகி வருத்திற்று. அங்கே, "ஆரெனக்குறவு அமரர்களேறே" என்றும் "கண்ணிலேன் உடம்பில் அருநோயால் கருத்தழி ந்து உனக்கே பொறையானேன்" என்றும் பதிகம் பாடி திருத்துருத்திக்குப்போய் சிவசந்நதியில் நின்று அடியேன் மீதுள்ளப் பிணியை ஒழித்தருளல் வேண்டுமென பிரார்த் திக்க சிவபெருமான், "நம்பி! இக்கோயிலுக்கு வடபுறத்தி லுள்ள திருக்குளத்திலே மூழ்குவாயாக" என்றருளினார். நம்பி

யாரூரர் திருவருட் சொல்லின்படி திருக்குளத்திலே மூழ்கி யதும் சொரிநோய் நீங்கி தேகம் பரிசுத்தமானூர். அங்கே "என்னுடம்படும் பிணியிடர் கெடுத்தானை" என்று ஆண்ட வனைத் துதித்து பதிகம் பாடினூர்

பிறகு பலத் திருப்பதிகளை வணங்கிக்கொண்டு தன் ஊராகிய திருவாரூரைச் சமீபித்து அவ்வூரை ஒற்றைக்கண் ணால் பார்த்து மகிழ்ந்து ஊருக்குள் நுழைந்து "பரவையுண்ட மளி" என்னும் கோயிலுக்குப்போய் முதலில் தூவாயாரை வணங்கி 'தூவாயா' என்ற பதிகம்பாடி மற்றொரு கண்ணும் தெரிய அருளும்படி வேண்டினூர். அங்கிருந்து அர்த்த சாமத் திலே திருக்கோவிலுக்குவர அங்கிருந்த அடியார்கள் எதிர் சென்றழைத்து உபசரித்தனர். ஆரூரர், தியாகேசப் பெரு மானைக் கண்டு தொழுது வலக்கண்ணையும் பெறுமாறு "மீளாவடிமை உமக்கே ஆளாய்" என்ற பதிகத்தைப் பாடி னூர். அதில் "எற்றுக்கடிகேள் என்கண்கொண்டீர் நீரே பழிபட்டீர், மற்றைக்கண் தாராதொழுந்தால் வாழ்ந்து போதீரே" என்று பாடவும் "தியாகேஸர்" வலது கண்ணும் தெரியத் திருவருள் புரிந்தார். ஆரூரர், இரு கண்களாலும் தியாகேஸரைக் கண்டு வணங்கி தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்தார். மறுநாள் தன் வீட்டுக்குப்போக எண்ணங் கொண்டு தான் ஊருக்குள் வந்திருக்கும் சமாச்சாரத்தைப் பரவையாருக்கு முன்னதாக அறிவிக்கும்படி தன் தொண் டர்களில் சிலரை அனுப்ப அவர்கள் சென்று பரவையாரை வணங்கி சுவாமிகள் வந்திருக்கும் விஷயத்தைத் தெரிவித்த னர். இதைக் கேட்டதும் பரவையாருக்குக் கோபம் பொங்கி அவருக்கிங்கென்னவேலை யிருக்கிறது; அவரை இனிநான் பார்க்கவேமாட்டேன்; அவர் வந்தவழியே போகச் சொல் லுங்கள் என்று கடிந்து பேசி வந்தவர்களைத் திருப்பி அனு ப்பிவிட்டனர்.

அத்தொண்டர்கள் திரும்பிவந்து ஆரூரைக்கண்டு சுவா மிகளே! தாங்கள் நெடுநாட்களாக வெளியூர்களுக்குச் சென்றிருந்ததன்றியும் திருவொற்றியூரிலே சங்கிலியாரை மணஞ்செய்து அங்கே இருந்துவிட்டதாலும் பரவையாருக்கு அதிகமாய் மனத்தாங்கள் ஏற்பட்டிருக்கிறது தங்களைப் பார்க்கவே கூடாதென்று கடிந்து சொல்லிவிட்டனர் என்றூர் கள். வன்தொண்டர் வருத்தமுற்று இந்தப் பகைமையைத் தீர்க்கும்பொருட்டு கற்றச் சிலரை அனுப்பினூர். அவர்கள் சென்று பரவையாரைக் கண்டு மிருபக்குவமாகவும் தந்திர மாகவும் பேசி தன் கோபத்தை மாற்றப் பிரயத்தினப்பட்ட னர். பரவையார், ஒன்றுக்கும் இசையாமல் நம்பியாரூரைப்

பற்றிய பேச்சே பேசவேண்டாம், இனி அவரைப்பற்றி பேசுவீர்களானால் நான் உயிரை மாய்த்துக்கொள்ளுவேன் என்று பிடிவாதமாய்ப் பேசி அனுப்பிவிட்டனள்.

சென்றவர்கள் திரும்பிவந்து வன்தொண்டரிடம் நடந்த வற்றைச் சொல்லவும் அவர் மனவருத்தம் மேலிட்டவராய் பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்து அன்று நடு இரவில் யாவரும் தூஞ்சினபிறகு சிவபெருமானை தியானித்து "பெருமானே! இஃதென்னவினை பரவையாரின் கோபம் வெகு உக்கிரமாயிருக்கிறது, நீரே சென்று அவள் கோபத்தை மாற்ற அருள்புரியவேண்டும் இல்லையேல் நான் உயிர் பிழையேன் என்று பிரார்த்தித்தார். அப்போது சிவ பெருமான் எதிரில் தோன்றலும், ஐயனே! உமது திருவருளால் சங்கிலியாரை மணந்தேன் அதை அறிந்தப் பரவையார் வெகுண்டு யான் வீட்டுக்குள் வந்தால் உயிர்துறப்பதாகச் சொல்லுகிருள். இந்தப் பகைமையைத் தீர்க்கத் தங்களாலன்றி வேறொருவராலும் முடியாது என் ஆண்டவனே! யான் அடியன் என்பதும் நீர் என்னை ஆட்கொண்டதும் உண்மையானால் இன்றிரவே பரவையிடஞ்சென்றுஅவள் கோபத்தை மாற்ற வேண்டுமென்று தொழுதார். தன்தொண்டனின் குறையைத் தீர்க்க இசைந்த சிவபெருமான் ஓர் அர்ச்சகர் வேடம் பூண்டு தன் தேவகணங்களுடன் பரவையார் வீட்டுக்குச் சென்று கதவை தட்டி கூப்பிட்டார். உள்ளிருந்த பரவையார்; அர்ச்சகர் குரலைக்கேட்டதும் கதவைத் திறந்து வணங்கி யாது காரணமாக இந்நள்ளிருளில் இங்கு வந்தீர்களென்று விசாரித்தனர். அர்ச்சகர் நான் சொல்லுகிறபடி கேட்பதாயிருந்தால் சொல்லுகிறேனென்றுர். பரவையார் என்னால் முடியக்கூடிய வேலையாயிருந்தால் செய்யத் தடையில்லை என்றுள். அர்ச்சகர், "நம்பியாரூரன் இங்கு வந்திருக்கிறுன் உன்னிடம் வர நீ இசைதல் வேண்டும்" எனலும் பரவையார், "அர்ச்சகரே! நன்று சொன்னீர் அவர் என்னைப் பிரிந்து வெகுநாளானதுமன்றி திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்துக்கொண்டாரல்லவா? அவருக்கு என்னிடம் என்ன வேலையிருக்கிறது, சங்கிலியாரிடமே போகச் சொல்லும்" என்று கோபமாய் பேசினுர். பிறகு அர்ச்சகர் எத்தனையோ நயமான வார்த்தைகளால் பேசியும் பயன் படாமல் திரும்பிவந்து ஆரூரரிடம் விஷயத்தைச் சொன்னுர்.

வன்தொண்டர் விடாமல் "பெருமானே! உம்முடைய பேச்சையுமா பரவை கேட்கவில்லை! இதென்ன வியப்பு! நஞ்சையுண்டீர், முப்புரமெரித்தீர், காமனை எழுப்பினீர், எமனையுதைத்தீர், மார்க்கண்டனைப் பிழைப்பித்தீர், அவர்

களுக்கெல்லாம் உதவிச்செய்த பெருமானே! அவர்கள்பா லுள்ள அன்பு என்பாலில்லையா? என் அடிமை வேண்டாத நீர் அன்று ஏன் என்னைத் தடுத்தாட்கொண்டீர்? என்கவலை தீரும்பொருட்டு மீண்டும் ஒருமுறை பரவையிடஞ் சென்று சமாதானம் செய்தாலன்றி என் உயிர் நில்லாது" என்று முறையிட்டழுது கீழே விழுந்து புலம்பினார். "அடியேன் பயங்கெடுத்து இவ்வாறு பணிகொள்வதன்றோ கருணை" என்று போற்றினார். சிவபெருமான், வன்தொண்டருக்குத் தேறுதல் சொல்லி தன் சிவகணங்களுடன் மீண்டும் பரவை யார் வீட்டுக்குச்செல்ல பரவையார் அர்ச்சகரைப்பார்த்து சில அறிகுறிகளால் இவர் சிவபெருமானெனத் தெரிந்து, முன் வந்தவரும் இவரே, இவரை நான் மதியாமலும் எதிர் த்தும் பேசினேனே! என்ன அபவாதஞ் செய்துவிட்டேன் என்று வருந்தி தனக்குள்ளேயே மன்னிப்பு வேண்டிக் கொண்டு நடுக்கமுற்று அர்ச்சகரை வணங்கினார். சிவபெரு மான் "பரவையே! வன்தொண்டன் வேண்டுகோளுக்கிண ங்கி மீண்டும் உன்னிடம் வர நேர்ந்தது. அவன் உன்னிடம் வர நீ இசைதல் வேண்டும்" என்றார். பரவையார் "எம்பெரு மானே! அன்பர்பொருட்டு அர்ச்சகர் வேடம் பூண்டீர், அங்குமிங்கும் உழன்றீர், யான் இசையாது என்செய்வேன்" என்றார். ஈண்டு நிகழ்ந்த சமாதானத்தைப்பற்றி வன்தொண் டருக்குத் தெரிவித்து சிவபெருமான் மறைந்தார். வன்தொண் டர் எம்பெருமானின் திருவருளை வியந்து போற்றி புகழ்ந்து மனதிலே ஆராதித்தி வணங்கினார். அதன்பின் பரவையார், திருவருளின் ஆக்ஞைப்படி தன் மாளிகையை அலங்கரித்து ஆரூரர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கையில் ஆரூரர் தன் குழாங்களுடன் வீடுபோய்ச் சேரவும் பரவையார் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்து முன்போல் இரு வரும் ஆண்டவனை வழிப்பட்டு இன்பமாய் வாழ்ந்திருந்தனர்

பின்னர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் தினந்தோறும் சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு திருவாரூரில் வசித்திருக்கும்நாளில் திருப்பெருமங்கலம் என் னும் ஊரிலே, சிவபக்தரும், செல்வவந்தரும், அடியார்கள்பால் விசுவாசமுமுள்ளவரான ஏயர்கோன் கலிக்காமநாயனர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர், நம்பியாரூரர் சிவபெரு மானை பரவையார் வீட்டுக்குத் தூதாக அனுப்பிய விஷயம் அறிந்து மிகவும் மனஸ்தாபப்பட்டு, "என்ன! சிவனடியா னொருவன், ஒரு மாதைச் சமாதானப்படுத்த சிவபெருமா னையா தூதாக அனுப்புவது? இதுதகுமா! அடியார்ச் செய் கைக்கு இது பொருத்தமாகுமா?" என்று மிகவும் கோப மடைந்திருந்தார்.

இவ்வாறு ஏயர்கோன் கலிக்காமநாயனூர் தன்மீது சினங்கொண்டிருப்பதையறிந்த நம்பியாரூரர் மிகவும் மனக் கவலையடைந்திருந்தார். ஒருநாள் கலிக்காமருக்குவயிற்றிலே சூலைநோயுண்டாகித் தாங்க முடியாத வாதனைப் பட்டுக் கொண்டிருந்தார். அவர் மனைவியார், நாயனூர் படும் வாதனையைக்கண்டு சகிக்கமுடியாதவளாய் பல வைத்தியர் களைக்கொண்டு பார்த்தும் நோய் நீங்காமல் வருத்தியது. அன்றிரவு நாயனூரின் மனைவியார் சொப்பனத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகள் வந்ததுபோலவும் தன் கணவருக்குச் சூலைநோய் நீங்கியதைப்போலவும் கண்டு மறுநாள் அவ்விஷயத்தைத் தன் கணவரிடத்தில் சொல்லவும் கலிக்காமருக்கு இனியில்லாத கோபம் வந்து "சுந்தரராவது இங்கேவர வாவது. அவர் கையால் என் நோய்த் தீர்வதைப் பார்க்கினும் இறப்பதேமேல், அவர் என்னிடம் வரவேகூடாது அப்படி வந்தால் நான் உயிரை மாய்த்துக்கொள்வேன்" என்று சினந்திருந்தார்.

இருக்குங்காலத்தில் இவ்விஷயத்தை எம்பெருமான் சுந்தரருக்கறிவித்து "நீ போய் கலிக்காமனுக்கேற்பட்டுள்ள சூலை நோயைத் தீர்ப்பாயாக" என்றருளினூர். இறைவனுடைய உத்தரவின்படி கலிக்காமர் வீட்டுக்குப் புறப்பட்டு, தான் வருவதாக அறிவிக்கும்படி முன்னதாகவே ஒரு தொண்டனை அனுப்பினூர். அத்தொண்டன் கலிக்காமரிடஞ் சென்று "சுந்தரமூர்த்தி சுவாமிகள் தங்களைக்காண வருகிறூர்" என்று சொல்லித் திரும்பினூன். கலிக்காமநாயனூர், சுந்தரரைக் காணவே கூடாது, அவர் கையால் சௌக்கியப்படவுங்கூடாதென்றெண்ணி, அவர் வருவதற்குள் தன் உடைவாளையெடுத்து வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறந்து போனூர். அச்சமயத்தில் சுந்தரர், கலிக்காமர் வீட்டையடைந்து கலிக்காமர் இறந்துகிடப்பதைப் பார்த்து மிகவும் பரிதபித்து "இது நான் செய்தத் தவறினூல் ஏற்பட்டதல்லவா? என்னூல் ஒரு உத்தமனூன சிவபக்தன் இறந்தபின் நானிருந்து என்ன பயன்" என்று தானும் உயிர்த்துறக்க அங்கிருந்த உடைவாளைக் கையிலெடுத்தார். உடனே சிவபெருமான் திருவருளால் கலிக்காமர் உயிர்த்தெழுந்து சுந்தரர் கையைப் பிடித்துக்கொண்டார். இருவரும் தம்மை மறந்தவர்களாய் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு அதிக நட்பாயினர். பின் இருவரும் திருப்புன்கூருக்குப்போய் அங்கே சுந்தரர், "அந்தணாளனுன் அடைக்கலம்" என்ற திருப்பதிகம் பாடி, திருவாரூருக்குச் சென்றனர். அங்கே சுவாமிகளிடம் விடைப்பெற்றுக்கொண்டு கலிக்காமர் தன் ஊருக்குத் திரும்பிவிட்டார். அதன்பின் நம்பியாரூரர் திருநாகைக்குப்போய்

பதிகம்பாடி சிவபெருமான் அருளால் பொன், மணி, உடை, குதிரை முதலியன பெற்று திருவாரூர் வந்தார்.

சேரநாட்டிலே கொடுங்களூரிலே சேரமான் பெருமாளுயனுர் என்ற ஒருவர் அரசு செலுத்திவந்தார். அவர் வன்தொண்டர் பெருமையைச் சிவபெருமானுல் அறிந்து அவரைப்பார்க்க திருவாரூருக்கு வர; வன்தொண்டர் எதிர்கொண்டழைத்து இருவரும் ஒருவரையொருவர் அன்புடன் நேசித்தனர்.

அன்றுமுதல் வன்தொண்டருக்கு சேரமான் தோழர் எனப் பெயருண்டாயிற்று. இருவரும் கீழ்வேளூருக்குச் சென்று திருநாகைக்கு வந்து கடவுளை வணங்கி "பத்தூர் புக்கிரந்துண்டு" என்ற பதிகம்பாடி, அங்கிருந்து வேதாரணியத்தையடைந்து திருநாவுக்கரசராலும் திருஞானசம்பந்தராலும் திறத்தற்கும் அடைத்தற்கும் பதிகம் பாடப்பெற்ற திருவாயிலையணுகி ஆநந்தபாஷ்பஞ்சொரிய அந்நாயன்மார்களை நினைந்து வணங்கி வேதங்களால் அருச்சிக்கப்பட்ட கடவுளை நமஸ்கரித்து, மறைகாட்டுக்குவந்து, "திருக்கோடி குழகர்" ஸ்தலத்தையடைந்து "கடிதாய கடற்காற்று" என்ற பதிகம் பாடினுர்.

பின்னர் இருவரும் சோழநாட்டைக்கடந்து பாண்டிய நாட்டையடைந்து புத்தூரை வணங்கி மதுரைக்குச் சமீபித்த போது பாண்டியன் தன் மருமகனுகிய சோழ அரசனேடு வந்து எதிர்கொண்டழைத்தனர். சிலநாள் அங்கே இருந்து சுவாமி தரிசனஞ் செய்தனர். பிறகு அங்கிருந்து மூவேந்தரும் ஆரூரரும் திருப்பூவணம்போய் கடவுளை வணங்கி திருவாப்பநூர், திருவேடகம் முதலியஸ்தலங்களை வணங்கிக் கொண்டு திருப்பரங்குன்றத்தையடைந்து பரமசிவனுடைய திருவடிகளுக்குத் தொண்டுசெய்யும் அருமையைக்குறித்து "கோத்திட்டையும் கோவலும்" என்ற பதிகம் பாடினுர். அவ்விடத்தில் பாண்டியனும், சோழனும், வன்தொண்டரிடம் அனுமதிபெற்று மதுரைக்குத் திரும்பிவிட சுவாமிகள் பெருமாளுயனுரோடு திருக்குற்றாலம், குறும்பாலாதிருநெல்வேலி, இராமீச்சரம் முதலிய ஸ்தலங்களுக்குச்சென்று சுவாமி தரிசனஞ்செய்து ஈழமண்டலத்திலுள்ள திருக்கேதீச்சுரத்தை இராமீச்சுரத்திலிருந்தபடியே வணங்கி "நத்தார் புடைஞானன்" என்ற பதிகம் பாடினுர். அங்கிருந்து திருச்சுழியலிலேபோய் "ஊனுயுயிர் உகலாய்" என்று பதிகம் பாடி அங்கிருக்கையில் பரமேஸ்வரன் சொப்பனத்தில் தோன்றி "என் வாசஸ்தலம் கானப்பேரூர்" என்று சொல்லி மறைந்தார். பின்னர் வன்தொண்டரைச் சேரமான்பெரு

மான் நாயனூர் தன் ஊராகிய கொடுங்கலூருக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து திருவையாறு ஸ்தலத்துக்குப் புறப்பட்டு போகையில், வழியில் காவேரி நதி குறுக்கிட்டு பெருவெள்ளமாயிருந்தது. ஆரூரர், 'பரவும்பரி சொன்றறியேனன்' என்றெடுத்து ஐயாறுடையவடிகளே எனமுடித்துப் பதிகம் பாடவும் காவேரி நதி மேற்றிசையில் நீர் பளிங்குபோல் நிற்க கீழ்த்திசையில் மணல் வெளியாயிருந்தது. ஆற்றைத் தாண்டி ஆலயத்துட்சென்று சுவாமி தரிசனஞ்செய்து திரும்பினர். அங்கிருந்து இருவரும் தொண்டர்குழாத்துடன் சேர நாட்டையணுகி கடவுளை வணங்கியபின், சேரமான் பெருமான், வன்தொண்டரை யானைமீதேற்றி தான் பின்னே அமர்ந்து வெஞ்சாமரை விசிறிக்கொண்டே சென்று தருவஞ்சைகளத்தில் இறங்கி ஆரூரருக்கு இனிய மரியாதைகள் செய்து அரியாசனத்திலேற்றுவித்தனர். இருவரும் ஆஞ்ஞைக்களத்தப்பனை வழிபட்டு வந்தனர். இருக்கும் நாளில் வன்தொண்டருக்கு திருவாரூர் ஞாபகம் வந்து ஊருக்குச் செல்ல புறப்பட்டார். சேரமான் பெருமான், "அடிகளைப் பிரிந்து எங்ஙனம் உயிர்வாழ்வேன்" என்று பிரிவாற்றாமையால் பிரலாபித்து சுவாமிகளை இன்னுஞ் சிலநாள் இருக்கும்படி வேண்டினர். சுவாமிகள் சேரமான் பெருமானுக்குத் தக்க சமாதானத்தைச்சொல்லி தன்னூருக்குப் பிரயாணமானார். சேரமான்பெருமான் தன் மந்திரிகளையழைத்து "நமது பண்டாரத்திலுள்ள திரவியங்களை மூட்டைகளாகக் கட்டி ஆரூரரின் பரிசனங்களிடங்கொடுத்து முன்னதாக எடுத்துக்கொண்டு போகும்படி ஏற்பாடு செய்க" என்றாக்ஞாபித்தார். அமைச்சர்கள் அவ்வாறே செய்து முடித்தபின் ஆரூரர் யாவருக்கும் பிரயாணஞ் சொல்லிக்கொண்டு புறப்பட்டு திருமுருகன்பூண்டி வழி மார்க்கமாகச் செல்லுகையில் எம்பெருமான், தன் சிவகணங்களை அழைத்து வன்தொண்டன் கொண்டுபோகும் திரவிய மூட்டைகளைக் கவர்ந்து வரும்படிச்சொல்ல சிவகணங்கள் வடுகவேடுவராகி ஆரூரரின் பரிசனங்களை வழிமறித்து திரவியம்யாவும் அபகரித்துச்சென்றன. அப்போது சுந்தரர் திருமுருகன்பூண்டி ஆலயத்துட்சென்று "கொடுகவெஞ்சிலை வடுகவேடுவர்" என்ற திருப்பதிகம் பாடவும் பூதகணங்கள் தாம் திருடிச் சென்ற திரவிய மூட்டைகளைக் கோயிலின் வாயிலில் போட்டுவிட்டு போயின. அத்திரவியத்துடன் சுந்தரர் திருவாரூர் போய்ச் சேர்ந்தார். பின்னர் சிலநாட்கள் கழிந்தபின் வன்தொண்டருக்குச் சேரமான் பெருமானைப் பார்க்க ஞாபகம் வந்து, மீண்டும் கொடுங்கலூருக்குப் போகப் புறப்பட்டு புக்கொளியூர் வழியாகச் செல்லுகையில் அங்கே வழியில்,

ஒரு வீட்டுல் மங்கலவொலியும், மற்ரெரு வீட்டில் அழுகை ஒலியும் கேட்கவும், சுந்தரர் அங்குள்ளவர்களை அந்த வீட்டில் என்ன நடக்கிறது, இந்த வீட்டில் என்ன நடக்கிறது என்று விசாரித்தார். அவர்கள், "அடிகளே! சில தினங்களுக்குமுன் ஐந்து வயதுள்ள இரு சிறுவர்கள் மடுவிலே குளித்துக்கொண்டிருக்கையில் ஒருவனை முதலை விழுங்கி விட்டது, அதிலே தப்பி பிழைத்தவனுக்கு இன்று உபநயனஞ் செய்கிருர்கள். அந்த வீட்டிலே இறந்துபோன சிறுவனின் தாயார் தன் குமாரனின் ஞாபகம் வந்ததால் அழுகிருள் என்றனர். இதைக்கேட்ட ஆரூரர் இரக்கங்கொண்டு இருக்கையில், அழுதுக்கொண்டிருந்தவீட்டார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்திருக்கிருர் என்று கேள்வியுற்று தங்கள் புத்திரன் சோகத்தையும் மறந்து ஓடோடியும் வந்து சுவாமிகள் பாதங்களில் விழுந்து வணங்கி, "அடிகளே! தங்கள் பெருமையைக் கேள்வியுற்று நெடுநாட்களாகத் தங்களை நேரில் வந்து தரிசிக்க ஆவல் கொண்டிருந்தோம்; இன்று தங்களைக்கண்டு தரிசித்து வணங்கும் பாக்கியத்தைப் பெற்ரேம்" என்று அவர்களுக்கிருந்த குறைகளையெல்லாம் மறந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். இதைக்கண்ட வன்தொண்டர் "இவர்கள் நம்மைக்கண்ட மகிழ்ச்சியால் தம் புத்திர சோகத்தையும் மறந்தனரல்லவா இவர்கள் நம்மிடத்தில் கொண்டுள்ள அன்பே அன்பு. எம்பெருமான் அருளால் இத்தகைய அன்பர்களின் குறையைத் தீர்ப்பது நமது கடமையாகும்" என்று அவர்களை அழைத்துக்கொண்டு சிறுவனை முதலை விழுங்கிய இடைத்தையடைந்து "உரைப் பாருரையுகந்துள்க" என்ற பதிகம் பாடவும் முதலை கரையோரமாகவந்து தன் வாயிலிருந்து பிள்ளையை உயிரோடு வெளியே தள்ளிவிட்டது. பெற்ரேர்கள் பிள்ளையையெடுத்துக்கொண்டு நம்பியாரூரரை வணங்கி தொழுது இனியில்லாத ஆனந்தம் அடைந்தனர். சுவாமிகள் யாவருடனும் அவிநாசி ஆலயத்துட்சென்று கடவுளை வணங்கி அப்பிள்ளைக்கு உபநயனஞ் செய்வித்தார்.

இங்கு நடந்தவைகள் மலைநாட்டிலுள்ள கொடுங்களூர் சேரமான்பெருமான் தெரிந்து, வன்தொண்டர் தன் ஊருக்கு வருகிருர் என்றறிந்து, மிகவும் களிப்படைந்து சகல இராஜ மரியாதையுடன் எதிர்கொண்டுவந்து வழியில் வன்தொண்டரைச் சந்தித்து, மகிழ்ந்து ஒருவரையொருவர் தழுவிக்கொண்டனர். இருவரும் பல திருப்பதிகளுக்குச் சென்று இறைவனைத் தொழுதுக்கொண்டே மகோதையில் வந்து தங்கிஞர்கள்.

அங்கே இருக்கும் நாளையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கொஞ்சங் கொஞ்சமாக இப்பூலோக வாழ்க்கையில் வெறுப்புண்டாகத் தலைப்பட்டு பரமேஸ்வரரின் திருவடி நிழலை யடையவேண்டுமென்ற எண்ணங்கள் அவர் சிந்தனையில் குடிக்கொண்டன. இப்படி சிலதினங்கள் கழிந்தபின், ஒருநாள் சேரமான் ஸ்நானஞ்செய்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் வன்தொண்டர் தனியாக திருவஞ்சைக்களத்துக்குப்போய் சிவசந்நதியில் நின்று கடவுளைத் துதித்து இப்பிறவிக்கடலினின்றும் தன்னைக் கரையேற்றும்படி வேண்டினர். உருகி உருகி அழுதார். "தலைக்குத்தலை" என்ற பதிகம் பாடி துதித்தார். இவர் வேண்டுகோளுக்கிணங்கிய சிவபெருமான் தேவர்களை விளித்து வெள்ளை யானையுடன் சென்று சுந்தரரை அழைத்துவரும்படி கட்டளையிட்டார். தேவர்கள் சிவச்சொற்படிக்கு வெள்ளையானையுடன் வன்தொண்டரிடம் வந்து,சிவ ஆக்ஞையைத் தெரிவித்ததும் வன்தொண்டர் ஆனந்தம் மேலிட்டவராய் கடவுளைத் தொழுது தன்னை மறந்து கூத்தாடினர். தேவர்கள் வன்தொண்டரைத் திருக்கைலாயத்துக்குச்செல்ல வெள்ளையானையின்மீது ஏற்றினர்கள். சுந்தரர், தன் தோழராகிய சேரமான் பெருமானை நினைத்துக்கொண்டே ஏகினர். அச்சமயத்தில் சுந்தரருடைய நிலையைத்தெரிந்த சேரமான் பெருமான் உடனே அருகிலிருந்த ஓர் குதிரைமீதேறி திருவஞ்சைக்களத்துக்குப்போகவும் அங்கே சுந்தரர் வெள்ளையானையின்மீது ஆகாயத்தில் செல்லுவதைப் பார்த்தார். உடனே தானேறிய குதிரையின் செவியில் பஞ்சாச்சர மந்திரத்தை யோதினர். அக்குதிரை ஆகாயமார்க்கமாகக் கிளம்பி, சுந்தரர் ஏறிச்செல்லும் யானையை வலம்வந்து அதற்குமுன்னே போயிற்று. அங்கிருந்த படைவீரர்கள் சேரமான் பெருமான் போவதைக் கண்ணுக்கெட்டியதூரம் பார்த்துக்கொண்டே இருந்து அவர் கண்களுக்கு காணப்படாமல் மறைந்ததும் வீரர்கள் உடைவாள்களையெடுத்து தங்கள் தேகத்தைச் சிதைத்துக்கொண்டு ஸ்தூல சரீரத்தைவிட்டு சூக்கும சரீரம் பெற்று மன்னர்க்கு முன்னேபோய் நின்றனர். சுந்தரர், "தானெனைமுன்படைத்தான்" என்னும் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு கைலையின் வாயிலை அடைந்து, யானையை விட்டிறங்க சேரமான் பெருமானும் குதிரையை விட்டிறங்கி இருவரும் பல படிகளைக்கடந்துச் செல்லுகையில் திருவணுக்கன் திருவாயிலில் சேரமான் பெருமானுக்குத் தடை ஏற்பட்டது. சுந்தரர் உள்ளேபோய் சிவபெருமானைக் கண்டு வணங்கினர். சிவபெருமான் "ஆரூரா! வந்தனையோ!" என; வன்தொண்டர், "அடியேன் செய்த பிழையைப் பொறுத்து தடுத்தாட்

கொண்ட உமது கருணையே கருணை" என்று வணங்கி போற்றிச்செய்தார். பின்பு சேரமான்பெருமான் திருவணுக்கன் திருவாயிலிலே தடைப்பட்டு நின்றிருப்பதைச் சிவபிரானிடம் முறையிட, சிவபிரான், சேரமான் பெருமானை உள்ளே அழைத்துவர நந்தியெம்பெருமானுக்கு கட்டளையிட்டார். சேரமான்பெருமான் உள்நுழைந்து சிவதரிசனஞ் செய்து நமஸ்கரித்தார். சிவபெருமான் சேரமானைப்பார்த்து "சேரனே நீ யாதுகாரியமாக இங்கு வந்தாய்" என்று கேட்டார். சேரமான், "ஆண்டவனே! சுந்தரர் யானையின்மீது போவதை பார்த்தேன் அவரை வணங்கியவண்ணமாகவே இங்கு வந்து சேர்ந்தேன், தேவரீரது கருணையே என்னையிங்குக் கொண்டுவந்தது; திருமுன் ஒரு விண்ணப்பஞ் செய்துக்கொள்ள விரும்புகிறேன்" என்று வேண்டினார். "சொல்லுக" என்று சிவபிரான் சொல்ல, சேரமான்பெருமான், "ஐயனே! எம்பெருமான்பேரில் ஞானஉலா ஒன்று பாடியுள்ளேன் அதைக் கேட்டருளல்வேண்டும்" என்று வேண்ட, சிவபிரான் அவர் வேண்டுதலுக்கிசைந்து அநுமதித்தர சேரமான் திருவுலாவைச் செப்பினார்.

அதைக்கேட்ட சிவபெருமான் "ஆரூரனாகிய ஆலால சுந்தரனும் நீயும் நம் கணங்களுக்கு தலைமை பூண்டு இருங்கள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். இருவரும் சிவபெருமானை வணங்கினார்கள். வன்தொண்டர் தான் ஏற்கனவே செய்துவந்த திருத்தொண்டைச் செய்து வந்தார்.

உமையம்மையார் திருவருளால் பரவையார் கமலினியாகவும் சங்கிலியார் அநிந்திதையாகவும் மறுபடியும் கைலாயத்தில் வந்து சேர்ந்து தமது பழைய திருத்தொண்டைச் செய்யலானார்கள்.

வன்தொண்டர் தாம் வழியில்செய்த திருப்பதிகங்களை வருணனிடம் கொடுக்க அவர் அதை திருவஞ்சைக்களத்தில் கொண்டுவந்து வெளியிட்டார். சேரமான்பெருமான் அருளிய திருவுலாவை திருக்கைலாயத்திலே கேட்டுக்கொண்டிருந்த மாசாத்தாவானவர் அதைத் திருப்பிடவூரிலே வெளிப்படுத்தினார்.

திருக்கைலாயமலையின் அடிவாரத்தில் உபமன்னிய முனிவரின் ஆசிரமம் ஒன்று உண்டு; அவருடன் பல சீஷர்கள் இருந்தார்கள். ஓர்நாள் ஆயிரம் சூரியர்கள் பிரகாசிப்பதுபோல் ஓர் பெரு வெளிச்சம் உண்டானது. யாவரும் திடுக்கிட்டு இது என்னவென்று அதிசயித்தனர். உபமன்னிய முனிவர் தன்னிருகரங்களையும் குவித்து கண்ணீர்

பொழிய விரைந்து சென்றார். அருகிலிருந்த முனிசிஷர்கள் முனிசிரேஷ்டரே பிறப்பிறப்பில்லாச் சிவபெருமானையன்றி மற்றெவரையும் தொழாத தாங்கள் இப்போது கைகுவித்து எழுந்துபோன காரணமென்ன!" என்று வினவினர்.

உபமன்னிய முனிவர் "இப்பேரொளிப்பிழம்பாய் எழுந்தருளுபவர் நம்பியாரூரர்; அவரே இறைவர்; இறைவரே அவர்; அவரை நாம் வணங்கும் தகுதி உடையோம்" என்று சொல்லினர். முனி சீஷர்கள் அவர் பெருமையைக் கேட்க விரும்புகிறோம் தாங்கள் சொல்லவேண்டும் என்று வேண்ட உபமன்னிய முனிவர் சுந்தரர் கைலாயத்திலிருந்து பூவுலகத்தில் அவதரித்து நடத்திய பெருமைகள் யாவும் சவிஸ்த்தாரமாகச் சொன்னார். அதைக்கேட்ட சிஷியர்களும் மற்றோர்களும் சந்தோஷமடைந்து எம்பெருமானின் விபூதி பிரசாதம் பெற்றதேபோல் மகிழ்ந்து அரோகத்திடக்காத்திரமும் சிந்தித மனோரத சித்திகளையும் பெற்று இனிது வாழ்கின்றனர்.

ஓம் திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகளின்
# தேவாரப் பதிகங்கள்

---

### திருவெண்ணெய்நல்லூர்.

பண்—இந்தளம்

பித்தாபிறைசூடீபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

நாயேன்பலநாளுநினைப்பின்றிமனத்துன்னைப்
பேயாய்த்திரிந்தெய்த்தேன்பெறலாகாவருள்பெற்றேன்
வேயார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆயாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

மன்னேமறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னைப்
பொன்னேமணிதானேவயிரமேபொருதுந்தி
மின்னார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அன்னேயுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

முடியேனினிப்பிறவேன்பெறின்மூவேன்பெற்றமூர்தீ
கொடியேன்பலபொய்யேயுரைப்பேனைக்குறிகொண்ணீ
செடியார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அடிகேளுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

பாதம்பணிவார்கள்பெறுபண்டம்மதுபணியாய்
ஆதன்பொருளானேனறிவில்லேனருளாளா
தாதார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆதீயுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

தண்ணார்மதிசூடீதழல்போலுந்திருமேனீ
மண்ணார்புரமூன்றுமெரியுண்ணநகைசெய்தாய்
எண்ணார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அண்ணாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

ஊனாயுயிரானாயுடலானாயுலகானாய்
வானாய்நிலனானாய்கடலானாய்மலையானாய்
தேனார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆனாயுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

ஏற்றார்புரமூன்றுமெரியுண்ணச்சிலைதொட்டாய்
தேற்றாதனசொல்லித்திரிவேனோசெக்கர்வானீர்
ஏற்றாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

மழுவாள்வலனேந்தீமறையோதீமங்கைபங்கா
தொழுவாரவர்துயராயினதீர்த்தலுனதொழிலே
செழுவார்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
அழகாவுனக்காளாயினியல்லேனெனலாமே. (டுறையுள்

காரூர்புனலெய்திக்கரைகல்லித்திரைக்கையாற்
பாரூர்புகழெய்தித்திகழ்பன்மாமணியுந்திச்
சீரூர்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்
ஆரூரனெம்பெருமாற்காளல்லேனெனலாமே. (டுறையுள்

திருச்சிற்றம்பலம்.

தடுத்து ஆட்கொள்ளப்பட்டபோது அருளியது.

## திருத்துறையூர்த்தேவாரம் பண்-தக்கராகம்.

மலையாரருவித்திரண்மாமணியுந்திக்
குலையாரக்கொணர்ந்தெற்றியோர்பெண்ணைவடபாற்
கலையாரல்குற்கன்னியராடுந்துறையூர்த்
தலைவாவுனைவேண்டிக்கொள்வேன்றவநெறியே.

செய்யார்கமலமலர்நாவலூர்மன்னன்
கையாற்றொழுதேத்தப்படுந்துறையூர்மேற்
பொய்யாத்தமிழூரனுரைத்தனவல்லார்
மெய்யேபெறுவார்கள்தவநெறிதானே.

திருச்சிற்றம்பலம்.

## திருவதிகை வீரட்டானம்.

தேவாரம் பண்—கொல்லிக்கௌவாணம்.

தம்மானையறியாதசாதியாருளரேசடைமேற்கொள்
பிறையானைவிடைமேற்கொள்விகிர்தன்
கைம்மாவினுரியானைக்கரிகாட்டிலாட
லுடையானைவிடையானைக்கறைகொண்டகண்டத்
தெம்மான்றனடிக்கொண்டென்முடிமேல்வைத்திடுமென்னு
மாசையால்வாழ்கின்றவறிவிலாநாயேன்
எம்மானையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

என்பினையேகலனாகவணிந்தானையெங்க
ளெருதேறும்பெருமானையிசைஞானிசிறுவன்
வன்பனையவளர்பொழில்சூழ்வயனாவலூர்க்கோன்
வன்றொண்டனாரூரன்மதியாதுசொன்ன
அன்பனையாவர்க்குமறியவரியவத்தர்
பெருமானையதிகைமாநகருள்வாழ்பவனை
என்பொன்னையெறிகெடிலவடவீரட்டானத்
துறைவானையிறைபோதுமிகழ்வன்போலியானே.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கழுமலத்தேவாரம் பண்-தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

சாதலும்பிறத்தலுந்தவிர்த்தெனைவகுத்துத்
தன்னருள்தந்தவெந்தலைவனைமலையின்
மாதினைமதித்தங்கோர்பால்கொண்டமணியை
வருபுனல்சடையிடைவைத்தவெம்மானை
யேதிலென்மனத்துக்கோரிரும்புண்டநீரை
யெண்வகையொருவனையெங்கள்பிரானைக்
காதில்வெண்குழையனைக்கடல்கொளமிதந்த
கழுமலவளநகர்க்கண்டுகொண்டேனே.

செழுமலர்க்கொன்றையுங்கூவிளமலரும்
விரவியசடைமுடியடிகளைநினைந்திட்
டழுமலர்க்கண்ணிணையடியவர்க்கல்லா
லறிவரிதவன்றிருவடியிணையிரண்டுங்
கழுமலவளநகர்க்கண்டுகொண்டூரன்
சடையன்றன் காதலன்பாடியபத்துந்
தொழுமலரெடுத்தகையடியவர்தம்மைத்
துன்பமுமிடும்பையுஞ்சூழ்கிலாவே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தொண்டத்தொகை.

பண் கொல்லிக்கௌவாணம்.

தில்லைவா ழந்தணர்த மடியார்க்கு மடியேன்
றிருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத வியற்பகைக்கு மடியே
னிளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தா ரமர்நீதிக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

இலைமலிந்த வேனம்பி யெறிபத்தர்க் கடியே
னேனாதி நாதன்ற னடியார்க்கு மடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்ற னடியார்க்கு மடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாற
னெஞ்சாத வாட்டாய னடியார்க்கு மடியேன்
அலைமலிந்த புனல்மங்கை யானயர்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

மும்மையா லுலகாண்ட மூர்த்திக்கு மடியேன்
முருகனுக்கு முருத்திர பசுபதிக்கு மடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கு மடியேன்
றிருக்குறிப்புத் தொண்டர்த மடியார்க்கு மடியேன்

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
வம்மையா னடித்தண்டிப் பெருமானுக் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கு மடியேன்
பெருநம்பி குலச்சிறைத னடியார்க்கு மடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கு மடியேன்
ஒருநம்பி யப்பூதி யடியார்க்கு மடியே
னொலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி யடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியே
னேயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியே
னாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

பொய்யடிமை யில்லாத புலவர்க்கு மடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்சோழற் கடியேன்
மெய்யடியா னரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடனாகை யதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கு மடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

கறைக்கண்டன் கழலடியே காப்புக்கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கு மடியேன்
நிறைக்கொண்ட சிந்தையா னெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்
துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன்
நறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

கடல்சூழ்ந்த வுலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கு மடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி யிடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்கு மடியேன்.
புடைசூழ்ந்த புலியதள்மே லரவாட வாடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கு மடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்க ளெல்லார்க்கு மடியேன்
பரமனையே பாடுவா ரடியார்க்கு மடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கு மடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிச்சார்ந்தா ரடியார்க்கு மடியே
னாரூர னாரூரி லம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவ னின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கு நேசனுக்கு மடியேன்
தென்னவனா யுலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனா மரனடியே யடைந்திட்ட சடைய
னிசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனா மாரூர னடிமைகேட் டுவப்பா
ராரூரி லம்மானுக் கன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருக்கோளிலி.

பண்—நட்டராகம்

நீளநினைந் தடியே னுமைநித்தலுங் கைதொழுவேன்
வாளனகண் மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலியெம்பெருமான் குண்டை யூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னாளிலையெம்பெருமா னவை யட்டித்தரப்பணியே.

அரக்கன்முடிகரங்க ளடர்த்திட்ட வெம்மாதிபிரான்
பரக்குமரவல்குலாள் பரவையவள் வாடுகின்றாள்
குரக்கினங்கள் குதிகொள் குண்டையூர்ச்சிலநெல்லுப்பெற்றே
னிரக்கமதாயடியேற் கவை யிட்டுத்தரப்பணியே.

பண்டையமால்பிரமன் பறந்து மிடந்தும்மயர்ந்துங்
கண்டிலராயவர்கள் கழல் காண்பரிதாயபிரான்
தெண்டிரை நீர்வயல்சூழ் திருக்கோளிலியெம்பெருமா
னண்டமதாயவனே யவை யட்டித்தரப்பணியே.

கொல்லை வளம்புறவிற் றிருக்கோளிலிமேயவனை
நல்லவர் தாம்பரவுந் திருநாவலவூரனவ
னெல்லிடவாட்கள்வேண்டி நினைந்தேத்திய பத்தும்வல்லார்
அல்லல்களைந் துலகி னண்ட வானுலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்
நெல்மலை திருவாரூருக்கு வரப்பெற்றது.

---

## திருநாட்டியத்தான்குடி.

பண்—தக்கராகம்.

பூணாணாவதோ ரரவங்கண்டஞ்சேன்
புறங்காட்டாடல் கண்டிகழேன்
பேணீராகிலும் பெருமையையுணர்வேன்
பிறவேனாகிலு மறவேன்
காணீராகிலுங்காண்பனென் மனத்தாற்
கருதீராகிலுங் கருதி
நானேலும்படி பாடுதலொழியே
னாட்டியத்தான் குடிநம்பீ.

கல்லேனல்லே னின்புகழடிமை
கல்லாதேபல கற்றேன்
னில்லேனல்லே னின்வழிநின்றார்
தம்முடை நீதியைநினைய
வல்லேனல்லேன் பொன்னடிபரவ
மாட்டேன் மறுமையைநினைய
நல்லேனல்லே னானுமக்கல்லா
னாட்டியத்தான் குடிநம்பீ.

கூடாமன்னரைக் கூட்டத்துவென்ற
கொடிறன் கோட்புலிசென்னி
நாடார்தொல்புகழ் நாட்டியத்தான்குடி
நம்பியை நாளுமறவாச்
சேடார்பூங்குழற் சிங்கடியப்பன்
றிருவா ரூரனுரைத்த
பாடீராகிலும் பாடுமின்றொண்டீர்
பாடநும் பாவம்பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

சிங்கடியார், வனப்பகையார் இருவரையும் புத்திரி-
களாகக் கொண்டருளியது.

---

## திருப்புகலூர்.

பண்—கொல்லி.

தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப்பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ்சோறுங்கூறையு
மேத்தலாமிடர்கெடலுமாம்
அம்மையேசிவலோகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

மிடுக்கிலாதானை வீமனேவிறல்
விசயனேவில்லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப்பாரியேயென்று
கூறினுங்கொடுப்பாரிலைப்
பொடிக்கொண்மேனியெம்புண்ணியன்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அடுக்குமேலமருலகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

காணியேற்பெரிதுடையனே
கற்றுநல்லனேசுற்றநன்கிளை
பேணியேவிருந்தோம்புமேயென்று
பேசினுங்கொடுப்பாரிலைப்
பூணிபூண்டுழல்புட்சிலம்புந்தண்
புகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆணியாயமருலகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

நரைகள்போந்துமெய்தளர்ந்துமூத்துட
னடுங்கிநிற்குமிக்கிழவனை
வரைகள்போற்றிரடோளனேயென்று
வாழ்த்தினுங்கொடுப்பாரிலை
புரைவெள்ளேறுடைப்புண்ணியன்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அரையனாயமருலகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

வஞ்சநெஞ்சனைமாசழக்கனைப்பாவியை
வழக்கில்லியைப்
பஞ்சதுட்டனைச்சாதுவேயென்று
பாடினுங்கொடுப்பாரிலைப்
பொன்செய்செஞ்சடைப்புண்ணியன்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
நெஞ்சினோயறுத்துஞ்சுபோவதற்
கியாதுமையுறவில்லையே.

நலமிலாதானைநல்லனேயென்று
நரைத்தமாந்தரையிளையனேயென்றுங்
குலமிலாதானைக்குலவனேயென்று
கூறினுங்கொடுப்பாரில்லைப்
புலமெலாம்வெறிகமழும்பூம்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அலமராதமருலகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

நோயனைத்தடந்தோளனேயென்று
நொய்யமாந்தரைவிழுமிய
தாயன்றேபுலவோர்க்கெலாமென்று
சாற்றினுங்கொடுப்பாரில்லைப்
போயுழன்றுகண்குழியாதேயெந்தை
புகலூர்பாடுமின்புலவீர்காள்
ஆயமின்றிப்போயண்டமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

எள்விழுந்திடம்பார்க்குமாகிலு
மீக்குமீகிலனாகிலும்
வள்ளலேயெங்கள்மைந்தனேயென்று
வாழ்த்தினுங்கொடுப்பாரில்லைப்
புள்ளெலாஞ்சென்றுசேரும்பூம்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அள்ளற்பட்டழுந்தாதுபோவதற்
கியாதுமையுறவில்லையே.

கற்றிலாதானைக்கற்றுநல்லனே
காமதேவனையொக்குமே
முற்றிலாதானைமுற்றனேயென்று
மொழியினுங்கொடுப்பாரில்லைப்
பொத்திலாந்தைகள் பாட்டறாப்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
அத்தனாயமருலகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

தையலாருக்கோர்காமனேயென்றுஞ்
சாலநல்வழக்குடையனே
கையுலாவியவேலனேயென்று
கழறினுங்கொடுப்பாரிலைப்
பொய்கைவாவியின்மேதிபாய்
புகலூரைப்பாடுமின்புலவீர்காள்
ஐயனாரமருலகமாள்வதற்
கியாதுமையுறவில்லையே.

செறுவினிற்செழுங்கமலமோங்கு
தென்புகலூர்மேவியசெல்வனை
நறவம்பூம்பொழினாவலூரன்
வனப்பகையப்பன்சடையன்றன்
சிறுவன்வன்றொண்டனூரன்
பாடியபாடல்பத்திவைவல்லவர்
அறவனாரடிசென்றுசேர்வதற்
கியாதுமையுறவில்லையே.

## திருமழபாடி பண்—நட்டராகம்.

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே.

கண்ணா யேழுலகுங் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணா ரின்தமிழாய் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யண்ணா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே.

ஏரார் முப்புரமு மெரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோ னாரூரனுரைத்த தமிழ்
பாரோ ரேத்தவல்லார்ப் பரலோகத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

மழபாடிக்கு வரமறந்தனையோ என்ற சொற்பனஞ் சாதிக்க அங்குசென்று பாடியது.

## திருப்பாச்சிலாச்சிராமம் பண் - தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

வைத்தனன் றனக்கே தலையு மென்னாவும்
நெஞ்சமும் வஞ்ச மொன்றின்றி
உய்த்தனன் றனக்கே திருவடிக் கடிமை
யுரைத்தக் காலுவ மனேயொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு
பாச்சிலாச்சி ராமத் தெம்பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகி
லிவரலா தில்லை யோபிரானார்

ஏசின வல்ல விகழ்ந்தன வல்லவெம்
பெருமா னென் றெப்போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத்
தடிகளையடி தொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினா னினைவான்
வளவய னாவ லாரூரன்
பேசின பேச்சைப் பொறுத் திலராகி
லிவரலா தில்லை யோபிரானார்

திருச்சிற்றம்பலம்.

பொற்குவை பெற்றது.

## திருப்பாண்டிக்கொடுமுடி.

பண்—பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மற்றுப் பற்றெனக் கின்றிநின் றிருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப் பிற
வாததன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

இட்டனும்மடி யேத்துவா ரிகழ்ந்
திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்ற லார்கரு
தேன்கிளர் புனற்காவிரி
வட்டவா சிகை கொண்டடி தொழு
தேத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

ஓவுநா ளுணர் வழியு நாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநா ளிவை யென்ற லார்கரு
தேன்கிளர் புனற்காவிரிப்
பாவு தன்புனல் வந்திழி பரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே

எல்லை யில்புக ழெம்பிரா னெந்தை
தம்பிரானென் பொன்மாமணி
கல்லையுந்தி வளம் பொழிந் திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர் தொழு தேத்துஞ் சீர்க்கரை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

அஞ்சி னார்க்கா ணதியென் றடி
யேனுநான் மிகவஞ்சினேன்
அஞ்சலென் றடித் தொண்டனேற் கரு
ளல்கிளுய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவை மார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

ஏடுவா னிளந் திங்கள் சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம் பதரைக் கசைத்த
வழகனே யந்தண்காவிரி

பாடு தண்புனல் வந்திழி பரஞ்
சோதி பாண்டிக்கொடுமுடிச்
சேடனே யுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

விரும்பி நின்மலர் பாதமே நினைந்
தேன்வினைகளும் விண்டனன்
நெருங்கி வண் பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனே யுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே

செம்பொ னேர்சடை யாய்திரி புரந்
தீயெழிச்சிலை கோலினாய்
வம்புலாங் குழலாளைப் பாகம
மர்ந்துகாவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவமாமயி
லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனே யுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே

சாரணன் றந்தை யெம்பிரா னெந்தை
தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெ ணாயிர கோடி தேவர்
பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன் பிற மன்னெழுங் கறை
யூறிர்பாண்டிக் கொடுமுடிக்
காரணா வுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.

கோணிய பிறை சூடியைக் கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணிய பெரு மானைப் பிஞ்சகப்
பித்தனைப் பிறபில்லியைப்
பாணு லாவரி வண்டறை கொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத் தொண்ட னூரன் சொல்லிவை
சொல்லுவார்க் கில்லைத் துன்பமே

திருச்சிற்றம்பலம்.

# திருக்கற்குடி.

பண்—நட்டராகம்.

விடையாருங் கொடியாய் வெறியார் மலர்க்கொன்றையினாய்
படையார் வெண்மழுவாய் பரமாய பரம்பரனே
கடியார்பூம்பொழில் சூழ்திருக் கற்குடி மன்னிநின்ற
அடிகேளெம் பெருமா னடியேனையு மஞ்சலென்னே.

அலையார் தண்புனல்சூழ்ந் தழகாகி விழவமருங்
கலையார் மாதவர்சேர் திருக்கற்குடிக் கற்பகத்தைச்
சிலையார் வாணுதலாள் நல்லசிங்கடி யப்பனுரை
விலையார் மாலைவல்லார் வியன் மூவுலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கூடலையாற்றூர்.

பண்—புறநீர்மை.

வடிவுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழலுமை யோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரி
லடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவன் மங்கை யொடும்முடனே
கொத்தலரும் பொழில்சூழ் கூடலை யாற்றூரி
லத்தனிவ் வழிபோந்த வதிசய மறியேனே.

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை யதிசய மிதுவென்று
நாடியவின் றமிழால் நாவல வூரன்சொற்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்.

## திருமுதுகுன்றம்.

பண்—கொல்லிக்கௌவாணம்.

நஞ்சியிடை யின்றுநாளை யென்றும்மை நச்சுவார்
துஞ்சியிட்டாற் பின்னைச்செய்வதென்னடிகேள் சொலீர்
பஞ்சியிடப் புற்றில்கீறு மோபணி யீரருள்
முஞ்சியிடைச் சங்கமார்க் குஞ்சீர் முதுகுன்றரே

முத்திமுத்தாறு வலஞ்செய்யும் முது குன்றரைப்
பித்தனைப் பானடித் தொண்டனூரன் பிதற்றிவை
தத்துவ ஞானிக ளாகினார் தடுமாறில்லார்
எத்த வத்தோர்களு மேத்துவார்க் கிடரில்லையே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கருப்பறியலூர்.

பண்—நட்டராகம்.

திருச்சிற்றம்பலம்.

சிம்மாந்துசிம்புளித்துச் சிந்தையினில்
வைத்துகந்து திறம்பாவண்ணங்
கைம்மாவினுரிவை போர்த்துமை வெருவக்
கண்டானைக் கருப்பறியலூர்க்
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட
மயிலாடுங்கொ குடிக்கோயி
லெம்மானை மனத்தினால் நினைந்த
போதவர் நமக்கினியவாறே.

நீற்றுரு மேனியராய் நினைவார்தம்
முள்ளத்தே நிறைந்துதோன்றுங்
காற்றானைத் தீயானைக் கதிரானை
மதியானைக் கருப்பறியலூர்க்
கூற்றானைக்கூற்றுதைத்துக்கோல்வளையா
ளவளோடுங் கொகுடிக்கோயி
லேற்றானைமனத்தினால் நினைந்த
போதவர் நமக்கினியவாறே

பறையாத வல்வினைகள் பறந்தொழியப்
பன்னாளும்பாடியாடிக்
கறையார்ந்த கண்டத்தனெண்டோளன்
முக்கண்ணன்கருப்பறியலூர்க்
குறையாத மறைநாவர் குற்றேவ
லொழியாத கொகுடிக்கோயி
லுறைவானை மனத்தினால் னினைந்த
போதவர் நமக்கினியவாறே

கலைமலிந்த தென்புலவர் கற்றோர் தம்மிடர்
தீர்க்குங் கருப்பறியலூர்க்
குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழுகும்
பூஞ்சோலைக் கொகுடிக்கோயி
லிலைமலிந்த மழுவானை மனத்தினா
லன்புசெய் தின்பமெய்தி
மலைமலிந் தோளாரூரன் வனப்பகை
யப்பனுரைத்தவண்டமிழ்களே.

திருச்சிற்றம்பலம்.

## ஊர்த்தொகை   பண் - பழம்பஞ்சுரம்.

காட்டூர்க்கடலே கடம்பூர் மலையே கானப்பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே யழுந்தூ ரரசே கொழுநற்கொல்லேறே
பாட்டூர்பலரும் பரவப்படுவாய் பனங்காட்டூரானே
மாட்டூரறவா மறவாதுன்னைப் பாடப் பணியாயே.

புலியூர் சிற்றம்பலத்தாய் புகலூர்ப் போதாமூதூரா
பொலிசேர் புரமூன்றெரியச் செற்றபுரிபுன் சடையானே
வலிசேரரக் கன்றடக் கையைஞ்ஞான் கடர்த்தமதிசூடீ
கலிசேர் புறவிற் கடவூராளீ காணவருளாயே.

கைம்மாவுரிவை யம்மான்காக்கும் பலவூர் கருத்துன்னி
கைம்மாந்தடங்கண் மதுரமன்ன மொழியாள் மடச்சிங்கடி
தம்மானூரன் சடையன் சிறுவனடியன் றமிழ்மாலை
செம்மாந்திருந்து திருவாய் திறப்பார் சிவலோகத்தாரே.

திருச்சிற்றம்பலம்.

# திருக்காறாட்டுமுள்ளூர்.

பண் — கொல்லிக்கௌவாணம்.

ஞள்வாயமதிமிளிரும் வளர்சடையினானை
மறையவனை வாய்மொழியைவானவர் தங்கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி யுமிழ்ந்தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூலான் முகத்தினானை
முள்வாயமடல் தழுவி முடத்தாழையீன்று
மொட்டலர்ந்துவிரைநாறு முருகு விரிபொழில்சூழ்
கள்வாயகருங்குவளை கண்வளரும் கழனிக்
காறாட்டு முள்ளூரிற் கண்டுதொழுதேனே.

விடையரவக்கொடி யேந்தும் விண்ணவர்தங்கோனை
வெள்ளத்துமாலவனும் வேதமுதலானும்
அடியிணையுந் திருமுடியுங் காணவரிதாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மடவார்க
ளுடையவிழக் குழலவிழக் கோதை குடைந்தாடக்
குங்குமங்களுந் திவருகொள்ளிடத் தின்கரைமேற்
கடைகள்விடுவார் குவளைக்களை வாருங்கழனிக்
காறாட்டுமுள்ளூரிற் கண்டுதொழுதேனே.

திரையினார் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியினானை
நுரையினார் கறைதழுவு கொள்ளிடத்தின்கறைமேற்
காறாட்டு முள்ளூரிற்கண்டுகழல் தொழுது
உரையினார் மதயானை நாவலாரூர னுரிமையா
லுரைசெய்த வொண்டமிழ்கள் வல்லார்
வரையினார்வகை ஞாலமாண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பவரவர்தாமே.

திருச்சிற்றம்பலம்

# திருமுதுகுன்றம் பண் - நட்டராகம்.

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலுமெரித் தீர்முதுகுன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
யென்செய்த வாறடிகேளடியேனிட்டளங் கெடவே.

ஏத்தா திருந்தறியே னிமையோர்தனி நாயகனே
மூத்தா யுலகுக்கெல்லாமுதுகுன் றம மர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேனிட்டளங்கெடவே.

பிறையாருஞ் சடையெம்பெருமா னருளா யென்று
முறையால் வந்தமரர் வணங்கும் முதுகுன் றர்தம்மை
மறையார் தங்குறிசில்வயல் நாவலாரூரன் சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதான்சிவலோகமதே

திருச்சிற்றம்பலம்.

ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தது.

---

## திருக்கடவூர்மாயனம்.

பண்—பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

மருவார்கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார்விடைமேல் மாதோடு மகிழ்ந்துபூதபடைசூழத்
திருமால்பிரம னிந்திரற்குந் தேவர்நாகர் தானவர்க்கும்
பெருமான்கடவூர் மயானத்துப்பெரிய பெருமானடிகளே

வேழமுரிப்பர் மழுவாளர் வேள்வியழிப்பர் சிரமறுப்பர்
ஆழியளிப்பா ரிதனக்கன்றுனைந் துகப்பர றமுரைப்பர்
ஏழைத்தலைவர் கடவூரி லிறைவர் சிறுமான்மறிக்கையர்
பேழைச்சடையர் மயானத்துப் பெரியபெருமானடிகளே

மாடமல்கு கடவூரில் மறையோரேத்து மயானத்துப்
பீடைதீரவடியாருக் கருளும்பெருமா னடிகள்சீர்
நாடிநாவ லாரூர னம்பிசொன்ன நற்றமிழ்கள்
பாடுமடியார் கேட்பார்மேற் பாவமானபறையுமே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர் பண் - கொல்லி.

பாறுதாங்கியகாடரோபடுதலையரோமலைப்பாவையோர்
கூறுதாங்கியகுழகரோகுழைக்காதரோகுறுங்கோட்டிள
ஏறுதாங்கியகொடியரோசுடுபொடியரோவிளங்கும்பிறை
யாறுதாங்கியசடையரோநமக்கடிகளாகியவடிகளே.

இட்டிதாகவந்துரைமினோநுமக்கிசையுமாநினைந்தேத்துவீர்
கட்டிவாழ்வதுநாகமோசடைமேலுநாறுகரந்தையோ
பட்டியேறுகந்தேறரோபடுவெண்டலைப்பலிகொண்டுவந்
தட்டியாளவுங்கிற்பரோநமக்கடிகளாகியவடிகளே.

நீடுவாழ்பதியுடையரோவயநெடியமாலுக்குநெடியரோ
பாடுவாரையுமுடையரோதமைப்பற்றினார்கட்குநல்லரோ
காடுதானரங்காகவேகைகளொட்டினோடிலயம்பட
ஆடுவாரெனப்படுவரோநமக்கடிகளாகியவடிகளே.

படிசெய்நீர்மையிற்பத்தர்தாள்பணிந்தேத்தினேன்பணியீரருள்
வடிவிலான்றிருநாவலூரன்வனப்பகையப்பன்வன்றொண்டன்
செடியனாகிலுந்தீயனாகிலுந்தம்மையேமனஞ்சிந்திக்கும்
அடியனூரனையாள்வரோநமக்கடிகளாகியவடிகளே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குருகாவூர் பண் - நட்டராகம்.

இத்தனை யாமாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவர் பிறரெல்லா
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைதெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

வளங்கனி பொழின்மல்கு வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவனை
யிளங்கிளையா ரூரன் வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே.

திருச்சிற்றம்பலம்.

பொதிசோறும் தண்ணீரும் அருளப்பெற்றது.

## திருஓணகாந்தன்றளி பண் - இந்தளம்.

நெய்யும்பாலுந்தயிருங்கொண்டுநித்தம்பூசனைசெய்யலுற்றார்
கையிலொன்றுங்காணமில்லைகழலடிதொழுதுய்யினல்லா
லைவர்கொண்டிங்காட்டவாடியாழ்குழிப்பட்டழுந்துவேனுக்
குய்யுமாறொன்றருளிச்செய்யீரோணகாந்தன்றளியுளீரே

ஓவணமேலெருதொன்றேறுமோணக்காந்தன்றளியுளார்தாம்
ஆவணஞ்செய்தாளுங்கொண்டவரை துகிலொடுபட்டுவீக்கிக்
கோவணமேற்கொண்டவேடங்கோவையாகவாரூரன்சொன்ன
பாவணத்தமிழ்பத்தும்வல்லார்பறையுந்தாஞ்செய்தபாவந்தானே

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்கேதாரம் பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதாரமெனீரே.

பறியேசுமந் துழல்வீர் பறிநரிக்கீறுவதறியீர்
குறிகூவிய குற்றங்கொளு நாளாலறமுளவே
யறிவானிலு மறிவானல நறுநீரொடுசோறு
கிறிபேசிநின்றிடுவார்தொழு கேதாரமெனீரே.

கொம்பைப் பிடித் தொருக்காலர்க ளிருக்கான்மலர் தூவி
நம்பனமையாள்வா னென்று நடுநாளையும்பகலுங்
கம்பக் களிற்றினமாய் நின்றுசுனை நீர்களைத் தூவிச்
செம்பொற்பொடிச் சிந்துந்திருக் கேதாரமெனீரே.

உழக்கேயுண்டு படைத்தீட்டிவைத் திழப்பார்களுஞ் சிலர்கள்
வழக்கேயெனிற் பிழைக்கேமென்பர் மதிமாந்தியமாந்தர்
சழக்கேபறி நிறைப்பாரொடு தவமாவது செய்ம்மின்
கிழக்கேசலமிடுவார் தொழு கேதாரமெனீரே.

வாளோடியதடங் கண்ணியர் வலையி லழுந்தாதே
நாளோடியநமனார் தமர் நணுகாமுன நணுகி
யாளாயுய்ம்மி னடிகட்கி டமதுவே யெனிலிதுவே
கீளோடரவசைத் தானிடங் கேதாரமெனீரே.

தரிசாலைகள் தவமாவது தம்மைப் பெறிலன்றே
குளியீருளங் குருக்கேத்திரங் கோதவிரிகுமரி
தெளியீருளஞ் சீபர்ப்பதந் தெற்கு வடக்காகக்
கிளிவாழையொண்கனி கீறியுண் கேதாரமெனீரே.

பண்ணின் றமிழிசை பாடலின் பழவேய்முழவதிரக்
கண்ணின்னொளி கனகச்சுனைவயிரம் மவைசொரிய
மண்ணின்றன மதவேழங் கண்மணிவாரிக் கொண்டெறியக்
கிண்ணென்றிசை முரலுந் திருக்கேதாரமெனீரே

முளைக்கைப்பிடி முகமன்சொலி முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைகளிற் றினமாய்நின்று சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர மயின்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கம்மணி சிந்துந் திருக்கேதாரமெனீரே.

பொதியேசுமந் துழல்வீர்பொதி யமாவது மறிவீர்
மதிமாந்திய வழியேசென்று குழிவீழ்வது வினையாற்
கதிருஞ்சுட விலங்கைக்கிறை மலங்கவ்வரை யடர்த்துக்
கெதியேறுசெய் திருந்தானிடங் கேதாரமெனீரே.

நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞான சம்பந்தன்
யாவர்சிவனடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்றிருக் கேதாரத்தை யூரன் னுரைசெய்த
பாவின் றமிழ் வல்லார்பர லோகத்திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் பண் - பழம்பஞ்சுரம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திமையுமடிமையையுங்கைவிடுவான்பாவியேன்
பொத்தினநோயதுவிதனைப்பொருளறிந்தேன்போய்த்தொழு (வேன்
முத்தினைமாமணிதன்னைவயிரத்தைமூர்க்கனேன்
எத்தனைநாள்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

ஏழிசையாயிசைப்பயனாயின்னமுதாயென்னுடைய
தோழனுமாயான்செய்யுந் துரிசுகளுக்குடனாகி
மாழையொண்கண்பரவையைத்தந்தாண்டானைமதியிலா
ஏழையேன்பிரிந்திருக்கேனென்னாரூரிறைவனையே.

வங்கமலிகடனஞ்சைவானவர்கடாமுய்ய
நுங்கியமுதவர்க்கருளிநொய்யோனைப்பொருட்படுத்துச்
சங்கிலியோடெனைப்புணர்த்ததத்துவனைச்சழக்கனேன்
எங்குலக்கப்பிரிந் திருக்கேனென்னாரூரிறைவனையே.

பேரூருமதகரியினுரியானைப்பெரியவர்தஞ்
சீரூருந் திருவாரூர்ச்சிவனடியே திறம்பிரும்பி
யாரூரனடித்தொண்டனடியன்சொலகலிடத்தில்
ஊரூரனிவைவல்லாருலகவர்க்குமேலாரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவொற்றியூர் பண் - தக்கேசி.

அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே
னதுவு நான்படப் பாலதொன்றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள் வரடிகேள்
பிழைப்பனாகிலுந் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லான்
மற்று நானறியேன் மறுமாற்றம்
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையா
யொற்றி யூரெனு மூருறைவானே.

ஓலம் வந்துல வுங்கரை தன்மே
லொற்றி யூருறை செல்வனைநாளும்
ஞாலந் தான் பரவப் படுகின்ற
நான்மறை யங்க மோதியநாவன்
சீலந்தான் பெரி தும்மிக வல்ல
சிறுவன் வன்றொண்ட னூரனுரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்
பரகதிதின்னை நண்ணுவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

சத்தியந் தவறினவர் தண்டிக்கப்படுவர், என்பதை
வெளிப்படுத்த, அத்துயரத்தை நீக்கினரில்லை.

## திருவெண்பாக்கம் பண் - சீகாமரம்.

பிழையுளனபொறுத்திடுவரென்றடியேன்பிழைதக்கால்
பழியதனைப்பாராதேபடலமென்கண்மறைப்பித்தாய்
குழைவிரவுவடிகாதாகோயிலுளாயேயென்ன
உழையுடையானுள்ளிருந்துளோம்போகீரென்றானே.

மான்றிகழுஞ்சங்கிலியைத்தந்துவருபயன்களெல்லாம்
தோன்றிவருள்செய்தளித்தாயென்றுரைக்கவுலகமெல்லாம்
ஈன்றவனேவெண்கோயிலிருந்தாயோவென்ன
ஊன்றுவதோர்கோலருளியுளோம்போகீரென்றானே.

ஏராரும்பொழினிலவுவெண்பாக்கமிடங்கொண்ட
காராருமிடற்றானைக்காதலித்திட்டன்பினோடும்
சீராருந்திருவாரூர்ச்சிவன்பேர்சென்னியில்வைத்த
ஆரூரன்றமிழ்வல்லார்க்கடையாவல்வினைதானே.

ஊன்றுகோல் அருளப்பெற்றது.

---

## திருவேகம்பம் பண் - தக்கேசி.

ஆலந் தானுகந் தமுது செய்தானை
யாதியை யமரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி துமுடை யானைச்
சிந்திப் பவரவர்சிந்தையு ளானை
ஏலவார்க் குழலா ளுமை நங்கை
யென்று மேத்தி வழிபடப் பெற்ற
காலக் காலனைக் கம்ப னெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

பெற்ற மேறுகந் தேறவல் லானைப்
பெரியவெம் பெருமா னென்றெப்போதும்
கற்றவர் பரவப் படுவானைக் காணக்
கண்ணடியேன்பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தனெம் மானைக்
குளிர் பொழிற்றிரு நாவலாரூரன்
நற்றமிழிவை யீரைந்தும் வல்லார்
நன்னெறியுல கெய்துவர் தாமே.

திருச்சிற்றம்பலம்.

இடக்கண் அருளப்பெற்றது.

## திருவாவடுதுறை பண் - தக்கேசி.

கங்கை வார்சடையாய் கணநாதா
காலகாலனே காமனுக் கனலே
பொங்குமா கடல் விடமிடற்றானே
பூதநாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடையாய் தெளிதேனே
தீர்த்தனேதிருவாவடுதுறையுள்
அங்கணாவெனை யஞ்சலென்றருளா
யாரெனக் குற வமரர்களேறே.

வந்தவாளரக் கன்வலி தொலைத்து
வாழுநாள் கொடுத்தாய் வழிமுதலே
வெந்த வெண்பொடி பூசவல்லானே
வேடனாய் விசயற் கருள்புரிந்த
விந்து சேகரனே யிமையோர்சீர்
ஈசனேதிருவாவடுதுறையு
ளந்தணா வெனை யஞ்சலென் றருளா
யாரெனக் குறவமரர்களேறே.

வானநாடனே வழித்துணை மருந்தே
மாசிலாமணியே மறைப்பொருளே
யேனமாவெயி றாமையுமென்பு
பீடுதாங்கிய மார்புடையானே
தேனெய் பாறயிராட்டு கந்தானே
தேவனே திருவாவடு துறையு
ளானேயெனையஞ்சலென்றருளா
யாரெனக்குறவமரர்களேறே.

வெண்டலைப்பிறை கொன்றையு மரவும்
வேரிமத்தமும் விரவிமுன் முடித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடையானை
யீசனைத்திரு வாவடு துறையுள்
அண்டவாணனைச் சிங்கடியப் பனணுக்க
வன்றொண்ட ஞர்வத்தா லுரைத்த
தண்டமிழ் மலர் பத்தும் வல்லார்கள்
சாதலும் பிறப்பும் மறுப்பாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்.

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடில்படக்கரை யொடுந்திரை கொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரியகன் கரையுறைவா
ரடியிணை தொழு தெழுமன் பராமடியார்
சொன்னவா றறிவார் துருத்தியார் வேள்வி
குடியுளா ரடிகளைச் செடியனே னயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெருமானை
யென்னுடம் படும் பிணியிடர் கெடுத்தானை.

மங்கையோர் கூறுகந் தேறுகந்தேறி
மாறலார் திரிபுர நீரெழச் செற்ற
அங்கையான் கழலடி யன்றி மற்றறியா
னடியவர்க் கடியவன் றொழுவ னாரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையாற் றொழுது தந் நாவின்மேற் கொள்வார்
தவநெறி சென்ற மருலக மாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருவாரூர் பண் - செந்துருத்தி.

திருச்சிற்றம்பலம்.

மீளாவடிமையுமக்கேயாளாய்ப்பிறரைவேண்டாதே
மூளாத்தீப்போலுள்ளேகன்றுமுகத்தான்மிகவாடி
யாளாயிருக்குமடியார்தங்களல்லல்சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர்திருவாரூரீர்வாழ்ந்துபோதீரே.

செந்தண்பவளந்திகழுஞ்சோலையிதுவோதிருவாரூ
ரெந்தமடிகேளிதுவேயாமாறுமக்காட்பட்டோர்க்குச்
சந்தம்பலவும்பாடுமடியார்தங்கண்காணாது
வந்தெம்பெருமான்முறையோவென்றால்வாழ்ந்துபோதீரே.

கழியாய்க்கடலாய்க்கலனாய்நிலனாய்க்கலந்தசொல்லாகி
யிழியாக்குலத்திற்பிறந்தோமுமையிகழாதேத்துவோம்
பழிதானாவதறியீரடிகேள்பாடும்பத்தரோம்
வழிதான்காணாதலமந்திருந்தால்வாழ்ந்துபோதீரே.

காரூர்கண்டத்தெண்டோண்முக்கண்கலைகள்பலவாகி
யாரூர்திருமூலத்தானத்தேயடிப்பேராரூரன்
பாரூரறியவென்கண்கொண்டீர்நீரேபழிபட்டீர்
வாரூர்முலையாள்பாகங்கொண்டீர்வாழ்ந்துபோதீரே.

திருச்சிற்றம்பலம்.

வலக்கண் அருளப்பெற்றது.

## திருப்புன்கூர் பண் - தக்கேசி.

திருச்சிற்றம்பலம்.

அந்தணாளனுன் னடைக்கலம்புகுத
வவனைக்காப்பது காரணமாக
வந்தகாலன்ற னாருயிரதனை
வவ்வினாய்க்குன்றன் வன்மைகண்டடியேன்
எந்தைநீயெனை நமன்றமர்நலியி
லிவன்மற்றென்னடி யானெனவிலக்குஞ்
சிந்தையால்வந்துன் றிருவடியடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன்கூருளானே.

கம்பமால்களிற் றின்னுரியானைக்
காமற்காய்ந்ததோர் கண்ணுடையானைச்
செம்பொனேயொக்குந் திருவுருவானைச்
செழும்பொழிற் றிருப்புன்கூருளானை
உம்பராளியை யுமையவள்கோனை
யூரன்வன்றொண்ட னுள்ளத்தாலுகந்
தன்பினாற்சொன்ன வருந்தமிழைந்தோ
டைந்தும்வல்லவ ரருவினையிலரே.

திருச்சிற்றம்பலம்

# திருநாகைக்காரோணம்.

பண் கொல்லிக்கௌவாணம்.

திருச்சிற்றம்பலம்.

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடி
பாவை யரைக்கிறிபேசி படிறாடித் திரிவீர்
செத்தார்த மெலும்பணிந்து சேவேறித்திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீ ரெனக்கொருநாளிரங்கீர்
முத்தாரமிலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்தும் பணித்தருள வேண்டும்
கடனாகைக் காரோண மேவி யிருந்தீரே.

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடு பலபேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்புத் தலைக்கேற்றுஞ்
சுந்தரனே கந்தமுத லாடை யாபரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருள வேண்டும்
பண்டுதான் பிரமாண மொன்றுண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பரிதாய்க் கனலாகி நிமிர்ந்தீர்
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே.

மறியேறு கரதலத்தீர் மாதிமையே லுடையீர்
மாநிதியந் தருவனென்று வல்லீரா யாண்டீர்
கிறிபேசிக் கீழ்வேளூர் புக்கிருந்தீ ரடிகேள்
கிறியுமாற் படுவேனோ திருவாணை யுண்டேல்
பொறிவிரவு நற்புகர்கொள் பொற்சுரிகை மேலோர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்தருள வேண்டுங்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டுங்
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே.

பண்மையத்த மொழிப்பரவை சங்கிலிக்கு மெனக்கும்
பற்றாயபெருமானே மற்றாரை யுடையேன்
உண்மையத்தவுறக் கடியேன் குறைதீர்க்க வேண்டு
மொளிமுத்தம் பூணார மொண்பட்டும் பூவுங்
கண்மையத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடனாகைக் காரோண மேவியிருந்தீரென்
றண்மையத்தாலணி நாவலாரூரன் சொன்ன
வருந்தமிழ் களிவை வல்லா ரமருலகாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

பொன், நவரத்தினம், ஆபரணம், வஸ்திரம், குதிரை, உடைவாள் முதலியன அருளப்பெற்றது.

---

## திருப்பங்குரன்றம்.

பண்—இந்தளம்.

கோத்திட்டையுங்கோவலுங்கோயில்கொண்டீருமைக்
கொண்டுழல்கின்றதோர்கொல்லைச்சில்லைச்
சேத்திட்டுக்குத்தித்தெருவேதிரியுஞ்
சில்பூதமுநீருந்திசைதிசையன
சோத்திட்டுவிண்ணோர்பலருந்தொழநும்
மரைக்கோவணத்தோடொருதோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும்பாம்புகைக்கொண்டதும்பாம்
படிகேளுமக்காட்செயவஞ்சுதுமே.

அடிகேளுமக்காட்செயவஞ்சுதுமென்
றமரர்பெருமானையாரூரனஞ்சி
முடியாலுலகாண்டமூவேந்தர்முன்னே
மொழிந்தாறுமோர்நான்குமோரொன்றினையும்
படியாவிவைகற்றுவல்லவடியார்
பரங்குன்றமேயபரமனடிக்கே
குடியாகிவானோர்க்குமோர்கோவுமாகிக்
குலவேந்தராய்விண்முழுதாள்பவரே.

திருச்சிற்றம்பலம்.

மூவேந்தரோடு சென்று பாடியருளியது.

## திருச்சுழியல் பண் - நட்டராகம்.

ஊனாயுயிர் புகலாயகலிடமாய் முகில்பொழியும்
வானாய்வருமதியாய் விதிவருவானிடம்பொழிலின்
றேனாதரித்திசை வண்டினமிழற்றுந் திருச்சுழிய
னானாவிதநினைவார் தமைநலியார் நமன்றமரே.

தண்டேர் மழுப்படையான் மழவிடையா னெழுகடனஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமையவர்க்காத்
திண்டேர்மிசை நின்றானவனுறையுந் திருச்சுழியற்
றொண்டே செயவல்லாரவர் நல்லார்துயரிலரே.

உற்றானமக்குயரும் மதிச்சடையான் புலனைந்துஞ்
செற்றார்திருமேனிப் பெருமானூர் திருச்சுழியல்
பெற்றானினிதுறையத் திறம்பாமைத் திருநாமங்
கற்றாரவர் கதியுட் செல்வரேத்துமது கடனே.

நீரூர்தருநிமலன் றிருமலையார்க் கயலருகே
தேரூர்தருமக்கள் சிரநெறித்தான் றிருச்சுழியல்
பேரூரெனவுறை வானடி பெயர்நாவலர்கோமா
னாரூரன்றமிழ்மாலை பத்தறிவார் துயரிலரே.

திருச்சிற்றம்பலம்

---

## திருவையாறு

பண்—காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

பரவும்பரிசொன்றறியேனான் பண்டேயும்மைப் பயிலாதே
னிரவும்பகலு நினைந்தாலு மெய்தநினைய மாட்டேனான்
கரவலருவி கமுகுண்ணத் தெங்குங்குலைக் கீழ்க்கருப்பாலை
யரவந்திரைக்காவிரிக்கோட்டத் தையாறுடையவடிகளோ.

பிழைத்தபிழையொன்றறியேனான்பிழையைத்தீரப்பணியாயே
மழைக்கணல்லார்குழைந்தாடமலையுநிலனுங்கொள்ளாமை
கழைக்கொள் பிரசங்கலந்தெங்குங் கழனிமண்டிக் கையேறி
மழைக்குந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
தேசவேந்தன்றிருமாலும்மலர்மேலயனுங்காண்கிலாத்
தேசமெங்குந் தெளிந்தாடத்தெண்ணீ ரருவிகொணர்ந்தெங்கும்
வாசந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

கூடியடியாரிருந்தாலுங்குணமொன்றில்லீர்குறிப்பில்லீர்
ஊடியிருந்துமுணர்கிலேனும்மைத்தொண்டனூரனேன்
தேடியெங்குங்காண்கிலேன்றிருவாரூரேசிந்திப்பன்
ஆடுந்திரைக்காவிரிக்கோட்டத்தையாறுடையவடிகளோ.

காவிரியாறு பிரிந்து வழி விடப்பெற்றது.

---

# திருமுருகன்பூண்டி.

பண் — பழம்பஞ்சுரம்.

கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர் விரவலாமை சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக்கூறை கொண்டாறலைக்குமிடம்
முடுகுநாறிய வடுகர்வாழ் முருகன் பூண்டிமாநகர்வா
யிடுகுநுண்ணிடை மங்கைதன்னொடு மெத்துக்கிங்கிருந்தீ
ரெம்பிரானீரே.

வில்லைக்காட்டி வெருட்டுவேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினாலெறிந் திட்டுமோதியுங் கூறைகொள்ளுமிடம்
முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டிமாநகர்வா
யெல்லைக்காப்ப தொன்றில்லையாகினீ ரெத்துக்கிங்கிருந்தீ
ரெம்பிரானீரே.

சாந்தமாகவெண்ணீறுபூசிவெண்பற்றலைகலனா (வைத்துகந்தீர்
வேய்ந்த வெண்பிறைக் கண்ணிதன்னையோர் பாகம்
மோந்தையோடு முழக்கறா முருகன் பூண்டிமாநகர்வா
யேந்துபூண்முலை மங்கைதன்னொடு மெத்துக் கிங்கிருந்தீ
ரெம்பிரானீரே.

முந்திவானவர் தாந்தொழு முருகன் பூண்டிமாநகர்வாயப்
பந்தணை விரற்பாவை தன்னையோர் பாகம்வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூர னுரைத்தன பத்துங்கொண்
டெந்தமடிகளை யேத்துவாரிட ரொன்றுந் தாமிலரே.

திருடன் பறித்துக் கொண்டுபோனவை திரும்ப அருளப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புக்கொளியூர் அவிநாசி

பண்—குறிஞ்சி.

திருச்சிற்றம்பலம்.

எற்றான்மறக்கே னெழுமைக்கு மெம்பெருமானையே
உற்றாயென்றுன்னையே யுள்குகின்றே னுணர்ந்துள்ளத்தாற்
புற்றாடரவா புக்கொளி யூரவிநாசியே
பற்றாகவாழ்வேன் பசுபதியே பரமேட்டியே.

வழிபோவார்தம்மோடும் வந்துடன்கூடிய மாமணிநீ
யொழிவதழகோ சொல்லாயருளோங்கு சடையானே
பொழிலாருஞ்சோலைப்புக் கொளியூரிற் குளத்திடை
யிழியாக்குளித்த மாணியென்னைக் கிறிசெய்ததே.

எங்கேனும்போயினு மெம்பெருமானை நினைந்தக்காற்
கொங்கேபுகினுங் கூறைகொண்டாறலைப் பாரிலைப்
பொங்காடரவா புக்கொளி யூரவிநாசியே
யெங்கோனே யுனைவேண்டிக்கொள்வேன் பிறவாமையே.

உரைப்பாருரையுகந் துள்கவல்லார் தங்களுச்சியா
யரைக்காடரவா வாதியுமந்தமு மாயினாய்
புரைக்காடுசோலைப் புக்கொளியூரவி நாசியே.
கரைக்கான்முதலையைப் பிள்ளைதரச்சொல்லு காலனையே

பேணாதொழிந்தே னுன்னையலாற் பிறதேவரைக்
காணாதொழிந்தேன் காட்டுதியேலின்னங் காண்பனான்
பூணாணரவா புக்கொளி யூரவிநாசியே
காணாதகண்கள் காட்டவல்லகறைக் கண்டனே.

நீரேறேறு நிமிர்புன்சடை நின்மலமூர்த்தியைப்
போரேறதேறியைப் புக்கொளியூரவி நாசியைக்
காரேறுகண்டனைத் தொண்டனாரூரன் கருதிய
சீரேறுபாடல்கள் செப்பவல்லார்க்கில்லை துன்பமே.

திருச்சிற்றம்பலம்.

முதலையுண்ட பாலனை அழைப்பிக்கப்பெற்றது.

# திருக்கைலாயம்,

பண் - பஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்.

தானெனை முன்படைத்தான தறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வானெனை வந்தெதிர் கொள்ள மத்தயானை யருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தா னொடித்தான் மலையுத்தமனே.

ஆனையுரித்த பகையடியே னொடுமீளக் கொல்லோ
ஊனையுயிர் வெருட்டி யொள்ளியானை நினைந்திருந்தேன்
வானைமதித்தமரர் வலஞ்செய்தெனை யேறவைக்க
ஆனையருள் புரிந்தா னொடித்தான்மலை யுத்தமனே.

மந்திரமொன் றறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
சுந்தரவேடங்களாற் றுரிசே செயுந் தொண்டனெனை
அந்தரமால் விசும்பிலழகானை யருள்புரிந்த
துந்தரமோ நெஞ்சமே நொடித்தான் மலையுத்தமனே.

வாழ்வையுகந்த நெஞ்சேமடவார் தங்கள்வல்வினைப்பட்
டாழமுகந்த வென்னை யதுமாற்றிய மரரெல்லாம்
சூழவருள்புரிந்து தொண்டனேன் பரமல்லதொரு
வேழமருள் புரிந்தானொடித்தான் மலையுத்தமனே.

மண்ணுலகிற் பிறந்து நும்மைவாழ்த்தும் வழியடியார்
பொன்னுலகம்பெறுதறொண்டனேனின்றுகண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளை யானையின்மேல்
என்னுடல் காட்டுவித்தா னொடித்தான் மலையுத்தமனே.

அஞ்சினையொன்றி நின்றுவலர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனை யென்மனமே வைகிவான நன்னாடர்முன்னே
துஞ்சுதன் மாற்றுவித்துத் தொண்டனேன் பரமல்லாதொரு
வெஞ்சினவானை தந்தானொடித்தான் மலையுத்தமனே.

நிலைகெடவிண்ணதிர நிலமெங்கு மதிர்ந்தசைய
மலையிடையானையேறி வழியே வருவேனெதிரே
அலைகடலாலரை யன்னலர்கொண்டு முன்வந்திறைஞ்ச
உலையணையாத வண்ணநொடித்தான் மலையுத்தமனே.

அரவொலியாக மங்களறிவாரறி தோத்திரங்கள்
விரவியவேதவொலி விண்ணெலாம் வந்தெதிர்ந்திசைப்ப
வரமலிவாணன்வந்து வழிதந்தெனக் கேறுவதோர்
சிரமலியானைதந்தா னொடித்தான் மலையுத்தமனே.

இந்திரன்மால் பிரமன்னெழிலார் மிகுதேவரெல்லாம்
வந்தெதிர்கொள்ள வென்னைமத்தயானை யருள்புரிந்து
மந்திரமா முனிவரிவனாரென வெம்பெருமான்
நந்தமரூரனென்று னொடித்தான் மலையுத்தமனே.

ஊழிதொறூழி முற்றுமுயர் பொன்னொடித்தான் மலையை
சூழிசையின் கரும்பின்சுவை நாவலாரூரன்சொன்ன
ஏழிசையின்ற மிழாலிசைந் தேத்திய பத்தினையும்
ஆழிகடலரை யாவஞ்சையப்பர்க் கறிவிப்பதே.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாயத்திற்கு வெள்ளையானையின்மீது எழுந்தருளியபோது பாடியது.

ஓம்

திருச்சிற்றம்பலம்.

நூற்சிறப்பு

நேரிசை வெண்பா.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே — யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

---

மாணிக்கவாசக சுவாமிகள்

# புராண சாரம்.

---

செய்யதிரு வாதவூரர் வந்தருளி
யமைச்ச ரெனச் சிறந்துநீடு
வையமிசை வழுதிநிதி கொண்டானைக்
குருந்தடியில் வணங்கிஞால
முய்யவருட் பணியாற்றி நரிபரியாச்
செய்து நதியுடைப்பி லெங்க
ளையன்முடி மிசையுவந்து மண்சுமக்க
வன்பினுரு வாயினாரே.

எங்குமாகி யவழகன் மேனிபிரம்
படிதாங்க வேங்கிப் புத்தர்
மங்கவா ரருள்செய்து மூகைபே
சிடவழங்கி மணிமன் றூடு
மெங்கணு யகன்கரத்தா லேடுமெழுத்
தாணியுங்கொண் டெழுதப் பாடி
யங்கண்மே வியசோதி தன்னிலிரண்
டறக்கூடி யமர்ந்திட் டாரே.

சிவமயம்

# மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திர வரலாறு.

பாண்டிவளநாட்டிலே, மதுரை ஜில்லாவிலே வைகை யாற்றங்கரையிலே நீர்வளமும், நிலவளமும் பொருந்திய வாதவூரில், சிவசிந்தனையே மனதிற்கொண்டவரும், அடியார்பால் விசுவாசம் பூண்டவரும், சீரும், செல்வமும் நிறையப்பெற்றவரும், அமாத்தியப் பிராமண குலத்தைச் சேர்ந்தவருமான சம்புபாத சிருதர் என்ற ஓர் பிராமணர் இருந்தார். அவர், நற்குணத்திலும், பதிபக்தியிலும், தெய்வவழிபாடுகளிலும் சிறந்தவளாயும், ஞானமே ஓருருவாய்த் திரண்டெழுந்தாற்போன்றும்குணத்துக்கேற்றஅங்கலட்சணங்களையும் நிறையப்பெற்ற ஞானவதி என்னும் ஓர் உத்தம சிரோண்மணியை மணந்து, இல்வாழ்க்கையைச் சகலரும் புகழுந்தன்மையில் நடத்திவந்தார். சம்புபாத சிருதர், தினம் தவருமல் வாதபுரேஸ்வரைத் தொழுவது வழக்கம்.

இங்ஙனமிருக்கும்நாளில் ஞானவதியார், சுபகால வேளையில் பஞ்சலட்சணங்களும் பொருந்திய ஓர் ஆண் மகவை ஈன்றனள்.

வாதபுரேஸ்வரையே தியானிப்பவரான சம்புபாதசிருதர் தனக்கோர் ஆண் குழந்தை அவதரித்தமைக்குக் களிப்படைந்து தான தருமங்கள் செய்து குழந்தைக்கு "திருவாதவூரர்" என்ற திருநாமமிட்டு மிகுந்த பராமரிப்புடன் வளர்த்து ஐந்தாம் வயதில் கிரமப்படி உபநயனஞ்செய்து தக்க ஆசிரியரைக்கொண்டு கல்வி பயிற்றுவித்தார். வாதவூரர், தன் இளம் பிராயத்திலேயே நுண்ணறிவு பெற்றவராயும் தீவிரமாய்ப் பல கலைகளையுங் கற்றறியும் திறம் வாய்ந்தவராயுமிருந்தார். தனக்கு நியமிக்கப்பட்ட நல்லாசிரியர் வியப்புறும் வண்ணம் பல அருங்கலைகளைக்கற்று கலைவல்லோனுகி அதிவிரைவில் அறநூல், பொருளுல், தற்கநூல், கருவி நூல், விவசாயம், வியாகரணம் முதலான நூற்களையும், இராஜ்ய பரிபாலன முறைகளையும் ஒருங்கே கற்றுத்தெளிந்

தார். அப்போது வாதவூரருக்கு வயது பதினாறு. சுற்றுப் பக்கங்களிலுள்ள யாருக்காவது ஏதேனும் சந்தேகமுண்டா னால், வாதவூரரிடமே கேட்டுத் தெளிவார்கள்.

அவர் முன்ஜென்மங்களில் செய்ததவப்பயன் ஈண்டு பிராரத்துவமானதால் அவருக்குக் கல்வித் துறைகளில் மேன்மேலும் புகழ் உண்டாயிற்று.

அக்காலத்தில் பாண்டிய நாட்டுக்கரசனாகிய அரிமர்தன பாண்டியன் மதுரையில் இருந்தான். அவன் பலதினங்க ளாக வாதவூரரின் கல்வித்திறத்தைக் கேள்விப்பட்டு பரி சனங்களையனுப்பி வாதவூரரைத் தன்னிடம் வரவழைத்து அவருடைய திருவுருவப்பொலிவைக்கண்டு மகிழ்வடைந்து இராஜ்ய நிருவாகச் சம்பந்தமான சில விஷயங்களைப்பற் றிப் பேசியபின், இல்லற தருமத்தைப்பற்றியும், துறவறத் தைப்பற்றியும் பேசினான். எல்லாவற்றிலும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவரான வாதவூரர், அரசன் வினாக்களுக்கு ஏற்ற வாறு இனிய மொழிகளால் விடை பகர்ந்தார். அரசன், அக மிக மகிழ்ந்து "ஞானவதியார் ஈன்றெடுத்த இச்சிறு வாலி பன் ஞானமே ஓருருவாய்த்திரண்டாற்போல விளங்குகிறான்; இவன் நமது இராஜ்ய முறைகளைக் கவனித்து நடத்த யோக்கியதையுடையவன்" எனக்கருதி தன் அமைச்சர் களில் ஒருவனாக உத்தியோகத்தில் அமர்த்திக்கொண்டான். வாதவூரர், தன் உத்தியோகத் தோரணைகளில் குறைவில்லா மல் சிறந்து விளங்கி சகல விஷயங்களிலும் மிக்க கவனஞ் செலுத்திவந்தார். மற்றவமைச்சர்களும் இவர்பால் மிக்க விசுவாசமுள்ளவர்களாகி பல விஷயங்களில் அவருடைய யோசனையைக்கேட்டு நடக்கத்தலைப்பட்டனர். இதனால் அர சன் மிகவும் சந்தோஷமடைந்து, தன் அமைச்சர்களில் தலைமை ஸ்தானங்கொடுத்து, வாதவூரருக்கு தென்னவன் பிரமராயர் என்ற பட்டப்பெயர் சூட்டினார். அன்று, மற்ற அமைச்சர்களும் இராஜசமூகத்தவரும் நந்நாள் கொண்டா டினர். அவ்வமயம், அரசனாகிய அரிமர்த்தன பாண்டியன் சபையாரை நோக்கி, சபா ஜனர்களே! இப்போது தென்ன வன் பிரமராயர் என மகுடம்பூண்ட இவர், அறநூல்களின் நுட்பங்களையறிந்தவர். தெய்வகுற்றங்களால் நேருந் தோஷ ங்களுக்கும், காற்று, தீ, பிணி ஆகியவற்றால் வரும் விபத்து களுக்கும் தக்க சாந்தி முதலியனசெய்து விலக்கும் திற மைப் பெற்றுள்ளார். பகைவர், கள்வர், சுற்றத்தார் ஆகிய வர்களால் வரும் துன்பங்களை சாம, பேத, தான, தண்டம் என்கிற சதுர்வித உபாயங்களில் ஏதேனும் ஒன்றினால் விலக்கும் திறமையுடையவர். இத்தகைய பெரியார் நமக்குக்

கிடைத்தது நமது நாட்டாரும் அரசாங்கமும் செய்த புண்ணியமேயாகும். இவர் வயதில் சிறியவராயினும் அறிவிலும் இராஜ்ய தந்திரத்திலும் சிறந்தவராகையால், அறிவிற்சிறந்த சபையோரே! நீவிர், இவரைப் பெருந்துணையாகக் கொள்மின்'' என்று, இன்றுமுதல் இவரைத் தென்னவன் பிரமராயர், என்றழைக்கும்படிச்சொல்லி, பிரதான மந்திரியாக நியமிக்கப்பட்ட வாதவூரருக்கு ஆரம், கேயூரம், கடகம், கங்கணம் முதலிய ஆபரணங்களும், பீதாம்பரம் முதலான உடைகளும் தேராதி முதலிய நால்வகைச் சேனைகளும், கொடி, குடை, ஆலவட்டம் முதலிய இராஜ சின்னங்களும் கொடுத்து உபசரித்தார். மற்ற மந்திரிமார்களும் இராஜசபையோரும் அரசன் கட்டளையைச் சிரமேற்கொண்டு ஆரவாரித்து அங்கீகரித்தனர்.

பிரமராயர், அரசன் வழங்கியப் பொருள்களை அன்புடன் ஏற்றுக்கொண்டு எல்லோருக்கும் நன்றியறிதல் கூறி அரசனிடம் விடைபெற்று தன்னிருப்பிடமடைந்து தனக்குக் கிடைத்த உயர்ந்த பதவியும், மரியாதைகளும், சன்மானங்களும் எல்லாம் இறைவன் திருவருளால் கிடைக்கப்பட்டதென மனதுட்கொண்டு, ஆலயஞ்சென்று சொக்கலிங்க மூர்த்தியையும், அங்கையர்கன்னியம்மையையும் அடிபணிந்து தொழுது, தன் விடுதியையடைந்தார். அவருடையப் பெற்றோர்கள் தங்கள் புதல்வனுக்கு உயர்ந்த பட்டமும், சிறப்பும் ஏற்பட்டதையறிந்து அகமிக மகிழ்ந்து இறைவனைத் தொழுது வணங்கினர்.

பிரமராயர், முதன் மந்திரி ஸ்தானம் வகித்து குடிகளிடமிருந்தும், சிற்றரசர்களிடமிருந்தும், மற்றும் இதர வழிகளிலும் இராஜாங்கத்துக்கு வரும் வருமானங்களைக் கணக்கிட்டு, அதில் தருமத்திற்கிவ்வளவென்றும், படைச் செலவிற்கிவ்வளவென்றும், இராஜ்யபாதுப்பிற்கிவ்வளவென்றும், ஆலயச் செலவிற்கிவ்வளவென்றும் மற்றும் சில்லரைச்செலவிற்கிவ்வளவென்றும் பகிர்ந்தெடுத்தபின், இவ்வளவு தொகையைப் பொக்கிஷத்தில் சேர்க்கக்கூடுமென்று கணக்கிட்டுக்கொண்டார்.

பிரமராயர், இராஜ்ய அமுல் நடத்துங்காலத்தில், சோம்பாமை, குடிக்காத்தல், செய்வனத் தெரிந்துச் செய்தல், பகைவரை நட்புகொள்ளல், எதிர்த்தோரை அடக்குதல், பகைவர்கள் வலியோராயின் அவர்கள் வலிமையின் காரணங்கண்டு அதற்கேற்ற பஞ்சதந்திரங்களால் அவர்களைத் தன்வசமாக்குதல், இன்னோரன்ன நீதிமுறைகளை அநுசரி

த்து தன் உத்தியோகத் தோரணைக்கு எவ்வழியிலும் பழுதுரு வண்ணம் நடத்தி தேசத்தின் வருமானத்தை யதிகப்படுத்தினர்.

இவரின் மந்திரியத்துவ தந்திர முறைகளை யறிந்த பகைவர்கள் யாவரும் அரிமர்த்தனனுக்கு நட்பாயினர். பல அரசர்களிடமிருந்து பின்தங்கியிருந்த கப்பப் பணங்கள் வந்துச் சேர்ந்து பொக்கிஷம் நிறம்பின. பல தீவுகளின் மன்னர்களும் பாண்டியனை நட்புகொண்டு தம்மிடத்துள்ள அரியப் பொருள்களை காணிக்கையாக அனுப்பினார்கள். அரிமர்த்தனன் உள்ளம் மகிழ்ந்து பிரமராயரிடத்தில் மிகுந்த விசுவாசங் காட்டி நகமுஞ் சதையும்போல் பழகிவந்தான்.

இஃதற்ருக, எத்தொழில் செய்யினும், எத்தவமியற்றினும் மூத்தார்மனமிருக்கும் மோனத்தே என்பதற்கேற்ப பிரமராயருக்கு இராஜாங்க விஷயத்தில் ஆனந்தமே யுண்டாயிற்றெனினும் நாள் செல்லச் செல்ல அவருக்கு உத்தியோகம், திரவியம், சம்பத்து கௌரவம் முதலானவற்றில் பற்றுதலொழிந்து, இப்பூவுலக கௌரவதா சின்னங்கள் யாவும் அநித்தியமெனத் தோன்றியதால் நித்தியமான பரம்பொருளின் திவ்விதா திருவடி நிழலையடைவதற்கேதுவான மார்க்கங்களைத் தேடுவதில் மனம் நாட்டமுற்று ஆன்மலாபத்துக்கு வேண்டுவனவற்றை விசாரித்தரியத் தலைப்பட்டார். நித்தியம், அநித்தியம் ஆகியப் பொருள்களின் பேதங்களையும் ஆன்ம சுகத்துக்கான பேரின்ப வீட்டின் உணர்வும், "அரும்பானது மலரும்போது அடுக்க அடுக்க அதனுள் நாளுக்கு நாள் நற்மணம் அதிகரிக்குந்தன்மையேபோல் அதிகரித்தன".

அவர் தம்முள்தானே ஆராய்ந்தறிய முயற்சிசெய்தார். எல்லாவகைப் பிறப்புகளையும்விட இம்மானுடப்பிறப்பு எவ்வளவோ அருமையானது! எனலும், ஓர் கப்பலின் உதவியின்றிக் கடலைக்கடக்க முடியாததுபோல அருமைவாய்ந்த இம்மானுடப் பிறவியின் உதவியின்றி இனிப் பிறவாதிருக்க வழித் தேடிக்கொள்ளுதலியலாதென்றுணர்ந்தார்.

"இப்பிறவி இன்னகாலத்தில் அழியுமென்பதைத் திண்ணமாக அறிவதற்கில்லையே! நாம் எத்துணைப் புகழோடிருந்தாலும் நமன் வந்தழைக்குங்காலத்தில் புகழேதாவது உதவிச் செய்யுமா? இந்த அளவுகடந்தப் பொருள்கள் நம்மை யாதரிக்குமா? முடியாதே! இப்படி பிறந்து பிறந்து இறக்குந்தோறும் எமன் பயமே நம்மை வாட்டுகின்றதே! இந்தத் துன்பக்கடலினின்றும் தப்புவதானல் இனிப் பிறவாமலி

ருப்பதொன்றேதான் வழி; அவ்வழியைக் காட்டுவோர் யார்?'' என்று பலவாறு சிந்தித்து, ''நம் மனதிற்கொண்ட பேரின்பவீடான மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைவதற் கேதுவான மார்க்கங்களை யுணர்த்தும் பெரியார் எங்குளார்? அச்சற்குருவின் தரிசனம் எப்போது கிடைக்கும்? அது நமக்குக் கிடைக்கும்படி எப்போது திருவருள் கூடுமோ?'' என்ற கவலைகள் மேலிட்டவராய் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினர்.

வேதாகம முணர்ந்தப் பெரியோர்களைக் கண்டால், நாம் யார்? இவ்வுலகத்தையும் அதிலுள்ளவற்றையும் கடவுள் ஏன் படைத்தார்? கடவுள் உண்டென்பதற்குப் பிரமான மென்ன? என்பவைகளான பல கேள்விகளைக் கேட்பார். அவர்கள் கூறும் விடைகளெல்லாம், தாகமுள்ளவனுக்கு உவர்நீர் கொடுத்ததுபோல், அதனால் தாகம் நீங்காதவாறு இவர்க்குத் திருப்தி தராவாயின.

இவ்வாறு பிரமராயருக்கு ஆன்மவிசாரம் அதிகரிக்கவே அரசன் வேலைகளைச் செய்வதிலுஞ் சிரத்தைக் குறைந்தது. பிரதிதினமும் அரசசபைக்குப் போவதும் முக்கியமான அலுவல்களை மாத்திரம் விசாரிப்பதும், உடனே வீட்டுக்கு வருவதும், ஆலயத்துக்குப்போய்க் கடவுளைத் தொழுவதும், அங்கு யாரேனும் பெரியோரைக்கண்டால் ஆன்மாவைப்பற்றியும், ஆண்டவனையடையும் மார்க்கங்களைப்பற்றியும், இப்பிறவியை நீக்குவதற்கான வழிகளைப்பற்றியும் விசாரிப்பதிலேயே கவனஞ்செலுத்திவந்தார். உணவு, உறக்கம், இவற்றில்கூட கருத்தைச் செலுத்துவதில்லை. அவருக்கு அதிவிரதா சத்திநிபாதமாகிய நாலாஞ் சத்திநிபாத முண்டாயிற்று. ''அப்போது கடவுளைக்காட்டும் ஆசிரியர் கிடைப்பாரோ, இம்மாயாப் பிரபஞ்ச வாழ்க்கையினின்று என் புத்தி விலகுமோ,'' என்ற சிந்தனைகளே அவர் மனதில் ஊசலாடலாயிற்று. இவ்விதக் கவலைகளை மேற்கொண்டிருந்தும் அரசகாரியங்களை ஒருவாறு பார்த்துக்கொண்டிருந்தார்.

இங்ஙனமிருக்கும் நாளில் ஓர் நாள் குதிரைச் சேவகர்கள் அரச சபைக்கு வந்து ''அண்ணலே உமது குதிரைகளில் சில இறந்துப்போயின, சிலது நோய்கொண்டும், சிலது கிழமாயுமுள்ளன நமது இராஜ்ய காரியத்துக்கேற்றவைச் சில குதிரைகளேயிருப்பதால் இராஜாங்கத்துக்குப் புதிதாகக் குதிரைகளைத் தருவிக்க வேண்டியதவசியமாகிறது'' என்றறிவித்தனர். குதிரைகள் குறைவானதைத் தெரிந்த அரிமர்த்தனன், பிரமராயரை விளித்து ''அமைச்சர்

தலைவ! நீர் நமது பொக்கிஷத்திலிருந்து வேண்டியத்திரவியம் எடுத்துக்கொண்டுபோய், கீழ்க்கடற்றுறையில் வந்திறங்கியிருக்கும் பரிகளில் நல்லவைகளாகப் பொறுக்கி வாங்கி வருவீராக" என்றனன். பிரமராயர் சந்தோஷத்தோடு அரசன் சொற்படி பொக்கிஷந் திறந்து வேண்டியமட்டும் திரவியங்களை யெடுத்து மூட்டைகளாகக் கட்டி ஒட்டகங்களின் மேல் ஏற்றி காவலாளர்களுடன் முன் செல்லும்படி அனுப்பிவிட்டு, தாம் ஆலயத்தையடைந்து இறைவனைத் தொழுது வெள்ளியம்பலத்தில் இருக்கும் அம்பலவானரைப் போற்றி செய்து "பெருமானே! அடியேனுக்கு தரிசனங்காட்டி அடியேனுடையப் பாவங்களைப் போக்கி ஆட்கொள்ளும்படி வேண்டுகிறேன்" எனப் பிரார்த்தித்தார். அச்சமயத்தில் சோமசுந்தரக்கடவுள் இன்னருள்போலும், ஆதி சைவராகிய ஓர் குருக்கள்தோன்றி பிரமராயருக்கு விபூதி பிரசாதங் கொடுத்தார். அதை பிரமராயர் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு "நாம் பிரயாணப்படும்வேலையில் இந்த நற்சகுனந் தோன்றியது கடவுளுடைய அருள்போலும்" என்று களிப்படைந்து கோயிலை வலம் வந்து சிவிகையேறி திருப்பெருந்துறைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அவருக்குத் திருப்பெருந்துறையைச் சமீபித்து போகப் போக ஓர் பெருஞ் சுமையைச் சுமந்து வருந்துவோன் அச்சுமையை இறக்கியபின் பெரிதும் ஆறுதலடையுந்தன்மை யொப்ப, திருப்பெருந்துறையைச் சமீபித்ததும் மிகவும் பாரமாய்த் தோன்றிய தன் மனோவேதனை கொஞ்சங் குறைந்து சந்தோஷமடைந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஆனந்தக்கண்ணீர் பெருகிற்று, வலக் கண்ணும் வலத்தோளும் துடித்தன, பிரமராயர், "இது ஏதோ நமக்கு நல்லச் சகுனங் காட்டுகிறது, இங்கே நமக்கு குருதரிசனஞ் சித்திக்குமா? ஈசனருள் உண்டாகுமா?" என்று சிந்தித்தவண்ணமாய் குதிரை வாங்கப்போகும் அலுவலையும் மறந்து தக்க ஆசானைத் தேடுவதிலேயே நாட்டமாய்ச் சென்றார். திருப்பெருந்துறைபோய்ச் சேர்ந்ததும் தனக்கோர் கூடாரமும் பரிசனங்களுக்கோர் கூடாரமும் இயற்றி தான் திருக்கோயிலுக்குச் செல்லக் கருதி எதிரிலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து திருநீறணிந்து ருத்ராட்சங்களைத் தரித்து ஆலயத்துட்சென்று ஆன்மநாதரைத் தரிசித்து மிகுந்த ஆர்வத்தோடு வணங்கித் தொழுதார். அங்கிருந்து கடவுள் சிந்தனையே மனதுட்கொண்டு தியானித்தவண்ணமாய்ச் சென்று தன் கூடாரத்தில் அமர்ந்து துயின்றார். அன்றிரவு சொப்பனத்தில் ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்தில் மிகவுஞ் செழிப்படைந்தும், மனோரம்மியத்தைத் தரத்

தக்கதாயும், பேரின்பநிழலைப் பரப்பியவண்ணமாய் ஓர் குருந்தமரமிருந்ததைப்போலவும், அதன்கீழ் திவ்வியதேஜோமயமாய் சிவ சின்னங்களைத்தரித்து பிரகாசம் பொருந்திய முகவஜீகரத்துடன் ஓர் சற்குருவானவர் தன் கையிலோர் அழகியப் புத்தகத்தையேந்தி தன்னைச் சூழ்ந்திருந்த பல சிஷியர்களுக்கு ஞானோபதேசஞ் செய்துக்கொண்டிருப்பதைப்போல் கண்டார். இக்கனவைக் கண்ட பிரமராயர் திடுக்கிட்டெழுந்து அனலிற்பட்ட மெழுகுபோல் நெஞ்சம் உருகலானார். "எப்போதுங்காணாத காட்சியை இன்று கண்டோம், நாம் இத்தலத்துக்குப் புறப்பட்டபோது நேரிட்ட நற்சகுணங்களின்படி நம்மை யாட்கொள்ள எம்பெருமானே இங்கு தோன்றியிருக்கின்றார்போலும்" என்றெண்ணி, எப்போது இரவு நீங்குமோ வென்று, பகலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

மறுநாள் பிரமராயர், சூரியோதயத்துக்குமுன்பே எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு ஆலயத்துக்கெதிரிலுள்ள அக்கினி தீர்த்தத்தில் மூழ்கி, விபூதி ருத்ராட்சங்களை யணிந்து, கோயிலுக்குள்போய் ஆன்மநாதரையும் யோகாம்பிகையம்மனையும் வணங்கித்தொழுது கோயிலை வலம் வருகையில், பிரகாரத்தில் அதற்கு முந்தின தினங்களில் காணப்பெறாத ஓர் குருந்தமரம் இருப்பதைக்கண்டு ஆச்சரியமுற்றார். அம்மரத்தின்கீழ் தான் சொப்பனத்தில் கண்டவாறே கோடிசூரியப்பிரகாசம்போன்ற திவ்விய தேஜோமயரூபத்துடன் ஆசிரியர் ஒருவர் பெருந்தொண்டர்கள் கூட்டத்தின் மத்தியில் தனது இடது கரத்திலோர் புத்தகமேந்தி வலக்கரத்தில் சின் முத்திரைகாட்டி யோகவாசனத்தில் எழுந்தருளியிருப்பதைக்கண்டார். இக்காட்சியைக்கண்டதும் "இதென்ன புதுமை! சொப்பனத்தில் கண்டவண்ணமாகவே இப்போது இங்கே காணப்பெறுவது என்னவாச்சரியம்! எம்பெருமான் திருவருளன்றோயிது" என்று ஆனந்தபரவசராகி "கடின சித்தமுள்ள கன்மனத்தையும் தன்வசமிழுக்கும் வல்லமைப் பொருந்திய இப்பெரியாருடைய முகவஜீகரத்தை யென்னென்றுரைப்பேன், இவரநுக்கிரகத்தினுல்தான் நாம் நற்கதியடைய வேண்டும்" என்று நினைத்து, பிரிந்திருந்த ஆவைக் கண்ட கன்றானது ஆவலோடுச் செல்லுவதைப்போல பக்தி நிறைந்தவுள்ளத்தோடு விறைந்துச்சென்று பணிதலோடு வணங்கி "ஐயனே! தங்கள் கையிலிருப்பது என்ன புத்தகம்" என்று கேட்டார். தேவாசிரியர், "இது சிவஞான போதம்" என்றார். அப்பெரியார் சிவஞானங்களைப் போதிக்கக்கூடியவர் என்றறிந்ததும் என்றுமில்லாத ஆனந்தம்

மேலிட்டு மெய்மறந்து தேவாசிரியருடைய திருவடிகளிலே அடியற்றமரம்போல் விழுந்தார்.

தேவாசிரியர், "எழுக" என்னும், பிரமராயர் எழுந்து நின்று கைகளைச் சிரசின்மேல் கூப்பியபடியே இருந்தார். அப்போது சூழ்ந்திருந்த தொண்டர்கள் ஒருமித்து ஆசிரியரை வணங்கி "சற்குருவே! அன்பிற்சிறந்த இவ்வடியானை ஆட்கொள்ளவேண்டும்" என்று வேண்ட, குருதேவர், "அன்பர்களே! அதிதீவிரபக்குவியாகிய இவ்வன்பனை இன்றிரவு ஆட்கொள்ளுவோம்" என்று திருவாய்மலர்ந்தருளி பிரமராயருக்கு பூரண விசுவாசமுண்டாகும் விதமாய்ப் பற்பல சன்மார்க்க வழிகளைக் காட்டி சில ஞானோபதேசங்கள் செய்து அனுப்பினார்.

அன்றிரவு தேவாசிரியர், பிரமராயர் சொப்பனத்தில் தோன்றி தீட்சை தந்தார். "குரு, குருந்தமரத்தடியில் தெற்கு முகமாக உட்கார்ந்து தன்னை எதிரில் நிறுத்தி தன்னுடைய மலமாயை சிந்தையுமாறு கண்ணோக்கி உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தமாகப்பெற்றுக்கொண்டதைப்போலவும், குரு கைகளால் தன்னைத் தடவியதைப்போலவும், தன் உயிரையே அவர் வசமாக்கிக்கொண்டாற்போலும், தேவாசிரியருடைய திருவடிகளைக்கழுவி சந்தனம், கஸ்தூரி, பனிநீர் முதலியன்க்கொண்டு பாதபூசைச் செய்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்துக்கொண்டதுபோலவும், குருதேவர் பாதங்களைத் தன் முடிமீது சூட்டி நெற்றியில் அவருடைய திருக்கரத்தால் திருநீறு பூசி அவர் பாதத்தில் சூட்டப்பட்ட மலர்களை எடுத்து தன் முடியில் சூட்டியதைப்போலவும் கனவு கண்டெழுந்து பார்த்தபோது தன் நெற்றியில் தேவாசிரியரால் இடப்பட்ட திருநீறு இருப்பதைக்கண்டு ஆனந்தப் பரவசமடைந்து ஆன்மநாதரையும் யோகாம்பிகையம்மனையும் துதிசெய்து வணங்கி ஞானசமாதியிலேயே மூர்ச்சித்திருந்தார்.

மறுநாள் பிரமராயர், திருக்குளத்திலே மூழ்கி ஆலயத்துட்சென்று சுவாமி தரிசனஞ்செய்து வெளியே வந்து பார்க்கையில் முன்னாள்போலவே தேவாசிரியர் குருந்தமரத்தடியில் வீற்றிருப்பதைக்கண்டு சந்தோஷமடைந்து அவரருகிற்சென்று அதிவிநய பக்தி விசுவாசத்துடன் நமஸ்கரித்து நின்றார். ஆசிரியர் தனது இடக்கரத்தில் வைத்திருந்த சிவஞான போதமென்னும் நூலை பிரமராயருக்குத் தந்து அதனுள்ளுரைகளை உபதேசித்தார்.

பிரமராயர், ஆசாரியருக்கு சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து தேனும், பாலும், கனியும் கலந்தமைந்த தெகட்டாதத் தெல்லமுதம்போலும் ஊனும் உருகும்படி இனிமையானப் பாடல்களைப்பாடி துதித்தார். அதைக்கேட்ட வாசிரியர் அகமகிழ்ந்தார். அவர் பாடியப் பாக்களில், எழுத்தியல், சொல்லியல், பதவியல், மோனம், தொடை, அளபெடை முதலான ஐந்திலக்கணவமைதிகள் பொருந்தியும், சொல் நயம் பொருள்நயம் பொலிந்தும் ஒவ்வொரு சொற்களும் மாணிக்கமணிகளைப்போல் தொணிப்பதற்கேதுவாயும் இருந்தமையால் தேவாசிரியர் புகழ்ந்து பிரமராயருக்கு "மாணிக்கவாசகர்" என்ற தீக்ஷாநாமம் வழங்கினர். அன்றுமுதல் மாணிக்கவாசகரெனப் பெயர்பூண்ட பிரமராயர், ஆசிரியரை வணங்கி "ஐயனே! தங்களுடைய அருளினலே நான் எம்பெருமான்பேரில் பதிகம் பாடும் உணர்ச்சியைப் பெற்றேன் தங்களுடைய ஆசீர்வாதம் என்றும் நிலைத்திருக்க வேண்டும்" என்று அடிபணிந்து வணங்கி எழுந்து பார்த்த போது ஆசிரியரைக்காணப்படவில்லை. தனக்கு தேவகுருவாயிருந்து ஞானோபதேசஞ் செய்தவர் எம்பெருமானே எனத் தெரிந்துக்கொண்டார். இப்பூவுலகத்தின் பற்றுகளை யொழிக்கத் தலைப்பட்டார். இம்மாயாவுலகத்தின் சிக்குகளில் அகப்பட்டு தத்தளிக்கும் மாந்தர்களை நல்வழிப்படுத்தவேண்டுமெனத் துணிந்தார். திருப்பணி வேலைகளில் தேர்ந்தோரைக் கொண்டு திருப்பெருந்துறையின் திருக்கோயிலைப் புதுப்பித்து கட்டுவித்தார். திருக்குளத்துக்குப் படிகள் கட்டுவித்தார். அந்தணருக்கு சௌகரியமான வீடுகளை அமைத்தார். சைவ மடங்கள் கட்டுவித்தார். பூஜா புட்பங்களுக்கென நந்தவனமியற்றினர்.

இப்படியாக குதிரைகள் வாங்குவதற்குக் கொண்டு வந்த பொருளையெல்லாஞ் செலவு செய்துவிட்டு சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். மாணிக்கவாசகருடைய செய்கைகளைப் பார்த்திருந்த பரிஜனங்களிற் சிலர் "ஐயோ! பிரமராயர் அரசனுடையப் பணத்தை யெல்லாம் கோயில் கட்டுவதிலும் தான தருமங்கள் செய்வதிலும் செலவழித்துவிட்டாரே" என்று வருந்தி மாணிக்கவாசகரை வணங்கி "சுவாமி! அரசன் பொருளை இப்படிச் செலவழித்துவிட்டீர்களே! இனி குதிரைகள் வாங்குவதெப்படி" என்று கேட்டனர். இவர்கள் கேள்விக்கு மாணிக்கவாசகர் கொஞ்சமும் செவிசாய்க்காமல் மௌனமாயிருந்ததைப்பார்த்து 'ஓ! இவருக்கேதோ கோயில் பயித்தியம் பிடித்துக்கொண்டது இனி இவரிடத்தில் பேசுவதால் பயனில்லை'

என்று பரிஜனங்களிற் சிலர், பாண்டியநாட்டையடைந்து நடந்த விஷயங்களை அரசனுக்கறிவித்தனர்.

அரசன் இதையறிந்ததும் அதிகக் கோபங்கொண்டு மற்றொரு மந்திரியை அழைத்து பிரமராயருக்கு "நம்முடைய கட்டளைப்படி குதிரைகளைக் கொண்டுவரவேண்டும். இல்லையேல் கொண்டுபோனப் பொருள்யாவும் கணக்குக் குறையாமல் கொண்டுவந்து கஜானாவில் சேர்க்கவேண்டும். தவறினல் பெருந்தண்டனைக்குள்ளாவீர்" என்று ஓர் திருமுகம் எழுதச் சொல்லி அதைஓர் உத்தியோகஸ்தர் கையில் கொடுத்தனுப்ப, அவன் திருப்பெருந்துறைக்குவந்து மாணிக்கவாசகரிடங் கொடுத்தான். அரசன் திருமுகத்தைக் கண்ணுற்ற மாணிக்கவாசகர் மனஞ்சோர்ந்து ஆன்மநாதர் சந்நிதானத்தின்முன் சென்று வணங்கி "பெருமானே! அடியேன் கொண்டுவந்த பொருளையெல்லாம் செலவழித்துவிட்டேன்; பாண்டியனுக்குக் குதிரைகள் வாங்கப் பணமில்லையே! அரசன் கட்டளைக்கு யாது செய்வேன்!" என்று வருந்திப் புலம்பினார். அப்போது, "அன்பனே அஞ்சற்க, வரும் ஆவணிமூலத்தன்று குதிரைகள் கொண்டுவருவோம்; நீ முன்னதாக மதுரைக்குச் சென்று பாண்டியனுக்கறிவிப்பாயாக" என்று ஓர் சப்தமுண்டாயிற்று. அச்சப்தத்தைக்கேட்ட மாணிக்கவாசகர், சந்தோஷமடைந்து எம்பெருமானைப் பணிந்து விடைபெற்று அவரோடிருந்த பரிசனங்களை அழைத்துக்கொண்டு மதுரையையடைந்து அரண்மனைப்புகுந்து பாண்டியனைக் கண்டார்.

பாண்டியன் பிரமராயரைப் பார்த்து "என்ன உம்முடைய வேடம்? குதிரைகள் எங்கே " என்றுகோபத்துடன் கேட்டான். மாணிக்கவாசகர், "வேந்தே! திருப்பெருந்துறையில் குதிரைகளின் நோட்டந்தெரிந்த லாயக்காரர் ஒருவர் அகப்பட்டார்; அவரிடத்தில் என் வேலைகளை ஒப்படைத்தேன் அவர் குதிரைகளை வாங்கிக்கொண்டு ஆவணிமூலத்தன்று இங்கே வந்து சேருவார்" என்றுரைக்க, பாண்டியன் ஒருவாறு ஆறுதலடைந்து பிரமராயரை உபசரித்து அனுப்பினன்.

மாணிக்கவாசகர் நேராக ஆலயத்துக்குப்போய் சுந்தரேஸரையும் மீனுட்சியம்மனையும் வணங்கி தன் மாளிகைக்குச்சென்றார்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையில் நடந்துக் கொண்ட வர்த்தமானங்கள் யாவும் அறிந்திருந்த சுற்றத்தார்கள், அவர் மாளிகைக்குத் திரும்பி வந்துவிட்டார் என்

றறிந்ததும், அதியானந்தமடைந்து விரைந்தோடிவந்து அவ ருடைய க்ஷேமத்தைப்பற்றி விசாரித்தபின் "எங்கள் குலத் துக்கோர் சுடர்விளக்கேபோல் தோன்றிய ஐயனே! தங்களு க்குக் கிடைத்த உன்னதப்பதவியினால் உன் சுற்றத்தாராகிய எங்களுக்கெல்லாம் பெருமிதமான கௌரவமேற்பட்டிருக் கிறது, ஒரு நாட்டிற்குப் பிரதான மந்திரியாயிருக்கும் பாக் கியம் யாருக்குக்கிடைக்கும். அத்தகைய உத்தியோகங் கிடைப்பவர் பாக்கியசாலிகளல்லவா? அவ்வுத்தியோகஸ் தர்களின் சுற்றத்தாருக்கு எவ்வளவு கௌரவமேற்படுகிற தென்று தாங்கள் உணரவில்லையா? இத்தியாதி பெருமை தங்கிய கௌரவங்களைத்துறந்து, தாங்கள் பூண்டுள்ள தவ வேடத்தைப்பார்க்க எங்கள் மனம் அனலிற்பட்ட மெழுகு போல் உருகுகின்றதே! ஐயனே! இந்தத் தவவேடத்தை விட்டு மந்திரிவேலையைச் சரிவரகவனித்து எங்களையாதரிக்கும்படி பிரார்த்திக்கிறோம்" என்று கெஞ்சி மன்றாடினர்.

மாணிக்கவாசகர், "என்னே! உங்கள் அறியாமை, உத்தி யோகமும் கௌரவமும் பெரிதென்றிருக்கும் மாந்தர்கள் இப்பூவுலகத்தில் பிறந்துப் பிறந்து இறக்கவேண்டியதே இயற்கையாகும். அப்படி பிறக்குந்தோறும் ஒவ்வொரு ஜென்மங்களிலும் அநுபவிக்கவேண்டிய துன்பங்களும் கஷ்டங்களும் அளவிடற்பாலதன்று. அங்ஙனம் இடும்பைக் கிடமான ஜன்மானு ஜன்மங்களிற்பிறந்துழலப் பிரியங் கொண்ட உங்களிடத்தில் நான் பேச சக்தியற்றிருக்கின் றேன். எனக்கு கௌரவம், இன்பம், ஞானம், முதலான இவையெல்லாம் சிவபெருமான் ஒருவரே; என் சுற்றமும் அவரே; நம் ஜன்மசாபல்யமாக்க அவரையே துணைக் கொள்ளவேண்டும். அவருடைய பாதாரவிந்தத்தில் லயப் பட்ட என் மனதை வேறு வழியில் திருப்ப யாராலும் முடி யாது" என்று திட்டமாகச்சொல்லி கடவுற் சிந்தனையில் ஆழ்ந்தார்.

சுற்றத்தார்கள், "ஐயனே! தாங்கள் சிவபெருமான் சம் பந்தமாகச் சொல்லுவதை நாங்கள் மறுக்க முடியாது, ஆனால் ஆவணிமூலத்தன்று குதிரைகள் வருவதாக அரசனிடத்தில் சொன்னீரே, நாளையதினம் ஆவணிமூலமாயிற்றே குதிரை கள் வந்து சேராவிட்டால் அரசனுக்கு யாது சொல்லப்போகி றீர்" என்று வினவினர்.

மாணிக்கவாசகர், "என்பால் மிக்கதோர் அன்பு கொண்டுள்ளச் சுற்றத்தார்களே! அவனன்றி வோர் அணு வும் அசையா. எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயும், சகல லோகங்களுக்கும் கர்த்தாவாயும், ஆக்கல், அழித்தல், காத்தல்

ஆகிய மூத்தொழிலேயும் நிறைக்கோலளவு பிரமாமல் நடா த்திவரும் முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் என்னே யாட்கொண்டார். அவருடைய திருவருளின்ல் குதிரைகள் வந்து சேரும். நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்'' என்று தேறுதல் சொல்லி அனுப்பினுர்.

மறுநாள் ஆவணிமூலம், மாலைப்பொழுதாகியும் குதிரைகள் வரவில்லே, குதிரைகள் வருமென்ற முன்னறிவிப்புமில்லே. இச்சந்தற்பத்தில் மாணிக்கவாசகர்பால் அழுக்காறுற்றிருந்த அமைச்சரில் ஒருவன், பாண்டியனே யணுகி "அரசே! பிரமராயர் சொன்னத் தவணைப்படி குதிரைகள் வரவில்லே, அவர் வார்த்தையை நம்பி இருக்கலாகாது" என்று எச்சரித்தான்.

பாண்டியன் சினங்கொண்டு "என்னே பிரமராயரின் பொய்வேடம்! அறிவிலும், குணத்திலும், வித்தையிலும் உலகவியவகார ஞானங்களிலும், போக்கியத்திலும் மகா சிறந்தவர்போல் நடித்து நம்மை ஏமாற்றிவிட்டாரல்லவா? பொக்கிஷத்திலிருந்து கொண்டுபோனப் பணத்தையெல்லாம் தன்னிஷ்டம்போல் செலவழித்துவிட்டு நம்மிடத்தில் புரட்டு கிருத்திரமஞ் செய்யப்பார்க்கிற அவரைச் சும்மா விடப்படாது'' என்று ஏவலாளரை விளித்து "பிரமராயரைச் சிறைப்படுத்தி தாங்கொண்ஞத உபத்திரவங்கள் செய்து அவர் கொண்டுபோனப் பணத்தையெல்லாம் வாங்குங்கள்" எனக் கட்டளேயிட்டார்.

ஏவலாளர்கள், அரசன் ஆக்ஞைப்படி மாணிக்கவாசகரைச் சிறையிலிட்டு உபத்திரவப்படுத்தினர். அவர், அக்கடுமையான உபத்திரவங்களே ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லேயெனினும் தான் அரசனுக்குச்சொன்ன தவணேக்குப் பங்கம் நேராதிருக்கவேண்டுமென்று சிவபெருமானேத் துதித்து தியானஞ்செய்தார்.

அன்பர்களின் குறையைத் தீர்த்தருளும் கருணைநிதியாகிய சிவபெருமான் வாசகரின் வேண்டுதலுக்கிரங்கி காட்டிலிருந்த நரிகளேப் பரிகளாக்கி, தேவகணங்களேக் குதிரை வீரர்களாக அப்பரிகளின்மீதேற்றி, தானுேர் தலேமைப்பாகனுக கெம்பீரமான ஓர் அசுவத்தின் மீதமர்ந்து மதுரையை நாடி வருங்கால், இப்பெருந்திரளானப் பரிகள் பெருங் கோஷ்டமிட்டு ஆரவாரத்தோடு வருவதை மதுரையிலுள்ள சனங்கள் பார்த்து பிரமித்து திகைப்படைந்தனர். குதிரைகள், மதுரை வீதிகள் தூளிபறக்க வீரியத்தோடு வந்து நின்றன.

பிரம்மராயர் சொன்னக் காலக்கிரமப்படி குதிரைகள் வந்ததைப்பார்த்த பாண்டியன் ஆச்சரியமடைந்து, தான் பிரமராயர்பால் தவருன அபிப்பிராயம் கொண்டமைக்கு வருத்தமுற்று, அவரை சிறையிலிருந்து அழைத்து "அமைச்சர் தலைவரே! நான் யோசனைக்குறைவினுல் தங்களுக்குத் தீங்கிழைத்துவிட்டேன். இப்பிழையை மன்னிக்க வேண்டுகிறேன்" என்று அவருக்கு மரியாதைகள் செய்து உபசரித்தான். பிறகு குதிரைகளைப் பரிசோதனைச் செய்து குறைகளொன்றுங் காணப்படாமையால் அரசன் அளவிறந்த சந்தோஷமடைந்து குதிரைகளின் தலைமைப்பாகனை உபசரித்தான். குதிரைத்தலைவர், தாம் கொண்டுவந்த குதிரைகளின் ஜாதி, பயிற்சி முதலான குணகுணங்களைப்பற்றி விவரித்துச் சொல்லி சில குதிரைகளை நடை பழக்கிக்காட்டி "இக்குதிரைகளில் ஏதேனும் தோஷ சோதனைகள் செய்யவிரும்பினுல் இப்போதே செய்துக் கொள்ளும்! பின்னுல் குற்றங் கூறவேண்டாம். கயிறு மாறியாயின்பின் குதிரைகள் உம்முடையது பணம் எங்களுடையதுமாகும்; இது எங்கள் வியாபார முறையாகும்" என்ருர்.

அரசன், யாவற்றிற்கும் திருப்தியடைந்து தலைமை பாகனுக்கு தேசாச்சாரப்படி ஓர் பட்டு பீதாம்பரம் பரிசளித்தான். அதைத் தலைவர் கையால் வாங்காமல் தன் சவுக்கினுல் வாங்கி பக்கத்திலிருந்த மற்ருெரு வீரன்மேல் வீசி யெறிந்தார். இச்செய்கையினுல் அரசனுக்குக் கோபந்தோன்றியதை அவர் முகக்குறிப்பாலறிந்த மாணிக்கவாசகர் அரசனை நோக்கி "இப்படிச் செய்வது அவர்கள் தேசவழக்கம்" என்று சாதுரியமாய்ப்பேசி அவர் கோபத்தைத் தணித்தார். பின்பு அரசன் உத்தரவின்படி அப்பரிகளையெல்லாம் லாயத்தில் கொண்டுபோய்க் கட்டினர்.

அதன்பின் சிவபெருமான், மாணிக்கவாசகரின் பக்தி நயங்களை உலகிற்கு பிரசித்தமாக்கும் நிமித்தமாய் அக்குதிரைகளையெல்லாம் அன்றிரவே மீண்டும் நரிகளாக மாறும்படி திருவுளங்கொண்டார். ஆகவே, புதிய குதிரைகள் எல்லாம் தம் சுயரூபமாகிய நரிகளாக மாறி கட்டு கயிறுகளை அறுத்துக்கொண்டு லாயத்தையுதைத்தும், இடித்தும் பழையக் குதிரைகள் சிலவற்றைக் கடித்துக் காயப்படுத்தியும் பெருங் கோஷ்டஞ்செய்து ஊளையிட்டுக்கொண்டு காட்டுக்கு ஓடின.

இப்புதுமையைக்கண்ட லாயக்காரர்கள் விரைந்தோடி அரசனுக்கறிவித்தனர். பாண்டியன், கண்சிவக்க சினங்

கொண்டு "பிரமராயர் மகா எத்தன், பெரும் மந்திரவாதியாயிருக்கிறன், அவனுடைய மந்திரதந்திரங்களால நம்மை ஏய்த்துவிட்டான். அவனைப்பிடித்து முன்னிலும் பன்மடங்கு அதிகமாக உபத்திரவப்படுத்தி பணத்தை வாங்குங்கள்" என்று சேவகர்களுக்கு ஆக்ஞாபித்தான்.

ஏவலாளர்கள் அரசன் சொற்படியே மாணிக்கவாசகரின் தலைமேல் பெரும் பாரத்தைச் சுமத்தி வைகையாற்றின் ஓரமாயுள்ள சுடுமணலில் நிற்கவைத்து துன்புறுத்தினர். இவர்களிட்ட பெரும்பாரத்தினாலும், கொதிப்புற்றிருந்த சுடுமணலினாலும் அவர் வாதனையடையவில்லை. அரசனுடைய அறியாமையைக்குறித்து வியசனமுற்று எம்பெருமானைத் துதித்து தியானஞ்செய்தார். இப்படியே பல தினங்களாக ஏவலாளர்கள், மாணிக்கவாசகரை "அரசனுடைய பணத்தைக் கொடு" என்று கேட்பதும் ஆற்று மணலில் நிற்கச்செய்வதும் சிறையில் அடைப்பதுமாயிருக்கையில் ஓர் நாள் எம்பெருமானின் அருள்போலும் வைகையாறு பெருக்கெடுத்து பெருவெள்ளமாய்க் கரைப்புரண்டோடத் தலைப்பட்டது. வெள்ளத்தின் வேகத்தினால் சில அணைக்கட்டுகளும் உடைப்புண்டு ஊர் பக்கமாகத் திரும்பிவிட்டது. இனி தாமதித்தால் ஊருக்கே அனர்த்தமாகுமெனக் கருதிய வரசன் தீவிரமாக மந்திரிகளைத்தூண்டி ஊரிலுள்ள யாவரும் வீட்டுக்கோர் ஆளாக வந்து அணைக்கட்டுகளின் உடைப்புகளை அடைக்கும்படி உத்தரவிட்டான்.

மாணிக்கவாசகரைத் துன்புறுத்திக்கொண்டிருந்த ஏவலாளர்கள் வெள்ளப்பெருக்கைக் கண்டு பயந்து தம் மனைவி மக்களைப் பாதுகாக்கவேண்டி, வாசகரை விட்டு ஓட்டம் பிடித்தனர். மாணிக்கவாசகரும் தன்னிஷ்டம்போல் அவ்விடத்தைவிட்டு சிவாலயம் வந்து எம்பெருமானைத் துதிசெய்தவண்ணமாய்ச் சிவயோகத்தில் அமர்ந்திருந்தனர்.

அவ்வூரில் பிட்டு சுட்டு வியாபாரஞ்செய்து ஜீவனஞ்செய்துகொண்டிருந்த வந்தி என்னுமோர் கிழவிக்கு ஆண் துணை, பெண்துணை மற்றெவ்விதத்துணையுமில்லாமல் அநாதையாயிருந்தாள். அவள் சிவன்பாலே சித்தத்தைவைத்து மெய்பக்தி பூண்டவள். நாள்தோறும் தாம் சுடும் பிட்டுகளில் முதல் பிட்டை சொக்கநாதருக்கு நைவேத்தியஞ்செய்ய அனுப்புவது வழக்கம். இங்ஙனமிருந்த கிழவிக்கு வேறு துணையில்லாமையால், "தன் பாகத்து அணைக்கட்ட ஒருவருமில்லையே! கூலிக்காயினும் ஆள் கிடைக்கவில்லையே! தன் பாகம் கட்டிமுடியாதிருந்தால் அரசன் தண்டனை யென்ன

வாருமோ' என்று வியாக்கூலப்பட்டு சொக்கநாதனைத் தொழுது அழுதுகொண்டிருந்தாள்.

வந்தி கிழவி புலம்பிக்கொண்டிருக்குஞ்சமயத்தில் அவ் வீதி வழியாக அழுக்கு வேஷ்டியை உடுத்தியிருந்த ஒரு முறட்டு ஆள் கையில் மண்வெட்டியும் கூடையும் பிடித்து கொண்டு "கூலிக்கு ஆள் வேண்டுமோ" என்று கூவிக் கொண்டே போனார். அந்த ஆளைக் கண்டதும் மலடிக்கோர் மகன் பிறந்ததையொப்ப பெரிதும் சந்தோஷமேய்தி, அக் கூலியாளை அணுகி "ஐயா! வைகையாற்றின் அணைக்கட்டு வதில் என்னுடைய பாகம் நின்றிருக்கிறது, நீ போய் அதைக் கட்டிவிடு உனக்கு வேண்டிய பிட்டு தருகிறேன்" என்றாள். கூலியாள், "அப்படியானால் எனக்குப் பசியாயிருக்கிறது இப்போதே கொஞ்சம் பிட்டு கொடு நான் போய் உன்பங்கு வேலையைச்செய்கிறேன்" என்றார். வந்தியார், விற்பனைக்கு யேதுவில்லாமல் உடைந்த பிட்டுகளையெல்லாம் வாரிகொடு க்க அதை அந்த ஆள் வாங்கி கொஞ்சம் சாப்பிட்டு மீதியைத் துணியில் மூட்டைக் கட்டிக்கொண்டு வைகை நதியையடை ந்து கணக்குபிள்ளையை அணுகி "என்பெயர் சோமசுந்திரம், பிட்டுக்கிழவியின் பங்கை அடைக்கவந்தேன்" என்றார். கண க்கன், கிழவிபாகத்தைக் காட்டினான். கூலியாள், ஒரு கூடை மண் எடுத்துப் போடுவதும், ஒரு பாட்டு பாடுவதும், ஒரு கூத்து ஆடுவதும், மூட்டையை அவிழ்த்து ஒரு பிடி பிட்டு தின்பதுமாயிருந்து சரியாக வேலை செய்யாமல் காலத்தை போக்கிவிட்டு அங்கோர் மரநிழலில் படுத்துறங்கி குரட்டை யிட்டுக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் அரசன் பரிசோத னைச் செய்துக்கொண்டேவருகையில், ஓரிடத்தில் அடைப் படாமலிருப்பதைப்பார்த்து, கோபமடைந்து "இது யாரு டைய பங்கு" என்று வினவினார். அங்கிருந்தவர்கள் "இது பிட்டுக்கிழவியார் பாகம்; அந்த அம்மையார் ஒரு கூலியாளை வைத்தனர். அந்த ஆள் அதோ மரத்தடியில் உறங்குகின் றான்" என்று காட்டினர்.

அரசன் அவ்வாளையணுகி அதட்டி எழுப்பி "ஏ முறட்டு ஆளே! கிழவி பிட்டையெல்லாம் வயிறுபுடைக்கத் தின்று யல்லவா? அவள் பாகத்து வேலையையேன் செய்யவில்லை? சோம்பேரியான நீ ஏனிந்த வேலையை யொப்புகொண்டாய்" என்று தன் கையிலிருந்த பிரம்பினால் கூலியாள் முதுகின் மேல் ஓங்கியடித்தார்.

அவ்வடியானது எல்லாருடைய முதுகிலும் பட்டது. அரசன் முதுகிலும் பட்டது. யாவரும் திடுக்கிட்டு அவரவர்

முதுகைத் தேய்த்துக்கொள்ளலானார்கள். அங்கிருந்த ஈ, எறும்பு முதலானவையுந் துள்ளித்துள்ளி விழுந்தன. அரசன் மந்திரி முதலானோர் இவ்வதிசயத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கையில் கூலியாள் மறைந்துவிட்டார். யாவரும் திரும்பி பார்க்கையில் முன் அடைப்படாமலிருந்த உடைப்பு மூடப் பட்டிருந்தது. இதைக்கண்ட யாவரும் அதியாச்சரியமேய்தி "இதேது புதுமை, இதிலேதோ சூட்சமிருக்கிறது" என்று பேசிக்கொண்டிருக்கையில், அரசன் ஒரு ஏவலாளையனுப்பி வந்தி கிழவியை அழைத்துவரச்சொன்னார். ஏவலாள் போய் வந்தியைக் கூப்பிடவும், ஆள் சத்தங்கேட்ட கிழவி திடுக் கிட்டு வெளியேவந்து அரசனைக்காண பயந்து சொக்க நாதரை மனம் மொழி மெய்களாற்றொழுது. "எம்பெரு மானே! கிருபாநிதியாகிய தங்களுடைய பாதாரவிந்த அநுக் கிரகத்தை நாடியிருக்கும் அடியாளை இப்பூவுலக மன்னர் களின் தண்டனைக்குட்படுத்தாமல் தேவரீருடைய திருவடி நிழலில் சேர்த்துக்கொள்ள திருவருள் புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

நெடுநாட்களாகத் தன்பால் அன்புப்பூண்டு தொழுது வந்த வந்தியம்மையாருக்கு சாயுச்சியப் பதவியளிக்கத் திரு வுளங்கொண்ட சிவபெருமான் தேவகணங்களை அனுப்பி வந்தியை அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார். சிவக்கட்டளை யின்படியே தேவக்கணங்கள், வந்தியாரைப் புஷ்ப விமானத் திலேற்றிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ச் சென்றனர்.

அவ்வமையம், கிழவியை அழைத்துவரச்சென்ற ஏவ லாளர்களை எதிர்பார்த்து கொண்டிருந்தவரசன், "கூலியாள் ஒரு கூடை மண்ணைப் போட்டுவிட்டு மறைந்துபோனதும், அவ்வொருகூடை மண்ணில் உடைப்பு அடைப்பட்டதும். தான் கூலியாளின்மேல் தாக்கிய அடி எல்லா ஜீவராசிக ளின் தேகத்திலும் ஊறுபடுத்தியதும், தன்னுயுள்காலத்தில் கண்டிராத வதிசயமாயிருக்கிதே" என்று யோசித்தவண்ண மாய் ஆகாயத்தைப்பார்த்தார். அச்சமயம் தன் ஆச்சரியம் பன்மடங்கு அதிகரிக்குந்தன்மையாய், வந்தி கிழவி தேவ கணங்களுடன் புஷ்பவிமானத்தின்மீது போவதைப்பார்த்து திகைப்புற்று வாய்ப்பேச நாவெழாமல் ஆகாயத்தைப் பார் த்தவண்ணமாய் நிற்குங்கால் அங்கே சிவபெருமான் ரிஷப வாகனத்தின்மேல்தோன்றி "அரிமர்த்தனு! வாதவூரன் உன் பொருளை அடியார்கள் நல்வழியிலுய்யும்பொருட்டே செல வழித்தான். அவன் இனி பிறவாதிருக்கும் வழியைக் கண் டறிந்து கொண்டான். அவனுடைய பேரின்ப நன்னெறிகளை யுணரும் சக்தியற்ற நீ அவனை வீணே துன்பப்படுத்தினாய்.

வாதவூரனுடைய ஆதரவைக்கொண்டே இன்று வந்தி கிழ விக்கு திருவருள் பிராப்தமாயிற்று. இனி வாதவூரனை அவ னிஷ்டப்படி நடந்துக்கொள்ள விடுவாயாக" என்று ஆகா யத்திலிருந்து சிவபெருமான் சொன்னதுபோல் அவர் செவி களில் தொனித்தது.

இச்சப்தத்தைக் கேட்ட பாண்டியனுக்கு உரோமாங் கிதஞ் சிலிர்த்து, தேகம் வியர்த்து, நடுக்கமுற்று, எம்பெரு மானைத் தொழுது மன்னிப்பு வேண்டிக்கொண்டு, அதிவிரை வாகச் சென்று ஆலயத்தையணுகி, சிவநிஷ்டையிலிருந்த வாதவூரரைக்கண்டு "ஐயரே!என்று வணங்கி நமஸ்கரித்து" எழுந்து நின்றார். வாதவூரரும் பிரிதி நமஸ்காரஞ்செய்து அரசனைப்பார்த்தார். அரசன் "தேவரீர்! அடியேன் அறியா மையால் தங்களுக்குப் பல தீங்குகளிழைத்ததுமன்றி சினங் கொண்டும் பேசிவிட்டேன். தங்களுடைய மகிமையையுண ருந் திறமற்றவடியேன் செய்த பிழைகளைப் பொறுத்து இத் தேச ஆட்சியைத் தாங்களே கைக்கொண்டு என்னையாட் கொள்ளவேண்டும்" என்று கெஞ்சினார்.

மாணிக்கவாசகர், "மன்னர் மன்னனே! நான் உம்மை யடைந்ததின் பயனாய் எம்பெருமானின் திருவருள் பிரசாதம் கிடைக்கப்பெற்றேன். நீர், எனக்கு எவ்விதத்தீங்கையுஞ் செய்ததாக எனக்குத் தோற்றவில்லை. தாங்கள் தீங்கென நினைத்துச் செய்தவையெல்லாம் நன்மையாகவே முடிந்தன. இனி ராஜ்யபாரத்தில் என்னை ஈடுபடுத்தவேண்டாம். எம் பெருமானின் கட்டளைப்படியே என்னை விட்டுவிடு" என் றுரைத்துப் பிறவுடைகளையெல்லாம் களைந்து கௌபீன தாரியாகச் சென்றார்.

மன்னன், பிரமராயரின் பிரிவாற்றாமைக்கு மிக மிக வருந்தி ஆலயத்துட்சென்று சோமசுந்தரேஸ்வரை வணங்கி "எம்பெருமானே! தங்களை முன்னொருகாலத்தில் உமது திரு முடிமேல் வடுப்பட ஒருவன் வில்லாலடிக்கவும், பின்னொரு காலத்தில் ஒருவன் கல்லாலெறியவும் இப்போது நான் அறி யாமையினால் பிரம்பால் அடிக்கவும் நேர்ந்ததே! நாங்க ளென்ன அபவாதம் செய்துவிட்டோம்! தேவரீர்! நான் யோசிக்காமல் செய்தக்குற்றங்களைப் பொறுத்து, என்னைத் தங்கள் திருவடிகளில் அன்புப்பூண்டவடியானாக ஏற்றருள வேண்டும். வாதவூரரின் குணாதிசயங்களை எனக்குத் தெரியு மாறு அருள்புரிந்த கருணாநிதியே! தேவரீரது பெருங்கருணை க்கு யான் செய்யுங்கைம்மாறு யாதுளது? அடியேன் செய் தப் பிழைகளைப் பொறுத்தருளவேண்டும்" என்று பலவாறு

கப்பிரார்த்தனைச்செய்து சாஷ்டாங்க நமஸ்காரம் புரிந்து மீனாட்சியம்மன் சந்நிதானத்தில்போய் வணங்கி தன் அரண்மனைக்குச்சென்றார்.

பின்னர் மாணிக்கவாசகர் மீண்டும் ஆலயம் போய் சோமசுந்தரக்கடவுளையும் மீனாட்சியம்மனையும் வணங்கி, அங்கிருந்து தனக்கு அருள்கிடைத்த திருப்பெருந்துறைக்குப் போய் ஆன்மநாதரையும் யோகாம்பிகையம்மனையும் வணங்கியபின், ஆலயப்பிரகாரத்தில் முன்னம் தனக்கு குரு தரிசனந்தந்தக் குருந்தமரத்தைக்காண வெகு ஆவலோடுச் சென்றார். அக்குருந்தமரத்தடியில் தனக்கு ஞானோபதேசஞ் செய்த ஆசிரியரைத் தேடினார். அங்கே ஆசிரியரும் அடியார்களும் இல்லாமையினால் பெரிதும் வருந்தி ஆவைப்பிரிந்தக் கன்றுனது கதறுவதைப்போல் புலம்பி தரையில் புரண்டழுதார். பின்னர், ஒருவாறு தேறுதலடைந்து எம்பெருமான் பேரில் திருப்பதிகங்கள் பாடினார்.

சிவபெருமான், அன்பரின் மனமுருகி பாடுதலுக்கிரங்கி ரிஷபவாகனரூடராய் ஆகாயத்திற்றோன்ற, தேவர் கூட்டங்கள் கீழே நிறைந்திருந்தார்கள். அங்கே ஒரு சிவாக்கினி தோன்றும்படிச்செய்து அதில் தேவகணங்களைப்புகும்படி கடைக்கணித்தருளினார். தேவக்கணங்கள் அவ்வக்கினியில் புகுந்தனர். பின்பு மாணிக்கவாசகரைநோக்கி சிவஸ்தலங்களைக்குறித்துச்சொல்லி, அவ்விடங்களில் திருப்பதிகங்கள் பாடும்போது குருந்தமரக்கோலத்துடன் உமக்குக் காட்சி தருவோம் என்றருளியபின், தில்லைக்கு வருக, என்றுரைத்து சிவபெருமான் அந்தரத்தியானமாயினார்.

எம்பெருமான் சொன்னவைச் செவியிலேற்ற மாணிக்கவாசகர் மனமுருகி "மெய்தானரும்பி" என்ற திருச்சதகத்தைப் பாடியருளினார். அங்கிருந்து புரப்பட்டு திருவுத்தரகோச மங்கையை யடைந்து "கடையவனேனை" என்ற நீத்தல் விண்ணப்பம் பாடியருளினார். அவ்விடத்தில் சிவபெருமான் குருந்தமரத்தின்கீழ் வீற்றிருப்பதைப்போல் ஓர் வடிவங்காட்ட மாணிக்கவாசகர் தரிசித்து விடைப்பெற்று சோழநாட்டில் திருவிடைமருதூரில் வந்து "திருப்புலம்பல்" பாடியருளினார். அங்கிருந்து சீர்காழிக்குப்போய் "உம்பர்கட்கரசே ஒழிவறநிறைந்த" என்ற பிடித்தப்பத்து பாடியருளினார். பின்னர் திருவெண்ணை நல்லூரைத்தரிசித்து, திருவண்ணாமலைக்குப்போய் 'திருவெம்பாவை' 'திருவம்மானை' முதலியத் திருப்பதிகங்கள் பாடியருளினார். இதைச் சிவபெருமான் கேட்டு மகிழ்ந்து தமது குருந்தமரக் கோலத்தைக்

காட்ட மாணிக்கவாசகர் தெரிசித்து, காஞ்சிபுரத்துக்குப் போய் திருப்பதிகம் பாடவும் சிவபெருமான் குருந்தமரக் கோலத்தைக் காட்டியதைக்கண்டு தரிசனஞ்செய்தார்.

அங்கிருந்து பல காடு, மலை முதலானவைகளைக்கடந்து தில்லையம்பதிக்கு வந்துச் சேர்ந்து நடராஜப்பெருமானையும் சிவகாமியம்மையையும் தரிசித்து. அங்கேயே சிலநாட்கள் தங்கியிருந்தார். அத்தில்லையம்பதியிலே மேற்குபுரமாயுள்ள ஒரு தோப்பில் பரணசாலை யொன்றியற்றி அங்கே திருப் பதிகங்கள் பாடிக்கொண்டிருந்தார்.

அங்ஙனமிருக்கும் நாளையில் தில்லையிலே தபசி ஒருவர் எந்தநேரமும் எவ்விடத்திலும் "திருவம்பலம் பொன்னம் பலம்" என வழக்கமாய்ச் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் ஒருநாள் ஈழநாட்டுக்குச் சென்றார். அங்கேயும் அவர் வழக் கப்படி "திருவம்பலம்,பொன்னம்பலம்" என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஈழநாட்டில் பவுத்தசமயம் பெருகியிருந் தது. அந்நாட்டரசனும் பவுத்தமதத்தைத் தழுவியிருந்தான். அப்படிக்கிருக்குந் தேசத்தில் இந்தபசி "திருவம்பலம், பொன்னம்பலம்" என்று சொல்வதைக்கேட்ட பவுத்தர்கள் இக்கிழவனை இழுத்துக்கொண்டுபோய் அரசன் முன் விட் டனர். அரசன் தபசியைப்பார்த்து "ஏ! பிச்சைக்கார சந்நி யாசியே நீ எப்போதும் "திருவம்பலம், பொன்னம்பலம்" என்றுச் சொல்லிக்கொள்வதன் கருத்தென்ன?" என்று கேட்டார். தபசி, "அரசனே! சோழநாட்டில் தில்லையம்பதி யென்றோர் சிவஸ்தலமுண்டு. அத்தலம் சிதம்பரம் எனப் படும்.அங்கே ஓர் சிவாலயமுண்டு.அவ்வாலயத்தில் சிவபெரு மான் ஆனந்தத்தாண்டவமாடும் சிற்சபை யொன்றுண்டு. அங்கே சிவகங்கையென்ற ஓர் தீர்த்தமுண்டு. முன்னொரு காலத்தில் இரணியவர்ம சக்கரவர்த்தி இச்சிவகங்கையில் மூழ்கி தனது குஷ்டநோயை நீக்கினான். எவ்வகையினரும் இத்திருக்குளத்தில் மூழ்கி சிவபெருமானைத் தரிசனஞ் செய் தால் முத்திகிடைப்பது நிச்சயம். பொன்னம்பலம் என்றுச் சொன்னாலும் நம்முடைய பாவங்கள் போய்விடும். ஆத லால் நான் எப்போதும் அத்தலத்தின் திருச்சபையை யெண்ணமிட்டு திருவம்பலம், பொன்னம்பலம் என்றுச் சொல்லிக் கொள்ளுகிறேன்" என்றார்.

இதைக்கேட்ட அச்சபையிலிருந்த பவுத்த குரு ஒருவன் கோபம் பொருகி "பவுத்தக்கடவுள் ஒருவரேயன்றி வேறு கடவுளுமுண்டோ? அதையறியவேண்டும்" என்று சவுரியம் பேசி "இன்றே புறப்பட்டு மூன்று நாட்களில்சிதம்பரத்

தையடைந்து, அங்குள்ள குருக்கள்மாரை வாதில் வென்று, அவர்கள் கடவுளின் காலில் அணிந்திருக்கும் வீரக்கழலைக் கழற்றி, கோயிலையுமிடித்து, நமது பவுத்தர் கோயிலாக மாற்றுவேன்'' என்று எழுந்தான். அவன் சிஷர்களும் பரிவாரங்களும் கூடப்புறப்பட்டனா. இதைக்கண்ட மன்னனும் தனது மகளாகிய ஊமைப்பெண்ணை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். யாவரும் சிதம்பரத்தையடைந்து ஆலயத்துட் புகுந்தனர்.

இவர்கள் திருநீறு அணியாமல் பெருங்கூட்டமாக ஆலயத்துக்குள் புகுந்ததைத் தில்லைவாழ்ந்தணர் முதலானோர் கண்டு அஞ்சி, "நீங்கள் இங்கிருக்கலாகாது'' என்றனர். பவுத்தர்கள், "நாங்கள் சைவமதத்தை நிராகரணஞ்செய்து பவுத்தமதத்தை இங்கே ஸ்தாபனஞ்செய்யப் போகிறோம். அதுவரையில் இவ்விடத்தை விட்டகலோம்'' என்றனர். தில்லைவாழ்ந்தனர்கள், "இவர்கள் கூற்றை நாளையதினம் பார்த்துக்கொள்ளுவோம்'' என்று விஷயத்தைச் சோழ மன்னனுக்கறிவித்து அவரவர் விடுதிக்குச் சென்றனர்.

அன்றிரவு சிவபெருமான் தில்லைவாழ்ந்தணர்கள் சொப்பனத்திற்றோன்றி "நீங்கள் நாளையதினம் மேற்குதோப்பில் பரணசாலையில் யோகத்திலமர்ந்திருக்கும் எனதன்பரிடம் போய் மாணிக்கவாசகரே! என்றழைத்து புத்தரோடு வாது செய்யுமாறு யான் சொல்லியதாகச் சொல்லுங்கள்'' என்று திருவாய்மலர்ந்தார். அந்தணர்கள், மறுநாள் ஆலயத்துக்கு வந்து தாம் கண்டக் கனவைப்பற்றி உசாவிய பின், எம்பெருமான் ஆக்ஞைப்படி பரணசாலையை யணுகி நிஷ்டையிலிருக்கும் சுவாமிகளை வணங்கி, மாணிக்கவாசகரே! என்றழைத்து, "நமது ஆலயத்தில் புத்தர்கள் வந்திருக்கின்றனர். அவர்களை வாதில் வெல்லுதற்கு உம்மையழைத்துவரும்படி சிவபெருமான் கட்டளையிட்டார். தாங்கள் வரவேண்டும்'' என்றனர்.

மாணிக்கவாசகர் ஆச்சரியமுற்று "நமக்கிப்பெயர் வாய்ந்தது நமக்கும் பெருமானுக்கும் மாத்திரமேயல்லாது மற்றோருக்குந் தெரியாதே? இவர்களெப்படியறிந்தார்கள்? புத்தரை வாதில் வெல்லவேண்டுமென்பது எம்பெருமான் திருவுளம்போலும்'' என்று அந்தணர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கே சோழமன்னனும் மற்றும் பிரமுகர்களும் முன்னதாகவே வந்து அவரவர் இடங்களில் அமர்ந்திருந்தனர். மாணிக்கவாசகரும் தனக்கேற்படுத்தியிருந்த பீடத்திலமர்ந்தார். புத்தவரசனும் மற்றும் பௌத்தர்களும் எதிர்முகமாக உட்கார்ந்தனர்.

புத்தாசிரியரும், மாணிக்கவாசகரும், மதச்சம்பந்தமாயும் தேகம், உயிர், முத்தியடைதல், இன்னோரன்ன மற்றும் பல விஷயங்கள் சம்பந்தமாயும் முழுமுதற் கடவுள் யாரென்பதைப்பற்றியும் தர்க்கங்கள் பேசினர். இவ்வாதிலே மாணிக்கவாசகர் கேட்கும் கேள்விகளுக்கு பவுத்தர்கள் சரியான விடைப் பகரத் திறமையற்று திகைப்புறுவதைக் கண்ட பவுத்தவரசன், இருதரத்தாரையும் பார்த்து "நீங்கள் செய்யுந் தர்க்கங்களால் எனக்கொன்றும் விளங்கவில்லை; உங்கள் சமய உண்மைகளைப் பிரத்தியட்சமாக நிரூபித்தாலன்றி அங்கீகரிப்புக்கிடமில்லை. ஆதலால், இந்தச் சபையார் முன் மெய்ச்சமயத்தை ருஜுப்படுத்துவதானல், இதோ யிருக்கும் என் மகள் பிறவி ஊமை இந்தப் பெண்ணை யார் பேசச் செய்கிறார்களோ அவர்கள் சமயமே மெய்ச்சமயமாகும்" எனலும், பவுத்தர்கள் விரைந்தெழுந்து அவர்களுக்குத் தெரிந்த மந்திரங்களையெல்லாம் திரட்டி ஊமைப் பெண்ணுக்கு மந்திரித்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. மாணிக்கவாசகர் எழுந்து அப்பெண்ணைத் திருச்சந்நிதி முன் நிறுத்தி, திருநீறு கொடுத்து, பூசிக்கொள்ளச்செய்து, பவுத்தவரசனை நோக்கி, எங்கள் சமயத்தின் மந்திரமொன்றே, அம்மந்திரத்தின் அறிகுறி இத்திருநீறே, இத்திருநீறு அணிந்தமாத்திரத்தில் சிவபெருமான் திருவருள் கூடுவது திண்ணம். ஆகவே, இப்போது உன் மகளுக்கு திருநீறு பூசப்பட்டதால் அப்பெண்ணின் ஊமத்துவம் நீங்கி விட்டது, நீரே உமது மகளிடத்தில் பேசிப் பாரும்" என்றார்.

பவுத்தவரசன், இப்படியும் ஒரு மந்திரமிருக்குமாவென்றையங்கொண்டவராய், தன் மகளைப் பார்த்து "அம்மா! உன் நெற்றியில் பூசியிருப்பது என்ன" என்று கேட்க, ஊமைப்பெண் "அப்பா நான் திருநீறு பூசிக்கொண்டிருக்கிறேன்" என்று வெகு தெளிவாக விடைப் பகர்ந்தனள். இதைக்கேட்ட அங்குள்ளயாவரும் பவுத்தர்கள் உள்பட பெரிதும் ஆச்சரியமேய்தினர். பின்னும் சில மதசம்பந்தமான கேள்விகளைக்கேட்க அப்பெண் யாவற்றிற்கும் பொருத்தமாகவும் எல்லாவற்றிற்கும் எம்பெருமானே முதன்மையானவரென்றும் பொருள்பட கற்றறிந்தப் பெண்ணைப்போல் தெளிவாகப் பேசியதைக்கேட்ட பவுத்தவரசன், உடனே திருநீறணிந்து சைவமதத்தில் சேர்ந்தான். அவரோடிருந்த பவுத்தர்கள் பலர் சைவர்களாயினர். அப்போது மாணிக்கவாசக சுவாமிகள் அங்கு நிகழ்ந்தவைகளை வினவிடை ரூபமாக "திருச்சாழல்" என்னும் பதிகத்தை யருளிச்செய்தார். யாவரும் மகிழ்ந்து சுவாமிகளை வணங்கி நமஸ்கரித்துச் சென்றனர்.

மாணிக்கவாசக் சுவாமிகள், தன் பரணசாலையை அடைந்து சிவபெருமானையே நினைந்து பல திருப்பதிகங்களை* அருளிச்செய்து, சிவயோகத்திலேயே அமர்ந்திருந்தார்.

ஓர்நாள் அம்பலவானர், ஓர் அந்தணரைப்போல், ஏடும் எழுத்தாணியுங்கொண்டு சுவாமிகளிடம் வந்தார். அவரை மாணிக்கவாசகர் நீர் யார்? என்று கேட்க, அந்தனர், "நான் இந்நாட்டைச்சேர்ந்த பெருந்துறையிலிருப்பவன், தாங்கள் எம்பெருமான்பேரில் பாடிய அருமையானத் திருப்பதிகங்களை எழுதிக்கொண்டுபோக வந்தேன்" என்றார். மாணிக்கவாசகர், அகமகிழ்ந்து, "நமச்சிவாய வாழ்க" என்ற அகவற்பாவை முதலாவது கூறி மற்றப் பாட்டுகளை முறையே சொல்லிக்கொண்டுவர, அந்தணர் அவ்வற்றையெல்லாம் எழுதிமுடித்து ஈற்றில் "மாணிக்கவாசகன் சொல்ல, அம்பலவானன் எழுதியது" என்று கையெழுத்திட்டு அவ்வேடுகளைக் கட்டிக்கொண்டு மறைந்தனர். அதுகண்ட மாணிக்கவாசகர், வந்திருந்தவர் சிவபெருமானேயென்று மயங்கி துதிசெய்தார்.

சிவபெருமான், அவ்வோலையேடுகளுக்கு மைக்காப்பிட்டு, அதனை சிற்சபையில், பஞ்சாக்ஷரப் படியின்மீது வைத்துபோயினர். மறுநாட் காலையிலதைப் பார்த்த தில்லைவாழந்தணர்கள் அதையவிழ்த்து ஏடுகள் முழுதிலும் பார்த்து, கடைசியில் "மாணிக்கவாசகன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் கைநாட்டு" என்றிருப்பதைபார்த்த திசயித்து, ஆனந்தமடைந்து, அப்பதிகக்கட்டை அங்கையிலேந்தி தலைமேற் கொண்டதோடு அச்சுவடியைப் பொற்சிவிகையிலேற்றி சகல மரியாதையுடன் கொண்டுபோய் மாணிக்கவாசகர் திருமுன்பில் வைத்து "சுவாமி! இது தேவரீருடையப் பாடல்கள், சிவபெருமான் அநுக்கிரகத்தினால் நாங்கள் கிடைக்கப்பெற்றோம்" என்று விண்ணப்பஞ்செய்தார்கள். மாணிக்கவாசகரும் மகிழ்ச்சியுடன் அதைப்பார்த்தார்.

தில்லைவாழந்தணர்கள் சுவாமிகளை வணங்கி அத்திருமுறையின் பொருளை அருளிச்செய்யும்படி பிரார்த்திக்க, சுவாமிகள், "அதனைத் திருச்சபையினிடத்தே சொல்லுவோம். என்று புறப்பட்டு, தில்லைவாழந்தணர் சூழ்ந்துவரத்

*சுவாமிகள் ஆங்காங்கு அருளிச்செய்த திருப்பதிகங்களைப் பதிகப்பங்களில் காண்க.

திருச்சபையை யடைந்து "இதோ ஆனந்தத்தாண்டவம்
செய்தருளுகின்ற இவரே இந்நூலுக்குப் பொருளாவார்"
என்றுரைத்து, கடைசி பதிகமாகிய "முத்திநெறியறியாத"
என்ற அச்சோபதிகத்தைப்பாடி முடித்து, திருச்சபையி
னுட் புகுந்து சிவபெருமான் திருவடிநிழலில் கலந்தருளினார்

திருவாதவூரடிகள் முப்பத்திரண்டாம் வயதில் சிவ
பெருமான் திருவடி நிழலையடைந்தார். அவர் அருளிச்
செய்த திருவாசகத்தைப்போலும் வேறுவாசகமிருந்ததில்லை
படிப்போர், கேட்போர் மனதை உருக்குந்தன்மையுள்ள
வாசகம் இதுவே. "திருவாசகத்துக்கு மனமுருகாதான்
ஒருவாசகத்து முருகான்" என்பது ஆன்றோர் கருத்து.

மாணிக்கவாசகர் பரிகள் வாங்கக் கொண்டுபோனப்
பொருளைத் திருப்பணி முதலிய சிவகைங்கரிய தருமங்களைச்
செய்ததினால் வந்தப்பலன், அப்பொருளுக்குடைய அரச
னைச் சேர்ந்தது. அதனால் அரிமர்த்தன பாண்டியன் கடவு
ளிடத்தில் அன்புடையவனாயிருந்து சிலகாலம் அரசாண்டு
சிவபதமேய்தினார்.

மாணிக்கவாசக சுவாமிகள், சைவசமயத்தாருக்கோர்
பெரிய சமயாசாரியராவார். அவரைத்தேவாரமாகிய தமிழ்
வேதஞ்செய்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர
மூர்த்தி நாயனார் ஆகிய தெய்வத்திருவருள்பெற்று தமிழ்
வேதாசாரியர்களாகச் சிறந்து விளங்கும் மூவரோடு சேர்
த்து துதிசெய்து வருகின்றனர். அவரால் திருவாய்மலர்ந்
தருளப்பட்ட இத்திருவாசகமானது அநேகருக்கு மெய்யறி
வையும், பக்தி ஞானங்களையும் உண்டாக்கி தமிழ் வேதாபி
விருத்தியில் ஈடுப்படச் செய்கின்றது. அவருக்கு சிவஸ்தலங்
களிலே மார்கழி மாதத்தில் திருவிழாக்கள் நடைபெறு
கின்றது.

சுவாமிகளின் திருவருள் பெற்று இதைப்படிப்போர்
கேட்போர் யாவரும் அரோகத்திடக்காத்திரமும் சிந்தித
மனோரத சித்திகளையும் பெற்று சுகமேய்துவாராக. சுபம்.

உ

சிவமயம்.

மாணிக்கவாசக சுவாமிகளின்

# திருவாசகம்.

---

## சிவபுராணம்.

சிவனது அநாதி முறைமையான பழமை.

கலி வெண்பா

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னனேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன்கழல் வெல்க
வீசனடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனா
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னின்
முந்தைவினை முழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார்கழலிறைஞ்சி

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியனே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி

நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# திருச்சதகம்.

## பக்தி வைராக்கிய விசித்திரம்.

கட்டளைக்கலித்துறை

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

உழிதரு காலுங்கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதரு காலமெக் காலம் வருவது வந்ததற்பி
னுழிதரு காலத்த வுன்னடி யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை காத்தெம்மைக் காப்பவனே.

பவனெம் பிரான்பனி மாமதிக் கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம்பிரானென்னை யாண்டுகொண்டானென்சிறுமைகண்டு
மவனெம் பிரானென்ன நானடியே னென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி சாவ தியம்புகவே.

புகவே தகேனுனக் கன்பருள் யானென்பொல் லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப் பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை நீசெய்த நாடகமே.

திருச்சிற்றம்பலம்.

---

# அறிவுறுத்தல்.

தரவுகொச்சகக்கலிப்பா

நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறா வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

யானேதும் பிரபஞ்ச னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும்பெறில்வேண்டேன்மண்ணாள்வான்மிதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

வருந்தவனின் மலர்பாத மவைகாண்பா னாயடியேன்
னிருந்துநல மலர்புனையே னேத்தேனாத் தழும்பேறப்
பொருந்தியபொற் சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநா னாமாறே.

ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழைய னன்புருகேன்
பூமாலை புனைந் தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயில் தூகேன்மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே.

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந்தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா ளொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
னரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே.

அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறேன் நயந்துருகேன்
றரியேனா னாமாறென் சாவேனான் சாவேனே.

வேனில்வேண்மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செய்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளா வாழ்கின்றாயே.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

திருச்சிற்றம்பலம்.

# அநுபோகசுத்தி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

ஈச னேயென் னெம்மானே யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன் றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே செய்வ தொன்று மறியேனே.

செய்வ தறியாச் சிறுநாயேன் செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர்பெறும்பே றத்தனையும்பெறுதற் குரியேன்பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்பாத மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனா னுண்டுடுத்திங் கிருப்ப தானேன் போரேறே.

புகுவே னெனதே நின்பாதம் போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணோக்கி நாண மில்லா நாயினேன்
னெகுமன் பில்லை நினைக்காண நீயாண் டருள வடியேனுந்
தகுவ னேயென் றன்மையே யெந்தா யந்தோ தரியேனே.

திருச்சிற்றம்பலம்.

# காருணியத்திரங்கல்.

## அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள் விடலையே போற்றி யொப்பி
லொருத்தனே போற்றி யும்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க ணின்மலா போற்றி போற்றி.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய சய சய போற்றி போற்றி.

போற்றியென்போலும்பொய்யர் தம்மையாட்கொள்ளும்வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனநீர்தீக்
காற்றிய மானன் வான மிருசுடர்க் கடவு ளானே.

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை யாண்டிட வேண்டும் போற்றி
யுடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செல்வாய் வெண்ணகைக் கரியவாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
யிங்கிவாழ் வாற்ற கில்லே னெம்பிரா னிழித்திட் டேனே

இழித்தன னென்னை யானே யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர்கடமை போற்றி
யொழித்திடிவ் வாழ்வு போற்றி யும்பர்நாட் டெம்பி ரானே.

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
யும்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி

ஒருவனே போற்றி யொப்பி லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் றனிமை தீர்த்தே.

தீர்ந்தவன் பாய வன்பர்க் கவரினு மன்ப போற்றி (போற்றி
பேர்ந்துமென் பொய்மை யாட்கொண் டருளிடம் பெருமை
வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
யார்ந்தநின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி.

போற்றியிப் புவனம் நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றி யெல்லா வுயிர்க்கு மீறாயி றின்மை யானாய் (யானே.
போற்றியைம் புலன்க ணின்னைப் புணர்கிலாப் புணர்க்கை

திருச்சிற்றம்பலம்.

---

## ஆனந்தத்தழுந்தல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

திருச்சிற்றம்பலம்.

புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை
யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது
நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக
வன்பு நின்கழற் கணே
புணர்ப்ப தாக வங்க ணாள
புங்க மான போகமே.

போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமு
மேக நின்க ழலிணைய
லாதி லேனெ னெம்பிரா
னாகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
யாக வென்கை கண்க டாரை
யாற தாக வையனே.

ஐய நின்ன தல்ல தில்லை
மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்ம்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே.

வேண்டு நின்க ழற்க ணன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
யாண்டு கொண்டு நாயி னேனை
யாவ வென்ற ருளுநீ
பூண்டு கொண் டடிய னேனும்
போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே.

வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்
வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று
மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
வென்கொ லோநி னைப்பதே.

நினைப்ப தாக சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினாற்
றினைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே
யனைத்து லகு மாய நின்னை
யைம்பு லன்கள் காண்கிலா
வெனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாத மெய்தவே.

எய்த லாவ தென்று நின்னை
யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்கணன்றி
மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும்
வண்ண மில்லை யீசனே.

ஈச னேநீ யல்ல தில்லை
யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை
பேதை யேனெ னெம்பிரா
னீச னேனை யாண்டு கொண்ட
நின்ம லாவோர் நின்னலாற்
றேசனோ யொர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே.

சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரி லைம்பு லன்களான்
முந்தை யான கால நின்னை
யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனெ
னுள்ளம் வெள்கி விண்டிலே
னெந்தை யாய நின்னை யின்ன
மெய்த லுற்றி ருப்பனே.

இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
யாண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க
ணென்ப தென்ன விச்சையே.

திருச்சிற்றம்பலம்.

மாறி லாதமாக் கருணை வெள்ளமே
    வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
    மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ யெளியை யாகிவந்
    தொளிசெய் மானுட மாக நோக்கியுங்
கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்
    கடைய நாயினேன் பட்ட கீழ்மையே.

மையி லங்குபொற் கண்ணி பங்கனே
    வந்த னைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
    லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
    மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லங்கெனைப் புகுத விட்டுநீ
    போவ தோசொலாய் பொருத்த மாவதே.

பொருத்த மின்மையேன் பொய்மை யுண்மையேன்
    போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
    மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
யரத்த மேனியா யருள்செ யன்பரு
    நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
யிருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
    வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

பாட வேண்டுநான் போற்றி நின்னையே
    பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
    தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
    கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
    தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

திருச்சிற்றம்பலம்.

# நீத்தல் விண்ணப்பம்.

## பிரபஞ்சவைராக்கியம்.

### கட்டளைக்கலித்துறை

கடையவ னேனை கருணையி னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவனேவிட் டிடுதிகண்டாய்விறல் வேங்கையின்றோ
லுடையவ னேமன்னு முத்தரகோச மங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைதாங்கிக்கொள்ளே

பரம்பரனே நின்பழவடி யாரொடு மென்படிறு
விரும்பரனே விட்டிடுதி கண்டாய் மென்முயற் கறையி
னரும்பர்நேர் வைத்தணிந்தாய் பிறவியை வாயரவம்
பொரும்பெருமான் வினையேன் மனமஞ்சிப் பொதும்புறவே.

ஏசினும் யானுன்னை யேத்தினு மென்பிழைக்கே குழைந்து
வேசறு வேனை விடுதிகண டாய்செம்ப வளவெற்பிற்
றேசுடையா யென்னை யாளுடையாய் சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சின வாலமுண் டாயமு துண்ணக் கடையவனே.

திருச்சிற்றம்பலம்.

---

# திருவெம்பாவை.

## சத்தியை வியந்தது.

### வெண்டளையான்வந்த இயற்றரவிணைக்கொச்சகக்கலிப்பா

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின் மேனின்றும் புரண்டிங்ங
னேதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
யீதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா
லெங்கள் பெருமானுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

வெங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல்பக லெங்கண் மற்றொன்றுங் காணற்க
விங்கிப்பரிசே யெமக்கெங் கோனல்குதியே
லெங்கெழிலென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி யருளுக நின்னாதியாம் பாதமலர்
போற்றி யருளுக நின்னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லாவுயிர்க்கு மீறாமிணை யடிகள்
போற்றி மாலான் முகனுங்காணாத புண்டரிகம்
போற்றி யா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாமார்கழி நீராடேலோ ரெம்பாவாய்.

---

## திருப்பொற்சுண்ணம்.

### ஆனந்தமனோலயம்.

### அறுசீரடியாசிரியவிருத்தம்.

முத்துநற்றாமம் பூமாலை தூக்கி
முளைக்குடந்தூப நற்றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமகளோடு பல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்துகவரி கொண்மி
னத்தனை யாறனம்மானைப் பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.
வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியுமாயிரு ளாயினார்க்குத்
துன்பமுமா யின்பமாயி னார்க்குப்
பாதியுமாய் முற்றுமாயி னார்க்குப்
பந்தமுமாய் வீடுமாயினாருக்
காதியுமந்தமு மாயினாருக்
காடப்பொற்சுண்ண மிடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சாழல்.

## சிவனுடைய காருணியம்.

### நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

என்னப்ப னெம்பிரா னெல்லோர்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

கோயில்சுடுகாடு கொல்புலித் தோலாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயிலுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணந்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ.

தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பாலுகந்திலனேற் பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேற்
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

# திருப்பூவல்லி.

## மாயாவிசயநீக்குதல்.

### நாலடித்தாவுகொச்சகக்கலிப்பா.

இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையானசுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தே
னணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப்பூவல்லி கொய்யாமோ.

எந்தையெந்தாய் சுற்றமற்று மெல்லா மென்னுடைய
பந்தமறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரா
னந்தவிடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமா
னணங்கொடணி தில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

பேராசை யாமிந்தப்பிண்டமறப் பெருந்துறையான்
சீரார்திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்
காரார்கடனஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லிகொய்யாமோ.

அத்தியுரித்தது போர்த் தருளும் பெருந்துறையான்
பித்தவடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமா
முத்திமுழுமுதலுத் தரகோசமங்கை வள்ளல்
புத்திபுகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

திருச்சிற்றம்பலம்.

---

# திருத்தோணோக்கம்.

## பிரபஞ்ச சுத்தி.

### நாலடித்தாவுகொச்சகக்லிப்பா.

பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுணா மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தாவுன் சேவடி கூடும் வண்ணந் தோணோக்கம்.

என்றூர் பிறந்திருந்தாழாமே யாண்டுகொண்டான்
கன்றால்விள வெறிந்தான் பிரமன்காண்பரிய
குன்று தசீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்
துன்றார்குழலினீர் தோணேக்க மாடாமோ.

உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன் வந்துளம்புகலுங்
கரைமாண்ட காமப்பெருங்கடலைக் கடத்தலுமே
யிரைமாண்ட விந்திரியப் பறவையிரிந் தோடத்
துரைமாண்ட வாபாடித்தோ ணேக்கமாடாமோ.

திருச்சிற்றம்பலம்

---

## திருப்பொன்னூசல்.

### அருட்சுத்தி.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தாவுகொச்சகக்கலிப்பா.

சீரார் பவளங்கான் முத்தங்கயிருக
வேராரும் பொற்பலகை யேறியினிதமர்ந்து
நாராயண னறியா நாண்மலர்த் தாணயடியேற்
கூராகத் தந்தருளு முத்தாகோச மங்கை
யாராவமுதி னருட்டாளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசலாடாமோ.

மூன்றங்கிலங்கு நயனத்தன்மூவாத
வான்றங்குதேவர்களுங் காணமலரடிக
டேன்றங்கித்தித்தித் தமுதூறித்தான் றெளிந்தங்
கூன்றங்கிநின்றுருக்கு முத்தரகோசமங்கை
கோன்றங்கிடைமருது பாடிக்குலமஞ்ஞை
போன்றங்கனநடையீர் பொன்னூசலாடாமோ.

நஞ்சமர்கண்டத்தன ண்டத்தவர்நாதன்
மஞ்சுதோய்மாடமணி யுத்தரகோசமங்கை
யஞ்சொலாடன்ஞேடுங் கூடியடியவர்க
ணெஞ்சுளேநின்றமுத மூறிக்கருணைசெய்து
துஞ்சல்பிறப்பறுப்பான் றூயபுகழ்பாடிப்
புஞ்சமார்வெள்வளையீர் பொன்னூசலாடாமோ.

தெங்குலவுசோலைத் திருவுத்தரகோசமங்கை
தங்குலவுசோதித் தனியுருவம்வந்தருளி
யெங்கள்பிறப்பறுத் திட்டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவுகோதையுந் தானும்பணிகொண்ட
கொங்குலவுகொன்றைச் சடையான்குணம்பரவிப்
பொங்குலவுபூண்முலையீர் பொன்னூசலாடாமோ.

திருச்சிற்றம்பலம்.

---

## குயிற்பத்து.

### ஆத்துமவிரக்கம்.

### ஆசிரியவிருத்தம்.

கீதமினியகுயிலே கேட்டியே லெங்கள்பெருமான்
பாதமிரண்டும் வினவிற் பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணி முடிசொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை
யாதிகுண மொன்றுமில்லா னந்தமிலான் வரக்கூவாய்

ஏர்தருமே ழுலகேத்த வெவ்வுருவுந் தன்னுருவா
யார்கலிசூழ்தென் னிலங்கை யழகமர்வண் டோதரிக்குப்
பேரருளின்பமளித்த பெருந்துறை மேயபிரானைச்
சீரியவா யாற்குயிலே தென்பாண்டி நாடனைக்கூவாய்.

நீலவுருவிற்குயிலே நீண்மணிமாட நிலாவுங்
கோலவழகிற்றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயிற்
சீலம்பெரிதுமினிய திருவுத்தரகோசமங்கை
ஞாலம்விளங்கவிருந்த நாயகனைவரக்கூவாய்.

தேன்பழச்சோலை பயிலுஞ்சிறுகுயிலே யிதுகேணீ
வான்பழித் திம்மண்புகுந்து மனிதரையாட் கொண்டவள்ளல்
ஊன்பழித்துள்ளம் புகுந்தென் னுணர்வதுவாய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் னோக்கிமணாளனைநீ வரக்கூவாய்

கொந்தணவும் பொழிற்சோலைக் கூங்குயிலே யிதுகேணீ
யந்தணனாகிவந் திங்கேயழகிய சேவடிகாட்டி
யெந்தமரா மிவனென்றிங் கென்னையுமாட் கொண்டருளுஞ்
செந்தழல் போற்றிருமேனித் தேவர்பிரான் வரக்கூவாய்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தசாங்கம்.

## அடிமைகொண்டமுறைமை.

### நேரிசைவெண்பா.

ஏராரிளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையா — யாரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்செப்புவபோ
லெம்பெருமான் றேவர்பிரா னென்று.

ஏதமிலாவின் சொன்மரகதமே யேழ்பொழிற்கு
நாதனமையாளுடையா னூடுரையாய் — காதலவர்க்
கன்பாண்டுமீளா வருள்புரிவா னாடென்றுந்
தென்பாண்டி நாடே தெளி.

ஆயமொழிக்கிள்ளா யள்ளூறுமன்பர்பான்
மேயபெருந்துறையான் மெய்த்தாரென் — றீயவினை
நாளுமணு காவண்ண நாயேனை யாளுடையான்
றாளியறு காமுவந்த தார்.

சோலைப்பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம்பொலியுங் கொடிகூறாய் — சாலவு
மேதிலார் துண்ணென்ன மேல்விளங்கியேர்காட்டுங்
கோதிலா வேறாங் கொடி.

திருச்சிற்றம்பலம்.

---

# திருப்பள்ளியெழுச்சி.

## திரோதானசுத்தி.

### ஆசிரியவிருத்தம்.

போற்றியென்வாழ் முதலாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருண்மலரு
மெழினகை கொண்டுநின் றிருவடிதொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
யேற்றுயர் கொடியுடை யாயெனையுடையா
யெம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே.

புவனியிற் போய்ப்பிற வாமையி னாணாம்
போக்குகின் றோமவமே யிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லா
யாரமுதே பள்ளி யெழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்.

---

## கோயிற் றிருப்பதிகம்

### அநுபோகவிலக்கணம்.

### ஆசிரியவிருத்தம்.

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காண வந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
யீறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
வின்பமே யென்னுடை யன்பே.

தந்த துன்றன்னைக் கொண்ட தென்றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
றிருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனோர் கைம்மாறே.

திருச்சிற்றம்பலம்.

# செத்திலாப்பத்து

## சிவானந்தமளவறுக்கொணாமை.

### ஆசிரியவிருத்தம்

பொய்யனேனகநெகப் புகுந்தமுதூறும்
புதுமலர்க்கழ லிணையடிபிரிந்துங்
கையனேனின்னுஞ் செத்திலேனந்தோ
விழித்திருந்துள்ளக் கருத்தினையிழந்தே
னையனேயரசே யருட்பெருங்கடலே
யத்தனேயயன் மாற்கறியொண்ணாச்
செய்யமேனியனே செய்வகையறியேன்
றிருப்பெருந்துறை மேவியசிவனே.

அளித்துவந்தெனக் காவவென்றருளி
யச்சந்தீர்த்தநின் னருட்பெருங்கடலிற்
றிளைத்துந்தேக்கியும் பருகியுமுருகேன்
றிருப்பெருந்துறை மேவியசிவனே
வளைக்கையானொடு மலரவனறியா
வானவாமலை மாதொருபாகா
களிப்பெலாமிகக் கலங்கிடுகின்றேன்
கயிலைமாமலை மேவியகடலே.

# அடைக்கலப்பத்து

## பக்குவநிண்ணயம்.

### கலவைப்பாட்டு.

செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
வழுக்குமனத் தடியே னுடையாயுன் னடைக்கலமே.

வழங்குகின் றாய்க்குன் னருளாரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடை யாயடியேனுன் னடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்.

## ஆசைப்பத்து

### ஆத்தும விலக்கணம்.

ஆசிரியவிருத்தம்

கருடக்கொடியோன் காணமாட்டாக் கழற்சேவடியென்னும்
பொருளைத் தந்திங்கென்னை யாண்டபொல்லா மணியேயோ
விருளைத் துரந்திட்டிங்கே வாவென் றங்கேகூவு
மருளைப்பெறுவா னாசைப்பட்டேன் கண்டா யம்மானே.

மொய்ப்பா னரம்பு கயிறாக மூளையென்பு தோல்போர்த்த
குப்பாயம்புக் கிருக்ககில்லேன் கூவிக்கொள்ளாய் கோவேயோ
வெப்பா லவர்க்கு மப்பாலாமென் னாரமுதேயோ
வப்பாகாண வாசைப்பட்டேன் கண்டா யம்மனே.

வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி வலையிலகப்பட்டு
நெஞ்சே னாயேன் ஞானச்சுடரே நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத்தொருவா பவளத் திருவாயா
லஞ்சே லென்ன வாசைப்பட்டேன் கண்டா யம்மானே.

## வாழாப்பத்து

### முத்தியுபாயம்.

ஆசிரியவிருத்தம்.

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத்துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரியாயே.

வம்பனேன் றன்னை யாண்டமாமணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டா
யும்பரு மறியா வொருவனேயிருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெம்பெருமானே யென்னையாள்வானே
யென்னைநீ கூவிக்கொண்டருளே.

பாடிமால் புகழும் பாதமேயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யூடுவ துன்னோ டுவப்பதுமுன்னை
யுணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

வல்லவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணுநா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பண்ணினேர் மொழியாள் பங்கநீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெண்ணமே யுடல்வாய் மூக்கொடு செவிகண்
ணொன்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பஞ்சின்மெல் லடியாள் பங்கநீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யஞ்சினே னுயே னுண்டுநீயளித்த
வருளினை மருளினேன் மறந்த
வஞ்சனே னினங்கு வாழ்கிலேன்கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பருதிவா ழொளியாய் பாதமேயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துளமுருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனே னுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பந்தணை விரலாள் பங்கநீயல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யந்தமி லமுதே யரும்பெரும் பொருளே
யாரமு தேயடி யேனை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பாவநா சாவுன் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ விருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரியானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

பழுதிறொல் புகழாள்பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடையானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

திருச்சிற்றம்பலம்.

# அருட்பத்து

## மகாமாயாசுத்தி.

### ஆசிரியவிருத்தம்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற்பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத்தயனுமா லறியா
நீதியே செல்வ திருப்பெருந் துறையி
னிறைமலர்க் குருந்தமே வியசீ
ராதியே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
யொருத்தனே யுன்னை யோலமிட் டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன்
றிருத்தமாம்பொய்கைத் திருபெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருத்தனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே.

எங்களு யகனே யென்னுயிர்த் தலைவா
வேலவார் குழலிமா ரிருவர்
தங்களு யகனே தக்கனற் காமன்
றனாுட லழலெழ விழித்த
செங்கணு யகனே திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீ
ரங்கணு வடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

முத்தனே முதல்வா முக்கணு முனிவா
மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்

சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரத்தனே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரிருந்தவா றெண்ணி யேசறு நினைந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தா
லலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதரா யென்றரு ளாயே.

திருச்சிற்றம்பலம்.

---

# திருக்கழுக்குன்றப்பதிகம்

## குருதரிசனம்.

### ஆசிரியவிருத்தம்.

பிணக்கிலாத பெருந்துறைப் பெரு
மானுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாத தோரின்பமே வருந்
துன்பமே துடைத் தெம்பிரா
னுணக்கிலாத தோர் வித்துமேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கிலாத் திருக்கோலநீ வந்து
காட்டினாய் கழுக் குன்றிலே.

கோலமேனி வராகமே குண
மாம் பெருந்துறைக் கொண்டலே
சீலமேது மறிந்திலாத வென்
சிந்தை வைத்த சிகாமணி
ஞாலமே கரியாக நானுனை
நச்சி நச்சிட வந்திடுங்
காலமேயுனை யோத நீவந்து
காட்டினாய் கழுக் குன்றிலே.

பேதமில்ல தொர் கற்பளித்த
பெருந் துறைப் பெரு வெள்ளமே
யேதமேபல பேசநீ யெனை
யேதிலார் முனை மென்செய்தாய்
சாதல்சாதல் பொல்லாமை யற்ற
தனிச்சரண் சரணா மெனக்
காதலா லுனை யோதநீ வந்து
காட்டினாய் கழுக் குன்றிலே.

இயக்கிமா றறுபத்து நால்வரை
யெண்குணஞ் செய்த வீசனே
மயக்க மாயதொர் மும்மலப்பழ
வல் வினைக்கு ளழுந்தவுந்
துயக்கறுத் தெனையாண்டு கொண்டுநின்
றூய்மலர்க் கழ றந்தெனைக்
கயக்கவைத் தடியார்முன்னே வந்து
காட்டினாய் கழுக் குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

## கண்ட பத்து
### நிருத்த தரிசனம்

கொச்சகக்கலிப்பா.

இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமா
யந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேற்குச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே.

வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
யெனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்தவிணையிலியை
யனைத்துலங்குந் தொழுந்தில்லை யம்பலத்தே கண்டேனே.

உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினா லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினா னாயடியே னணிகொடில்லை கண்டேன்.

பூதங்க ளைந்தாகிப்புலனாகிப் பொருளாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்க டொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

திருச்சிற்றம்பலம்.

---

# பிரார்த்தனைப்பத்து.

## சதாமுத்தி.

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கலந்து நின்னடி யாரோடன்று வாளா களித்திருந்தேன்
புலர்ந்து போன காலங்கள் புகுந்து நின்ற திடர்பின்னா
ளுலர்ந்து போனே னுடையானே யுலவா வின்பச்சுடர்காண்பா
னலந்து போனே னருள்செய்யா யார்வங் கூர வடியேற்கே.

அடியார் சிலருன் னருள்பெற்றா ரார்வங் கூர யானவமே
முடையார்பிணத்தின்முடிவின்றிமுனிவாலடியேன்மூக்கிறேன்
கடியேனுடையகருவினையைக்களைந்துன்கருணைக்கடல்பொங்க
வுடையா யடியே னுள்ளத்தே யோவா துருக வருளாயே.

அறவே பெற்றார் நின்னன்ப ரத்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன் புலம்பு கின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு பேரா வொருயாப் பிரிவில்லா
மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே.

கூடிக்கூடி யுன்னடியார் குனிப்பார் சிரிப்பார் களிப்பாரா
வாடிவாடி வழியற்றேன் வற்றன் மரம்போ னிற்பேனோ
ஊடி யூடி யுடையாயொடு கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த மதுவே யாக வருள்கலந்தே.

திருச்சிற்றம்பலம்

# அச்சப்பத்து.

## ஆனந்தமுறுதல்.

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

புற்றில்வா ளரவுமஞ்சேன் பொய்யர்தம்மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம்மண்ணல் கண்ணுதல் பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மார்
கற்றிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சு மாறே.

வெருவரேன் வேட்கைவந்தால் வினைக்கடல் கொளினுமஞ்சே
னிருவரான் மாறுகாணா வெம்பிரான் றம்பிரானாந்
திருவுரு வன்றிமற்றோர் தேவரெத் தேவரென்ன
வருவரா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

வன்புலால் வேலுமஞ்சேன் வளைக்கையார் கடைக்கணஞ்சே
னென்பெலா முருகநோக்கி யம்பலத் தாடுகின்ற
வென்பொலா மணியையேத்தி யினிதருள் பருகமாட்டா
வன்பிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

கிளியனார் கிளவியஞ்சே னவர்கிறி முறுவலஞ்சேன்
வெளியநீ றாடுமேனி வேதியன் பாதநண்ணித்
துளியுலாங் கண்ணராகித் தொழுதழு துள்ளநெக்கிங்
களியிலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

பிணியெலாம் வரினுமஞ்சேன் பிறப்பினோ டிறப்புமஞ்சேன்
றுணிநிலா வணியினான்றன் றொழும்பரோ டழுந்தியம்மா
றிணிநிலம் பிளந்துங்காணாச் சேவடி பரவிவெண்ணீ
றணிகிலா தவரைக்கண்டா லம்மநாமஞ்சுமாறே.

வாளுலா மெரியுமஞ்சேன் வரைபுரண் டிடினுமஞ்சேன்.
றோளுலா நீற்றனேற்றன் சொற்பதங் கடந்தவப்பன்
றாளதா மரைகளேத்தித் தடமலர் புனைந்துநையு
மாளலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே

தகைவிலாப் பழியுமஞ்சேன் சாதலை முன்னமஞ்சேன
புகைமுகந் தெரிகைவீசிப் பொலிந்தவம் பலத்துளாடு
முகைநகைக் கொன்றைமாலை முன்னவன் பாதமேத்தி
யகநெகா தவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே.

தறிசெறி களிறுமஞ்சேன் றழல்விழி யுழுவையஞ்சேன்
வெறிகமழ் சடையனப்பன் விண்ணவர் நண்ணமாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
வறிவிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே.

மஞ்சுலா முருமு மஞ்சேன் மன்னரோ டுறவு மஞ்சே
னஞ்சமே யமுத மாக்கு நம்பிரா னெம்பி ரானுய்ச்
செஞ்சவே யாண்டு கொண்டான் றிருமுண்டந் தீட்டமாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாரே.

கோணிலா வாளியஞ்சேன் கூற்றுவன் சீற்ற மஞ்சே
னீணிலா வணியினானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
வாணலா தவரைக்கண்டா லம்மநா மஞ்சு மாறே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருப்பாண்டிப்பதிகம்.

### சிவானந்தவிளைவு.

**கட்டளைக்கலித்துறை.**

பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற்காரமுதா
மொருவரை யொன்று மிலாதவரைக் கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக்கிப் பரிமேற்கொண்ட சேவகனா
ரொருவரை யன்றி யுருவறியா தென்ற னுள்ளமதே.

கூற்றைவென் றாங்கைவர் கோக்களையும் வென்றிருந்தழகால்
வீற்றிருந்தான்பெருந் தேவியுந் தானுமோர் மீனவன்பா
லேற்றுவந்தா ருயிருண்டதிறலொற்றைச் சேவகனே
தேற்றமிலாதவர் சேவடி சிக்கெனச் சேர்மின்களே.

திருச்சிற்றம்பலம்.

# பிடித்தபத்து.

## முத்திக்கலப்புரைத்தல்.

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உம்பர்கட்கரசே யொழிவறநிறைந்த
யோகமேயூற்றை மேன்றனக்கு
வம்பெனபழுத்தென் குடிமுழுதாண்டு
வாழ்வறவாழ் வித்தமருந்தே
செம்பொருட்டுணிவே சீருடைக்கழலே
செல்வமே சிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே

அம்மையேயப்பா வொப்பிலாமணியே
யன்பினில்விளைந்த வாரமுதே
பொய்மையேபெருக்கிப் பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்றனக்குச்
செம்மையேயாய சிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
யிம்மையேயுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே.

அத்தனேயண்ட ரண்டமாய்நின்ற
வாதியேயாது மீறில்லாச்
சித்தனேபத்தர் சிக்கெனப்பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனேயெல்லா வுயிருமாய்த்தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய்நிற்கு
மெத்தனேயுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே.

புன்புலாலயாக்கை புரைபுரைகனியப்
பொன்னெடுங் கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கி யெளியையாயாண்ட
வீசனே மாசிலாமணியே
துன்பமேபிறப் பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலா மறுத்தநற்சோதீ
யின்பமேயுன்னைச் சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந் தருளுவதினியே.

திருச்சிற்றம்பலம்.

---

## சென்னிப்பத்து.

### சிவவிளைவு.

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

தேவதேவன் மெய்ச்சேவகன் றென்பெருந்துறை நாயகன்
மூவராலுமறியொணா முதலாய வானந்த மூர்த்தியான்
யாவராயினு மன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியான்
றூயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னிச் சுடருமே.

அட்டமூர்த்தி யழகனின்னமு தாயவானந்த வெள்ளத்தான்
சிட்டன்மெய்ச்சிவ லோகநாயகன் றென்பெருந்துறைச்சேவகன்
மட்டுவார்குழன் மங்கையாளையோர் பாகம்வைத்த வழகன்றன்
வட்டமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே.

முத்தனை முதற்சோதியை முக்கணப்பனை முதல்வித்தினைச்
சித்தனைசிவலோகனைத்திரு நாமம்பாடித் திரிதரும்.
பத்தர்காளிங்கே வம்மினீருங்கள் பாசந்தீரப் பணிமினோ
சித்தமார்தருஞ் சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே.

திருச்சிற்றம்பலம்.

# எ ண் ணா ப் ப தி க ம்.

## ஒழியாவின்பத்துவகை.

### ஆசிரிய விருத்தம்.

பாருருவாய பிறப்பறவேண்டும்
பத்திமையும் பெறவேண்டும்
சீருருவாய சிவபெருமானே
செங்கமல மலர்போ
லாருருவாய வென்னாரமுதேயுன்
னடியவர் தொகைநடுவே
யோருருவாய நின்றிருவருள்காட்டி
யென்னையுமுய்யக் கொண்டருளே

பாற்றிருநீற்றெம் பரமனைப்பரங்
கருணையோடு மெதிர்ந்து
தோற்றிமெய்யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன்
போற்றியென்னமுதே யெனநினைந்தேத்திப்
புகழ்ந்தழைத்தலறியென்னுள்ளே
யாற்றுவனாக வுடையவனே
யெனையாவ வென்றருளாயே.

---

# யா த் தி ரை ப் ப த் து.

## அநுபவாதீத முரைத்தல்.

### ஆசிரிய விருத்தம்.

பூவார்சென்னி மன்னனெனன்பு யங்கப்பெருமான் சிறியோமை
யோவாதுள்ளங் கலந்துணர்வா யுருக்கும்வெள்ளக் கருணையினா
லாவாவென்னப் பட்டன்பா யாட்பட்டீர்வந் தொருப்படுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான்கழல்புகவே

புகள்வார்தொழுவார் புகழ்வாரா யின்றேவந்தா ளாகாதீர்
மருள்வீர்பின்னை மதிப்பாரார் மதியுட்கலங்கி மயங்குவீர்
தெருள்வீராகி விதுசெய்மின் சிவலோகக்கோன் றிருப்புயங்க
னருளார்பெறுவா ரகலிடத்தே யந்தோவந்தோ வந்தோவே.

திருச்சிற்றம்பலம்.

# திருப்படையாட்சி.

## சிவோபாதியொழிதல்.

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கண்களிரண்டு மவன்கழல்கண்டு களிப்பன வாகாதே
காரிகையார்கடம் வாழ்விலென்வாழ்வு கடைப்படுமாகாதே
மண்களில்வந்து பிறந்திடுமாறு மறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப் பாதமிரண்டும் வணங்குதுமாகாதே
பண்ளிககூர்தரு பாடலொடாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன்னாடுடை யான்படையாட்சிகள் பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர் வேதகம்வந்து வெளிப்படுமாகாதே
மீன்வலைவீசிய கானவன்வந்து வெளிப்படுமாயிடிலே.

ஒன்றினொடொன்றுமொ ரைந்தினொடைந்து முயிர்ப்பது,
யுன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே( மாகாதே
கன்றைநினைந்தெழு தாயெனவந்த கணக்கதுவாகாதே
காரணமாகு மனாதிகுணங்கள் கருத்துறுமாகாதே
நன்றிதுதீதென வந்தநடுக்க நடந்தனவாகாதே
நாமுமேலாமடி யாருடனேசெல நண்ணுதுமாகாதே
யென்றுமெனன்பு நிறைந்தபராவமு தெய்துவதாகாதே
யேறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே

பந்தவிகாரகுணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனையாய கருத்தினில்வந்த பராவமுதாகாதே
யந்தமிலாத வகண்டமுநம்மு ளகப்படு மாகாதே
யாதிமுதற்பர மாயபரஞ்சுட ரண்ணுவதாகாதே
செந்துவர்வாய்மட வாரிடரானவை சிந்திடுமாகாதே
சேலனகண்க ளவன்றிருமேனி திளைப்பன வாகாதே
யிந்திரஞால விடர்ப்பிறவித்துய ரேகுவதாகாதே
யென்னுடைநாயக னாகியவீச னெதிர்ப்படு மாயிடிலே.

என்னணியார்முலை யாகமளைந்துட னின்புறுமாகாதே
யெல்லையின்மாக்கரு ணைக்கடலின்றினி தாடுதுமாகாதே
நன்மணிநாத முழங்கியெனுள்ளுற நண்ணுவதாகாதே
நாதனணித்திரு நீற்றனைநித்தலு நண்ணுவதாகாதே

மன்னியவன்பரி லென்பவைமூன் றற வைகுவதாகாதே
மாமறையும்மறி யாமலர்ப்பாதம் வணங்குதுமாகாதே
யின்னியற்செங்கழு நீர்மலரென் றலையெய்துவதாகாதே
யென்னையுடைப் பெருமானருளீச னெழுந்தருளப்பெறிலே

மண்ணினின்மாயை மதித்துவகுத்த மயக்கறுமாகாதே
வான்வரும்மறி யாமலர்ப்பாதம் வணங்குதுமாகாதே
கண்ணிலிகால மனைத்தினும்வந்த கலக்கறுமாகாதே
காதல்செயும்மடி யார்மனமின்று களித்திடுமாகாதே
பெண்ணலியாணென நாமெனவந்த பிணக்கறுமாகாதே
பேறறியாத வனேகபவங்கள் பிழைத்தனவாகாதே
யெண்ணிலியாகிய சித்திகள்வந்தெனை யெய்துவதாகாதே
யென்னையுடைப் பெருமானருளீச னெழுந்தருளப்பெரிலே.

பொன்னியலுந்திருமேனி வெண்ணீறு பொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர் கைகள்குவிந்து பொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடை யார்கள்கருத்து வெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழு மோசையிலின்ப மிகுத்திடுமாகாதே
தன்னடியாரடி யென்றலைமீது தழைப்பனவாகாதே
தானடியோமுட னேயுயவந்து தலைப்படுமாகாதே
யின்னியமெங்கு நிறைந்தினிதாக வியம்பிடுமாகாதே
யென்னைமுனாளுடை யீசனெனத்த னெழுந்தருளப்பெறிலே

சொல்லியலாதெழு தூமணியோசை சுவைதருமாகாதே
துண்ணெனவென்னுள் மன்னியசோதி தொடர்ந்தெழு
பல்லியல்பாய பரப்பறவந்த பராபரமாகாதே (மாகாதே
பண்டறியாத பரானுபவங்கள் பரந்தெழுமாகாதே
வில்லியனன்னுத லார்மயலின்று விளைந்திடுமாகாதே
விண்ணவரும்மறியாத விழுப்பொருளிப்பொருளாகாதே
யெல்லையிலாதன வெண்குணமானவை யெய்திடுமாகாதே
யிந்துசிகாமணி யெங்களையாள வெழுந்தருளப்பெறிலே.

சங்குதிரண்டு முரன்றெழுமோசை தழைப்பனவாகாதே
சாதிவிடாத குணங்களமோடு சலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிது நன்றெனுமாயை யடங்கிடுமாகாதே
யாசையெலாமடி யாரடியோமெனு மத்தனையாகாதே
செங்கயலொண்கண் மடந்தையர்சிந்தை திளைப்பனவாகாதே
சீரடியார்கள் சிவானுபவங்க ளொரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமு தூறுபரஞ்சுட ரெய்துவதாகாதே
யீறறியாமறை யோனெனையாள வெழுந்தருளப்பெறிலே.

திருச்சிற்றம்பலம்.

# அச்சோப்பதிகம்.

## அனுபவவழியறியாமை.

### கலி விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

நெறியெல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணங்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே.

பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும்வண்ண
மையனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
யெண்ணமிலா வன்பருளி யெனையாண்டிட் டென்னையுந்தான்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூய்நெறியே சேரும்வண்ண
மண்ணலெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றே
னுய்ஞ்சேனா னுடையானே யடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவா ரச்சோவே.

வெந்துவிழு முடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
யுய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
யையனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

சாதல்பிறப் பென்னுந்தடஞ் சுழியிற் றடுமாறித்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே விழுவேனை
மாதொருகூ றுடையபிரான் றன்கழலே சேரும்வண்ண
மாதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறிவித்து முதலாய முதல்வன்றா
னம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
வம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

திருச்சிற்றம்பலம்.

# நாமாவளி.

திருச்சிற்றம்பலம்

அம்பலத் தரசே யருமருந்தே
யானந்தத் தேனே யருள்விருந்தே
பொதுநடத் தரசே புண்ணியனே
புலவரெலாம் புகழ் கண்ணியனே
சிவசிவசிவ சிவ சின்மயதேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா
மலைதரு மகளே மடமயிலே
மதிமுக வமுதே யிளங்குயிலே
ஆனந்தக் கொடியே யிளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படனவிவேக பரம்பர வேதா
நடனசபேச சிதம்பர நாதா
அரிபிரமாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடியபாதா
அந்தண வங்கண வம்பரபோகா
அம்பல நம்பர வம்பிகைபாகா
அம்பர விம்ப சிதம்பரநாதா
அஞ்சித ரஞ்சித குஞ்சிதபாதா
தந்திர மந்திர யந்திரபாதா
சங்கர சங்கர சங்கரநாதா
கருணா நிதியே சபாபதியே
கதிமா நிதியே பசுபதியே
சபாபதி பாதம் தபோபிரசாதம்
தயாநிதி போதம் சதோதயவேதம்
ஐயர் திருச்சபை யாடகமே
ஆடுத லானந்த நாடகமே
நடராச னெல்லார்க்கு நல்லவனே
நல்ல வெலாஞ்செய வல்லவனே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட்பெருஞ் சோதியென் னாண்டவனே.

நீடிய வேதந் தேடிய பாதம்
நேடிய கீதம் பாடிய பாதம்
ஆடிய போதங் கூடிய பாதம்
ஆடிய பாதம் ஆடிய பாதம்
சஞ்சிதம் வீடும் நெஞ்சித பாதம்
தஞ்சித மாகும் சஞ்சித பாதம்
கொஞ்சித மேவும் நஞ்சித பாதம்
குஞ்சித பாதம் குஞ்சித பாதம்
சம்போ சங்கர கௌரீசா—சிவ
சாம்ப சங்கர ஜெகதீசா.
ஓம் நம: பார்வதீ பதஹே,
ஹர ஹர மஹாதேவா.
ஓம் ஸ்ரீகைலாச பதஹே
ஹர ஹர மஹா தேவா,
வாதபுரீசுர வாகீசா—சிவ
சம்பந்த மூர்த்தி சுந்தரேசா.
பத்தி முத்தி சித்தி தந்திடும்
பன்னிருகையா மங்களம்
ஜீவகாருண்ணியக் குருபரா
ஹர ஹர ஹர ஹர
சிற்சபேசா சிவ சிதம்பரம்.

திருச்சிற்றம்பலம்.

அடியார் திருவடிகளே சரணம்.

## மன்னிப்புவேண்டல்.

திருச்சிற்றம்பலம்.

கல்லாப் பிழையுங் கருதாப்
   பிழையுங் கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப்
   பிழையுநின் னைந்தெழுத்தைச்
சொல்லாப் பிழையுந் துதியாப்
   பிழையுந் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தரு
   ளாய்கச்சி யேகம்பனே.

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை
   யால்வருந் தோடஞ் செய்த
பொல்லாத தீவினை பார்வையிற்
   பாவங்கள் புண்ணிய நூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந்
   தீங்குக ளாயவுமற்
றெல்லாப் பிழையும் பொறுத்தரு
   ளாய்கச்சி யேகம்பனே.

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற்
   குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோடிணங்
   காமற் கனவிலும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற்
   றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந்தருவாய்
   சிதம்பர தேசிகனே.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா.

பண்—பஞ்சமம்,

திருச்சிற்றம்பலம்.

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
    உணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
    சித்தத்துட்டித்திக்குந்தேனே
அளிவளருள்ளத்தானந்தக்கனியே
    அம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
    தொண்டனேன்விளம்புமாவிளம்பே

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னுள்
    இருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்
    தூயநற்சோதியுட்சோதி
அடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா
    அயனெடுமாலறியாமைப்
படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்
    தொண்டனேன்பணியுமாபணியே.

நீறணிபவளக்குன்றமேநின்ற
    நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
    வெள்ளமேமேருவில்வீரா
ஆறணிசடையெம்மற்புதக்கூத்தா
    அம்பொன்செய்யம்பலத்தரசே
ஏறணிகொடியெம்மீசனேயுன்னைத்
    தொண்டனேனிசையுமாறிசையே.

கற்றவர்விழுங்குங்கற்பகக்கனியைக்
கரையிலாக்கருணைமாகடலை
மற்றவரறியாமாணிக்கமலையை
மதிப்பவர்மனமணிவிளக்கைச்
செற்றவர்புரங்கள்செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலைவீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண்குளிர்ந்தனவே.

புவனநாயகனேயகவுயிர்க்கமுதே
பூரணாவாரணப்பொழியும்
பவளவாய்மணியேபணிசெய்வார்கிரங்கும்
பசுபதீபன்னகாபரணா
அவனிநாயிறுபோன்றருள்புரிந்தடியே
னகத்திலுமுகத்தலைமூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலுமமர்ந்தாய்
தனியனேன்றனிமைநீங்குதற்கே.

திருச்சிற்றம்பலம்.

## திருமூல நாயனார் அருளிய

# பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம்.

திருச்சிற்றம்பலம்.

காவினில் ஊறும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்துநின் றானே.

உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்க்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

ஆதிப்பிரானும் மணிமணி வண்ணனும்
ஆதிக்கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில்மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தியாவரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தியாவரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொன் மணியினை எய்தவொண் ணாதே.

படமாடக்கோயில் பகவற்கொன்றீயின்
நடமாடக்கோயி னம்பர்க்கங்காகா
நடமாடக்கோயி னம்பர்க்கொன்றீயின்
படமாடக்கோயிற் பகவர்க்கதாமே.

திருச்சிற்றம்பலம்

# திருமுறைகள் ஓதும் விதி

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, பல்லாண்டு, திருமந்திரம், பட்டினத்தார் முதலியோர் பாடல்கள், பெரிய புராணம் ஆகியவைகள் திருமுறைகளெனப்படும். இத் திருமுறைகளை யோதுவதில் முன்னையோர்கள் அசாத்திய மான விதிகளை யேற்படுத்தியுள்ளார். அவ்விதிகளின்படி நடந்துக்கொள்ள தற்காலத்தவருக்கு வெகு சிரமமாகத் தோற்றுவதால் இத்திருமுறைகளை அனுஷ்டிக்காதொழி கின்றனர். நம் ஜன சமூகத்தார் நம்முடைய மதப்பற்று களிலிருந்து நழுவாதபடி நிருத்துங் கருத்தை யொட்டியும் நமது சைவாகம நெறிகள் வளர்ந்தோங்கும் பொருட்டும் நமது விதிமுறைகளைக் கொஞ்சம் மாற்றிக்கொள்ள வேண் டியதவசியமாகிறது.

இயற்கை விதிப்படி திருமுறைகள் ஓதுவோர் சுத்த சைவமாயிருப்பது சாலச் சிறப்புடையதாகும். அங்ஙனம் சுத்தசைவமாயிருக்க அசாத்திய முறுவோர் திருமுறை களைப் பாராயணஞ் செய்யவும், குருபூஜைகள் நடத்தவும் ஏற்பட்டால் குறைந்தது மூன்று தினங்களாவது சைவமா யிருக்கவேண்டியது அவசியமாகும்.

திருமுறைகளைக் குற்றமுவராமல் ஓதல்வேண்டும். உட ற்றொழிற் குற்றம், பாடுந் தொழிற் குற்றம், பண் குற்றம், எழுத்து, சொல், பொருள் முதலிய குற்றங்கள், ஓதும் வரிசை பிறழ்ச்சி முதலிய குற்றங்களிருத்தல் கூடாது. பாடும்போது பண்ணிசைகளோடும பக்தி விநயத்தோடும் பாடவேண்டும். வெள்ளோசையாகவும், பேய்ப்போலும், காகத்தைப்போலும், கத்துதல் கூடாது. ஒரு ஓசை தன்மை நீங்கிப் பலவோசையாய் வருதல், குறைபடுங்கட்டோசை, ஒரு பண் ராகம் பாட வேறொரு பண்ணிலே விலங்கிகின்று இரட்டல, ஒதுக்கிப் பாடுதல், நாசியாற்பாடுதல், வாயைக் குகைபோல் திறத்தல், தலையை யாட்டுதல், வாய் கோணு தல், அழுமுகங்காட்டுதல், வயிறுருழிய மூச்சை வாங்குதல், பற்கல் காட்டுதல் இவையெல்லாம் பாடற்றொழிலினும், உடற்றொழிலினும் வருங் குற்றங்களாம். பண்ணுகைப் பாட

வேண்டியதைக் கொல்லி பண்ணிற் பாடுவதும், தக்கேசி பண்ணினும் இடண்டாங் கட்டளையாற் பாடவேண்டியதை முதலாங்கட்டளையாற் பாடுவதும், பண் குற்றமாகும். எழுத்துக்கள், சொற்கள் வழுவப் பாடுதலும், பொருள்கள் திரிபுற ஓதலும், எழுத்து, சொல், பொருள் குற்றங்களாகும். இவ்வித குற்றங்களில்லாமல் ஓதுவோருக்கே திருவருள் கூடும்.

நிற்க, தேவார திருவாசகத் திருப்பதிகங்களில் இல்லாதச் சொற்களைச் சேர்த்து ஓதுவதும் தவறாகும். சிலர் பதிகத்துக்கிடையே சம்போ, சங்கரா, மாதேவா என்று சேர்த்துப் பாடுகின்றனர். அது குற்றமும் பாவமுமாகும். அச்சொற்கள் சிவநாமங்களேயாயினும் அவற்றாற் பக்தி விளைவதாயிருப்பினும், அங்ஙனம் சேர்த்துப் பாடுதல் தகாதென்பதே ஆன்றோர் உலக்கிடக்கையாம். இவ்வாறாய குற்றங்களை நீக்கி யோதவல்லவரே பாராயணம் செய்தற்குரியவரென்றுணர்க.

ஓதுங்காலத்தே தாம்பூலம் தரித்துக் கொள்ளல், நகைபுரிதல், பாயலிற் படுத்துக்கொள்ளுதல், காலை நீட்டிக்கொள்ளல், ஆலயங்களும், மூர்த்திகளும்கீழேயிருப்ப தாம் மேன்மாளிகையிலுயரவிருந்துக்கொள்ளல், பிற கதைகளையும், வீண் பேச்சுகளையும் பேசுதல் முதலியன கூடாதென்க.

திருமுறைப் பாராயணத்திற்கு முன்னர் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் உட்கார்ந்து விநாயகக் கடவுளைத் தியானித்து சிவபெருமானையும், உமாபிராட்டியாரையும், சமயபரமாசாரிய சுவாமிகள் நால்வரையும் திருத்தொண்டர் சீர்பரவுவாரையும் சிந்தித்து, ஒவ்வொரு திருப்பாட்டின் முதலினும் முடிவினும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லுக. எடுத்த பதிகத்தை முற்றிலும் உள்ளவரையில் பாடி முடித்தல் கிரமம். அப்படி முழு பாட்டுகளையும் பாட முடியாவிட்டால் முதலும் கடையுமாவது பாடி முடித்தல் அவசியம். "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பாசுரத்தையும், திருக்கடைக்காப்பையும் பாராயணஞ் செய்க.

திருப்பதிகங்களை ஓதுங்கால் கடைசிபதிகத்தைப் பாடி மீண்டும் முதல்பதிகத்தை யெடுத்து பாடிவிடக்கூடாது, அப்படிவிட்டால் அது குறையாகும் இவை ஓதுங்காலத்திலே கேட்பவர்கள் முன்கூறிய குற்றங்களின்றி திரிகரணங்களும் ஒருமைபாடுற்றுப் பயபக்தியுடனிருந்து சப்பாணியிட்டு கைகட்டிக்கொண்டு கேட்டல் வேண்டும். பாராயணஞ்செய்வோர் "நமப்பார்வதீபதே" என்றகாலை கேட்போர்

"அரகரமகாதேவா" என்றுகூசாது உரக்க உச்சரிக்கக்கடவர் "சிற்சபேசா" என்னுங்காலை "சிவசிதம்பரம்" என்றுரைக்கவேண்டும். இப்படி கூசாது உரைப்போருக்கு எம்பெருமானின் திருவருள் கிடைப்பது திண்ணம்.

திருமுறை பாராயணக்காலங்களில் முடியும் வரையில் அவ்விடத்தைவிட்டகலாமலிருந்து பயபக்தியுடன் கேட்போருக்கு சகல நன்மைகளும் உண்டாவதோடு எம்பெருமானுடைய ஆசீர்வாதமும் சித்திக்கும். ஆகவே குருபூஜைகள் முதலியன நடைபெறுமிடங்களில் சோர்வுறுமல் சென்றிருந்து பூஜை முடியும் வரையிலிருந்து பூர்த்தி செய்தல் யாவர்க்குங்கடமையாகும்.

இங்கே இடமின்மையான் இவ்விதி விளக்கத்தை இவ்வாற்றோடு சுருக்கச் சொல்லி நிருத்தினோம். மற்றவை பெரிய புராணத்தில் காண்க.

நாலாயிரத்திவ்ய பிரபந்தங்களை ஓதுவோருக்கும் மேற்கண்ட விதிகளே ஒத்ததாகும்.

## திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவெது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்குவாம்.

ஊரனந் தம்பெற்ற பேரனந் தஞ்சுற்று
முறவனந் தம்வினையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னால்ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந்தேக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின்வைப்பைப்
பேசருமனந்தபல ஞானவா னந்தமாம்
பெரியபொரு ளைப்பணிகுவாம்.

## சமயகுரவர்

# திருநட்சத்திரம்.

சித்திரைச் சதய மப்பர் சிறந்தகவை காசிமூல
மத்தரைஓ பணிசம் பந்த ரானிமா மகத்தி லந்த
முத்தமிழ் வாத ஆரர் முதியநல் லாடி தன்னிற்
சுத்தமாஞ் சோதி நாளிற் சுந்தார் கயிலை சேர்ந்தார்.

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதய நிறைவன்றொண்ட
ராடியிற் சோதி திருவாத ஆரர்நல் லானிமகந்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

தேவார திருவாசகத்திரட்டு முற்றிற்று.

ஓம்

நமோ நாராயணாய

நாலாயிர திவ்யப்

# பிரபந்தத் திரட்டு.

## திருப்பல்லாண்டு.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடிநூறாயிரம்
மல்லாண்டதிண்டோள் மணிவண்ணா! உன்
சேவடிசெவ்வி திருக்காப்பு.

அடியோமோடும்நின்னோடும்
பிரிவின்றியாயிரம்பல்லாண்டு
வடிவாய்நின்வலமார்பினில்
வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு
வடிவார்சோதிவலத்துறையும்
சுடராழியும்பல்லாண்டு
படைபோர்புக்குமுழங்குமப்
பாஞ்சசன்னியமும்பல்லாண்டே

வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல்
வந்துமண்ணும் மணமும்கொண்மின்
கூழாட்பட்டுநின்றீர்களை
யெங்கள்குழுவினில்புகுதலொட்டோம்
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள்
இராக்கதர்வாழ்இலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப்
பல்லாண்டுகூறுதுமே.

ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்
    தெங்கள் குழாம்புகுந்து
கூடுமனமுடையீர்கள்
    வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ
நாடுநகரமும்நன்கறிய
    நமோநாராயணாவென்று
பாடுமனமுடைப்பத்தருள்ளீர்
    வந்துபல்லாண்டுகூறுமினே.

நெய்யிடைநல்லதோர்சோறும்
    நியதமுமத்தாணிச்சேவகமும்
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு
    காதுக்குக்குண்டலமும்
மெய்யிடநல்லதோர்சாந்தமுந்தந்
    தென்னைவெள்ளுயிராக்கவல்ல
பையுடைநாகப்பகைகொடியானுக்குப்
    பல்லாண்டுகூறுவனே.

பல்லாண்டென்றுபவித்திரனைப்
    பரமேட்டியைச்சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னைவில்லிபுத்தூர்
    விட்டுசித்தன்விரும்பியசொல்
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார்
    நமோநாராயணாவென்று
பல்லாண்டும்பரமாத்மனைச்
    சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே.

பெரியாழ்வார்

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

# திருமொழி ஆசைவாய்

எண்சீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஆசைவாய்ச்சென்றசிந்தையராகி
அன்னையத்தனென்புத்திரர்பூமி
வாசவார்குழலாளென்றுமயங்கி
மாளுமெல்லைக்கண்வாய்திறவாதே
கேசவாபுருடோத்தமாவென்றும்
கேழலாகியகேடிலீயென்றும்
பேசவாரவரெய்தும்பெருமை
பேசுவான்புகில்நம்பரமன்றே.

சீயினால்செறிந்தேறியபுண்மேல்
செற்றலேறிக்குழம்பிருந்துஎங்கும்
ஈயினாலரிப்புண்டுமயங்கி
யெல்லைவாய்ச்சென்றுசேர்வதன்முன்னம்
வாயினால்நமோநாரணவென்று
மத்தகத்திடக்கைகளைக்கூப்பி
போயினால்பின்னையித்திசைக்கென்றும்
புணைக்கொடுக்கிலும்போகவொட்டாரே.

சோர்வினால்பொருள்வைத்ததுண்டாகில்
சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து
ஆர்வினவிலும்வாய்திறவாதே
அந்தகாலமடைவதன்முன்னம்
மார்வமென்பதோர்கோயிலமைத்து
மாதவனென்னும்தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்
கரவதண்டத்திலுய்யலுமாமே.

மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து
மேல்மிடற்றினையுள்ளெழவாங்கி
காலும்கையும்விதிர்விதிர்த்தேறிக்
கண்ணுறக்கமதாவதன்முன்னம்
மூலமாகியவொற்றையெழுத்தை
மூன்றுமாத்திரையுள்ளெழவாங்கி
வேலைவண்ணனைமேவுதிராகில்
விண்ணகத்தினில்மேவலுமாமே.

# திருமொழி தெள்ளியார்பலர்.

கலிவிருத்தம்.

தெள்ளியார் பலர்கைதொழும் தேவனார்
வள்ளல்மாலிருஞ் சோலைமணாளனார்
பள்ளிகொள்ளுமிடத் தடிகொட்டிட
கொள்ளுமாகில்நீ கூடிடுகூடலே.

காட்டில்வேங்கடம் கண்ணபுரநகர்
வாட்டமின்றி மகிழ்ந்துறைவாமனன்
ஓட்டராவந் தென்கைபற்றி தன்னொடும்
கூடுமாகில்நீ கூடிடுகூடலே.

பூமகன்புகழ்வானவர் போற்றுதற்
காமகன் அணிவாணுதல்தேவகி
மாமகன் மிகுசீர் வசுதேவர்தம்
கோமகன்வரில் கூடிடுகூடலே.

ஆய்ச்சிமார்களு மாயருமஞ்சிட
பூத்தநீள் கடம்பேறிப் புகப்பாய்ந்து
வாய்த்தகாளியன்மேல் நடமாடிய
கூத்தனார்வரில் கூடிடுகூடலே.

---

## திருமழிசைப்பிரானருளிச்செய்த

# திருச்சந்தவிருத்தம்.

யமுனைகல்யாணிராகம் ரூபகதாளம்.

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கண்நின்ற நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ண! நின்னையார் நினைக்கவல்லரே.

ஆதியான வானவர்க்கு மண்டமாய வப்புறத்து
ஆதியான வானவர்க்கு மாதியான வாதிநீ
ஆதியான வானவாண ரந்தகாலம் நீயுரைத்தி
ஆதியான காலநின்னை யாவர்காண வல்லரே.

காதுலாவு கொன்றைமாலை துன்னுசெஞ் சடைச்சிவன்
நீதியால் வணங்குபாத நின்மலா நிலாயசீர்
வேதவாணர் கீதவேள்வி நீதியான கேள்வியார்
நீதியால் வணங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே.

தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே.

---

## தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த

## திருமாலை.

ஸஹாநாராகம் ரூபகதாளம்.

காவலில் புலனைவைத்துக் கலிதனைக் கடக்கப்பாய்ந்து
நாவலிட்டு உழிதருகின்றோம் நமன்தமர் தலைகள்மீதே
மூவுலகுண்டு மிழ்ந்தமுதல்வ நின்நாமம் கற்ற
ஆவலிப்புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே.

பச்சைமாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா!அமரரேறே! ஆயர்தம்கொழுந்தே! என்னும்
இச்சுவைதவிர யான்போய் இந்திரலோகமாளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே!
வேதநூல்பிராயம்நூறு மனிசர்தாம் புகுவரேலும்
பாதியும்உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதைபாலகன தாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே.

# திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

# அமலனாதிபிரான்

அபுரூப ராகம் திரிபுடைதாளம்.

அமலனாதிபிரா னடியார்க்
கென்னையாட்படுத்த
விமலன் விண்ணவர்கோன்
விரையார் பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன்
நீள்மதிளரங்கத்தம்மான்-திருக்
கமலபாதம் வந்தென்கண்ணி
னுள்ளன வொக்கின்றதே.

உவந்த வுள்ளத்தனாய்
யுலகமளந்தண்டமுற
நிவந்த நீண்முடிய
னன்றுநேர்ந்த நிசாசரரை
கவர்ந்த வெங்கணைக் காகுத்தன் கடி
யார்பொழிலரங்கத் தம்மான்-அரைச்
சிவந்த வாடையின்மேல்
சென்றதா மென்சிந்தனையே.

ஆலமாமரத்தினிலைமே
லொருபாலகனாய்
ஞாலமேழுமுண்டா
னரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாம
மும் முடிவில்லதோரெழில்
நீலமேனியையோ!
நிறைகொண்டதென் நெஞ்சினையே.

கொண்டல் வண்ணனைக்
கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன் என்
னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோனணியரங்கன்
என்னமுதினைக்
கண்டகண்கள்
மற்றொன்றினைக்காணாவே.

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# பெரிய திருமொழி

சங்கராபரணராகம் திரிபுடைதாளம்,

வாடினேன்வாடிவருந்தினேன்மனத்தால்
 பெருந்துயரிடும்பையில் பிறந்து
கூடினேன்கூடி இளையவர்தம்மோ
 டவர்தருங்கலவியேகருதி
ஓடினேன்ஓடிஉய்வதோர்பொருளால்
 உணர்வெனும்பெரும்பதந்தெரிந்து
நாடினேன்நாடிநான்கண்டுகொண்டேன்
 நாராயணாவென்னும்நாமம்.

ஆவியேயமுதேஎனநினைந்துருகி
 யெவரவர்பணைமுலைதுணையா
பாவியேனுணராதெத்தனைபகலும்
 பழுதுபோயொழிந்தனநாள்கள்
தூவிசேரன்னம்துணையொடும்புணரும்
 சூழ்புனற்குடந்தையேதொழுதென்
நாவினாலுய்யநான்கண்டுகொண்டேன்
 நாராயணாவென்னும்நாமம்.

குலந்தருஞ்செல்வந்தந்திடும்
 அடியார்படுதுயராயினவெல்லாம்
நிலந்தருஞ்செய்யும்நீள்விசும்பருளும்
 அருளொடுபெருநிலமளிக்கும்
வலந்தரும்மற்றுந்தந்திடும்
 பெற்றதாயினும்ஆயினசெய்யும்
நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன்
 நாராயணாவென்னும்நாமம்.

மஞ்சுலாஞ்சோலைவண்டறைமாநீர்
 மங்கையார்வாள்கலிகன்றி
செஞ்சொலாலெடுத்ததெய்வநன்மாலை
 இவைகொண்டுசிக்கெனத்தொண்டீர்
துஞ்சும்போதழைமின்துயர்வரில்நினைமின்
 துயரிலீர்சொல்லிலும்நன்றாம்
நஞ்சுதான்கண்டீர்நம்முடைவினைக்கு
 நாராயணாவென்னும்நாமம்.

# அஞ்சாம்பத்து

தன்யாசிராகம் - அடதாளம்.

வாக்குத்தூய்மை யிலாமையினாலே மாதவா
உன்னைவாய்க்கொள்ளமாட்டேன்
நாக்கு நின்னையல்லால் அறியாது
நானதஞ்சுவன் என்வசமன்று
மூர்க்குப் பேசுகின்றானிவனென்று
முனிவாயேலும் என் நாவினுக்காற்றேன்
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்
காரணா கருளக்கொடியானே.

நம்பனே நவின்றேத்தவல்லார்கள்
நாதனே நரசிங்கமதானாய்
உம்பர் கோனுலகேழும் அளந்தாய்
ஊழியாயினாய் ஆழிமுன்னேந்தி
கம்பமாகரிகோள் விடுத்தானே
காரணா கடலைக்கடைந்தானே
எம்பிரான் என்னையாளுடைத்தேனே
ஏழையேனிடரைக் களையாயே.

காமர்தாதைகருதலர் சிங்கம்
காணவினியகருங்குழல்குட்டன்
வாமனன் என்மரதக வண்ணன்
மாதவன் மதுசூதனன்தன்னை
சேமநன் கமரும் புதுமையர்கோன்
விட்டுசித்தன் வியன் தமிழ் பத்தும்
நாமமென்று நவின்றுரைப்பார்கள்
நண்ணுவார் ஒல்லை நாரணனுலகே.

# 9வது திருமொழி தாயே தந்தை

முகாரிராகம் அடதாளம்.

தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும்

தாயேதந்தையென்றும்
தாரமேகிளைமக்களென்றும்
நோயேபட்டொழிந்தே
னுன்னைக்காண்பதோராசையினால்
வேயேய்பூம்பொழில்சூழ்
விரையார்திருவேங்கடவா
நாயேன்வந்தடைந்தேன்
நல்கியாளென்னைக்கொண்டருளே.

நோற்றேன்பல்பிறவி
நுன்னைக்காண்பதோராசையினால்
ஏற்றேன், இப்பிறப்பே
யிடருற்றனனெம்பெருமான்
கோல்தேன்பாய்ந்தொழுகும்
குளிர்சோலைசூழ்வேங்கடவா
ஆற்றேன் வந்தடைந்தே
னடியேனையாட்கொண்டருளே.

கண்ணாயேழுலகுக்குயிராய
வெங்கார்வண்ணனை
விண்ணோர்தாம்பரவும்
பொழில்வேங்கடவேதியனை
திண்ணார்மாடங்கள்சூழ்
திருமங்கையர் கோன்கலியன்
பண்ணார் பாடல்பத்தும்
பயில்வார்க்கில்லை பாவங்களே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

# துக்கச்சுழலையை

ஸஹானா ராகம் அடதாளம்

துக்கச்சுழலையைச்சூழ்ந் துகிடந்த
வலையையறப்பறித்து
புக்கினிற்புக்குன்னைக்கண்டுகொண்டே
னினிப்போகவிடுதுண்டோ
மக்களறுவரைக்கல்லிடைமோத
இழந்தவள் தன்வயிற்றில்
சிக்கெனவந்துபிறந்துநின்றாய்
திருமாலிருஞ்சோலையெந்தாய்.

வளைத்துவைத்தேனினிப்போகலொட்டே
னுன்றனிந்திரஞாலங் களால்
ஒளித்திடில்நின் திருவாணைகண்டாய்
நீயொருவர்க்கும்மெய்யனல்லை
அளித்தெங்குநாடுநகரமும்
தம்முடைத்தீவினைதீர்க்கலுற்று
தெளித்துவலஞ்செய்யும்
தீர்த்தமுடைத்திருமாலிருஞ்சோலைதன்னுள்

சென்றுலகம்குடைந்தாடுஞ்சுனைத்
திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் அடிமேலடிமைத்திறம்
நேர்படவிண்ணப்பஞ்செய்
பொன்திகழ்மாடப்பொலிந்துதோன்றும்
புதுவையர்கோன்விட்டிசித்தன்
ஒன்றினோடொன்பதும்பாடவல்லா
ருலகமளந்தான்மதரே.

பெரியார் திருவடிகளே சரணம்.

# கவளயானை

தந்யாசிராகம் அடதாளம்.

கவளயானைகொம்பொசித்தகண்ண
னென்றும்காமருசீர்க்
குவளைமேகமன்னமேனிகொண்ட
கோனென்னானையென்றும்
தவளமாடநீடுநாங்கைத்தாமரையாள்
கேள்வனென்றும்
பவளவாயாளென்மடந்தைபார்த்தன்
பள்ளிபாடுவாளே.

கஞ்சன்விட்டவெஞ்சினத்த
களிறடர்த்தகாளையென்றும்
வஞ்சமேவிவந்தபேயி
னுயிரையுண்டமாயனென்றும்
செஞ்சொலாளர்நீடுநாங்கைத்
தேவதேவனென்றென்றோதி
பஞ்சியன்னமெல்லடியாள்
பார்த்தன்பள்ளிபாடுவாளே.

பாருள்நல்லமறையோர்
நாங்கைப்பார்த்தன்பள்ளிச்செங்கண்மாலை
வார்கொள்நல்லமுலைமடவாள்பாடலைத்
தாய்மொழிந்தமாற்றம்
கூர்கொள்நல்லவேல்கலியன்
கூறுதமிழ்பத்தும்வல்லார்
ஏர்கொள்நல்லவைகுந்தத்து
ளின்பநாளுமெய்துவாரே.

திருமங்கையார் திருவடிகளே சரணம்

# திருப்பாவை.

பிலஹரி ராகம் அட தாளம்

மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால்
நீராடப்போதுவீர் போதுமினோநேரிழையீர்
சீர்மல்கும்ஆய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்
கூர்வேல்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்
நாராயணனே நமக்கேபறைதருவான்
பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய்.

ஆண்டாளம்மையார்.

சுருட்டி ராகம் ரூபக தாளம்.

வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை
திங்கள்திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி
அங்கப்பறைகொண்டவாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான்கோதைசொன்ன
சங்கத்தமிழ்மாலை முப்பதும்தப்பாமே
இங்குஇப்பரிசுரைப்பார் ஈரிரண்டுமால்வரைத்தோள்
செங்கண்திருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்கும்திருவருள்பெற்று இன்புறுவரெம்பாவாய்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

இன்றுமுற்றும்முதுகுநோவ இருந்திழைத்தவிச்சிற்றிலை
நன்றும்கண்ணுறநோக்கி நாங்கொளுமார்வந்தன்னைத்தணிகிடாய்
அன்றுபாலகனாகி யாலிலைமேல்துயின்றவெம்மாதியாய்
என்றுமுன்றனக்கெங்கள்மே லிரக்கமெழாததெம்பாவமே.

நாய்ச்சியார்

இருளியச்சுடர்மணிகளிமைக்கும்நெற்றி
யினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த
அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னும்
அணிவிளங்குமுதிர்வெள்ளையணையைமேவி
திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி
திரைக்கையாலடிவருடப்பள்ளிகொள்ளும்
கருமணியைக், கோமளத்தைக்கண்டுகொண்டு—என்
கண்ணிணைக ளென்றுகொலோகளிக்கும்நாளே?

குலசேகரப்பெருமாள்

வையம்தகளியா வார்கடலேநெய்யாக
வெய்யகதிரோன் விளக்காக—செய்ய
சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழிநீங்குகவேயென்றி

பொய்கையாழ்வார்

ஜீயர் திருவடிகளே சரணம்.

நண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன் என்னப்பனில்
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்
அண்ணிக்குமமுதூறு மென்நாவுக்கே.

மதுரகவியாழ்வார்

மோஹநராகம் திரிபுடைதாளம்

திருகண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்க னணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணனபா லின்று:

பேயாழ்வார்

அடாணாராகம் அடதாளம்

வாழ்த்துகவாய் காண்ககண் கேட்க செவிமகுடம்
தாழ்த்து வணங்குமின்கள் தண்மலரால் - சூழ்த்த
துழாய்மன்னு நீண்முடியென் தொல்லைமால் தன்னை
வழாவண்கை கூப்பி மதித்து.

திருமழிசையாழ்வார்

பைரவிராகம் திரிபுடைதாளம்

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா - நன்புருகு
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்

பூதத்தாழ்வார்

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

# திருவாய் மொழி

## முதற்பத்து

### முதற்றிருவாய்மொழி உயர்வு

எம்பெருமானது கல்யாணகுணங்களையும், பரத்வத்தையும் அருளிச்செய்கிறார்.

நாற்சீராய அவளடி நான்குமொத்திருக்கையாலே கலிவிருத்தம்.

பண் முதிர்ந்தகுறிஞ்சி, தாளம் ஏழொத்து.

கமாசுராகம் ஆதிதாளம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்
ஜீயர் திருவடிகளே சரணம்.

உயர்வறஉயர்நல முடையவன்யவனவன்
மயர்வறமதிநல மருளினன்யவனவன்
அயர்வறுமமரர்க ளதிபதியவனவன்
துயரறுசுடரடி தொழுதெழென்மனனே.

மனனகமலமற மலர்மிசையெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர்வவையிலன்
இனனுணர்முழுநல மெதிர்நிகழ்கழிவினும்
இனனிலனெனனுயிர் மிகுநரையிலனே.

இலனதுவுடையனி தெனநினைவரியவன்
நிலனிடைவிசும்பிடை யுருவினனருவினன்
புலனொடுபுலனல னொழிவிலன்பரந்த அந்
நலனுடையொருவனை நணுகினம்நாமே.

நாமவனிவனுவ னவளிவளுவளெவள்
தாமவரிவருவ ரதுவிதுவுதுவெது
வீமவையிவையுவை யவைநலந்தீங்கவை
ஆமவையாயவை யாய்நின்றவவரே.

அவரவர்தமதம தறிவறிவகைவகை
அவரவரிறையவ ரெனவடியடைவர்கள்
அவரவரிறையவர் குறைவிலரிறையவர்
அவரவர்விதிவழி யடையநின்றனரே.

நின்றனரிருந்தனர் கிடந்தனர்திரிந்தனர்
நின்றிலரிருந்திலர் கிடந்திலர்திரிந்திலர்
என்றுமோரியல்வின ரெனநினைவரியவர்
என்றுமோரியல்வொடு நின்றவெந்திடரே.

திடவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை
படர்பொருள்முழுவது மாயவையவைதொறும்
உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும்பரந்துளன்
சுடர்மிகுசுருதியு ளிவையுண்டசுரனே.

சுரரறிவருநிலை விண்முதல்முழுவதும்
வரன்முதலாயவை முழுதுண்டபரபரன்
புரமொருமூன்றெரித் தமரர்க்குமறிவியந்து
அரனயனெனவுல கழித்தமைத்துளனே.

உளனெனிலுளனவ னுருவமிவ்வுருவுகள்
உளனலனெனிலவ னருவமிவ்வருவுகள்
உளனெனவிலனென விவைகுணமுடைமையில்
உளனிருதகைமையொ டொழிவிலன்பரந்தே.

பரந்ததண்பரவையுள் நீர்தொறும்பரந்துளன்
பரந்தவண்டமிதென நிலவிசும்பொழிவற
கரந்தசிலிடந்தொறு மிடந்திகழ்பொருடொறும்
கரந்தெங்கும்பரந்துள னிவையுண்டகரனே.

கரவிசும்பெரிவளி நீர்நிலமிவைமிசை
வரனவில்திறல்வலி யளிபொறையாய்நின்ற
பரனடிமேல்குருகூர்ச்சடகோபன்சொல்
நிரனிறையாயிரத் திவைபத்தும்வீடே.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.



MARAIMALAI ADIGAL